www.onlineuthayan.com

பக்கங்கள் : 62

# உதயன்

சுடர் 27
கதிர் 211

வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 10 ஞாயிற்றுக்கிழமை (24/06/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

## இராணுவ வாகனம் மோதியதில் மாணவன் சாவு

அம்பாறை,ஜூன் 24
தம்பிலுவில் பிரதேசத்தில் இராணுவ வாகனமொன்று மோதியதால் 14 வயதான பாடசாலை மாணவனொருவன் உயிரிழந்துள்ளதாகத் திருக்கோவில் பொலி 04↘

## தமிழ்நாட்டு மீனவர்களை சிறையில் தள்ளத் திட்டமா?

### மஹிந்தவைக் கண்டிக்கிறார் நாராயணசாமி

சென்னை,ஜூன் 24
கச்சத்தீவுப் பகுதிக்கு வரும் தமிழக மீனவர்களைக் கைது செய்வோம் என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பேசியுள்ளதற்கு இந்திய மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி கண்டனம் தெரிவித்துள்ளார். தமிழக மீனவர்களைச் சிறையில் தள்ளுவதற்கே ஜனாதிபதி மஹிந்த திட்டமிடுவதாகவும் அவர் குற்றம்சாட்டியிருக்கிறார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் நாராயணசாமி கூறியதாவது:-

இந்திய மீனவர்களின் நலனில் பிரதமர் அதிக அக்கறை கொண்டு உள்ளார். இலங்கை ஜனாதிபதி தமிழக மீனவருக்கு 20 ஆண்டு சிறைத் தண்டனை எனக் கூறியுள்ளது பற்றித் தமிழக முதல்வர் ஜெயலலிதா, தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆகியோர் பிரதமருக்குக் கடிதம் 04↘

## மாகாண சபைத் தேர்தல்கள் பின்தள்ளப்படும்

### ஜனாதிபதி நாடு திரும்பியதும் இறுதி முடிவு

கொழும்பு, ஜூன் 24
எதிர்வரும் செப்ரெம்பர் மாத முதல்வாரத்தில் நடத்த உத்தேசிக்கப்பட்டிருந்த வடமத்திய, கிழக்கு மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் பிற்போடப்படும் என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் மூலம் தெரியவருகிறது.

ஜனாதிபதி நாடு திரும்பியதும் இதுகுறித்து இறுதி முடிவு எட்டப்படும் எனத் தெரியவருகிறது.

வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் தற்போது நிலவிவரும் வரட்சியான காலநிலை மற்றும் முஸ்லிம் மக்களது ரம்ழான் நோன்பு என்பவை காரணமாக இந்த முடிவு மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

விசேடமாக கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம் மக்களது நோன்புக் காலத்தில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் 04↘

# ஐ.நா.மனித உரிமைகள் சபையை இலங்கை அரசு மதிப்பதேயில்லை

### 20ஆவது கூட்டத்தொடரில் அறிக்கை சமர்ப்பிப்பு

ஜெனிவா, ஜூன் 24
ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் சபையை இலங்கை அரசு மதிப்பதில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இலங்கையில் நடைபெறும் பல்வேறு மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கேள்விகளை எழுப்பும் ஐ.நா. மனித உரிமைச் சபைக்கு இலங்கை அரசு உரிய பதில்களை வழங்குவதில்லை என ஜெனிவாவில் தற்போது நடைபெற்று வரும் சபையின் 20 ஆவது கூட்டத் தொடரில் குற்றம் சாட்டப்பட் டுள்ளது.

சபையின் சிறப்பு அறிக்கையாளர் குழுவே இந்தக் குற்றச்சாட்டை இலங்கை மீது சுமத்தியிருக்கிறது.

நடைபெற்றுவரும் ஐ.நா மனித உரிமைகள் சபையின் 20ஆவது கூட்டத் தொடரில், கருத்துச் சுதந்திரம், சட்டத்துக்குப் புறம்பான செயற்பாடுகள் தொடர்பிலான மூன்று வெவ்வேறு அறிக்கைகள், ஐ.நா வின் சிறப்பு வல்லுநர்கள் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இதில் பல்வேறு நாடுகளிலும் உள்ள மனித உரிமை விவகாரங்களில் இருக்கும் குறைபாடுகள் குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இலங்கையின் பல்வேறு மனித உரிமை மீறல் விவகாரங்கள் தொடர்பில் அந்த நாட்டிடம் ஐ.நா. மனித உரிமைகள் 04↘

## இலங்கையின் அபிவிருத்திக்கு ஈரான் தேவையான உதவிகள்

### மஹிந்தவுக்கு அஹமதி நிஜாத் வாக்குறுதி

றியோடி ஜெனீரோ,ஜூன் 24
ஈரான் எத்தகைய பிரச்சினைகளை எதிர்கொண்டாலும் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்யும் என அந்த நாட்டின் ஜனாதிபதி மொஹமட் அஹமதி நிஜாத் தெரிவித்துள்ளார்.

பிறேசிலின் றியோடி ஜெனீரோ நகரில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் ரியோ - 20 மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஈரான் ஜனாதிபதி மொஹமட் அஹமதி நிஜாத்தைச் சந்தித்து பேச்சு நடத்தியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையின் அபிவிருத்தி மற்றும் மின்சாரத் துறை சார்ந்த வளர்ச்சிப் பணிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் ஏனைய உதவிகளை வழங்கத் தயாராக 04↘

## தமிழ்நாட்டு அகதி முகாம்களில் 150 இலங்கை அகதிகள் மாயம்

சென்னை, ஜூன் 24
தமிழகத்தில் உள்ள அகதி முகாம்களில் இருந்து சுமார் 150 இலங்கை அகதிகள் காணாமல் போயுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 14 நாள்களில் அவர்கள் காணாமல் போய் இருப்பதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பில் தமிழக அரசினால் கேரள அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக, கொல்லம் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், அவர்கள் 04↘

## கிரனேட் வெடித்து மூவர் காயம் மிதிவெடி அகற்றுகையில் விபரீதம்

### முகமாலையில் நேற்றுக் காலை சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 24
முகமாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் மூவர் கிரனேட் ஒன்று வெடித்ததில் படுகாயமடைந்துள்ளனர். நேற்றுக் காலை இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னரங்கப் பகுதி அமைந்திருந்த இடத்துக்கும் படையினரின் முன்னரங்கப் பகுதி அமைந்திருந்த இடத்துக்கும் இடைப்பட்ட முகமாலை யுத்த சூனியப் பிரதேசத்தில் கண்ணிவெடி 04↘

## முறிகண்டியில் போராட்டமா? மிரட்டும் புலனாய்வாளர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 24
படையினரின் காணி சுவீகரிப்புக்கு எதிராக முறிகண்டியில் நடத்தப்படவுள்ள போராட்டம் தொடர்பாகப் பொதுமக்களின் வீடு வீடாகச் சென்று இராணுவப் புலனாய்வாளர்கள் விசாரித்து வருவதுடன் அவர்களின் விவரங்களையும் திரட்டுவதாகத் தெரியவருகிறது.

இதனால் தாம் அச்சமடைந்துள்ளதாக கிளிநொச்சிப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கில் இராணுவத்தினரால் 04↘

## தமிழினி போல் ஏனைய கைதிகளும் புனர்வாழ்வு பெறுவதில் என்ன தடை?

### அரசிடம் கேட்கிறார் மனோ கணேசன்

கொழும்பு,ஜூன் 24
மூன்று வருடங்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த, புலிகளின் மகளிர் பிரிவுத் தலைவி தமிழினியை, புனர்வாழ்வு முகாமுக்கு மாற்றும்படி, கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ரஷ்மி சிங்கப்புலி தீர்ப்பு வழங்கியுள்ளார். 04↘

## 60 வருட காலம் போராடியவர்களால் 6 மாதங்கள் ஒத்துழைக்க முடியாதா?

### கூட்டமைப்பிடம் கேட்கிறார் ராஜித

கொழும்பு, ஜூன் 24
நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இணைந்து கொள்வதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் தயக்கம் காட்டுகின்றது என்று புரியவில்லை. தீர்வுக்காக 60 வருடங்கள் முயற்சித்தவர்களால் 6 மாதச் செயற்பாட்டில் பங்குகொள்ள முடியாதா? என்று கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

தேசிய பிரச் 04↘





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் ஆட்சி விரைவில் பறிபோகும்

## விக்கிரமபாகு கருணாரத்ன ஆரூடம்

கொழும்பு,ஜூன் 24

அரசிலுள்ள சிங்கள பௌத்த இன வாதிகள் வெளியேற்றப்படாவிட்டால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி விரைவில் பறிபோகும் என எச்சரிக்கை விடுக்கும் நவசம சமாஜக் கட்சி அரசுக்குள்ளேயே அரசுக்கு எதிரான சக்திகள் செயற்படுவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளது.



இது தொடர்பாக நவ சம சமாஜக் கட்சியின் தலைவரும், தெஹிவளை, கல்கிசை மாநகரசபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரம பாகு கருணாரத்ன மேலும் தெரிவித்ததாவது:-

அணைந்து போகவுள்ள விளக்குப் பிரகாசமாக எரியும். அதேபோன்றுதான் அரசிலுள்ள இன வாத அமைச்சர்களான சம்பிக்க ரணவக்கவும், விமல் வீரவன்சவும் பிரகாசிக்கின்றனர்.விரைவில் இந்தப் பிரகாசம் மறைந்து போய்விடும். ஜனாதிபதி தன்னையும், அரசையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால் இனவாதிகளை வெளியேற்ற வேண்டும். வெகு விரைவில் இது இடம் பெறும்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற ஜனாதிபதிக்கு மனதார விருப்பமில்லை. ஆனால் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டும். இல்லாவிட்டால் அமெரிக்கா தலைமையிலான நாடுகள் இலங்கைக்கு உதவி வழங்காது. அதன் போது ஆட்சியை தொடர முடியாது போகும். கியூபாவால் எமக்கு உதவி செய்ய முடியாது. அந்தளவுக்கு அந்த நாடு செல்வந்த நாடல்ல.

எனவே மிக விரைவில் அரசுக்குள்ளிருக்கும் இன வாதிகள் வெளியேற்றப்பட்டு பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்படும் நிலைமை உருவாகும்-என்றார். (த)

## ஜனாதிபதியின் ஆலோசகர் ஹேமகுமார பதவி விலகல்

கொழும்பு, ஜூன் 24

ஜனாதிபதியின் விவசாய ஆலோசகர் பதவியிலிருந்து தான் விலகியுள்ளதாக முன்னாள் அமைச்சர் ஹேமகுமார நாணயக்கார தெரிவித்துள்ளார்.



அரசின் செயற்பாடுகளில் திருப்தியடைய முடியாதுள்ளதால் தான் பதவி விலகியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குண்டசாலை விவசாயக் கல்லூரி மற்றும் சீதாஎலிய கிழங்கு விவசாய மத்திய நிலையம் அமைந்துள்ள இடங்களில் உள்நாட்டு விமான நிலையங்களை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதைத் தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் குண்டசாலை விவசாயக் கல்லூரி பகுதியில் விமான நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நாடாளுமன்றில் தெரிவித்தார்.

விவசாயத் துறையை முன்னேற்ற ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற போதும் ஆனால் அவரது கொள்கையை செயற்படுத்த வரும் அதிகாரிகளுக்கு அந்த எண்ணம் இல்லை என ஹேமகுமார நாணயக்கார குறிப்பிட்டுள்ளார். (த)

## நாவலப்பிட்டியில் துப்பாக்கிகளுடன் மூவர் கைது

கொழும்பு, ஜூன் 24

நாவலப்பிட்டி - பல்லேகம பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றிக் கட்டுத்துவக்கு வைத்திருந்த மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாவலப்பிட்டி பொலிஸார் நேற்று அதிகாலை 1 மணியளவில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (த)

## ஆயிரக்கணக்கான பூச்சிகளுடன் செக் தம்பதியர் கைது

கொழும்பு, ஜூன் 24

வெலிகம பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான பூச்சிகளைச் சேகரித்து வைத்திருந்த செக் குடியரசைச் சேர்ந்த தம்பதியரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குருந்துகஹாதெக்ம நுழைவாயிலுக்கூடாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பிரவேசிக்க முயன்றபோது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்தேக நபர்கள் இருவரும் எல்பிட்டிய நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

## மிரட்டலுக்கு அஞ்சி ஒருபோதும் போராட்டத்தை கைவிடோம்

### பல்கலைக்கழக ஆசிரியர்கள் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 24

பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஜூலை 4 ஆம் திகதி தொடக்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவர் என்றும் தாம் எவ்விதமான பயமுறுத்தலுக்கும் அஞ்சி தமது தொழிற்சங்க நடவடிக்கையை கைவிடப் போவதில்லை எனவும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனம் கூறியுள்ளது.

தனக்கு அல்லது தனது குடும்பத்தினருக்கு விடுக்கப்படும் பயமுறுத்தலுக்கு தான் பணியப்போவதில்லை என நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் அந்தச் சம்மேளனத்தின் தலைவர் நிமல் ரஞ்சித் தேசிறி கூறினார்.

இந்த வார முற்பகுதியில் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் எனத் தம்மை அடையாளப்படுத்திய இருவர், அவரின் 17 வயது மகள் பற்றிய தகவல்களைக் கேட்டுக்கொண்டு தேவசிறியின் அயலுக்கு இரண்டு தடவை வந்துள்ளதாக கூறப்படுகிறது.

இதையிட்டு அடுத்த நாள் உயர்கல்வி அமைச்சரிடம் முறையிட்ட போது அவர் 'இப்போது இந்த புதிய கதையை காவித்திரிகிறீர்களா?' என கேட்டார். அமைச்சர் தனது முறைப்பாட்டை கணக்கில் எடுக்கவில்லையென தேவசிறி கூறினார்.

அமைச்சருடனான பேச்சுக்களில் நாம் சம்பளங்களை முக்கியப்படுத்தி பேசவில்லை. நாம் ஆட்சேர்ப்பு, பல்கலைக்கழகத்தின் சுயாதீனம், பல்கலைக்கழகங்களை தனியார் மயமாக்கல் கல்வி மீதான பொதுச் செலவு என்பன பற்றியே கூடுதல் கவனம் செலுத்தினோம். இவ்விடயங்கள் ஆழமாக பேசப்பட வேண்டிய விடயங்கள். ஆயினும் அது நடப்பதில்லை என அவர் கூறினார்.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க சம்மேளனத்தின் உப தலைவர் வண. தம்பர அமில தேரர் தமது சங்கம் வேலைநிறுத்தத்தை நடத்தியே தீரும். என்ன நடந்தாலும் எத்தனை மிரட்டல் வந்தாலும் எம்மை தடுக்க முடியாது எனவும் அவர் கூறினார். (த)



பிரேஸிலின் ரியோ டி ஜெனேரோ நகரில் இடம்பெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபையின் ரியோ - 20 மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஈரான் ஜனாதிபதி மொஹமட் அஹமத் நிஜாத்தைச் சந்தித்து கலந்துரையாடினார்.

## தமிழர் மீது துரும்பு பட்டாலும் இந்தியாவில் போர் வெடிக்கும்

### டாக்டர் கிருஸ்ணசாமி எச்சரிக்கை

சென்னை, ஜூன் 24

இனியும் ஈழத் தமிழர்கள் தாக்கப்படுவதை பொறுத்துக்கொள்ள முடியாது எனவும் தமிழர்கள் மீது ஒரு துரும்பு பட்டாலும் இனி இந்தியாவில் இருந்து தான் போர் வெடிக்கும் என்பதை இலங்கைத் தலைவருக்கு தெரிவித்துக்கொள்வதாகவும் புதிய தமிழகம் கட்சியின் நிறுவுநர் டாக்டர் கிருஷ்ணசாமி எச்சரிக்கை விடுத்துள்ளார்.



டாக்டர் கிருஷ்ணசாமி நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் கூறுகையில், ·

தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையால் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றனர். இது வன்மையாக கண்டிக்கத்தக்கது. ஈழச் சுதந்திரம் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

தமிழர்கள் இன்னும் நூறு முள்ளிவாய்க்கால் படுகொலைகளைச் சந்திக்க நேரிடும் என்று பேசிய இலங்கை அரசின் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவைக் கண்டித்து ஜூலை 15ஆம் திகதி தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் புதிய தமிழகம் கட்சியின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று கூறினார். (த)

## நுளம்புகளைத் தோற்கடிக்கும் பணியில் இனி முப்படையினரும்

### உத்தரவிட்டார் கோத்தபாய

கொழும்பு, ஜூன் 24

அரச நிறுவனங்களில் டெங்கு நுளம்புகள் ஒழிப்பதற்காக முப்படையினரையும், பொலிஸாரையும் நேற்று முதல் ஈடுபடுமாறு நகர அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.



File

இதனடிப்படையில், கொழும்பு நகரிலுள்ள அரச நிறுவனங்களில் டெங்கு நுளம்புகள் பரவுவதைத் தடுப்பதற்கும், அவற்றை அழிப்பதற்கும் நேற்றுக் காலை முதல் இராணுவத்தினர் ஈடுபடுவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரிடையே நடைபெற்ற பேச்சின் பயனாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

கொழும்பு நகரில் நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்தச் செயல்திட்டம், விரைவில் நாடு முழுவதும் விஸ்தரிக்கப்படவுள்ளது. இதற்காக அரச நிறுவன ஊழியர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ளவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

## தமிழினிக்கு புனர்வாழ்வளிக்க நீதிவான் உத்தரவு

கொழும்பு, ஜூன் 24

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினியைப் புனர்வாழ்வுக்கு உட்படுத்துமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில், புனர்வாழ்வு அளிக்கப்படுவதற்கு தமிழினி விருப்பம் தெரிவித்துள்ளார் என்று கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இதேவேளை, தமிழினியைப் புனர்வாழ்வுக்கு உட்படுத்த தமக்கு ஆட்சேபனை இல்லை என்று சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.

## 9 விடுதலைச் சிறுத்தைகள் கைது

கோவை,ஜூன் 24

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூறிய கருத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், நூறு முள்ளிவாய்க்கால் சம்பவங்களை ஏற்படுத்தாதீர் என மிரட்டல் விடுத்த இலங்கையின் மின்துறை அமைச்சர் சம்பிக்கரணவகவின் பேச்சைக் கண்டிக்கும் வகையில், கோவையில் அவரது உருவப் பொம்மையை எரிக்க முயன்ற விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உறுப்பினர்கள் 9 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

கோவை செஞ்சிலுவைச் சங்கம் அருகே, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் அதன் இளஞ் சிறுத்தைகள் எழுச்சிப் பாசறை தொண்டர்கள் 9 பேர், தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்து கோஷங்கள் எழுப்பியதுடன், இலங்கை அமைச்சரின் உருவப் பொம்மையை எரிக்க முயன்றனர். அவர்களை கோவை பொலிஸார் கைது செய்துள்ளனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற உத்தரவை கிழித்தெறிந்த அரசியல்வாதிக்கு எதிராக வழக்கா?

## ஆராய்கிறோம் என்கிறார் பொலிஸ் அதிகாரி

யாழ்ப்பாணம், ஜூன் 24
காணி அபகரிப்புக்கு எதிராக யாழ். நகரில் நடத்தவிருந்த ஒன்றுகூடலைத் தடுப்பதற்காக பொலிஸ் தரப்பில் யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா யாழ். நீதிமன்றில் தடை உத்தரவு கோரி இருந்தார். அமைதிக்குப் பங்கம், கைகலப்பு என்பன ஏற்படும் என்று பொலிஸ் தரப்பில் மன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதை அடுத்து நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்திருந்தது.

அந்த உத்தரவைக் கிழித்து எறிந்த அரசியல்வாதிகளுக்கு எதிராக நீதிமன்றில் இதுவரை வழக்குத் தாக்கல் செய்யவில்லை. ஆனால் நீதிமன்ற உத்தரவை மீறினர் என்று அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யமுடியும் என்றும் அதுபற்றி ஆராய்ந்து வருகின்றோம் என்றும் சமன் சிகேரா தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை காணி அபகரிப்புக்கு எதிராக நடத்தவிருந்த ஒன்றுகூடலை நீதிமன்றம் தடுத்தமை தொடர்பான வழக்கில் அமைதியான முறையில் மக்கள் முன்னெடுக்கும் இவ்வாறான நிகழ்வைத் தடுத்து நிறுத்தும் அதிகாரம் நீதிவான் நீதிமன்றுக்கு இல்லை.

எனவே நீதிமன்றம் தனது தீர்ப்பை வாபஸ் பெற வேண்டும் அல்லது மாற்றியமைக்க வேண்டும் என சட்டத்தரணிகள் கோரியதை அடுத்து அது தொடர்பான தீர்ப்பு எதிர்வரும் புதன்கிழமை வழங்கப்படவுள்ளது.

கடந்த 18ஆம் திகதி நடத்தவிருந்த ஒன்றுகூடல் நிகழ்வைத் தடுத்து நிறுத்துமாறு கோரி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கை, நகர்த்தல் பத்திரம் சமர்ப்பித்து நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சட்டத்தரணிகள் இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

வடக்கில் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்பை நிறுத்துமாறு கோரி அது தொடர்பான கவனயீர்ப்பு ஒன்றுகூடல் ஒன்று யாழ். பஸ் நிலையம் முன்பாக கடந்த 18ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி இந்த ஒன்றுகூடலை ஏற்பாடு செய்திருந்தது.

அன்றைய தினம் குறிப்பிட்ட இடத்துக்கு வந்த யாழ். பொலிஸார் அன்றைய ஒன்றுகூடலைத் தடுத்து நிறுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்து யாழ். நீதிமன்றினால் வழங்கப்பட்டதெனத் தெரிவித்து கட்டளை ஒன்றை ஏற்பாட்டாளர்களிடம் ஒப்படைத்தார். அதனால் ஒன்றுகூடல் கைவிடப்பட்டது.

அவ்வாறு தடுத்து நிறுத்தும் அதிகாரம் நீதிவான் நீதிமன்றுக்கு இல்லை. குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் பிரிவுகளின் படி இந்த அதிகாரம் இல்லை. ஏற்கனவே தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கக் கூடிய தடைகளை அகற்றும் உத்தரவை வழங்கும் அதிகாரமே நீதிவான் நீதிமன்றுக்கு உண்டு.

எனவே நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நீதிமன்றம் வாபஸ் பெறவேண்டும் அல்லது மாற்றியமைக்க வேண்டும் எனக் கட்சியின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் மன்றில் தெரிவித்தனர். கட்சி சார்பில் சட்டத்தரணிகளான வி.மணிவண்ணன், பா.பார்த்தீபன், ஜெ.ஜெயரூபன் ஆகியோரின் அனுசரணையில் கு.குருபரன் வாதாடியிருந்தார். (ஒ-4)

## களவு வழக்கு சந்தேகநபர் 11 வருடங்களின் பின்னர் விடுதலை

யாழ்ப்பாணம், ஜூன்24
2001 ஆம் ஆண்டு இடம் பெற்ற களவுக் குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு விசாரணையில் இருந்து 11 வருடங்களின் பின்னர் சந்தேக நபர் ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் இன்று வரை தலைமறைவாக இருக்கும் ஏனைய 3 பேருக்கும் 2 வருட சிறைத் தண்டனை விதித்து யாழ். நீதிமன்று தீர்ப்பளித்தது.

இந்த வழக்கு நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கோண்டாவிலில் 2001 ஆம் ஆண்டு இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் கல்வியங்காடு, ஊர்காவற் றுறை, கட்டைப்பிராய் ஆகிய இடங்களைச் சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அதன்போது 3 பேர் தலைமறைவாகிவிட்டனர். ஒருவர் மட்டும் தொடர்ந்தும் வழக்குகளுக்குச் சென்று வந்தார்.

நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணையின் போது வழக்குகளுக்கு தவறாது இன்று வரை நீதிமன்றம் சென்று வந்த நபர் நிரபராதி என இனங்காணப்பட்டுவிடுதலைசெய்யப்பட்டார்.

தலைமறைவாகியிருக்கும் ஏனைய 3 பேருக்கும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்படும் போது அன்றிலிருந்து 2 வருடங்களுக்கு சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. (ம-4)

## பாஷையூர் இறங்குதுறை நிர்மாணப் பணி விரைவில்

### கடல் பாதுகாப்பு அணையும் அமைக்கப்படும்

பாஷையூர் இறங்குதுறை மற்றும் கடலோரப் பாதுகாப்பு அணை ஆகியவற்றின் நிர்மாணப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று யாழ் மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் என். கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்த இறங்குதுறை புனர் நிர்மாணப் பணிகள் ஐ.ஓ.எம். நிறுவனத்தின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான ஆரம்ப கட்டச் செயற்பாடுகள் தற்போது இடம் பெறுகின்றன என்று உதவிப் பணிப்பாளர் மேலும் கூறினார்.

இறங்குதுறை, கட லோரப் பாதுகாப்பு அணை ஆகியவற்றை நிர்மாணிக்கும் பணிகளை விரைவாக ஆரம்பித்து அவற்றை துரிதமாக முடிவுறுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

கடந்த வாரம் ஐ.ஓ.எம் நிறுவனத்தின் பிரதிநிதிகள் யாழ்பாணத்துக்கு வருகை தந்து இந்த நிர்மாணப் பணிகள் குறித்து ஆராய்ந்ததாகவும் அவர் தெரிவித்தார். (த-17)

### தீவக வலயங்களை இணைத்துக் கூட்டம்

தீவக வலயங்களை இணைத்து அபிவிருத்திக் கூட்டம் நடத்துவதற்கு ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நெடுந்தீவு, ஊர்காவற் றுறை, வேலணை ஆகிய வலயங்களை முதற் தடவையாக இணைத்து அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் கூட்டம் இடம் பெறும். (ம-50)

## வேலணையூடாக எடுத்துவரப்படும் 38 வகையான பொருள்களுக்கு வரி

யாழ்ப்பாணம், ஜூன்24
வேலணைப் பிரதேசத்தில் இருந்து மண்டைதீவு வழியாக யாழ். குடாநாட்டுக்கு கொண்டு வரப்படும் 38 வகையான பொருள்களுக்கு வரி அறவீட்டு பணி இடம் பெறுகின்றது. கடந்த வாரம் முதல் மூன்று வரி அறவீட்டு அதிகாரிகள் இதற்கென சபைத் தலைவரால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மண்டைதீவுச் சந்தியில் பொலிஸ் பிரிவுடன் இணைந்த வகையில் இந்த வரிஅறவீட்டுப் பணி இடம்பெறும் .

எரு, தென்னைமட்டை, பனைமட்டை, ஊமல், விறகு, பனங்கிழங்கு, காய்ந்த ஒடியல், புளுக்கொடியல், உரித்த தேங்காய், தேங்காய் மட்டை, கடல் உணவு வகைகள், மீன், கருவாடு, புகையிலை சிப்பம், செத்தல் மிளகாய், வெங்காயம், சவுக்கு மரக்கிளைகள், சிப்பி, சங்கு, மரப்பிடிகள், பழைய இரும்புகள், பித்தளை, அலுமினிய பொருள்கள், கிடுகு, கடகம், பாய், பெட்டி, அரிகல்லு ஆகியனவும் ஆடு, மாடு உட்பட ஏனைய 38 வகையான பொருள்களுக்கு வரி அறவிடப்படுகிறது.

மண்டைதீவுச் சந்தியில் இவ்வாறான பொருள்களை தீவகத்தில் இருந்து கொண்டு செல்லும் போது, வரி செலுத்திய பின்னரே கொண்டு செல்ல வேண்டும் எனச் சபைத் தலைவர், செயலாளர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். (ம-41)



யாழ்.இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா நேற்று முன்தினம் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் 2005ஆம் ஆண்டு கல்வி கற்று வெளியேறிய மாணவர்கள் கல்லூரிக்கென 3 லட்சத்து 30 ஆயிரம் பெறுமதி வாய்ந்த நூல்களின் ஒரு தொகுதியைக் கல்லூரி அதிபரிடம் கையளித்தனர். நிகழ்வின் முதன்மை விருந்தினராக லண்டன் உள்ளூராட்சி நெடுஞ்சாலை திணைக்களத்தின் பொறியியலாளர் வைத்தியலிங்கம் சண்முகலிங்கம் திருமதி சோபனா சண்முகலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-13)

## உயர்தர வகுப்பு மாணவரிடையே வாக்காளர் பதிவு விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஜூன்24
வாக்காளர்களாக சகலரையும் பதிவு செய்யும் முகமாக பாடசாலைகளில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை வாக்காளர்களாகப் பதிவு செய்யும் காலம் அடுத்த மாதம் 15 ஆம் திகதிவரையில் நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது என்று யாழ்.மாவட்ட செயலக உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் இந்த மாதம் முதலாம் திகதிலிருந்து இடம்பெற்று வருகின்றன.

கிராம சேவகர்கள் வீடு வீடாகச் சென்று 'பி. சி.' படிவங்களை விநியோகித்து தமது பகுதிகளுக்கு உட்பட்ட சகல தகுதியுடைய வாக்காளர்களையும் பதிவு செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தி வருகின்றனர்.

அத்துடன் இந்த வருடம் முதன் முறையாக பாடசாலைகளில் உயர்தரத்தில் கற்கும் மாணவர்களுக்கு வாக்காளர் பதிவுகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் 18 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களையும் வாக்காளர்களையும் பதியச் செய்வதுடன் அவர்களினூடாக அவர்களது பெற்றோரையும் வாக்காளர்களாகப் பதிவு செய்ய முடியும்.

அடுத்த மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் கிராம சேவகர்களிடமிருந்து 'பி. சி.' படிவங்கள் எங்களால் மீளப்பெறப்படும். இருப்பினும் அடுத்த மாதம் 15 ஆம் திகதிவரை பொதுமக்கள் 'பி.சி.' படிவங்களை கிராம சேவகர்களிடம் சமர்ப்பிக்க முடியும். இந்தப் படிவங்களை கிராம சேவகர்கள் ஏற்க மறுத்தால் உடனடியாக 021 222 2655 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு முறைப்பாடு செய்ய மடியும்.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-5)

### நிகழ்வுகள்
## இன்று

**கிளைக்குழு தேர்தல்**

வலி கிழக்கு தென்பகுதி நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்

சங்கத்தின் 34 கிளை நிலையங்களுக்கும் இந்தத் தேர்தல் இன்று ஒரே நேரத்தில் நடைபெறும் என்று கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே அருந்தவநாதன் தெரிவித்தார்.

கிளையின் பொதுச் சபைக் கூட்டத்திற்குச் சமுகமளிக்கும் உறுப்பினர்கள் தங்கள் உரிமையைப் பயன்படுத்திக் கூட்டுறவுத்துறையை ஜனநாயக ஆளுமை கொண்டதாக செயற்படுத்த முன் வர வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார். (த-17)

**கண்காட்சி**

புகைப்படத்தை புதிய முறையில் ஊடகமாகப் பயன்படுத்துதல் தொடர்பான ''எனது தரிசனங்கள்'' எனும் புகைப்படக் கண்காட்சி காலை 9 மணிக்கு ஜூம்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த21, 22, 23ஆம் திகதிகளில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த புகைப்படவியலாளர் டோர்தி சூஸினால் நடத்தப்பட்ட புகைப்படக் களப்பயிற்சியில் பங்கு பற்றியவர்களினால் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இந்தக் கண்காட்சியில் காட்சிப் படுத்தப்படவுள்ளன.(ம-14)

**பிரிவுபசாரம்**

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் ஏற்பாட்டில் ஜே/259 கிராம சேவகராக கடமையாற்றி இடமாற்றம் பெற்ற கிராம சேவையாளர் செ.செல்வச்சந்திரனுக்கான பிரிவுபசார விழா பிற்பகல் 3 மணிக்கு ஞானபாஸ்கரோதய சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் ப.துஷ்யந்தன் தலைமையில் நடை [illegible] தேச செயலாளர் ம.பிரதீபன் கலந்துகொள்வார். (ம-14)

## பயணிகளை இறக்கும்போது கட்டணம் அறவிடத் தடை

வடமராட்சி, ஜூன் 24
மினி பஸ்களில் இருந்து பயணிகள் இறங்கும்போது, பயணக் கட்டணத்தை அறவிடக் கூடாது என வடமராட்சிச் சிற்றூர்திச் சேவைச் சங்கம் அறிவித்துள்ளது.

வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கத்தின் கீழ் பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி ஊடாகவும், வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஊடாகவும் மினிபஸ் சேவைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் பஸ்களில் பயணிக்கும் பயணிகளிடம் பஸ்ஸை விட்டு இறங்கும் நேரத்தில் கட்டணம் அறவிடப் படுவதாகவும், இது ஆபத்தை விளைவிக்கும் ஒரு செயற்பாடு என்றும் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டது. இந்த நிலையில் சிற்றூர்திச் சங்கம் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த அறிவுறுத்தலை மீறி பணம் அறவிட்டால், அது தண்டனைக்குரிய குற்றம் எனவும் இதனைக் கவனத்தில் கொண்டு செயற்படுமாறும் மினிபஸ் நடத்துநர்கள் கேட்கப்பட்டுள்ளனர். இதனை மீறிச் செயற்படும் நடத்துநர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பிக்கவின் கருத்துக்கு மார்க்சிஸ்ட் கம்யூ. கண்டனம்

ஈழத் தமிழர்களை அச்சுறுத்தும் வகையில் பேசிய இலங்கை அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுக்கு இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை இராணுவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஆயுதப்போர் முடிந்து மூன்றாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. இருப்பினும் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவில்லையே என இலங்கைத் தமிழர்கள் கடும் மன வேதனையில் உள்ளனர். இந்தத் தருணத்தில் இலங்கை அமைச்சர் சம்பிக்க ரணவக்க மீண்டும் முள்ளிவாய்க்கால் உருவாகும் என்ற தொனியில் பேசியுள்ளார்.

இலங்கைத் தமிழர்களை அச்சுறுத்தும் வகையிலும், கோபமூட்டும் வகையிலும் சம்பிக்க ரணவக்க பேசியிருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கின்றது.

இத்தகைய சூழலில் இலங்கைத் தமிழர் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண இந்திய அரசு இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வேண்டும்- என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் 14 ஆவது தேசிய மாநாட்டில் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் பாரம்பரிய நிலம் என்பதை உறுதிப்படுத்தியாக வேண்டும் என்ற சம்பந்தனின் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைச்சர் சம்பிக்க ரணவக்க சம்பந்தனின் பேச்சு சிங்களவர்களைப் போருக்கு இழுப்பதாக உள்ளது. அதற்கு நாம் தயாராகவே உள்ளோம். இவ்வாறு தொடர்ந்து பேசிக்கொண்டு இருப்பீர்களானால் இன்னும் நூறு முள்ளிவாய்க்கால் படுகொலைகளைச் சந்திக்க நேரிடும் என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## முறிகண்டியில்...

மேற்கொள்ளப்படும் காணி சுவீகரிப்புக்கு எதிராகப் பொதுமக்கள் சாத்வீகப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் ஒருகட்டமாக நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்டத்தில் முறிகண்டிப் பிள்ளையார் கோயில் முன்றிலில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. இதனை அடுத்தே புலனாய்வுப் பிரிவினர் பொதுமக்களிடம் விசாரணைகளில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முறிகண்டியில் நடைபெறவுள்ள போராட்டத்தில் பொதுமக்கள் கலந்துகொள்வதைத் தடுக்கும் வகையிலேயே புலனாய்வாளர்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. புலனாய்வாளர்களின் இந்த நடவடிக்கை காரணமாக அப்பகுதி மக்கள் பீதியடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (த-16-6)

## மாகாண சபை....

உள்ள சிரமம் காரணமாக தேர்தலை ஒத்திவைக்குமாறு முஸ்லிம் அரசியல் கட்சிகள் மற்றும் மதத் தலைவர்கள் பலர் அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இவற்றின் அடிப்படையில் குறிப்பிட்ட மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒத்தி வைக்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி நாடு திரும்பியதும் இதுகுறித்த அரசின் தீர்மானம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (த)

## தமிழ்நாட்டு....

எழுதியுள்ளனர்.

இது பற்றிப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் இலங்கை அரசுடன் பேசுவார். எதிர்காலத்தில் இந்திய மீனவர்கள் எந்தவித பாதிப்புமின்றி இருக்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். தமிழக மீனவர்களுக்கு இலங்கை இராணுவம் மற்றும் கடற்படையால் எந்தவித பாதிப்பும் இல்லாமல் இருக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கை முள்ளிவாய்க்கால் போல் மேலும் பல முள்ளிவாய்க்கால் சம்பவம் நடக்கும் என இலங்கை அமைச்சர் பேசியது கண்டிக்கத்தக்கது. நாட்டின் உயர் பொறுப்பில் உள்ளவர்கள் நிதானமாக பேச வேண்டும்-என்றார். (த)

## இலங்கையின்...

இருப்பதாக ஈரான் ஜனாதிபதி இதன் போது இலங்கை ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளார்.

அத்துடன், தெஹ்ரானில் இடம்பெறவுள்ள அடுத்த அணிசேரா நாடுகளின் மாநாடு தொடர்பிலும் இவர்கள் இருவரும் ஆராய்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அமைச்சர்களான அனுர பிரியதர்சன யாப்பா, விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க, மஹிந்த சமரவீர, பிரதியமைச்சர் நிருபமா ராஜபக்ச, நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். (த)

## தமிழினி போல் ஏனைய கைதிகளும்...

தமிழினிக்கு வழங்கப்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பம் ஏன் ஏனைய தமிழ் அரசியல் கைதிகளுக்கு வழங்கப்படவில்லை என்று என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது:-

தீர்ப்பு வழங்குவதற்கு முன்னர், புனர்வாழ்வு பெற்றுக்கொள்வது தொடர்பில், தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழினியிடம், இது தொடர்பான அவரது ஒப்புதலை பெறும்படி நீதவான் பணித்துள்ளார். சட்டமா அதிபர் திணைக்களமும். தமிழினி சிறையில் இருந்து புனர்வாழ்வு முகாமுக்கு மாற்றப்படுவதை ஆட்சேபிக்க வில்லை.

இந்தத் தீர்ப்பு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினைகளுக்கும் தீர்வை கொண்டு வர வேண்டும். இந்த நடவடிக்கையை மக்கள் கண்காணிப்பு குழு ஏற்பாட்டாளர் என்ற முறையில் நான் வரவேற்கின்றேன்.

சந்தேகங்களின் அடிப்படையிலும், வழக்கு இழுத்தடிக்கப்படும் நிலையிலும், தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். தமிழினி போன்று இன்னும் பல பெண்களும், அவர்களது குழந்தைகளும்கூட சிறையில் உள்ளார்கள். வயோதிபர்களும், மதகுருமார்களும் இருக்கிறார்கள். குற்றங்களுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டவர்களும் நீண்டகாலமாகச் சிறைகளில் இருக்கிறார்கள்.

தமிழினிக்கு வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பம், ஏனைய தமிழ் கைதிகளுக்கும் வழங்கப்பட வேண்டும். புனர்வாழ்வு அல்லது பொது மன்னிப்பு வழங்கப்பட்டு அவர்கள் தமது குடும்பங்களுடன் சேர்க்கப்படவேண்டும்.

அரசு தமது அரசியல் தேவைகளின் அடிப்படையில், புலிகளின் முன்னாள் பிரபலங்களுக்குப் பொது மன்னிப்பும், சந்தர்ப்பங்களும் வழங்கப்படுகின்றனவா என்ற சந்தேகம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில், நீதி அமைச்சர் ரவுப் ஹக்கீமும், புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறியும் உரிய பதில்களை அளிக்க வேண்டும்-என்றார். (த)

## ஐ.நா. மனித உரிமைகள்...

சபையினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு உரிய பதில் இதுவரை கிடைக்கவில்லை என அந்த அறிக்கையில் ஐ.நா. சிறப்பு வல்லுநர் குழு சுட்டிக் காட்டியுள்ளது. இந்த விடயத்தில் இலங்கை அரசு மெத்தனப் போக்கைக் கடைப்பிடிப்பதாகவும் அந்தக் குழு கூறியுள்ளது.

ஐ.நாவின் சிறப்பு வல்லுநர் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துச் சுதந்திரம், சட்டத்துக்குப் புறம்பான செயற்பாடுகள் தொடர்பிலான ஆய்வறிக்கையில் இலங்கை தொடர்பில் முன்வைக்கபட்ட விடயங்கள் வருமாறு:-

* சம்பவம் 1 - (2011 ஆம் ஆண்டு) யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் நாளன்று, அரசியல் மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர்கள் அமைதியான கவனஈர்ப்பு நிகழ்வொன்றுக்கு செல்ல முயன்றபோது தடுத்து வைக்கப்பட்டதும், மிரட்டப்பட்டதுமாகத் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டு.

* சம்பவம் 2 - (2012 ஆம் ஆண்டு) அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றுக்குச் சென்றோர் மீது மிகையான பலப் பிரயோகம்பாவிக்கப்பட்டு அமைதியாகக் கூடுதலுக்கும், கருத்து வெளியிடுதலுக்கும் தேவையற்ற தடை விதிக்கப்பட்டதாகத் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டு.

மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஐ.நா விசேடஅறிக்கை அதிகாரி, அறிக்க்கக் காலத்தில் தன்னால் அனுப்பப்பட்ட இரு அறிக்கைகளுக்கும் இலங்கை அரசிடமிருந்து இதுவரை பதில் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தனது கடமையைச் சரியாக செய்வதற்குத் தனக்கு பதில் அளிப்பது அவசியமென்றும், இலங்கை அரசை இயன்றளவு விரைவில் பதிலளிக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

யாராவது அமைதியான கூட்டங்களுக்கும், ஒன்று சேர்தலுக்குமான தமது சுதந்திரத்தை அமைதியான முறையில் நடைமுறைப்படுத்தும்போது அதை குற்றமயப்படுத்தாமலிருப்பதை அரசுகள் நிச்சயம் செய்து கொள்ளவேண்டியது அரசுகளின் கடமை என்பதை ஐ.நா. விசேட அறிக்கை அதிகாரி சுட்டிக் காட்டியிருக்கிறார். ஆயினும் அரசிடம் இருந்து இதுவரை அதற்குப் பதிலில்லை.

இலங்கை மக்கள் அமைதியான முறையில் கூடுதலுக்கும் ஒன்று சேர்தலுக்குமான மக்களின் உடல், உளரீதியான பாதுகாப்புத் தொடர்பாகத் தான் அக்கறை கொண்டிருப்பதாகவும் விசேட அறிக்கை அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

கூடுதலுக்கும் ஒன்றிணைதலுக்குமான தமது சுதந்திரத்தை பாவிக்கும் மக்கள் மீது மனித உரிமைகளை மீறி துன்புறுத்தல்களையோ அல்லது பயமுறுத்தல்களையோ செய்தவர்கள் குறித்து சுயாதீனமான, பூரணமான விசாரணை நடத்தப்படவேண்டும். அவற்றுக்குப் பொறுப்பானவர்களை அந்தப் பொறுப்பை ஏற்க வைக்க வேண்டும் எனவும் விசேட அறிக்கை அதிகாரி பரிந்துரைத்திருக்கிறார்.

இலங்கைக்குப் பயணம் செய்வதற்குகாகத் தான் 2011 செப்ரெம்பரில் இலங்கை அரசுக்கு அனுப்பி வைத்த கோரிக்கைக்கு அரசு இன்னும் பதிலளிக்கவில்லை என்பதையும் விசேட அறிக்கை அதிகாரி ஞாபகமூட்டியுள்ளார்.

எனவே இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா.மனித உரிமைகள் சபையினால் கேட்கப்படும் கேள்விகளை இலங்கை அரசு தொடர்ந்து உதாசீனப்படுத்தி வருகிறது. எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும். இதுவரை எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு இலங்கை அரசு உடனடியாக பதில் வழங்க வேண்டும் என்று 20ஆவது அமர்வில் ஐ.நா. சிறப்பு வல்லுநர் குழு பரிந்துரை செய்துள்ளது. (த)

## கிரனேட் வெடித்து....

அகற்றுவதில் ஈடுபட்டிருந்த 'ஹலோ ட்ரஸ்ட்' பணியாளர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

தனபாலசிங்கம் தர்மகுலசிங்கம் (வயது 32), ஜேசுதாஸன் ஜெப்ரி (வயது 34), பரமசிவம் பாமினி (வயது 20) ஆகிய மூவருமே காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

முகமாலைப் பகுதியில், தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னரங்கப் பகுதிக்கும் இராணுவத்தினரது முன்னரங்கப் பகுதிக்கும் இடையில் நேரடிப் போர் இடம்பெற்ற பகுதியில் வழமை போன்று பணியாளர்கள் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

நேரடிப் போர் இடம்பெற்ற பகுதி என்பதால் வெடிக்காத நிலையில் வெடிபொருள்கள் இந்தப் பகுதியில் அதிகளவில் உள்ளன. அவற்றைப் பணியாளர்கள் அகற்றும் போதே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வெடிக்காமல் 'கிளிப்' கழன்ற நிலையில் மண்ணில் புதையுண்டிருந்த கிரனேட் ஒன்றே வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (த-5-4)

## 60 வருட...

சினை குறித்த அரசியல் தீர்வுக் கான இணக்கப்பாட்டை எட்டும் நோக்கில் அரசினால் பிரேரிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தற்போதைய நிலைமை குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவானது அரசினால் பிரேரிக்கப்பட்டுள்ள நிலையிலும் எதிர்க்கட்சிகள் அதில் பங்கேற்காததன் காரணமாக அதன் செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியாமல் உள்ளது. குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் பங்கேற்காமல் தொடர்ந்து தாமதித்து வருகின்றது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குத் தமது பிரதிநிதிகளின் பெயர்களை வழங்குமாறு சபாநாயகர் அறிவித்துவிட்டார். எனினும் கூட்டமைப்பு இதுவரை தீர்மானம் எடுக்காமல் இருக்கின்றது. என்னைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் நம்பிக்கையுடன் இணைந்துகொள்ளலாம் என்பதையே வலியுறுத்திக் கூறுகின்றேன்.

காரணம் ஆறு மாதங்களில் தீர்வுத்திட்டம் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே எந்தச் சந்தேகமுமின்றி அதில் ஈடுபடலாம். அதாவது அரசியல் தீர்வுக்காக 60 வருடங்களாகக் காத்திருந்தவர்களுக்கு 6 மாதங்கள் காத்திருக்க முடியாதா என்பதே எனது கேள்வியாகவுள்ளது.

மேலும் தெரிவுக்குழுவில் சகல கட்சிகளும் இணைந்து கொள்வதன் மூலம் அனைத்து விவகாரங்கள் குறித்தும் பேசலாம். 13 பிளஸ் மற்றும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் என எழுகின்ற அனைத்து விடயங்கள் குறித்தும் பேச்சு நடத்தலாம்.

எனவே நாடாளுமன்றத்தின் மீது நம்பிக்கை வைப்பவர்கள் அரசியல் தீர்வு குறித்து ஆராயும் தெரிவுக்குழுவிலும் நம்பிக்கை வைக்கலாம் என்பதனை வலியுறுத்துகின்ற அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவுக்கு தனது பிரதிநிதிகளை நியமிக்கவேண்டும் -என்றார். (த)

## 150 இலங்கை அகதிகள் மாயம்

அனைவரும் அரசியல் தஞ்சம் கோரும் நோக்கில், ஆஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்ல முற்படலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சந்தேகத்துக்கு இடமான படகுப் பயணங்கள் குறித்து கேரளா மற்றும் தமிழகத்தில் விசாரணைகளும், பரிசோதனைகளும் இடம்பெற்று வருவதாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

## இராணுவ வாகனம் மோதியதில் மாணவன் சாவு

ஸார் தெரிவித்தனர்.

தம்பிலுவில் ஏ.பி.சி. சந்திக்கு அருகில் நேற்றுக் காலை மேற்படி மாணவன் வீதியைக் கடக்க முயன்ற வேளையில் இராணுவ பிக் அப் வாகனமொன்று மோதியுள்ளது.

திருக்கோவில் மாவட்ட வைத்தியசாலைக்கு இச் சிறுவன் கொண்டு செல்லப்பட்டபோது அவன் உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது. நதன்பரன்(வயது-14) என்ற மாணவனே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இலங்கையிலிருந்து 'படகு மக்கள்' பயணங்கள் முடிவுற வாய்ப்பு வருமா?

ஆஸ்திரேலியா நோக்கிச் சென்ற படகு ஒன்று இந்தோனேசியாவுக்குத் தெற்கே ஆழ் கடலில் கவிழ்ந்ததில் 75 பேர் உயிரிழந்துள்ளனர் என்று வெளியான தகவல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது. படகு கவிழ்ந்தபோது அதில் 200 பேர் வரை இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. அவர்களில் இலங்கையர் எவரும் அடங்கவில்லை என்று பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் இருந்தும், ஆப்கானிஸ்தானில் இருந்தும், ஈரானில் இருந்தும் தமது உயிரைத் துச்சமாகக் கருதி படகுகளில் பயணம் செய்வோரின் இலக்கு ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவாகும் என்பது இப்போது பொதுவான ஒரு வாய்ப்பாடாகவே மாறிவிட்டது எனலாம். இவ்வகைசார் அகதிகள் விடயத்தில் சம்பந்தப்பட்ட அரசுகள் சர்வதேச சட்டங்களுக்கு மதிப்புக் கொடுத்து மனிதாபிமானத்துடன் நடந்து கொள்வது அவசியம். ஆனால் அதற்குச் சாதகமான முழுநிலை தோன்றும் என எதிர்பார்க்க முடியவில்லை.

படகுகளில் மக்கள் அகதிகளாக வெளியேறுவது முதல் தடவையாக எழுபதுகளிலேயே சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்தது.

1975இல் தென்வியட்னாமின் சைகோன் நகரம் கம்யூனிஸ்ட்டுகளிடம் வீழ்ச்சி அடைந்தபோது, புதிய ஆட்சியாளர்களுக்கு அஞ்சி ஆயிரக்கணக்கான மக்கள் படகுகளில் வெளியேறியபோது படகு மக்கள் (Boat People) என்ற பதம் பிரபல்யம் அடைந்தது. அமெரிக்க ஆதரவு நூயன்வான்தியூ அரசுக்கு ஆதரவான ஆயிரக்கணக்கானோர் புதிதாக ஏற்படுத்தப்பட்ட பொருளாதார வலயங்களில்அடிமை வேலைக்கும் மீள் கல்வி முகாம்களுக்கும் அனுப்பப்பட்டுப் பெரும் களையெடுப்பு இடம்பெற்றது. அவ்வேளை ஆயிரக்கணக்கானோர் படகுகளில் வெளியேறி மலேசியாவிலும், தாய்லாந்திலும், பிலிப்பைன்ஸிலும், ஹொங்கொங்கிலும், இந்தோனேசியாவிலும் தஞ்சம் அடைந்தனர். புதிய அரசினால் அமைக்கப்பட்ட பொருளாதார வலயங்களில் அப்பொழுது 50 ஆயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டனர் என்றும் மீள் கல்வி நிலையங்களில் ஒன்றரை லட்சம் பேர் வரை படுகொலைசெய்யப்பட்டனர் என்றும் தகவல்கள் வெளியாகி இருந்தன.

'படகு மக்கள்' தஞ்சம் அடைந்த நாடுகளில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் முகாம்களை நிறுவி அவர்களைப் பராமரித்தது.

ஆனால், இன்று நிலைமை வேறு. சொந்த நாட்டில் இருந்து அகதிகளாக வெளியேறும் 'படகு மக்கள்' சந்தேகத்துடன் பார்க்கப்படுகிறார்கள். வளமான எதிர்காலமே அவர்களது இலக்கு என்று கருதப்படுகிறது.

பல நாடுகளில் இந்தப் பிரச்சினை அரசியலிலும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. ஆஸ்திரேலியாவில் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் இது பெரும் கனபரிமாணத்தில் சர்ச்சையாகப் பார்க்கப்பட்டது. படகுகளில் சென்று ஆஸ்திரேலியாவில் தஞ்சம் அடைந்தோரின் எண்ணிக்கை அப்பொழுது 6,555 ஆகும். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற படகுவிபத்து, 2010க்குப் பின்பு இடம்பெற்ற அகதிகள் சம்பந்தப்பட்ட நான்காவது பெரும் விபத்து.

கடந்த டிசம்பர் மாதம் யாவாவின் கிழக்குக் கரையில் புயலில் சிக்கி படகு கவிழ்ந்ததில் 38 பேர் மரணம் அடைந்தனர். இந்தச் சம்பவம் இடம்பெற்று ஒருவார காலத்துக்குள் யாவாவுக்குக் கிழக்கே உள்ள மலுக்கு தீவுக்கு அருகில் படகு கவிழ்ந்து 10 பேர் உயிரிழந்தனர். 90 பேருடன் சென்ற மற்றொரு படகு பாறையுடன் மோதியதில் 50 பேர் மரணமடைந்தனர்.

சமீபத்தில் இலங்கையில் இருந்து ஆஸ்திரேலியா புறப்பட இருந்த சுமார் 100 பேர் பிடிபட்டும் இந்து சமுத்திரத்தில் சென்று கொண்டிருந்த படகு ஒன்று இந்திய கடற்படையினரால் தடுக்கப்பட்டும் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்லும் முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

அவ்வாறு இருப்பினுங்கூட, பயணங்கள் தொடர்கின்றன. இவர்களைக்கொண்டு செல்வோர் பணத்துக்கு ஆசைப்பட்டு அளவுக்கு அதிகமானோரை படகுகளில் ஏற்றுவதும், தூரக் கடற் பயணத்துக்குப் பொருத் தமற்ற படகுகளைப் பயன்படுத்துவதும், அபாயகரமான கடல் பாதைகளில் செல்வதும் விபத்துகளுக்கு முக்கிய காரணங்களாகக் கருதப்படுகின்றன.

படகுகளில் மக்கள் அகதிகளாக வெளியேறுவதற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று சொந்த நாட்டில் பாதுகாப்பு இன்மை. மற்றது வெளிநாட்டில் வளமான எதிர்காலம்.

இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தில், உயிருக்கு அஞ்சி ஆயிரக்கணக்கானோர் படகுகளில் தமிழ்நாடு சென்றனர். போர் இப்போது முடிவுற்ற பின்னரும் படகுப் பயணம் தொடர்கிறது கிறிஸ்மஸ் தீவு நோக்கி. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு நாட்டில் நிரந்தர சமாதானமும் பொருளாதார அபிவிருத்தியும் தேவை. ஆனால் அதற்கான விருப்பமோ, வினைத்திறனோ இன்றைய அரசிடம் காணப்படவில்லை. தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி, அவர்களின் பூர்வீகச் சொத்துக்களையும் உரிமைகளையும் கபளீகரம் செய்வதிலேயே அது மிகப் பெரிய அளவில் கவனம் செலுத்திச் செயற்படுகிறது. படகுப் பயணங்கள் ஆபத்தானவை என்பதனை வெறும் அறிக்கைகளால் உணர்த்துவது கடினம். அதற்கான அரசியல், பொருளாதாரச் சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

## கிராம அலுவலர்களின் பணி நேரத்தில் மாற்றம்

### மாலை 4.15 வரை கடமையாற்ற அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூன் 24

கிராம அலுவலர்கள் நாளாந்தம் மாலை 4.15 மணிவரை தமது அலுவலகத்தில் கடமையாற்ற வேண்டும் என்று பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அரச அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சில் இடம் பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து யாழ். மாவட்ட அரச அதிபர் சுற்றறிக்கை மூலம் பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் அலுவலகங்களுக்கு இந்த நடைமுறையைப் பின்பற்றுமாறு அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் கிராம அலுவலர்களில் 90 வீதத்துக்கும் மேற்பட்ட கிராம அலுவலர்கள் திங்கள், வியாழன் நாள்களையே பெரும்பாலும் தமது அலுவலக நாள்களாகக் கொண்டு

> இதனை உரிய முறையில் கிராம அலுவலர்கள் நடைமுறைப்படுத்தாது தமது போக்கில் இரண்டு நாள்கள் மட்டும் கடமையாற்றினால் மக்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாக வேண்டிய நிலைமை ஏற்படும்.

கடமையாற்றி வருகின்றனர்.

இதனால் பொதுமக்கள் இது தான் அலுவலக நாள்கள் என்ற கருத்தில் தமது கடமைகளை இந்த நாள்களில் சென்று நிறைவேற்றி வருகின்றனர்.

அரசால் வெளியிடப்பட்ட அறிவித்தலில் கிராம அலுவலர்கள் தமது ஓய்வு நாளாக கொள்ளப்படும் ஒரு நாளையும் மற்றும் புதன் கிழமைகளில் பிரதேச செயலகங்களில் இடம்பெறும் நாள் கூட்டங்களில் கலந்துகொள்ளும் நாளையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் தமது அலுவலகங்களில் கடமையில் ஈடுபட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை உரிய முறையில் கிராம அலுவலர்கள் நடைமுறைப்படுத்தாது தமது போக்கில் இரண்டு நாள்கள் மட்டும் கடமையாற்றினால் மக்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாக வேண்டிய நிலைமை ஏற்படும்.

இதனை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதில் பொது மக்களுடைய பங்களிப்பும் கிராமிய மட்டத்தில் காணப்படும் பொது அமைப்புக்களின் பங்களிப்பும் முக்கியம் என்றும் அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ம-86)

## டிப்ளோமாதாரிகள் பதிவு செய்ய அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூன் 24

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் பயின்று டிப்ளோமா சான்றிதழ் பெறவுள்ள ஆசிரியர்கள் அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் தம்மைப் பதிவுசெய்து கொள்ளுமாறு கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் 2005, 2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் பயிற்சியை நிறைவு செய்து ஆசிரியர்களாக கடமையாற்றுபவர்களையே பதிவுசெய்யுமாறு கூறப்பட்டுள்ளது.

இதில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் நேரிலும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கடிதமூலமும் பதிவுகளை மேற்கொள்ளலாமென பீடாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் ஓகஸ்ட் 15 ஆம் திகதி கல்லூரியில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-16)

## கல்விச் சேவை ஊழியர் சங்கம் வடமாகாணத்திலும் சேவையில்

யாழ்ப்பாணம், ஜூன் 24

கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கல்விச் சேவை ஊழியர்களின் சிக்கன கடனுதவிச் சங்கம் வடமாகாணத்திலும் தற்போது சேவையை வழங்கி வருகிறது.

இந்தச் சங்கத்தின் சேவைகளை மேம்படுத்தும் நோக்குடன் மேம்படுத்தல் உத்தியோகத்தராக அளவெட்டியைச் சேர்ந்த சீ.சுதாகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமாகாணத்தில் உள்ள கல்விச் சேவை ஊழியர்கள் நகர்ப் புறத்தில் மட்டுமல்லாது கிராமப் புறத்திலும் நன்மையடையக் கூடிய வகையில் இந்தச் சங்கம் செயற்பட்டு வருகின்றது.

விசேடமாக போரால் பாதிப்படைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் மேம்படுத்தல் உத்தியோகத்தரை நியமித்து சங்கத்தின் சேவை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

கல்விச் சேவை ஊழியர்கள் சொத்துப் பிணைக்கடன், இருவர் பிணை கொண்ட கடன், உடனடிக் கடன், வெளிநாட்டுச் சுற்றுலாக் கடன், மூக்குக் கண்ணாடிக்கடன், மோட்டார் சைக்கிள் கடன், நிரந்தர வைப்பு மீதான கடன், கையடக்கத் தொலைபேசிக் கடன் ஆகிய கடன் திட்டங்களை இந்தச் சங்கத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்தச் சங்கத்தில் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் உடனடிக் கடன் ஒரேநாளில் 2 மணித்தியாலங்களில் விசேடமாக வழங்கப்படுவது இந்தச் சங்கத்தின் விசேடமாக உள்ளது.

அத்துடன் பல்கலைக்கழக புலமைப் பரிசில், தரம்- 5 புலமைப்பரிசில், மரணாதாரத் திட்டம், ஓய்வூதியக் கொடுப்பனவு, பராயமடையாதோர் சேமிப்புக் கணக்கு போன்ற நலத் திட்டங்களையும் இந்தச் சங்கத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

## மாவைக் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்



யாழ்ப்பாணம், ஜூன் 24

சரித்திரப் பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் காம்யோற்சவப் பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி ஆடி மாதம் மூன்றாம் திகதி (ஜூலை 18 ஆம் திகதி) வரை நடைபெறவுள்ளது.

திருக்கார்த்திகைத் திருவிழா ஜூலை 14 ஆம் திகதியன்றும் தேர்த் திருவிழா 17 ஆம் திகதி செவ்வாய்க் கிழமையும் தீர்த்தத் திருவிழா ஆடி அமாவாசை தினமான ஜூலை 18 ஆம் திகதி புதன்கிழமையும் நடைபெறும்.

திருவிழா நாள்களில் ஆறு சாமப் பூசைகள் விசேடமாக நடைபெறும் என்று ஆலய ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ து.ஷ. இரத்தின சபாபதிக் குருக்கள் தெரிவித்தார்.

(அ)

## அடையாள அட்டைகள் இன்மையால் கொடுப்பனவை இழக்கும் முதியோர்

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ். மாவட்டத்தில் வாழும் முதியோர் பலர் அடையாள அட்டைகள் இன்மையால் அரசால் வழங்கப்படும் கொடுப்பனவைப் பெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

முதியோர் அடையாள அட்டையைக் கூடப் பெற முடியாத நிலையில் உள்ள இவர்கள் தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கு பிறப்புச் சான்றிதழ் தேவை என்ற அடிப்படையில் அதையும் பெற முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அரசு தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் குறிப்பாக பிறப்புச் சான்றிதழ் இன்றி தேசிய அடையாள அட்டை பெறாதவர்கள் பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழைச் சமர்ப்பித்துப் பெறலாம் என்று அறிவித்திருந்த போதும் இந்த நடைமுறையைப் பின்பற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தற்போது முதியவர்களுக்கான நிதியுதவியாக ஆயிரம் ரூபா அரசால் வழங்கப்படவுள்ள நிலையில் பல முதியவர்கள் தேசிய அடையாள அட்டை முதியோர் அடையாள அட்டை, இல்லை என்ற காரணத்தால் இந்த உதவியைப் பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டைப் பிரதி அல்லது முதியோர் அடையாள அட்டைப் பிரதி இணைத்தால்தான் உரிய படிவங்களை அனுப்ப முடியும் எனப் பல பிரதேச செயலகங்களில் சமூக சேவை அலுவலர்கள் தெரிவிக்கின்ற நிலையில் முதியோர் பலருக்கு இந்தக் கொடுப்பனவு கிடைக்காமல் போகும் நிலைமை ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகஷ்டப் பிரதேச ஆசிரியரின் கொடுப்பனவுகள் இழுத்தடிப்பு

வவுனியா, ஜூன் 24

நலன்புரி நிலையங்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அதிகஷ்டப் பிரதேச கொடுப்பனவு வழங்கப்படுமென வாக்குறுதி அளிக்கப்பட்டு மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும், அது வழங்கப்படாமை குறித்து ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வவுனியா செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியிலுள்ள ஆனந்தகுமாரசாமி, கதிர்காமர் நலன்புரி பாடசாலைகள் அதிகஷ்டப் பிரதேசத்தில் அமைந்துள்ளன. இந்தப் பாடசாலைகளுக்கு அண்மையிலுள்ள அருவித்தோட்டம் சிவானந்தா வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அதிகஷ்டப் பிரதேசப் படியாகிய 2 ஆயிரத்து 500 ரூபா வவுனியா தெற்கு வலயத்தால் வழங்கப்படுகிறது.

வவுனியா தெற்கு வலயம் நலன்புரி நிலையப் பாடசாலைகளை மேற்பார்வை செய்த போது 2 ஆயிரத்து 500 ரூபாவை அதிகஷ்டப் பிரதேசப் படியாக வழங்கி வந்தது.

> விரைவில் வழங்கப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால் மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் அந்தக் கொடுப்பனவு இன்னும் கிடைத்தபாடில்லை.

ஆனால் முல்லைத்தீவுக் கல்வி வலயம் இந்தப் பாடசாலைகளைப் பொறுப்பேற்றதும் அதனை நிறுத்தியதுடன் பின்னர் ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கிணங்க கஷ்டப் பிரதேசப் பாடசாலைக்கான கொடுப்பனவாக ஆயிரத்து 500 ரூபாவை வழங்கி வந்தது.

தற்போது மீளக்குடியமர்த்தப்பட்ட பகுதியிலுள்ள அனேகமான பாடசாலைகள் கஷ்டப் பிரதேச மற்றும் அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளாக உள்வாங்கப்பட்டு கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. இது தொடர்பாக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து, நலன்புரி பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களுக்கு அதிகஷ்டப் பிரதேசப் படியை வழங்குவதாக உறுதியளித்திருந்தார். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளரும் புதுக்குடியிருப்பு கோட்டக் கல்விப் பணிப்பாளரும் நலன்புரி முகாம்களுக்கு வருகை தந்து கலந்துரையாடிய பொழுது அதிகஷ்டப் பிரதேசப்படி வழங்குவதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது. உங்களுக்கு அது விரைவில் வழங்கப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால் இன்று மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் அது வழங்கப்படவில்லை.

இந்தப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பலர் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் போன்ற தூர இடங்களில் இருந்து வந்தே தமது பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக வவுனியாவில் இருந்து இருவழிப் பயணக் கட்டணம் 140 ரூபாவாகவுள்ள நிலையில், போக்குவரத்து நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மன உளைச்சலுக்கு மத்தியிலும் தமது பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள், ஆசிரியர்களின் நலனில் அக்கறை கொண்டு அதிகஷ்டப் பிரதேசப் படியான 2 ஆயிரத்து 500 ரூபாவை வழங்குவதற்குஆவனசெய்ய வேண்டுமென பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-400)

## பஸ் நிலைய மலசலகூடங்களில் கால் வைக்க முடியாத நிலை

### கிளிநொச்சி நகரில் சுகாதாரக்கேடு

கிளிநொச்சி, ஜூன் 24

கிளிநொச்சி பஸ் நிலையத்தில் அமைந்துள்ள மலசலகூடங்கள் பராமரிப்பு இன்றிக் காணப்படுவதால் இங்கு செல்லும் மக்கள் முகம் சுளிக்கும் அதே சமயம் கால் வைக்க முடியாத நிலை உள்ளது.

இவற்றை உபயோகிப்பவர்கள் நீரை ஊற்றி முறையாகப் பாவிக்காததால் பலத்த சுகாதாரச் சீர்கேடு உருவாகியுள்ளது. இதனால் துர்நாற்றம் வீசுவதுடன் ஏராளமான இலையான்களும் காணப்படுகின்றன. இந்த மலசலகூடங்களுக்கு எதிர்ப்பக்கத்தில் உணவகங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த மலசலகூடங்களை உரிய முறையில் பராமரிப்பதோடு அடிக்கடி சுத்தம் செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மக்களும் பொறுப்புணர்வுடன் மலசலகூடத்தை பயன்படுத்தினால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படமாட்டா. மிக விரைவில் புதிய சந்தை இயங்கத் தொடங்கும் போது அதிக மலசலகூட வசதிகளை உருவாக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-18)

## நீண்ட தூரம் நடந்து செல்லும் மாணவர்கள்

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள கிராமப்புறப் பாடசாலை மாணவர்கள் நாள்தோறும் நீண்ட தூரம் நடந்து பாடசாலைகளுக்குச் செல்லும் அவலம் தொடர்கின்றது.

துணுக்காயின் தென்னியங்குளம், கோட்டைகட்டியகுளம், உயிலங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் தினமும் நீண்ட தூரத்தில் உள்ள பாடசாலைக்கு நடந்து செல்லும் நிலையில் உள்ளனர். இதனால் பல மாணவர்கள் பாடசாலையில் இருந்து இடைவிலகும் அபாயம் தோன்றியுள்ளது. இத்தகைய மாணவர்களுக்கு அமைப்புகள் சைக்கிள்களை வழங்க முன்வர வேண்டும் எனப் பெற்றோரினால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க-18)

## மும்மொழித் திட்ட நடைமுறைக்கு வவுனியா நகரசபை முன்மாதிரி

### முக்கிய ஒப்பந்தம் கைச்சாத்து

வவுனியா, ஜூன் 24

கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவரமைப்பின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி டொன் பிரவுனலுக்கும் வவுனியா நகரசபை பதில் தலைவர் எம்.எம். ரதனுக்கும் இடையில் முக்கிய ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.


கடந்த 20 ஆம் திகதி நகரசபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தேசிய மொழிகள் திட்டத்தை நகரசபையில் நடைமுறைப்படுத்தல் என்ற ஒப்பந்தமே கைச்சாத்திடப்பட்டது.

கனேடிய அரசு, மொழிகள் அபிவிருத்தி நிலையம், தேசிய கரும மொழிகள் அமைச்சு ஆகியன இணைந்து மும்மொழி கொள்கையை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றன.

அந்த அடிப்படையில் முதல் தடவையாக வடமாகாணத்தில் வவுனியா நகரசபையை மாதிரியாகத் தெரிவு செய்து இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இன்று நாட்டில் காணப்படும் மொழி தொடர்பான பிரச்சினைகளைக் குறைப்பதற்கு வழிகோலும் வகையில் மூன்று மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர்களை உருவாக்கும் நோக்குடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் கனேடிய சர்வதேச மொழிகள் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி டொன் பிரவுனல், சிரேஷ்ட ஆலோசகர் ஜயந்த விக்கிரம நாயக்கா, திட்டவலுவாளர்களான சசி, சியாட் ஆகியோருடன் வவுனியா நகரசபையின் பதில் தலைவர் எம்.எம்.ரதன், நகரசபைச் செயலாளர் க.வசந்தகுமார் மற்றும் நகரசபை உறுப்பினர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (க-400)



துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் மல்லாவிப் பிரதேச மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவர் வே.விஜயகுமார் மருத்துவமனையின் நிலவரங்கள் தொடர்பாக விளக்குகின்றார். (18)

## மக்கள் வங்கியின் கட்டடத் தொகுதி திறந்து வைப்பு

வவுனியா, ஜூன் 24

மக்கள் வங்கியின் வன்னிப் பிராந்திய அலுவலகம், பீப்பிள் லீசிங் கம்பனியின் வவுனியாக்கிளை ஆகிய வற்றுக்கெனப் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதி இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

மேற்படி நிறுவனங்களின் தேவைக்கென ரயில் நிலைய வீதியில் புதிதாக மூன்று மாடிகள் கொண்ட கட்டடத் தொகுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தக் கட்டடங்களின் முதற் தொகுதியே இன்று சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது என வங்கி முகாமையாளர் தெரிவித்தார். (க-400)

## மாகாண மட்டப் போட்டியில் மாங்குளம் ம.விக்கு முதலிடம்

யாழ்ப்பாணம்,ஜூன் 24

மாகாணமட்டத் தமிழ்த் தினப் போட்டியில் காத்தவராயன் சிந்துநடைக்கூத்துப் போட்டியில் மாங்குளம் மகா வித்தியாலயம், வவுனியா பெரியகோமரசன்குளம் மகா வித்தியாலயம், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி ஆகியன முறையே 1ஆம், 2ஆம், 3ஆம் இடத்தைப் பெற்றுள்ளன.

கடந்த 16 ஆம் திகதி சனிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் தமிழ்ப் பாடத்துக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் தி.மகாலிங்கம் தலைமையில் இந்தப் போட்டிக்கான தேர்வுகள் இடம்பெற்றன. அதன்போதே மாகாணக் கல்வித் திணைக்களம் நியமித்த அனுபவமிக்க நடுவர்களால் முதல் மூன்று இடங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் வெற்றியீட்டிய பாடசாலை மாணவர்களுக்குப் பதக்கங்களை அணிவித்துக் கௌரவித்தார். மாகாணக் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த நிர்வாகப் பிரிவுக்கான பிரதிப்பணிப்பாளர் த.கிருபாகரன், மேலதிகக் கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன், திட்டமிடல் பகுதிக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் க.மணிமாறன் உள்ளிட்டவர்களும் மாணவர்களைக் கௌரவித்தனர். (க-3)

## வாய்க்கால்களில் வெடிப்புக்கள்

அக்கராயன், ஜூன் 24

அக்கராயன்குளத்தின் புனரமைக்கப்பட்ட வாய்க்கால்களின் பல இடங்களில் வெடிப்புக்கள் காணப்படுகின்றன என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அக்கராயன்குளத்தின் புனரமைப்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் புதிதாக உருவாக்கப்பட்ட வாய்க்கால்களின் சுவர்களில் பல இடங்களில் வெடிப்புகள் உருவாகியுள்ளன என்றும் சில கட்டுமானங்கள் உடைந்து விழும் நிலையில் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்கந்தபுரம் வாய்க்கால் [illegible] வெடிப்புக்கள் [illegible] காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## வவுனியா மாவட்டத்தின் ஜீவனோபாயத் திட்டங்களுக்கு ரூ.11.03 மில்லியன் ஒதுக்கீடு

வவுனியா, ஜூன் 24

வவுனியா மாவட்டத்தில் ஜீவனோபாய வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு என பொருளாதார அமைச்சு 11.03 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

வவுனியா மாவட்டத்திலுள்ள செட்டிகுளம், வவுனியா, வ்வுனியா தெற்கு மற்றும் நெடுங்கேணி ஆகிய பிரதேச செயலகங்களூடாக இனங்காணப்பட்ட சுமார் 459 கருத்திட்டங்களை மேற்கொள்வதற்காகவே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உள்ளக நாற்றுமேடை அமைக்கும் [illegible] கருத்திட்டங்களுக்கு [illegible] லட்சம் ரூபாவும், அலங்கார பூ உற்பத்திக்கென 5 திட்டங்களுக்கு 2 லட்சம் ரூபாவும், தேனீ வளர்க்கும் 120 திட்டங்களுக்கு 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும், 100 கறவைப் பசுத் தொழுவங்கள் அமைக்கும் திட்டத்திற்கு 25 லட்சம் ரூபாவும், ஆடு வளர்ப்புக்கான 30 திட்டங்களுக்கு 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், காளான் உற்பத்திக்கான 124 திட்டங்களுக்கு 12 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும் பொருளாதார அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளன.

அந்தத் திட்டங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கான செயற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்றும் வவுனியா மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் எஸ். சபாலிங்கம் தெரிவித்தார். (க-400)

## போக்குவரத்தினால் சேதமடையும் உயிலங்குளம் அணைக்கட்டு

துணுக்காய், ஜூன் 24

துணுக்காய் உயிலங்குளம் அணைக்கட்டுக்கு மேலான போக்குவரத்து காரணமாக அணைக்கட்டு சேதமடைந்து உடைப்பெடுக்கும் அபாயம் தோன்றியுள்ளதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

போக்குவரத்தினால் அணைக்கட்டுக்குத் தொடர்ந்து ஏற்பட்டு வரும் சேதங்கள் தொடர்பாக கிராம மக்களின் பிரதிநிதிகள் துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் நடைபெற்று வரும் கூட்டங்களில் தெரிவித்து வருகின்றனர்.

துணுக்காயிலிருந்து அம்பலப்பெருமாள்குளம் வீதி புனரமைக்கப்பட்டு வரும் நிலையில் அணைக்கட்டுக்கு மேலான போக்குவரத்தைத் தவிர்த்து மாற்று வழியை ஏற்படுத்துமாறும் கிராம மக்கள் வேண்டுகின்றனர். (க-18)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புகைத்தல் ஒழிப்பு கொடிவாரம் நிறைவடைந்தும் நிதி சேகரிப்பு

வலி.வடக்கு, ஜூன் 24

சமுர்த்தி அதிகார சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட புகைத்தல் ஒழிப்பு தின கொடிவாரம் ஏற்கனவே முடிந்த போதிலும் யாழ். மாவட்டத்தில் சில உயர் அதிகாரிகளின் தனிப்பட்ட விருப்பம் காரணமாகக் கடந்த வாரம் முதல் இந்த வாரத்தை நீடிப்புச் செய்து நிதி சேகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

புகைத்தல் ஒழிப்புத் தினம் என்பது யாழ். குடாநாட்டு சமுர்த்திப் பயனாளிகளைப் பொறுத்தவரையில் வயிறு எரியும் தினமாக மாற்றப்பட்டுள்ளது என்பது உண்மை.

சமுர்த்திப் பயனாளிகளிடம் பல பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளில் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களின் பயமுறுத்தல்கள் காரணமாக நூறு ரூபா முதல் ஐநூறு, ஆயிரம் ரூபா என அறவிட்ட துர்ப்பாக்கிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்கள் என்று கூறிச் சமுர்த்திப் பயனாளிகளுக்கு அரசு சமுர்த்தி அபிவிருத்தித் திட்டத்தை அறிமுகம் செய்த நிலையில் கொடிவாரத்துக்குப் பணம் பறிப்பது எந்த வகையில் நியாயமாகும் எனவும் பாதிக்கப்பட்டவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

புகைத்தல் தின விழிப்புணர்வை உண்டாக்கி புகைப்பவரை புகைக்காது தடுக்கும் நிகழ்வாக ஏற்படுத்தப்பட்ட கொடிவாரம் யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏழைகளின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளும் கொடி வாரமாக உயர் அதிகாரிகளால் மாற்றபட்டுள்ளதாக பலரும் குறிப்பிடுகின்றனர்.

குறிப்பிட்ட தொகைக்குக் குறைவாக நிதி சேகரிக்கப்படுமிடத்து கீழ் நிலை அலுவலர்கள் இடமாற்றம் செய்யப்படுவர் அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனப் பயமுறுத்தியமையால் கீழ் நிலை அலுவலர்கள் சமுர்த்திப் பயனாளிகளைப் பயமுறுத்தி கொடி வாரத்துக்கு நிதி சேகரித்துள்ளனர் என்றும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-86)




யாழ்.போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை உபகரணங்களைச் சுத்தம் செய்வதற்கென ஜப்பான் நாட்டு அம்டா நிறுவனம் 5 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. அம்டா நிறுவன சமூக நலத்துறை ஆலோசகர் வைத்திய கலாநிதி சரத் எம்.சமரகே இந்த உபகரணத்தை யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜாவிடம் நேற்றுமுன்தினம் கையளித்தார். இந்த நிகழ்வு போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது. (ம-4)

## தம்பதியருக்கு புனர்வாழ்வு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜூன்24

போர் காரணமாக இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வசித்து அக்கால கட்டத்தில் திருமணம் முடித்த தம்பதிகளுக்கு அவர்களது வாழ்வாதாரத்தைக் சுயதொழில் மூலமாக உயர்வடையச் செய்யும் நோக்குடன் புனர்வாழ்வு அதிகாரசபை கொடுப்பனவு ஒன்றை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தக் கொடுப்பனவுகளைப் பெறத் தகுதியானவர்கள் நல்லூர் பிரதேச செயலக் பிரிவுக்கு உட்பட்டவர்களாக இருப்பின் திட்டமிடல் பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார். (ம-7)

## குற்றச் செய்திகள்

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரின் பெயருக்கும் பதவிக்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில் கடிதம் எழுதியவருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் விசாரணையின் பின்னர் சந்தேகநபர் குற்றமற்றவர் என இணங்கண்டு அவரை விடுதலை செய்தது யாழ். நீதிமன்று.

கடந்த நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நல்லூரைச் சேர்ந்த ஒருவரே அரச அதிபரைப் பற்றி அவமரியாதை ஏற்படுத்தும் விதத்தில் கடிதம் எழுதி அரச அதிபருக்கே அந்தக் கடிதத்தை அனுப்பியிருந்தார் என்ற குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி நவம்பர் 25 ஆம் திகதி சந்தேகநபர் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். நேற்று முன்தினம் இது தொடர்பான விசாரணை நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இடம்பெற்றது. அதன்போதே அவர் விடுதலை செய்யப்பட்டார். (ம-4)

* * *

வடமராட்சி, ஜூன் 24

டெங்கு நுளம்புகள் உருவாகும் விதத்தில் வீடுகள், வளவுகள், காணிகளில் குப்பை கூழங்களை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 15 பேருக்குப் பருத்தித்துறை நீதிமன்றம் தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

இந்தக் குற்றச்சாட்டின் பேரில் பருத்தித்துறை நீதிமன்ற எல்லைப் பகுதியைச் சேர்ந்த 15 பேரைப் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பிரிவு பொலிஸார் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினார்கள்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் இவர்கள் மீதான வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அனைவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

இதனையடுத்து 15 பேருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (ம-8)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 24

பொது இடத்தில் புகைப் பிடித்தவருக்கு இரண்டு வார சிறைத் தண்டனையும் மூவாயிரம் ரூபா அபராதமும் விதித்தது யாழ். நீதிமன்று.

நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

யாழ். நகரில் பொது இடத்தில் புகைப்பிடித்தமை மற்றும் நடைபாதைக்கு இடையூறாகச் செயற்பட்டமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுக்கள் சந்தேகநபரான புத்தளத்தைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவருக்கு எதிராகச் சுமத்தப்பட்டிருந்தன.

தன் மீதான குற்றச்சாட்டை அவர் ஒப்புக் கொண்டதையடுத்து புகைப்பிடித்த குற்றத்துக்கு 3 ஆயிரம் ரூபா அபராதமும் நடைபாதைக்கு இடையூறாகச் செயற்பட்டதற்கு 3ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டன. (ம-4)

## அல்வாய் நாவலடிச் சந்தி ஊடாகவே சேவை

வடமராட்சி, ஜூன் 24

பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறை கரையோரப் பாதை ஊடாக யாழ்ப்பாணத்துக்குச் சேவையில் ஈடுபடும் மினி பஸ்கள் அல்வாய் நாவலடிச் சந்தி ஊடாகவே சேவையில் ஈடுபட வேண் டும் என வடமராட்சி சிற்றூர்திச் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தப் பாதை ஊடாகச் சேவையில் ஈடுபடும் பஸ்கள் பருத்தித்துறை நீதிமன்ற வீதி, கல்லூரி வீதி வழி யாகவே கரையோரப் பாதையில் சென்று வருகின்றன. மினிபஸ்கள் ஓராங்கட்டைச் சந்தி, தம்பசிட்டி, அல் வாய் நாவலடிச் சந்தி வழி யாகவே கரையோரப் பாதையில் சென்று வருகின்றன. எந்தவொரு மினி பஸ்ஸும் அனுமதி வழங்கப்பட்ட பாதை ஊடாகவே சேவையில் ஈடுபட வேண்டும். இல்லையேல் உரிய நட வடிக்கை எடுக்கப்படும் எனக் கரையோரப் பாதையில் சேவையில் ஈடுபடும் பஸ்களின் சாரதிகளுக்கு வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. (ம-8)

## இடிந்து வீழ்ந்த மதிலை திரும்பிப் பார்ப்பார் இல்லை

### வீதி அகலிப்பில் நடக்கும் சீர்கேடுகள்

கே.கே.எஸ். வீதி அகலிப்பின்போது மல்லாகம் சந்திக்குச் சமீபமாக புதிதாகக் கட்டிக் கொடுக்கப்பட்ட மதில் இடிந்து வீழ்ந்தது. இன்னமும் அது மீள அமைத்துக் கொடுக்கப்படவில்லை. இதனைத் தொடர்ந்து பழைய மதில் அகற்றப்படாமல் வீதி அகலிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தின் பிரதான 4 வீதிகளும் அகலமாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் கே.கே.எஸ். வீதியும் அகலமாக்கப்பட்டுப் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. வீதியின் மத்தியிலிருந்து இரு புறமும் தலா 15 மீற்றர் தூரம் அகலிக்கப்பட்டுப் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

மல்லாகம் சந்திக்குச் சமீபமாகவுள்ள தேவாலயத்தின் மதிலும் வீதி அகலிப்பின் போது இடிக்கப்படுவதற்குரிய வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

மதில் இடிக்கப்படுவதற்கு முன்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் குறித்த வீதி அகலிப்பு வேலைகள் வழங்கப்பட்ட ஒப்பந்த நிறுவனம் மதில் அமைத்துக் கொடுத்துள்ளது. அந்த மதில் கட்டிக் கொடுக்கப்பட்டு சிறிது காலத்திலேயே இடிந்து வீழ்ந்துள்ளது. அதன் பின்னர் அந்த மதில் மீள அமைத்துக் கொடுக்கப்படவில்லை. பழைய மதிலை இடித்து அகற்றாமல் அப்படியே இருக்க வீதி அகலிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக அந்தப் பகுதியில் வீதியின் அகலம் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் வி.சுதாகருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது; "இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று தெரிவித்தார்.

(ம-5)

## உடுவில் ஆலடியில் டெங்கு நோயாளி

யாழ்ப்பாணம், ஜூன்24


உடுவில் ஆலடிப் பகுதியில் டெங்கு நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார் அதை அடுத்து அந்தப் பகுதியில் டெங்கு நுளம்பினைக் கட்டுப்படுத்தும் முகமாக புகையூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதே இடத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர் ஒருவர் டெங்கு நோயாளியாக இனங்காணப்பட்டதால் இந்தப் புகையூட்டல் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

உடுவில் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் நேற்று புகையூட்டல் நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. சுமார் 100 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வதியும் இந்தப் பகுதியில் டெங்குநோய் இனங்காணப்பட்டமை அந்தப் பகுதி மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. உடுவில் ஆலடிப்பகுதியில் 2 நலன் புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 20 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நிரந்தர இடங்களுக்குச் செல்ல முடியாமல் தற்காலிகமாக குடியமர்த்தப்பட்டுள்ளன.

எனினும் இந்தக் குடும்பங்களுக்கு மலசல கூட வசதிகள் சரியாகப் பெற்றுக் கொடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-14)

புகையூட்டல் துரிதகதியில்



## வாங்கிய நகையைத் திருப்பி கொடுக்காதவருக்குச் சிறை

யாழ்ப்பாணம், ஜூன்24

திருமண வைபவத்தில் அணிந்துவிட்டுத் திருப்பித் தருவதாகக் கூறி அயல் வீட்டுப் பெண்ணிடமிருந்து வாங்கிய நகையைத் திரும்பிக் கொடுக்காது அதைக் கொடுத்துவிட்டேன் எனக் கூறிய பெண் குற்றவாளியென இனங்காணப்பட்டார்.

இவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதமும் 5 வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தது யாழ். நீதிமன்று. யாழ். நீதிமன்றில் விசாரணையில் இருந்து வந்த இந்த வழக்கு தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போது இவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டது. நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

உரும்பிராயைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு செய்தார் என்று அயல்வீட்டுப் பெண் ஒருவர் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். சில மாதங்களுக்கு முன்னர் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

உறவினர் ஒருவரது திருமண வைபவம் ஒன்றுக்குச் செல்ல வேண்டியுள்ளதால் வழமை போன்று குற்றஞ்சாட்டப்பட்ட பெண் அயல் வீட்டுப் பெண்ணிடம் ஒரு சோடி தங்கக் காப்பை இரவலாக வாங்கிச் சென்றுள்ளார்.

நெடுநாளாகியும் அதனைத் திருப்பித் தராததால் இதுபற்றிச் சம்பந்தப்பட்ட பெண்ணிடம் கேட்டபோது தான் அதனை முன்பே தந்துவிட்டேன் என்று கூறியுள்ளார். அதனால் நகைக்கு உரிமையான பெண் அதுபற்றி பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம், சந்தேகநபர் நகையை இரவல் வாங்கி விட்டுத் திருப்பிக் கொடுக்க வில்லை என்று வாதாடியிருந்தார்.

இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்த நீதிமன்று சந்தேகநபரை குற்றவாளியென இனங்கண்டு 10 ஆயிரம் ரூபா அபராதமும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தது. (ம-4)

## ஆயர்தின விழாவை நடத்த ஏற்பாடு

பருத்தித்துறை,ஜூன்24

ஆயர்தின விழாவை யாழ். மன்றக் கல்வி நடு நிலையமும் கத்தோலிக்க ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்துவதற்கு ஒழுங்கு செய்துள்ளன.

யாழ். மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்திரநாயகம் ஆண்டகையின் பெயர் கொண்ட விழாவில் கத்தோலிக்க ஆசிரியர்களும், மாணவர்களும் யாழ். குடாநாட்டின் பல்வேறு இடங்களிலிருந்து வருகை தந்து கலந்துகொள்ளவுள்ளனர். இந்த விழா எதிர்வரும் 2 ஆம் திகதி திங் கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் நடைபெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதியுயர் இலாபங்களை பதிவு செய்யும் LOLC

LOLC குழுமமானது, 10.3 பில்லியன் ரூபாவினை வரிக்கு முந்திய இலாபமாக பதிவுசெய்து இலாபத்தன்மையில் ஆரோக்கியமான வளர்ச்சியை மற்றுமொரு ஆண்டிலும் வெளியிட்டுள்ளது. இது ஆண்டு வளர்ச்சியில் 24% ஆகும். கடந்த ஆண்டு வரிக்கு பிந்திய இலாபமாக 7 பில்லியன் ரூபாவை அடைந்த போதிலும், இவ்வருடம் 27% அதிகரிப்பின் மூலம் 8.9 பில்லியன் ரூபா அதிகரிப்பினைக் காட்டியுள்ளது. LOLC குழுமமானது, அதன் மைய வணிகமான நிதிச் சேவைகள் எதிர்நோக்கிய வட்டி வீத தளம்பல்கள், மோட்டார் வாகனங்கள் மீது அதிகரித்த வட்டி, சந்தையில் குறைந்த திரவத்தன்மை மற்றும் பொதுக் கடன் குறைப்பு ஆகிய சவால்கள் நிறைந்த போட்டிச் சூழலுக்கு மத்தியில் உயரிய செயல் திறனை வெளிப்படுத்தி வருகின்றது. இச்சவால்கள் இருந்த போதிலும், ரூபா.7.4 பில்லியன் தொகை மதிப்புடைய 72% இலாபங்களோடு, இலாபப் பங்களிப்பில் நிதிச் சேவைகள் ஆதிக்கம் செலுத்துவதால் இத்துறையிலிருந்து வரும் இலாபங்களானவை குழுமம் ஏனைய துறைகளில் சார்ந்திருக்கும் நிலையை மேலும் குறைக்கின்றது.

நிதிச்சேவைகள் துறையிலிருந்தான மொத்த தேறிய வருவாய்கள் ரூபா. 80 பில்லியனாக அதிகரித்துள்ளது. 58 பில்லியன் ரூபாவினை பதிவு செய்த கடந்த ஆண்டுப் புத்தகங்களுடன் ஒப்பிடுகையில், இது 38% அதிகரிப்பினைக் காட்டும் ஒரு திடமான வளர்ச்சி ஆகும்.

நுண், சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களை அடைவதற்காக நாட்டின் அனைத்து பிராந்தியங்களிலும் உறுதியாக வியாபித்திருக்கும் குழுமத்தின், கடனளிப்பு மூலோபாயத்திடமிருந்தானதொரு பெறுபேறே இதுவாகும். லங்கா ஓறிக்ஸ் நிதி நிறுவனமானது (LOFC) சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக்கள் அடங்கிய ரூபா.25 பில்லியன் பெறுமதியான வைப்புத் தளமானத்தினை அடைந்துள்ளது. வைப்புத் தளத்தின் ஆண்டிற்கான தேறிய உட்பாய்ச்சல் தொகை ரூபா. 8 பில்லியனாகக் காணப்பட்டது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 44% வளர்ச்சி ஆகும். நாட்டிலுள்ள மிகப்பெரிய பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளுள் ஒன்றாக LOFC காணப்படும் அதே வேளை இவ்வாண்டில் பதிவு செய்யப்பட்ட உட்பாய்ச்சல்களானவை, கம்பனி மீதான மக்களின் தொடர்ச்சியான நம்பிக்கைக்கு ஒரு தெளிவான எடுத்துக்காட்டாக இருக்கின்றன.

பங்குச்சந்தை வீழ்ச்சி காரணமாக வியாபார பங்குத் தொகுப்பில் ரூபா. 1.5 பில்லியன் பெறுமதியான சந்தை இழப்புக்களை அடைய நேரிட்ட போதிலும், குழுமத்திற்குரிய செயற்பாடுகள் அடையப்பட்டன.


சேமிப்புகள் மற்றும் வைப்புக்கள் உள்ளடங்கலாக குழுமத்தின் மொத்த கடன்கள் 92 பில்லியன் ரூபாவாக காணப்பட்ட அதே வேளை, ஆண்டிறுதியில் இருந்த குழுமத்தின் மொத்த சொத்துக்களானவை ரூபா. 146 பில்லியனாகக் காணப்பட்டது. சென்ற ஆண்டில் இருந்த ரூபா.112 பில்லியன் பெறுமதியான சொத்துக்களுடன் ஒப்பிடுகையில் இது 30% வளர்ச்சியினைக் காட்டுகின்றது.

இவ்வாண்டின் மீளாய்வின் கீழ், தாய் நிறுவனமான LOLC 2011 ஏப்ரல் முதல் அதன் குத்தகை உரிமத்தினை ரத்து செய்ய இலங்கை மத்திய வங்கியின் (CBSL) அனுமதியினைப் பெற்றது. இதன் விளைவாக, தற்போதிருக்கும் LOLC யின் புத்தகமானது அதன் தலைமை நிதி நிறுவனமான LOFC இற்கு மாற்றப்பட்டதோடு LOLC யானது பங்குகளை கையகப்படுத்தியுள்ள ஒரு ஹோல்டிங் கம்பனியாக அதன் நிலையை பலப்படுத்திக் கொண்டது.

LOLC யானது அதன் உறுதியான நிதிச் சேவைகள் வலையமைப்பை நாடு பூராகவும் மேலும் விஸ்தரித்துள்ளது. வடக்கு, கிழக்கில் 39 இற்கும் மேற்பட்ட நிதிச்சேவைகள் நிலையங்கள் உட்பட 185 நிதிச் சேவைகள் நிலையங்களினால் இக்கம்பனிகள் நன்மையடைகின்றன.

தாய் நிறுவனத்தினது செயற்பாடுகள் மற்றும் ஏனைய வருவாய்கள் மூலம் கடந்த ஆண்டில் பெறப்பட்ட 1.9 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டில் உறுதியான வரிக்கு முந்திய இலாபமாக ரூபா. 4.4 பில்லியனை வெளிப்படுத்தியது.

## TVSஇன் விநியோகஸ்தர் போட்டியில் சிறந்த செயற்பாட்டாளருக்கு விருது



TVS லங்கா நிறுவனம் 2012ம் ஆண்டுக்கான அதன் வருடாந்த சேவை விநியோகஸ்தர்கள் மாநாட்டை மொரட்டுவ கோரளவெலயில் உள்ள றன்திய ஹோட்டலில் அண்மையில் நடத்தியது

நாடு முழுவதிலும் இருந்து 350க்கும் அதிகமான TVS விநியோகஸ்தர்கள் TVS அன்ட் சன் TVS மோட்டார் கம்பனி என்பனவற்றின் பிரதிநிதிகள் யுனைட்டட் மோட்டார்ஸ் நிறுவனத் தலைவர் ரஞ்சித் பெர்ணான்டோ TVS நிறுவன முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

வேகம் என்ற தொனிப் பொருளில் இந்த கண்கவர் நிகழ்வு இடம்பெற்றது. இன்றைய மாறிவரும் வாடிக்கையாளர் தேவை அதற்கு முகம் கொடுக்கும் வகையில் நாம் முன்னணி வகிக்கவேண்டியதன் அவசியம் ஒரு நிறுவனம் என்ற ரீதியில் இந்த ஓட்டப் பந்தயத்தில் பங்கேற்று வெற்றியீட்டவேண்டிய அவசியம் அதற்கான எமது விநியோகச் சேவையின் துரிதம் என்பனவற்றை வலியுறுத்தும் வகையில் இந்தத் தொனிப்பொருள் அமைந்திருந்தது விற்பனைக்குப் பிந்திய சேவை என்ற போட்டி மிக்கப் பிரிவில் TVS எப்போதும் முன்னணி வகிக்கின்றது.இதனால்தான் TVS வாடிக்கையாளர்கள் எப்போதும் எமது வர்த்தக முத்திரைக்கு விசுவாசமானவர்களாகக் காணப்படுகின்றனர் என்று சந்தைப்படுத்தல் பிரிவு தலைவர் கீதால் அந்தனி கூறினார். (த)

## அப்பலோ ரயர் நிறுவனத்தின் செயற்பாடுகளை ஆராய்ந்தார் அரவிந்த



யாழ்ப்பாணம்,ஜூன் 24

அப்பலோ ரயர் நிறுவனத்தின் உப தலைவரும் இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரருமான அரவிந்த டி சில்வா நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்தார்.

யாழ்.வருகை தந்த அவர் அப்பலோ நிறுவனத்தின் யாழ்.கிளையை மேற்பார்வை செய்ததுடன் யாழ். கிளையின் முகவரும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வட மாகாண அபிவிருத்திக் குழுவின் தலைவருமான எஸ்.வின் செந்திராஜனுடன் கலந்துரையாடி அப்பலோ ரயர் நிறுவனத்தின் செயற்பாடுகளையும் ஆராய்ந்தார்.

வடக்கில் அப்பலோ நிறுவனத்தின் ரயர்களைச் சந்தைப்படுத்தும் செயற்பாடுகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக அரவிந்த டி சில்வா தெரிவித்தார். (கு-17)

## பெரும் வலையமைப்பை மொபிடெல் வெற்றிகரமாக விஸ்தரிப்புச் செய்தது

இலங்கை தேசிய மொபைல் சேவை வழங்குநரான மொபிடெல் இலங்கையில் தகவல் தொழில்நுட்பமாற்றம் உருவாக்க உறுதிபூண்டுள்ளது. தற்போது மொபைல் ஊடாகபேசுதல் மற்றும் குறுந்தகவல் அனுப்புதல் மாத்திரம் இன்றி அவற்றை விட பல்வேறு விடயங்களுக்கு மனிதவாழ்க்கையில் இக்கையடக்கத் தொலைபேசிகள் பயன்படுத்தபடுகின்றமை அதன் முதிர்ச்சியைக் குறிக்கின்றது. அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்ற அடிப்படையில் இலங்கையும் மக்கள் தேவைக்கமைய இப்போக்கில் பங்காளியாக இருப்பதையிட்டு நாம் பெருமையடைகிறோம். இச்சூழலை மூலோபயமாக கொண்டு இலங்கையின் தேசியமொபைல் சேவை வழங்குனரான மொபிடெல் நாடுமுழுவதும் உள்ள தமது சேவை தளநிலையங்கள் மூலம் தகவல் தொடர்பாடல் துறையில் மாற்றத்தை ஏற்படுத்த உறுதிபூண்டுள்ளது.

இங்கு கருத்து தெரிவித்த மொபிடெல் பிரதான நிறைவேற்று அதிகாரி லலித் டி சில்வா உலகத் தரம் வாய்ந்த தொழில் நுட்பத்தை கொண்ட மிகச் சிறந்த சேவையை வழங்குவது எமது தலையாய கடமையாகும். இதன் மூலமாக இலங்கையை ஆசியாவின் தகவல் தொடர்பாடல் துறையில் கேந்திர நிலையமாக மாற்றும் அரசாங்கத்தின் திட்டத்துக்கு உறுதுணையாக நாம் எதிர்பார்க்கின்றோம். அதற்கமைய 1000றக்கும் மேற்பட்ட பிரதேசங்களில் எமது 2G, 3G தளநிலையங்களை மிக குறுகியகாலப் பகுதியில விரிவாக்கம் செய்துள்ளோம் என்பதை பெருமையுடன் அறியத்தருகின்றோம்.

உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் எமது சேவைகளை யாழ். குடாநாட்டிலும் விஸ்தரித்துள்ள மொபிடெல் வடகிழக்கு மாகாணங்களுக்கும் தமது சேவையை விஸ்தரித்துள்ளது. நாம் தற்போது சிறந்த திறன் மற்றும் வேகமான இணைய வசதியை வழங்குகிறோம்.

மொபிடெல் நிறுவனத்தின் சிரேஷ்ட பொது முகாமையாளர் ரசன்த ஹெட்டிதான்திரிகே கருத்து கூறுகையில் எமது பொறியியல் மற்றும் நடவடிக்கை தரங்கள் மிகவும் சிறந்ததரத்தில் உள்ளன. அவை எந்த சவாலுக்கும் எற்றவாறு முகங்கொடுக்க கூடியவை எமது விரிவாக்கற் திட்டம் 70 துணை நிறுவனங்களையும், 200 பொறியியலாளர்களையும். 1500 இற்கு மேற்பட்டதிறன் வாய்ந்த தொழிலாளர்களையும் கொண்டது. மொபிடெல் ஏற்கனவே வருங்கால தலைமுறை அபிவிருத்தியை எட்டியுள்ளது. இது மொபிடெல்லின் ஆற்றலுக்கான சாதனையாகும்.- என்றார். (த)

## பல்கலைக்கழக ஊடகவியல் கல்வியை வழங்கும் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்

யாழ்ப்பாணத்தில் இப்போது ஊடகப் பணியை நிறைவேற்றும் ஒரு நிறுவனமாக பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் செயல்பட்டு வருகிறது. இந்த நிலையத்தின் அண்மைக்கால முக்கிய பணியாக ஊடகவியல் பட்டக்கல்வி வழங்கப்பட்டு வருகின்றது.

2001 ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் பல ஊடகவியல் பணிகளை ஆற்றி வருகிறது. பத்திரிகையில் பயிற்சிப் பட்டறைகளை ஊடகவியல் ஆவலர்களுக்கு வழங்கிவந்த இந்த நிலையமானது 2001ஆம் ஆண்டு முதல் பின்வரும் 9 ஊடகவியல் நூல்களை வெளியிட்டுள்ளது. இவ்வாண்டில் புலனாய்வு அறிக்கையிடல் ஓர் அறிமுகம் - செய்தி செப்பனிடல் - நேரலை பத்திரிகையியல் ஓர் அறிமுகம் என்ற 3 நூல்கள் வெளிவரவுள்ளன.

2011ஆம் ஆண்டில் தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா இணையத்தளத்தையும் 2012 இல் தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா தொலைக்காட்சியையும் ஆரம்பித்துள்ளது.

தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா தொலைக்காட்சி எல்.பி.என். கேபிள் சேவை வழியாக வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மாலை 6 மணி முதல் 10 மணி வரை இயங்குகிறது. தினமும் மாலை [illegible] ஒளிபரப்பப்பட்டு வருகிறது.

இந்த நிலையத்தினுடைய இன்னுமொரு முக்கிய செயல்பாடாக ஊடகவியல் மாணவர்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் வழிகாட்டும் வகையில் ஊடகவியல் பட்டக் கல்வியைக் கற்க ஒரு அரிய சந்தர்ப்பத்தை வழங்கத் தொடங்கியுள்ளது. பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைப்பைப் பெற்ற இந்த [illegible] கற்கை [illegible]ழங்கவுள்ளது.

ஜீ.சி.ஈ. உயர்தரம் 3 பாடம் சித்தி பெற்றவர்கள் டிப்ளோமா கற்கைநெறி Diploma in journalism (ஒரு ஆண்டு) Diploma in Communicative English (ஒரு ஆண்டு) B.Sc Visual Communication கற்கைநெறியை கற்கலாம். (மூன்று ஆண்டுகள்).

பட்டப்படிப்பு முடித்தவர்கள் P.G. Diploma (Communicative English) (ஒரு ஆண்டு) P.G. Diploma in journalism (ஒரு ஆண்டு) M.A. (Journalism & Mass Communication) கற்கை நெறியை கற்கலாம். (இரண்டு ஆண்டுகள்)

2012இல் ஜீ.சி. ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்ற இருப்பவர்கள் உடன் பதிவுகளை மேற்கொண்டு 3 பாடம் சித்தியடைந்த சான்றிதழை 2012 மார்கழி 10ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தால் விசேட வகுப்புக்களுடன் 2013 மே மாதம் பரீட்சைக்குத் தோற்ற விசேட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனைக்கு

பெறுமதியான சொத்துக்கள் 02, குடியிருப்பில்லாத, தெளிவான உறுதிகள், உடனடி விற்பனைக்கு

- 04 ஆவது குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
  வீடு மற்றும் காணி
  அளவு - 17.5 பர்ச்சஸ
- டப்ள்யூ. ஏ. டி சில்வா மாவத்தை
  (W. A. De Silva Mawatha)
  முன்னர் ஹைய் ஸ்ரீற் (High Street),
  கொழும்பு 06
  என அழைக்கப்பட்டது. கீழ் மற்றும் முதல் மாடியினை கொண்ட தொடர்மாடி
  அளவு - 09 பர்ச்சஸ்

*தரகர்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டார்கள்.*
*பெறுமதிகள் (Offer) ஏற்றுக்கொள்ளப்படும்.*
*தொடர்புகளுக்கு சிறிதரன் - 0112586038*

(சி/886)(6-8-9)

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி கோப்பாயில் இரு வீட்டுடன் விற்பனைக்கு.

**077 6454434, 0777 323954**

## வீடு தேவை

*வீடு அல்லது 2 அறைகள் சிறிய அலுவலகத்துக்கு வடமராட்சி பருத்தித்துறை, நெல்லியடி, அச்சுவேலி பகுதிகளில் தேவை.*

(18672) (6,9,10) தொடர்பு: 0772677445

## சிறுநீரகம் தேவை

13 வயதுடைய சிறுவனுக்கு B+, O+ பொசிடிவ் சிறுநீரகம் (30 வயதுக்குள்) உடனடியாக தேவை.

**தொடர்பு**
**0774474847 / 775243254**
**0779294794**
(சி/887)(6-8-9)

## மணமக்கள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம்
*1972 விசாகம் MSC இஞ்சினியர் UK(PR)*
*1982 சதயம் நேசிங் Officer USA*
*1984 அத்தம் Doctor ஜேர்மன்*
*1970 பூரட்டாதி 8இல் செவ், கிரகபாவம் 65 USA (விவாகரத்து)*
*1988 விசாகம் கணக்காளர் UK(PR)*
*1986 அத்தம் பிரபல தொழிலதிபர் மகள் UK(PR)*
*கிரகபாவம் 20*

கொழும்பு வந்துள்ளார்கள்
*1970 ரேவதி 8இல் செவ், கிரகபாவம் 55 MSC ஆங்கில ஆசிரியர் (சுத்த சைவம்) உடன் தேவை*

தொடர்பு கிளைகள்:
யாழ் - கொழும்பு: 0771307185
கிளிநொச்சி - முலைத்தீவு: 0776184434
வவுனியா - மன்னார் : 0778501013
மட்டக்களப்பு-திருகோணமலை: 0774494764
லண்டன் - 00447965028396

(18671) (6,9,10)

## CANADA | FRANCE | ITALY SPAIN | SWISS | AUSTRALIA

- போன்ற நாடுகளுக்கு வீசாக்கள் பெற்றுக்கொள்ள தாமதமா?
- குறுகிய நாள்களில் பயணம் செல்லவேண்டுமா ?
- முற்பணம் எதுவும் தேவையில்லை

தரமான ஆலோசனைகளைப் பெற்று நீங்களும் வாழ்க்கையில் வெற்றிபெற **Experience Consultant** உங்களது ஆவணங்களுடன் எமது கல்லூரிக்கு நேரில் வரவும்.

**More Details Contact: 0775 256 135**
(சி/886)(6-8-9)

## அறிவித்தல்


இல. 149, கஸ்தூரியார் வீதியில் சிலிக்கன் எலெக்ரோனிக்ஸ் கடையில் திருத்துவதற்காக ஒப்படைத்த பொருள்களை 15-07-2012 க்கு முன் மீளப் பெற்றுக் கொள்ளுமாறும் தவறுமிடத்து அப் பொருள்களுக்கு நாம் பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**149,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.**

**உரிமையாளர்:
சிலிக்கன் எலெக்ரோனிக்ஸ்.**

(சி/970) (6,9,10)

## கையடக்கத் தொலை பேசி திருத்தும் பாடநெறி (Hardware and Software)



மாதாந்தம் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் உழைக்க விருப்பமா?
பாடசாலை கல்வியை இடை நிறுத்தியவரா?
சுயதொழில் ஒன்றை ஆரம்பிக்க விரும்புகிறீர்களா?
பகுதி நேரமாக வீட்டிலிருந்தபடியே இலாபமீட்ட விரும்புகிறீர்களா?

**ஆரம்பம் 29.06.2012 – 02.07.2012**

"இது உங்களுக்கான நேரம்"

***ஆசிரியர் கணேஷ் அவர்களின்***

சிறப்பான வழிகாட்டலில் புதிய பரிணாமத்துடனான 13ஆவது பிரிவு யாழ்ப்பாணத்தில் ஆரம்ப மாகின்றது. கையடக்க தொலைபேசியில் இடம் பெறும் சகல விதமான பிரச்சினைகளினையும் சரி செய்வதற்கான 4 நாள்கள் கொண்ட முழுமையான பயிற்சி நெறி. நான்கு நாள்களில் கை நிறைய உழைக்கலாம்.

★ பயிற்சியின் நிறைவில் சர்வதேச தரம்மிக்க சான்றிதழ்
★ பங்கு பற்றும் அனைவரது விவரங்களும் எமது இணையத்தில் இணைக்கப்படும்
★ கையடக்கத் தொலைபேசி தொடர்பான 1000 ற்கும் மேற்பட்ட இரகசியங்கள் அடங்கிய DVD வழங்கப்படும்

தொடர்புகளுக்கு:
**Greenwich college,**
39/4, 3rd Lane, Power house road, Jaffna.
**Contact No: 0774255225, 0777630708, 0750576097**

(19705) (6,9,10)

# "Super Strong"

## விற்பனை பிரதிநிதிகளுக்கான தேடல்

தெற்காசியப் பிராந்தியத்தில் 14 நாடுகளில் 35 தொழில் ஸ்தாபனங்களை வெற்றிகரமாக கொண்டு நடத்தும் "ஏசியா பசுபிக் புருவரிஸ்" நிறுவனம் தனது வியாபார நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் நோக்கில் தனது விற்பனை பிரிவிற்கு **"Super Strong"** விற்பனை பிரதிநிதிகளுக்கான **(Sales Executive)** விண்ணப்பங்களை கோருகிறது.

20 - 24 வயதுக்குட்பட்ட, கடின உழைப்பும் திறமையும் கொண்ட, நாட்டின் எப்பாகத்திலும் பணிபுரியக் கூடிய **"Super Strong"** வீரர்கள் விரும்பத்தக்கது. இத்துறையில் தொழில் அனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும்.

விற்பனை பிரதிநிதிகளாக தமது தொழிலை ஆரம்பித்து இன்று எமது நிறுவனத்தை கொண்டு நடத்தும் விற்பனை மற்றும் சந்தைப்பிரிவு நிர்வாகிகளின் மேற்பார்வையின் கீழ் தாங்களும் தங்கள் வாழ்க்கையின் உயரத்தை அடைய விரும்பும் **"Super Strong"** வீரர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

கவர்ச்சிகரமான சம்பளம், மேலதிக கொடுப்பனவு, மோட்டார் சைக்கிள், சிறந்த தொழிற்பயிற்சி, மற்றும் பன்னாட்டு நிறுவனத்திற்குரிய மனிதவள அபிவிருத்தி என்பவற்றை பெற விரும்பும் **"Super Strong"** வீரர்கள் 7 நாட்களுக்குள் தமது சுய விபரக்கோவையுடன் கூடிய விண்ணப்பத்தை கீழ் காணும் முகவரிக்கு அனுப்பவும்.

Human Resource Manager
Asia Pacific Brewery (Lanka) Ltd.
548/B, Nawala Road,
Rajagiriya.
rukshandileeparanasinghe@apblanka.lk
amal.ranasinghe@apblanka.lk

**ASIA PACIFIC BREWERY (LANKA) LIMITED**

(சி/889)(6-8-9)

www.apb.com.sg www.drink-savvy.com

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
03 ★ 01 ★ 1958



மறைவு
28 ★ 05 ★ 2012

அமரர் **தங்கத்துரை வரதராஜன்**

கடந்த 28.05.2012 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் தங்கத்துரை வரதராஜன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை [25.06.2012] திங்கட்கிழமை மு.ப. 9 மணியளவில் நகுலேஸ்வரம் சிவன் ஆலய [கீரிமலை] அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறஉள்ளன. 27.06.2012 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் [கிராமக்கோட்டடி] நடைபெறவுள்ள சபிண்டீகரண கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கிராமக்கோட்டடி,
புலோலி தெற்கு, புலோலி

குடும்பத்தினர்
T.P : 075 5559556

(சி/888)(6-8-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 71

# வயிற்றோட்டம் ஏற்படும்போது குழந்தையின் பராமரிப்பு

குழந்தைகளில் ஏற்படும் பிரச்சினைகளில் வயிற்றோட்டமானது பிரதானமான ஒன்றாகக் காணப்படுகின்றது.

இதுபொதுவாக குடலினுள் ஏற்படும் நோய்த்தொற்றின் காரணமாக ஏற்படுகின்றது. ஆயினும் சிலருக்கு உணவு ஒவ்வாமை, குடலினுள் ஏற்படும் நீண்டகால நோய் நிலைமைகள் போன்றவற்றாலும் வயிற்றோட்டம் ஏற்படுகின்றது.

வயிற்றோட்டம் எனப்படுவது நாளொன்றுக்கு ஆகக்குறைந்தது மூன்று தடவையாவது தண்ணீர்த் தன்மையான மலம் கழிக்கப்படுதலாகும். வயிற்றோட்டமானது பக்றீரியா, வைரஸ், குடல்புழுக்கள் போன்றவற்றால் ஏற்படுகின்றது. இதன்போது மலமானது இரத்தம், சீதம் கலந்ததாகவோ அல்லது தனியே தண்ணீர்த் தன்மை கொண்டதாகவோ காணப்படலாம்.

வயிற்றோட்டத்தால் ஏற்படும் மிக முக்கியமான பாதிப்பு உடலினுள் நீர்த்தன்மை குறைந்து போவதாகும். நீருடன் சேர்ந்து கனியுப்பு இழப்பும் ஏற்படுகின்றது.

இரத்தம், சீதம் கலந்த வயிற்றோட்டத்தின்போது நோய்க்கிருமியானது இரத்தத்துடன் கலந்து உடலெங்கும் பரவும் அபாயம் காணப்படுகின்றது. குழந்தைக்கு வயிற்றோட்டம் வருமிடத்து பின்வரும் குணங்குறிகளுடைய பிள்ளைகளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வது அவசியமாகும்.

தொடர்ச்சியான/ நீண்டகாலவயிற்றோட்டம், இரத்தம்/ சீதம் கலந்திருத்தல், வயிற்றுவலி, கடுமையான சத்தி, நீரிழப்பு அதிகரித்தல் - தோல் சுருக்கமடைதல், நோய்க்கிருமிகள் உடலினுள் பரவியிருத்தல் (கடுமையான காய்ச்சல்), நோயெதிர்ப்பு சக்தி குறைவானவர்கள் (போசாக்கு குறைபாடு, நோய்த்தாக்கம்), வறுமையான சுகாதாரமற்ற குடும்பச் சூழல்.

தண்ணீர்த் தன்மையான வயிற்றோட்டம் கடுமையாக இல்லாதவிடத்தும், குழந்தை சோர்வில்லாமலும், வாயினால் திரவங்களை எடுக்கக் கூடியவாறும் இருப்பின் வீட்டிலேயே குழந்தையைப் பராமரிக்க முடியும். வயிற்றோட்டத்தின் போது வெளியேறும் நீரின் அளவுக்கு ஏற்றவாறு குடிப்பதற்கு பதார்த்தங்கள் வழங்கப்பட வேண்டும். ஒவ்வொரு வயிற்றோட்டத்தைத் தொடர்ந்தும் ஆகக் குறைந்தது 50ml ஜீவனி கொடுக்க வேண்டும். ஜீவனியானது வயிற்றோட்டத்தின் போது வெளியேறும் கனியுப்புக்களை ஈடுசெய்யக்கூடியதாகக் காணப்படுகின்றது. ஜீவனியானது பைக்கற்றில் காணப்படும், ஒரு பைக்கற்றை ஒரு லீற்றர் கொதித்தாறிய நீரில் கரைத்து தயாரித்ததிலிருந்து 24 மணித்தியாலயத்தினுள் பாவிக்க வேண்டும். ஜீவனியைத் தவிர உப்புக் கலந்த தேசிக்காய் தண்ணீர், இளநீர், உப்புக்கஞ்சி போன்றவற்றையும் அருந்தலாம். வயிற்றோட்ட காலத்தில் குழந்தைகளுக்கு தாய்ப் பால் உட்பட சகல சாதாரணமாக உணும் உணவு வகைகளையும் வழமைபோல் கொடுக்க வேண்டும்.தாய்ப்பால் மட்டும் அருந்தும் குழந்தைகளில் சில வேளை ஒவ்வொரு பாலூட்டுதலுக்குப் பிற்பாடும் தண்ணீர் தன்மையான மலம் வெளியேறும். இதனை வயிற்றோட்டம் எனத் தவறாகக் கருதக்கூடாது.

இன்னொரு முக்கிய விடயம், தாய்மார்கள் வயிற்றோட்டத்துக்கு மருந்து வகைகளை எதிர்பார்ப்பதாகும். சாதாரண நீர்த் தன்மையான வயிற்றோட்டத்துக்கு நுண்ணுயிர் கொல்லி மருந்துகளைப் பாவித்தல் மருந்து எதிர்ப்பு சக்தி கொண்ட நுண்ணங்கிகள்(anti biotic resis tance) வளர்வதற்கே வழி வகுக்கும். இரத்தம் சீதம் கலந்த வயிற்றோட்டங்களுக்கே தகுந்த வைத்திய ஆலோசனையுடன் மருந்துகளைப் பாவிக்க வேண்டும்.

**மருத்துவர் ஆர். இராம வித்தியா**
**யாழ்.போதனா வைத்தியசாலை**

*உதயனின் இந்த வைத்தியமலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி..., நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

**கேள்வி:**-ஒரு வயது பூர்த்தியானதும் குழந்தைகளுக்கு எல்லா வகையான உணவை கொடுக்கலாம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் பால்மாவில் மட்டும் 1+,2+,3+ என்ற வேறுபாடு காணப்படுகின்றதே அப்படியானால் எத்தனை வயதில் குழந்தைகளுக்கு பெரியவர்களுக்கான பால்மாவைக் கொடுக்கலாம்?

அ.அங்கயற்கண்ணி,
யாழ்ப்பாணம்.

**பதில்:**-குழந்தைக்கு ஒரு வயது பூர்த்தியாகும் போது குடும்ப உணவு பொருத்தமானதெனப் பிரேரிப்பது உண்மை. ஒரு வயதாகும் போது பல்விதமான உணவுகளை உண்ணக்கூடியதான பற்களின் அமைப்பு, சிக்கலான சேதனக்கட்டமைப்புகளை சமிபாடடையச் செய்து அகத்துறிஞ்சக் கூடிய உணவுக் கால்வாய்த் தொகுதி, இரத்தத்திலுள்ள வெல்லம், உப்பு, கார, அமிலங்களைக் கையாளக் கூடிய சிறுநீரகங்களின் தொழில்பாடுகள் ஏறத்தாழப் பெரியவர்களைப் போலவே இருக்கின்றன.

இதைத் தவிர, பல்விதப் போஷணைப் பதார்த்தங்களை உள்ளடக்கிய குடும்ப உணவு, உடலுக்குத் தேவையான அனேக போஷணைப் பொருள்களை, பொருளாதார ரீதியில் குறைந்த செலவில் வழங்கக்கூடியதாக இருக்கின்றது.

மேற்கூறப்பட்ட காரணங்களாலேயே ஒரு வயது வரை தாய்ப்பாலுடன் எளிதாக மென்றுண்ணவும் சமிக்கவும் தக்க திண்ம உணவுகள் ஆரம்பிக்கப்படுகின்றன. ஒரு வயதின் பின்னர் முழுக்குடும்பத்திற்கும் ஏற்ற ஆரோக்கிய, போஷணை உணவுகள் பற்றி அறிவுரைக்கப்படுகின்றன.

இந்த வகையில், பெரியவர்களின் பால்மாவில் காணப்படும் எந்த விதமான போஷணைப் பதார்த்தங்களும் சிறுவர்களுக்கு ஒவ்வாதனவாகவோ, கொடுக்கப்படக் கூடாதவையாகவோ, இனங்காணப்படவில்லை. இவ்வாறிருக்க குழந்தைகளுக்குரிய பால்மா பிரயோகத்திற்குப் பின்வரும் காரணங்கள் அடிப்படையாக அமைந்தன.

1.தாய்ப்பால் கிடைக்கின்ற சந்தர்ப்பம் இல்லாத குழந்தைகளில் ஓரளவேனும் தாய்ப்பாலை ஈடு செய்யும் முயற்சி.

2.குழந்தைகளின் உடல், மூளை வளர்ச்சி என்பவற்றுக்குத் தேவையான நுண்போஷணைகளை ஈடு செய்வதில் பங்களித்தல்.

பெரியவர்களைப் போலல்லாது குழந்தைகளின் உடல், மூளை வளர்ச்சி என்பவற்றில் சில வேறுபாடுகளுள்ளன. வளர்ச்சி வீதம் கூடிய இந்தப் பருவத்தில் புரதம், கல்சியம், இரும்புச் சத்து என்பன அதிகளவில் தேவைப்படுகின்றன. இவற்றைவிட, மிக நுண்ணிய அளவுகளில் தேவைப்படுகின்ற அமினோ அமிலங்கள், கொழுப்பமிலங்கள், விற்றமின்கள் என்பனவும் ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன. இத்தகைய நுண்போஷணைகள் சில குழந்தைகளின் பால்மாக்களிலும் காணப்படுகின்றன.

ஆனால் பால்மாக்களில் அதிகளவில் காணப்படுகின்ற புரதம், கொழுப்பு, காபோவைதரேட் என்பனவற்றிலும், கனவளவுக்குரிய அல்லது நிறைக்குரிய கலோரிப் பெறுமானத்திலும் பெரியவர்களின் பால்மாவிலிருந்து குழந்தைகளினது பால்மா அதிகம் வேறுபட்டிருக்கவில்லை. ஏறத்தாழ ஒரேயளவாகவே உள்ளன.

குழந்தைகளின் பால்மாக்கள் மீளவும் வயதடிப்படையில் 1+,2+.... என்றவாறாக வேறுபடுகின்றன. இந்த வகைகளிலும் பிரதான போஷணைப் பதார்த்தங்களும் கனவளவு அல்லது நிறைக்குரிய கலோரிப் பெறுமானமும் ஏறத்தாழ ஒரே விதமாகவே இருக்கின்றன. சில நுண்போஷணைப் பதார்த்தங்களின் அளவுகள் இங்கு வேறுபடுகின்றன.

இவ்வேறுபாடுகளை அந்தப் பால்மா வகைக்குரிய கொள்கலனின் வெளிப்புறத்தில் உள்ள அட்டவணையிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

ஈடுசெய்யப்பட முடியாத தாய்ப்பால் மேற்கூறப்பட்ட பிரதான, நுண்போஷணைப் பதார்த்தங்கள் யாவற்றையும் குழந்தைக்குத் தேவையான அளவில், அகத்துறிஞ்சலுக்கு ஏற்ற வடிவில் கொண்டிருக்கிறது. சுகாதாரமான, பல்வித போஷணைப் பதார்த்தங்களையும் உள்ளடக்கிய குடும்ப உணவும் இவ்வாறே குழந்தையின் தேவைகளை நிவர்த்தி செய்து அறிவுள்ள ஆரோக்கியமான குழந்தைகளை உருவாக்க ஏற்றதாக குழந்தை நல அறிவியலாளர்களால் அறிவுறுத்தப்படுகிறது. ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேடும் அதையே உரைத்து நிற்கும்.

**மருத்துவர்: குமுதினி கலையழகன்**
*குழந்தை நலமருத்துவர், விரிவுரையாளர்,*
*யாழ்.போதனா வைத்தியசாலை.*

**கர்ப்பிணித் தாயாகிய நான் எனது உடல் நிறையைப் பேணுவது முக்கியமானதா?**

**ந.சுதா, வட்டுக்கோட்டை**

அதிகரித்த உடல் நிறையைக் கொண்ட பெரும்பாலான தாய்மார் சுகதேகியான இளவல்களைப் பிரசவித்தாலும், சாதாரண உடல்நிறை கொண்ட தாய்மாரிலும் பார்க்க அதிகளவான ஆபத்தான பிரசவ சிக்கல் நிலைகளை எதிர்நோக்குகின்றனர்.

**உடற்றிணிவுச் சுட்டி என்றால் என்ன?**

உடற்றிணிவுச் சுட்டி (BODY MASS INDEX-BMI) என்பது உடற்றிணிவை உயரத்துடன் தொடர்புபடுத்திப் பெறப்படும் ஓர் அளவீடாகும். இது சுகதேகி ஒருவரில் 18.5 தொடக்கம் 25 வரை காணப்படும். 25 தொடக்கம் 29.9 உடற்றிணிவுச் சுட்டி கொண்டோர் அதிகரித்த உடல் நிறை கொண்டோராகவும், 30 இற்கு மேற்பட்டோர் உடற்பருமனானவராகவும் வகைப்படுத்தப்படுகின்றனர். ஏறத்தாழ 20 வீதமான கர்ப்பிணிப் பெண்கள் உடற்பருமனானவராகக் காணப்படுகின்றனர்.

**கர்ப்ப காலத்தில் அதிகரித்த உடற்பருமனால் ஏற்படும் ஆபத்துகள் எவை?**

உடற்றிணிவுச் சுட்டி 25 இலும் அதிகரிக்கும் போது ஆபத்தான சிக்கல் நிலைகள் தாய்க்கும், சிசுவிற்கும் ஏற்படும் வாய்ப்பும் அதிகரிக்கிறது. உடற்றிணிவுச் சுட்டி 35 இலும் கூடியவர்கள் மகப்பேற்றியல் நிபுணரின் நேரடிக் கவனிப்பிற்குட்படுத்தப்பட வேண்டியவர்களாவர்.

1.சுவாசப்பை மற்றும் கால்களிலுள்ள நாளங்களில் குருதி உறைதல். இந்த நிலை மரணத்திற்கு இட்டுச் செல்லலாம்.

2.கர்ப்பகால நீரிழிவு-உடற்பருமனானோர் சாதாரண உடல்நிறை கொண்டவர்களைவிட மூன்று மடங்கு கூடிய வாய்ப்புக் கொண்டவர்கள்.

3.கர்ப்பகால உயர் குருதி அழுத்தமும் சிறுநீரில் புரதம் வெளியேறலும் (PRE-ECLAMPSIA)

உடற்பருமனான தாய் பெற்றெடுக்கும் சிசு பின்வரும் பாதிப்புகளை எதிர்நோக்கலாம்.

1.சிசுவின் நரம்புத் தொகுதிப் பாதிப்புகள்

2.கருச்சிதைவு-உடற்பருமனானோரில் 25 வீதமானோர் கருச்சிதைவுக்கு உட்படுகின்றனர்.

3.உடற்பருமன் கூடிய சிசுவை ஈன்றெடுத்தல்.(4Kg கூடிய)-இது தாயின் பிறப்பு வழிச் சேதம், சிசுவின் நரம்புத் தொகுதிப் பாதிப்பு என்பவற்றை ஏற்படுத்தும்.

4.சிசு இறந்து பிறத்தல் அல்லது பிறந்தவுடன் இறத்தல்-சாதாரண உடல் நிறை கொண்ட தாய்மாரை விட உடற்பருமனானோரில் இரு மடங்கு அதிகம்.

5.பிள்ளையும் உடற்பருமனாதல் மற்றும் நீரிழிவு நோய்க்குட்படும் வாய்ப்பு அதிகம்.

**உடற்பருமனாதலால் பிள்ளைப் பேறின் போது ஏற்படும் ஆபத்துகள் எவை?**

குறைமாத/முதிராக் குழந்தைப் பேறு, நீண்ட நேரப் பிரசவம், சிசுவின் நரம்புத் தொகுதிப் பாதிப்பு, அவசர சிசேரியன் சத்திர சிகிச்சையும் ஆபத்தான பின்விளைவுகளும், சத்திர சிகிச்சை காயம் கிருமித் தொற்றலேற்படல் ,மயக்க மருந்தூட்டலில் ஏற்படும் ஆபத்தான சிக்கல் நிலைகள், குருதிப்பெருக்கு கர்ப்ப காலத்தில் ஏற்படும் உடற்பருமனாதலை எவ்வாறு தவிர்க்கலாம்.

1.போசாக்கான உணவு.

தானிய உணவு, கிழங்குவகை, அரிசி போன்ற மாப்பொருள் உணவு, பிரதான உணவு மற்றும் இடை உணவு வகைகளை முறைப்படுத்தல் ,கொழுப்பு மற்றும் எண்ணெய் கூடிய உணவு, அதிகளவு சீனி சேர்த்த உணவு ஆகியவற்றைக் குறைத்தலும் நிறுத்தலும்

*நார்ச்சத்துக் கொண்ட உணவுகளான அவரை, தானியம், பழங்கள், காய்கறிகள், முழுத்தானியம், தீட்டாத அரிசி ஆகியவற்றை அதிகம் பயன்படுத்தல்

*உணவு உண்ணாது விடுதல், விரதமிருத்தல் என்பவற்றைத் தவிர்த்து மூன்று வேளையும் முக்கியமாக காலை உணவை உண்ணுதல் வேண்டும்.

உணவுக் கட்டுப்பாடு மூலம் உடல் நிறையைக் கர்ப்ப காலத்தில் குறைக்க முற்படுவது சிசுவின் வளர்ச்சியைப் பாதிக்கும். எனினும் உடற்பருமனானவர்கள் போசாக்கான உணவின் மூலம் உடல்நிறை தேவைக்கதிகமாக அதிகரிப்பதைத் தடுக்கலாம். இது ஆபத்தானதல்ல.

2.உடற்பயிற்சி மேற்கொள்ளல்

a நடத்தல், துவிச்சக்கர வண்டி ஓடுதல், நீந்துதல், தோட்டவேலை, மாடிப்படி ஏறுதல் நல்ல உடற்பயிற்சிகளாகும். இவற்றை ஒழுங்காக மேற்கொள்ள வேண்டும்.

b உடல் உழைப்பில்லாத நீண்டநேர வேலைகளைத் தவிர்த்தல். (தொலைக்காட்சி பார்த்தல்)

c உடற்பயிற்சியை 15-30 நிமிடங்கள் ஒவ்வொரு நாளும் ஒழுங்காக மேற்கொள்ளலாம்.

3.போலிக்கமிலம் உள்ளெடுத்தல், சிசுவின் நரம்புக் குறைபாட்டைத் தடுக்கும்.

4.விற்றமின் D உள்ளெடுத்தல்.

5.குருதிக் கலன்களினுள் குருதியுறைதலைத் தடுக்க வைத்திய ஆலோசனைப் படி மருந்துகளைப் பயன்படுத்தலாம்.

6.கர்ப்பகால நீரிழிவைக் கண்டறிதலும், கட்டுப்பாட்டில் வைத்திருத்தலும்.

7.உயர் குருதியழுத்தத்தை வைத்திய ஆலோசனைப்படி கட்டுப்பாட்டில் வைத்திருக் கலாம்.

**பிரசவத்தின் பின்னரான கவனிப்புகள் எவை?**

1.உயர் குருதியழுத்தம் உள்ளதா எனக் கண்காணித்தல்

2.நாளங்களில் குருதியுறைதலைத் தடுத்தல்

நடத்தல் (நீண்ட நேரம் படுத்தலையும் இருத்தலையும் தவிர்த்தல்) ,விசேட அழுத்தக் காலுறைகளைப் பயன்படுத்தல்.

3.கர்ப்பகால நீரிழிவு உள்ளதாவெனக் கண்டறிதலும் சிகிச்சை பெறுதலும்

4.தாய்ப்பாலூட்டல்

5.விற்றமின் டி போசணை

6.போசாக்கான உணவும் உடற்பயிற்சியும்

**அடுத்த கர்ப்பந்தரித்தலுக்கு முன்னரான ஆயத்தங்கள் எவை?**

1.உடல்நிறையை சுகதேகியின் நிறைக்குக் குறைத்தல்.இதற்கு போசணை நிபுணரின் ஆலோசனைப்படி ஒரு கிழமைக்கு 1Kg வீதம் குறைத்தல் நலம். உணவுக்குறைப்பு/தவிர்ப்பு உடல் நலத்திற்கு நல்லதல்ல.

2.போசாக்கான உணவும் ஒழுங்கான உடற்பயிற்சியும் நன்மைபயக்கும்.

**மருத்துவர் யோ.சிவாகரன்,**
**யாழ்.போதனா வைத்தியசாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதாள வெங்காய உண்மை விதையுற்பத்தி

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தியின் பணப்பயிர் வரிசையில் வெங்காயச் செய்கை முதலிடத்தை வகிக்கின்றது. தற்போது இதன் விஸ்தீரணம் கடந்த காலங்களைவிட அதிகரித்து வருவது புள்ளி விவரங்களுடாக அவதானிக்க முடிகின்றது. 2010 ஆம் ஆண்டு 2610 கெஹெரயர் விஸ்தீரணத்தில் 38915 மெற்றிக்தொன் உற்பத்தி கிடைக்கப்பெற்றுள்ளது. இது இலங்கையின் உற்பத்தியில் 62 வீதமாக உள்ளது.

கடந்த 10 வருடகால யாழ்மாவட்ட வெங்காயச் செய்கை விஸ்தீரணமும் உற்பத்தியும்

| ஆண்டு | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விஸ்தீரணம் ஹெக்ரெயர் | 1426 | 1668 | 1825 | 1878 | 1792 | 1064 | 982 | 1653 | 2610 | 3273 |
| உற்பத்தி மெ.தொன் | 17112 | 20016 | 29775 | 30135 | 22116 | 14240 | 12301 | 21978 | 38915 | 49093 |

இந்த ஆண்டு இவ்விஸ்தீரணத்தை மேலும் 15 வீதத்தால் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புக் கிட்டியுள்ளது.

1990 ஆம் ஆண்டுக்கு முன் செய்கை பண்ணிய சில பிரதேசங்கள் மீளவும் செய்கை பண்ண அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கையின் சகல பரதேசங்கட்கும் சந்தைப்படுத்தக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதைவிட விதை வெங்காயமாகவும் தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. இதனால் இந்த உற்பத்திக்குக் கூடுதலான கேள்வி ஏற்பட்டுள்ளது.

வெங்காயச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் கூடிய வருமானத்தைப் பெறுவதுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் தங்கள் பங்களிப்பைச் செலுத்துகின்றனர்.

சாதாரணமாக வெங்காயச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் விதை வெங்காயக் குமிழ்களை நடுகைப் பொருளாகப் பயன்படுத்துகின்றனர். இதன்போது கீழ்க்குறிப்படும் பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றார்கள்.

* விதை வெங்காயக் குமிழ்களுக்காக மொத்த உற்பத்திச் செலவில் 60 வீதத்தைச் செலவிட வேண்டியுள்ளது.
* தரமான விதை வெங்காயம் உரிய நேரத்தில் கிடைக்காமை.
* விதை வெங்காயத்தின் விலை அதிகரித்துச் செல்லல்.
* ஏக்கருக்கு 800 - 1200 கிலோ விதைவெங்காயக் குமிழ்கள் தேவை.
* விதை வெங்காயக் குமிழ்களை அதன் உறங்கு நிலைக்காலம்வரை சேமித்து வைப்பதற்கு இடவசதியின்மை
* விதை வெங்காயக் குமிழ்களை நடுகை செய்யும் பொருட்டு கொண்டு செல்வதில் ஏற்படும் செலவு.
* விதை வெங்காயக் குமிழ்களை நீண்டகாலம் சேமித்து வைக்க முடியாமை.
* கூடுதலான குமிழ் அழுகல் நோய்த்தாக்கம் ஏற்படல்.

இந்தப் பிரச்சனைகளில் இருந்து விடுபடுவதன் பொருட்டு விவசாயத் திணைக்களம் உண்மை விதையுற் பத்தியை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக மத்திய அரசிடமிருந்து கிடைக்கப்பெற்ற நிதியுதவி ரூபா 10 லட்சத்திற்கூடாக 8 பிரதேச செயலர் பிரிவில் 15 விவசாயிகள் ஊடாக தலா 500 $m^2$ விஸ்தீர ணத்தில் உண்மை விதை உற்பத்தி ஆரம்பக்கப்பட்டுள்ளது.

### உண்மை விதை என்றால் என்ன?

வேதாள வெங்காயம் காலபோகத்தில் உற்பத்தி செய்யும் போது புக்கும் இயல்பு கொண்டது. இப்புக் களை நாம் உணவுக்காகப் பயன்படுத்துகின்றோம். இப்பூக்களை முறிக்காது விட்டால் இவை மலர்ந்து முதிரும் போது அவற்றுள் கறுப்ப நிறமான சிறிய விதைகள் உருவாகும். இதுவே உண்மை விதையாகும். இதனால் விதைவெங்காயத்துக்கு ஏற்படும் பெரும் செலவைக் குறைக்கமுடியும். ஆத்துடன் குமிழ் மூலம் பரவும் நோய்களையும் கட்டுப்படுத்துவதுடன் கையாளலும் சுலபம்.

### உண்மை விதைகளை எவ்வாறு உற்பத்தி செய்யலாம்?

1) நடுகை விதைவெங்காயக் குமிழ் தெரிவு

உண்மை விதை உற்பத்திக்குச் சேதனப்பசளையிட்டு உற்பத்தி செய்யப்பட்ட 2 - 3 சென்ரிமீற்றர் விட்டமுள்ள நோய்த்தாக்கமற்ற பெரிய குமிழ்களைத் தெரிவு செய்ய வேண்டும். தெரிவு செய்யப்பட்ட குமிழ்கள் அறுவடை செய்து 6 வாரங்களைக் கடந்ததாக இருக்கவேண்டும்.

2) வசந்த கால நிலைப்படுத்தல்

தெரிவு செய்யப்பட்ட விதை குமிழ்களில் சீரான புத்தலைத் தூண்டுவதற்காக வசந்த கால நிலைப்படுத்தல் மேற்கொள்ள வேண்டும். வசந்த கால நிலைப்படுத்தல் என்பது 8 130 c வெப்பநிலையில் 14 21 நாள்கள் விதை வெங்காயக்குமிழ்களைச் சேமித்து வைத்தலாகும்.

8-10$^0$c உ வெப்பநிலை ஆயின் 14 நாள்களுக்கும் 10 13$^0$c வெப்பநிலையாயின் 21 நாள்களுக்குகும் குளிர்நிலையில் சேமித்தல் போதுமானது..

3) நடுகை

நடுகைக்குத் தெரிவு செய்யப்பட்ட தரையானது 500 -1000 மீற்றர் தனியாக்கல் இடைவெளியைக் கொண்டி ருத்தல் வேண்டும். தரையை நன்கு பண்படுத்திக் கூட்டெரு இட்டுக் களைகள் முளைக்காதவாறு பண்படுத்தப்படல்



வேண்டும். இறுதிப் பண்படுத்தலின் போது அடிக்கட்டுப் பசளையாக 500 $m^2$ இற்கு 3.5kg யூரியா, 5 kg ரி.எஸ்.பி, 2.5 kg எம்.ஒ.பி இடல் வேண்டும். இதனால் பசளை மண்ணுடன் நன்கு கலக்கப்படும். இதன் பின் தொற்று நீக்கப்பட்ட விதைவெங்காயக் குமிழ்களைப் 10 cm இடை வெளியில் நடுகை செய்தல் வேண்டும். தொற்று நீக்கு வதற்கு 54 கிராம் கோமாயை 30 லீற்றர் நீரில் கலந்த கலவை யில் 150 கிலோ விதைவெங்காயத்தை 10 -15 நிமிடம் ஊறவிட்டுப் பன் நிழலான இடத்தில் ½ மணித்தியாலம் வரை உலரவிட்டு நடுகையை மேற்கொள்ளலாம். இதனால் குமிழிலிருந்து வரும் நோய்களைக் கட்டுப்படுத்த முடியும்.

4)களைநாசினிப் பிரயோகம்

இரசாயனக் களைகொல்லிகளைப் பாவித்துக் களைக் கட்டுப்பாடு மேற்கொள்ளும்போது 25 - 30 நாள்கள்வரை களை முளைக்காது பாதுகாத்துக்கொள்ள முடியும். இதற்குக் கோல் 2E 200 மில்லி லீற்றர் ஏக்கருக்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. நடுகை செய்த மறுநாள் தரை நன்கு ஈரமாக இருக்கும்போது விசிற வேண்டும்.

5)வலையிடல்

பூந்துணர் முறியாது பாதுகாப்பதற்காக நடுகைசெய்து 21 நாள்களில் 2'' வலையை நிலத்திலிருந்து 9 உயரத்தில் இழுத்து கட்டுதல் வேண்டும்.

6) மேற்கட்டுப்பசளையிடல்

நடுகை செய்து 3ஆம் வாரத்தில் 500$m^2$ இற்கு 3.5கிலோ யூரியாவும், 6 ஆம் வாரத்தில் 3.25 கிலோ யூரியாவும் 1.5 கிலோ எம்.ஒ.பியும் இடவேண்டும்.

7) மகரந்தச் சேர்க்கை ம் பூத்தலும்

வெங்காயப் பூக்கள் அயன் மகரந்தச் சோ்க்கை மூலம் விதைகளை உருவாக்குகின்றது. எனவே அயன் மகரந்தச் சேர்க்கையைத் தூண்டும் முகமாகத் தேனீ வளர்ப்பை மேற்கொள்ள வேண்டும். மற்றும் பூச்சிநாசினிகளை மதியவேளைகளில் விசிறுவதைத் தவிர்ப்பதன் மூலம் நன்மைபயக்கும். பூச்சிகளின் செயற்பாடுகளை உறுதிப்படுத்தலாம். பூச்சிநாசினிகளை விசிற வேண்டிய தேவையேற்படின் காலை 7 மணிக்கு முன்பும் மாலை 5 மணிக்குப் பின்பும் விசிறவேண்டும்.

நடுகை செய்து 21 25 நாள்களில் புக்கள் தோன்ற ஆரம்பக்கும். 40 -45 நாளில் புந்துணர் விரியும்.

(பூக்கள் முறிந்து விழாமல் தடுப்பதற்கு 2 அங்குல வலைகளைப் பாவிப்பதல்) பூந்துணர் விரிந்து இரு வாரங்களுக்கு துணியால் ஆன கையுறை அணிந்து கையால் காலை 9 மணி முதல் 11 மணிவரை பூக்கள் மேல் தடவுதல் மூலம் செயற்கைமுறையில் மகரந்தச்சேர்க்கை தூண்டலாம். இப்பூந்துணர்கள் விரிந்து 30 நாள்களில் கறுப்பு நிறமான முதிர் விதைகளை உருவாக்கும்.

8) நோய்பீடை முகாமைத்துவம்

➢ ஊதாப்புள்ளி நோய்
➢ குமிழ் அழுகல்
➢ நுனிகருகல்

பூச்சித்தாக்கங்கள்

➢ வெங்காயத் தாள்கோதிப்புழு
➢ புனிப்புச்சி
➢ விலாங்குப்புழு

ஊதாப்புள்ளிநோய்

அறிகுறி

* இலையின் மேற்பகுதியில் கபல நிற நடுப்பகுதியும் ஊதாநிறமான விளிம்பையும் கொண்ட ஒழுங்கற்ற வடிவிலான புள்ளிகள் தோன்றும்.
* அந்தப் புள்ளிகள் மீது வட்டவடிவான கறுப்பு நிறமான புஞ்சண வித்திகள் காணப்படும்.
* இலைகள் வாடிப்போகும்.

கட்டுப்பாடு- நோய் அறிகுறிகள் தென்பட்டதும் சிபார்சு செய்யப்பட்ட பங்கசு நாசினிகளில் ஒன்றை விசிறவும்.

புறொபனெப் 70 % WP 32கிராமை 16 லீற்றர் நீரில் கலந்து விசிறல்.

குளோரோதலொனில் 500 g/SC 24மி.லீற்றரை 16 லீற்றர் நீரில் கலந்து விசிறல்.

இலைச்சுருள் நோய்/அந்தரக்நோசு

அறிகுறி

* இலைகளின் மேற்பகுதியில் வெளிறிய மஞ்சள் நிறமான தாழ்ந்த புள்ளிகள் தோன்றும்.
* இலைகள் மஞ்சள் நிறமாகி, சுருண்டு செடியின் கழுத்துப்பகுதி முறிந்து விழும்.
* குமிழ்கள் சிறிதாகி அழுகும்.
* விதை உற்பத்தி வெங்காயப்பயிர்களில் பூக்காம் பின் மேற்பகுதியில் பூஞ்சண இழைகள் உருவாகி அவ்விடங்களில் பூக்காம்பு முறிந்து விழும்.
* பூவின் பூந்துணர்களுக்கு நோய் தொற்றியதும் அவை உலரும்.

கட்டுப்பாடு:-

நோயால் பாதிக்கப்பட்ட இடங்களில் 2 3 வருடங்கள் வரை அவரைத் தானியங்களை பயிர்ச்சுழற்சியை மேற்கொள்ளவும். முன்பு நோயால் பாதிக்கப்பட்ட இடங்களில் திரும்பவும் பயிர்ச் செய்கையை மேற் கொள்ளும்போது குமிழை நடுகை செய்து 14 நாள்களில் பங்கசு நாசினியொன்றை விசிறவும்

தயோபனேட் மீதைல் 70% WP 9.6கிராமை 16 லீற்றர் நீரில் கலந்து விசிறல் வேண்டும்.

குளோரோதலனில் 500g/ 1SC 48 மி.லீற்றரை 16 லீற்றர் நீரில் கலந்து விசிறல் வேண்டும்

மங்கோசெப் 80% WP 32கிராமை 16 லீற்ரு நீருடன் கலந்து விசிறல்.

வெங்காயத் தாள்கோதிப்புழு

குடம்பி:-

பச்சை நிறத்தை ஒட்டிய கறுப்பு நிறக் கோடுகள் காணப்படும். 40 -50 நீளமானது.

கூட்டுப்புழு:- மண்ணில் இருக்கும்

தாக்கம்:- குடம்பகள் வெங்காய இலைமடலின் உட்பகுதியில் பச்சைநிறப் பகுதிகளை உண்ணும். இதனால் தாள்கள் சிகரெட் சாம்பல் போல் சுருங்கி வெள்ளையாகக் காணப்படும்.

கட்டுப்பாடு-

பூச்சிநாசினி விசிறல்

டயசினோன் 50 ஈ.சி 140மி.லீற்றர் 1000சதுர மிற்றருக்கு விசிறல்.

எஸ்பென்வலரேட் 7.5 ஈ.சி 12.5மி.லீற்றர் 1000சதுர மீற்றருக்கு விசிறல்.

9) விதைகளின் அறுவடை

15 20 வீதமான விதைகள் கறுப்பு நிறமாக மாறியதும் அறுவடை செய்யலாம். அறுவடைக் காலம் தாமத மானால் பூந்துணரிலிருந்து விதைகள் கொட்டும். மற்றும் அறுவடை செய்யும்போதும் விதைகள் கொட்டுவதைத் தவிர்ப்பதற்காக இரண்டு விரல்களிற்கிடையில் புந்துணரை வைத்து 10cm நீளமான காம்புடன் அறுவடை செய்யப்படும்.

10) விளைவு

செறிவான பராமரிப்பின் கீழ் உச்ச விளைவாக 500 சதுர மீற்றருக்கு 18 முப உண்மை விதைகளை பெறலாம்.


11) விதைகளைப் பதப்படுத்தல்

அறுவடை செய்யப்பட்ட பூக்களை 2 -3 நாள்கள் நிழலான இடத்தில் உலர்த்தி உலர்ந்த புக்களைக் கையால் கசக்கி விதைகளை வேறாக்கலாம். வேறாக்கிய விதை களைப் படைத்து துப்புரவு செய்தபின், நீரில் 3 நிமிடங்கள் அமிழ்த்தி மிதக்கும் விதைகளை அப்புறப்படுத்திச் சுத்தப் படுத்தலாம். அமிழ்ந்த விதைகளை உடனடியாக மீண்டும் நிழலான இடத்தில் 3 4 நாள்களுக்கு உலர விட வேண்டும்.

12) விதைகளைச் சேமித்தல்

7 -9 மூ ஈரப்பதன் கொண்ட விதையைத் துணியால் அல்லது கடதாசியினால் ஆன பைகளில் சாதாரண நிலையில் ஒரு வருடம் வரை முளைதிறன் கெடாது சேமிக்க முடியும். குளிர்சாதன வசதி இருக்குமாயின் 5 ஆண்டு ளுக்கு மேலாக முளைதிறன் கெடாமல் களஞ்சியப்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## A⁺ சிறுநீரகம் தேவை

A+(A Positive) blood group உள்ள ஒருவருக்கு மாற்று சிறுநீரகம் ஒன்று அவசரமாகத் தேவைப்படுகின்றது. 30-50 வயதுக்கிடைப்பட்டவர்கள் தானம் செய்ய விரும்பினால் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 077 132 8706, 078 579 3415, 077 711 1003 (சி/936) (5.6.9)

## பதவி வெற்றிடங்கள்

யாழ்.நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு
1) சாதாரண வாகன சாரதி 2) கனரக வாகன சாரதி
3) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (Civil)
(யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் பணிபுரிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தேவை)
4) உதவிக்கணக்காளர் (கணினி அறிவு அவசியம்)
5) வீட்டுப்பணிப் பெண்
ஆகிய பதவிகளுக்கு பொருத்தமானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- 0758348397 (19612) (2-6-9)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
அம்பலப்பிள்ளை
இலங்கைநாயகம் (J.P)
(செல்லக்குட்டி, கிளானை, கொல்லங்கலட்டி)
திதி:- ஆனி - பூர்வபக்க பஞ்சமி

தவப்பேறு 05★10★1938
சிவப்பேறு 15★07★2010

தந்தைக்கு இலக்கணமாய் தரணியிலே வாழ்ந்தீர்கள்
பண்பாகப் பேசி எங்களையும் ஆளாக்கினீர்கள்
எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை என்றும் ஆண்டு கொண்டிருக்கும்

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நவாலி வடக்கு,
மானிப்பாய். (19656) (2-6-9)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 20★04★1960



இறப்பு 26★05★2012

### அமரர் பொன்னுத்துரை நாகேஸ்வரி

கடந்த (26.05.2012) அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி அமரர் பொன்னுத்துரை நாகேஸ்வரி அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று (24.06.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்சடங்குகளில் எம்முடன் பங்குகொண்டு உதவிகள் பல புரிந்தவர்களுக்கும், எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தாப்படி வீதி,
நுணாவில் மத்தி, சாவகச்சேரி. (19670) (45.6.9)

குடும்பத்தினர்.

## காணி விற்பனை

பருத்தித்துறை பிரதான வீதிக்கு அண்மித்துள்ளதாக மயிலியதனை ஊரிக்காட்டில் அமைந்துள்ள வீட்டுத் திட்டத்துக்குரிய 20 பரப்பு நிலம் முழுமையாகவோ, பகுதியாகவோ பிரித்து விற்கப்படும். 3 Face மின் இணைப்பு வசதியும் உண்டு.

தொடர்பு: 0775707249, 0044132 227 8797 (19242) (2-6-7)

## வீடு வாடகைக்கு

பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் 10 அறைகளுடன் கூடிய 2 மாடி வீடு வாடகைக்கு உண்டு. அரச நிறுவனங்கள் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

(19420) (6,9,10) தொடர்பு : 0777199240

## இறைச்சிக்கோழி விற்பனை

யாழ். போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைக்கான 'கீமோத்ரபி' அலகு நாளை திங்கட் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு 'பீப்பிள்ஸ் லீசிங்' நிறுவன நிறைவேற்று அதிகாரி டி.பி. குமாரகேயினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

பீப்பிள்ஸ் லீசிங் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைக்கான 'கிமோத்ரபி' அலகு அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி தனது துணைக் காரியாலயங்களை நேற்று முற்பகல் 10.30 மணிக்கு ஆஸ்பத்திரி வீதி, மன்னாரிலும் இன்று காலை 9.05 மணிக்கு ஸ்ரேசன் வீதி, வவுனியாவிலும் நாளை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் சுன்னாகத்திலும் திறந்து வைக்கிறது.

இதில் வவுனியாவில் மக்கள் வங்கியையும் இந்தக் கம்பனியின் துணைக் காரியாலயத்தையும் மக்கள் வங்கியின் தலைவர் டபிள்யூ. கருண ஜீவவும் ஏனையவற்றை கம்பனியின் நிறைவேற்று அதிகாரி டி.பி. குமாரகேயும் திறந்து வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-16)

## காலந் தாழ்த்தி திறக்கப்படும் பாடசாலைகளால் சிரமம்

யாழ்ப்பாணம், ஜூன் 24
காரைநகர் கோட்டப் பாடசாலைகள் சில காலம் தாழ்த்தித் திறக்கப்படுவதால் பெற்றோர்களும், மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

காரைநகர் கோட்டப் பாடசாலைகள் ஆரம்பமாகும் நேரம் அண்மையில் காலை 8.30 மணியாக பின்னகர்த்தப்பட்டது.

இதனால் அதிபர், ஆசிரியர்கள் சில பாடசாலைகளுக்கு 8.15 மணிக்குப் பின்னரே சமூகமளிக்கின்றனர். ஆரம்ப பாடசாலைகளுக்குக் கல்வி சாரா ஊழியர்கள் நியமிக்கப்படாமையால் அதிபர்கள், ஆசிரியர்களின் வருகையை அடுத்தே பாடசாலைகள் திறக்கப்படுகின்றன.

இதனால் சின்னஞ்சிறு மாணவர்களை பாடசாலைகளுக்கு அழைத்துச் செல்லும் பெற்றோர்கள் இவர்களின் வருகைக்காகப் பாடசாலை முன்றிலில் காத்திருக்க வேண்டி உள்ளது.

இதனால் தமது கடமைகளுக்கு உரிய நேரத்துக்குச் செல்ல முடியாது இருப்பதாக கவலை தெரிவிக்கின்றனர்.

அன்றாடம் கூலித் தொழிலுக்குச் செல்லும் பெற்றோர் காலை 8 மணிக்காவது பாடசாலைகளைதிறப்பதற்கு கல்வி அதிகாரிகள்நடவடிக்கைஎடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-60)

### வறிய மாணவருக்கு உதவி

தெல்லிப்பழை கலை இலக்கியக் கழத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு அந்த நிறுவனம் முப்பது வறிய மாணவர்களுக்கு உதவிப் பணத்தை வழங்கவுள்ளது.

தெல்லிப்பழை கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில்கல்வி பயிலும் வறிய மாணவருக்கு இந்த உதவி வழங்கப்பட வுள்ளது. ஆயிரம் ரூபா கொண்ட இந்த உதவி வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்கள் ..ப்பது பேருக்கு வழங்கப் படவுள்ளது.

இந்த உதவியைப் பெறத் தகுதியான ஒவ்வொரு மாணவர்களதும் பெயர், விவரங்களைத் தருமாறு தெல்லிப்பழை கோட்ட அதிபர்களிடம் கோரப்பட்டுள்ளது. (ம-38)

## நாடு திரும்புகிறார் சங்கரி

ஐரோப்பிய நாடுகளில் உள்ள புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் இலங்கைத் தமிழர்களின் அரசியல் நிலவரம் தொடர்பாக பலதரப்பட்டவர்களுடன் பல்வேறு சந்திப்புக்களை மேற்கொள்ளும் நோக்கோடு ஐரோப்பிய நாடுகளுக்கு ஒருமாத கால சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வி. ஆனந்தசங்கரி அவசரமாக நாடு திரும்புகிறார்

எதிர்வரும் 26ஆம் திகதி தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைமையில் கிளிநொச்சி முறுகண்டியில் இலங்கை அரசின் நில அபகரிப்பு மற்றும் இராணுவமயமாக்கலை எதிர்த்து நடைபெறவுள்ள கவனயீர்ப்பு போராட்டத்தில் பங்குகொள்வதற்காக சங்கரி பயணத்தை நிறைவுசெய்து கொண்டு நாளை லண்டனிலிருந்து அவசரமாக இலங்கை வருகின்றார்.

இந்த ஜனநாயக ரீதியான போராட்டத்துக்கு தனது முழு ஆதரவைத் தெரிவிப்பதோடு இந்தப் போராட்டத்தை கட்சி பேதம் இன்றி அனைவரும் கலந்து கொண்டு நில அபகரிப்புக்குக்கு எதிரான எமது உரிமைப் போருக்கு வலுச் சேர்க்குமாறு அனைவருக்கும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். (ம)

## தலையில் விழுமா? தரையில் விழுமா?



சாவகச்சேரி பஸ் நிலையப் பகுதியில் உள்ள கட்டடம் ஒன்றில் பூட்டப்பட்டிருந்த விளம்பரப் பதாகை முறிந்து அந்தரத்தில்...

## மட்பாண்டக் கைத்தொழிலாளர் பிரச்சினையைத் தீர்க்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்.மாவட்ட மட்பாண்டக் கைத்தொழிலாளர் தமது உற்பத்தியில் ஏற்படும் பிரச்சினைகள், சந்தை வாய்ப்புக்கள், நிதி வசதிகள் தொடர்பில் அடங்கிய 5 கோரிக்கையைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையிடம் முன்வைத்துள்ளனர்.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மட்பாண்ட கைத்தொழிலாளர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் ஒன்றை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு நடத்தியது. அதன்போதே தமது கோரிக்கைகளை அமைச்சரிடம் முன்வைத்தனர்.

மட்பாண்டத்துக்குத் தேவையான மண் ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மல்லாவி, கண்டாவளை போன்ற இடங்களில் இருந்து பெற்றுக் கொள்வதில் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இதன்போது பிரதேச செயலர் அனுமதி கிடைத்த போதிலும் மண்ணைப் பெற்றுக் கொள்வதில் உள்ளூர் குழுக்கள் மற்றும் வேறு தலையீடுகளால் பெரும் செலவுகளும் சிரமங்களும் ஏற்படுகின்றன.

களிமண்ணை சிரமமின்றி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துத் தரவேண்டும் என்றும் இதன்போது கேட்கப்பட்டது.

- மட்பாண்ட தொழில் செய்யும் இடத்தைத் திருத்தி அமைப்பதற்குத் தேவையான தகரம், மரம், தடிகள் போன்ற உபகரணங்களைத் தந்து உதவவேண்டும்.
- சூளை திருத்தம் செய்வதற்கு இலகு கடன் வசதியைப் பெற்றுத் தர வேண்டும்.
- வெளி மாவட்டத்தில் மட்பாண்டத் தொழிலை செய்யும் தொழில்நுட்பத்தை பார்வையிடுவதற்கான ஒழுங்கு வசதிகள் செய்து தரல்.
- புதிய உற்பத்திகளை உருவாக்கல் பயிற்சி மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்புகளை ஏற்படுத்தல்.
- விலைகளை எல்லா உற்பத்தியாளர்களும் ஒரு புரிந்துணர்வில் குறித்த விலைக்கு விற்க ஏற்பாடு செய்தல் போன்ற 5 கோரிக்கைகளை முன்வைத்தனர்.

பின்னர் தமக்கான ஒரு சங்கத்தையும் உருவாக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

இலங்கை தேசிய அருங்கலைகள் பேரவையுடன் கைத்தொழில் அபிவிருத்தி அவையும் இணைந்து யாழ்.மாவட்ட மட்பாண்ட கைத்தொழிலாளர்களுக்கு நவீன வடிவமைப்பில் உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும் பிரதேச வங்கிகளில் இலகு கடன் வசதிகளை ஏற்படுத்தி தருவதாகவும் இங்கு உற்பத்தி செய்யப்படும் மட்பாண்ட பொருள்களை வெளி இடங்களுக்கு ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சிறுகைத்தொழில் அமைச்சர் கூறினார். (ம-13)

## தரம்- 5 மாணவருக்கு வழிகாட்டல்

யாழ்ப்பாணம், ஜூன் 24
உள்ளூராட்சி சபையின் நூலக மேம்படுத்தல் திட்டத்துக்கு அமைவாக கோண்டாவில் பொதுநூலகம் வாராந்தம் பல்வேறு நூலக வலுவூட்டல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கமைவாக கடந்த வாரம் தரம்- 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கும் நூல்கள் கண்காட்சியும் நடைபெற்றது.

நல்லூர் பிரதேச சபை அபிவிருத்தி உதவியாளர் அ.கமலேஸ்வரசர்மா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வளவாளர்களாக ஏழாலை சன்மார்க்க வித்தியாலய ஆசிரியர்கள் பி.பிரபாலினி, பி.பத்மநேசன் ஆகியோரும் குட்டிச் சுட்டி ஆசிரியர் பு.லதன் ஆகியோரும் கலந்துகொண்டு தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்கள் தம்மை எவ்வாறு தயார்படுத்தல், கற்றல் முறைமை, வினாக்களை எவ்வாறு தெரிவு செய்வது, இலகுவான பாடத் திட்டங்கள் தொடர்பாக ஆலோசனைகளையும் கருத்துரைகளையும் செயல்முறை ரீதியாக எடுத்துக் கூறினர்.

கடந்த 16 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்ற நூலக வலுவூட்டல் நிகழ்வில் ஞானவீர சனசமூக நிலையமும் கோண்டாவில் பொது நூலகமும் நடத்திய குருதிக் கொடையாளர் தினமும் கலை திறனாளர்களின் ஆற்றல்களை மேம்படுத்தல் நிகழ்வும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் நூலக வாசகர் வட்ட மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2012 வர்த்தகப் பிரிவுக்கான பரீட்சையும் கருத்தரங்கும் தொடர்பானது

எமது ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 2012 வர்த்தகப் பிரிவில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சியை கருத்திற்கொண்டு வலயக் கல்விப் பணிமனையின் அனுமதியுடன் கிளிநொச்சி மக்கள் அமைப்பின் அனுசரணையுடன் M.C.Q., பரீட்சைக் கருத்தரங்கு என்பன கீழ் குறிப்பிடப்படும் கால அட்டவனையின்படி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு கிளிநொச்சி மாவட்ட கல்வி வலயத்துக்குட்பட்ட அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்துகொண்டு பயன் பெறுமாறு அழைக்கின்றோம்

| பாடம் | காலம் | நேரம் |
|---|---|---|
| **பரீட்சை** | | |
| பொருளியல் | 25.06.2012 | 12.00 p.m. - 02.00 p.m. |
| கணக்கீடு | 26.06.2012 | 12.00 p.m. - 02.00 p.m. |
| வணிகக்கல்வி | 27.06.2012 | 12.00 p.m. - 02.00 p.m. |
| **கருத்தரங்கு** | | |
| பொருளியல் | 30.06.2012 | 09.00 a.m. - 12.00 noon |
| | | 01.00 p.m.- 04.00 p.m |
| கணக்கீடு | 01.07.2012 | 09.00 a.m. - 12.00 noon. |
| வணிகக்கல்வி | 01.07.2012 | 01.00 p.m.- 04.00 p.m. |

தகவல்: அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கிளிநொச்சி மாவட்டம்

(19724)(14.34)

## வான் விற்பனைக்கு

NPGR..... தொடர் இலக்க Petrol - VANETTE வான் விற்பனைக்குண்டு.

(19722) (14.34) தொடர்பு: 0750407723

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம் 10.06.1969 இல் பிறந்த ரேவதி நட்சத்திரம் கிரகபாவம் 16 உடைய மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.

(19710) (45.6.9) தொடர்பு: 077 663 4010

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு உடன் வாடகைக்குத் தேவை.

(19710) (45.6.9) தொடர்பு: 075 6730 736

உதயன் விளம்பரத் தொடர்புக்கு- advt@uthayan.com 0215671111

உதயன் 23.06.2012 ஆம் திகதிய இதழில் 6A பக்கத்தில் சிவசுப்பிரமணியம் மகேந்திரனின் மரண அறிவித்தலில் பிரசுரமானது போலன்றி பூதவுடல் இன்று (24.06.2012) ஞாயிறு காலை 9 மணிக்குத் தகனக் கிரியைக்காகக் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்று அறிவிக்கப்படுகின்றது.

(19635) (2-6-9)

## விற்பனைக்கு

கே.கே.எஸ்.வீதி, தாவடிச் சந்தியில் வீதி அருகில் 5 அறை, 2 ஹோல், 2 அற்றாச் பாத்றூம், ரொய்லெற் வெளியே ஒரு ரொய்லெற், கிணறு சகல வசதியுடனான வீடு விற்பனைக்குண்டு. முன்பக்கம் ஒரு கட்டடம் அமைக்க வெற்றுக் காணியும் உண்டு. வியாபார நோக்கம் உடையவர்களுக்கு வசதியான இடம். தரகர் தேவையில்லை. நேரில் தொடர்பு கொள்ளவும். தொடர்பு:- 0773506423

(19709) (2-6-9)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய், இணுவில் வீதியில் - யாழ் - மானிப்பாய் பிரதான வீதியிலிருந்து 500 மீற்றர் தொலைவில், பத்திரிப்புக் கட்டடம் இரண்டு, கிணறு, சுற்று மதிலுடன் கூடிய நில 6.9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0776117196, 0777105609

(சி19708) (2-6-9)

## விநியோகஸ்தர்கள் தேவை (Distributors)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு எமது விற்பனை நிறுவனத்துக்கு விநியோகஸ்தர்கள் உடன் தேவை.

தொடர்புக்கு: 0718733943

(சி/880) (6,9,10)

## மணல் விற்பனைக்குண்டு

கண்டுக்குளியில் பூநகரி மணல். ஒரு உழவு இயந்திர லோட் 4800/-க்கு உங்களது வீட்டுக்கு கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.

(19721) (14.34) தொடர்பு: 0750407723

## REFILL CENTER

சகல விதமான laser toner களுக்கும் மிகக் குறைந்த விலையில் விரைவாகவும் தரமாகவும் Refill செய்து தரப்படும்.

Delivery free

அறிமுக விலைக்கழிவு ~~2500~~/- 2000/- (மட்டுப்படுத்தப்பட்டது)

Quality , Quantity=New toner



உடன் தொடர்புகளுக்கு: 0772510466

(19714)

## உயிரூட்டுகின்றோம்

தொழில்சார் மின்சார உபகரணங்கள், அனைத்தையும் உடனடியாகத் திருத்தி உயிரூட்டிக் கொள்ளவும் புதியனவற்றைக் கொள்வனவு செய்யவும் எங்கள் ஸ்தாபனத்தை நாடுங்கள். நாங்கள் விற்பனை செய்யும் சகல உபகரணங்களுக்குமான உத்தரவாத சேவை உடனடியாக எங்களால் வழங்கப்படும்.




**Green House Trading Company,**
No.05, Karuwapulam Lane,
Adiyapatham Road, Kokuvil East,
Tel/Fax: 021 2226459, 071 4843432, 071 6805668.

(C/967) (வடமாகாண பிரதேச காரியாலயத்துக்கு அருகில்)

## 2 கிழமை அவுஸ்திரேலியா விசா

- பாஸ்போட் Copy, 2 Photo
- Visa கட்டணம் (விசா, சரிபார்த்த பின்னர்)

100% உத்தரவாதம்

**EURO PROFILE**
Wellawatta, Colombo -6.
Nathan : +918375856926 (India) - Rishvina - 0778885903
Email : sarangan_411@yahoo.com
skype : europrofile

(சி-876)

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் தாமோதரலிங்கம்

### (பிரதம பொறியியலாளர்) B.M.I.C.H.



சுழிபுரம், பறாளாய் வீதியைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியா (கன்பரா)வை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தாமோதரலிங்கம் கடந்த (17.06.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் (பிரபல சட்டத்தரணி) - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், அருட்செல்வத்தின் அன்புக் கணவரும், தாமரைச்செல்வி (வைத்தியர் - ஆஸ்திரேலியா), கலைச்செல்வி (கணக் காளர் U.S.A ), சிவச்செல்வி (U.S.A), கதிர்காமலிங்கம் (கணினி பொறியியலாளர், ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத்தந்தையும், சிறிவர்த்தனகுமார் (Dr.ஆஸ்திரேலியா) சிவசபேஷன் ( கணக்காளர் U.S.A), சோமேஷ் (சத்திர சிகிச்சை நிபுணர் - U.S.A), இந்தி ராணி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனும், பிரவீன், காஜத்திரி, கௌரி, குருமயன், லவாணி, கீதாஞ்சலி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை சுப்பிரமணியம், தங்கம் வைத்திலிங்கம் மற்றும் தனலட்சுமி (யாழ். போதனா வைத்தியசாலை ஓய்வுபெற்ற தலைமை தாதியர் - தண்டிகை நாச்சியார்), வள்ளியம்மை (கனடா), முத்தீஸ்வரி (கனடா), காலஞ்சென்ற லங்காதேவி மற்றும் சேனாதிராசா (கனடா), காலஞ்சென்ற அமிர்தலிங்கம், இராஜசூரியர் மற்றும் செல்வபாக்கியம் (லண்டன்), கனகசூரியர் (ஓய்வுபெற்ற தலைமைப் பொறியியலாளர் S.L.T.) Dr. ஜெயபாக்கியம் (மலேசியா), Dr.குணாபாக்கியம், ராதாபாக்கியம் (மலேசியா), குமாரசூரியர் (உயர் சட்டத்தரணி), காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் மற்றும் முத்துலிங்கம் (கனடா), தர்மலிங்கம் (லண்டன்), காலஞ்சென்றவரான சிவகுமாரன் மற்றும் ஜெயகுமாரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தவச்செல்வம், திருச்செல்வம் முத்தையா மற்றும் கணேசமூர்த்தி, சுந்தரமூர்த்தி, பாஸ்கரமூர்த்தி, சிவஞானமூர்த்தி (இத்தாலி), முத்தீஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2012) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

பறாளாய் வீதி,
சுழிபுரம்.

(19717)(14.34)

## ST.JOHN'S COLLEGE, JAFFNA

### ANNUAL PRIZE GIVING 2012

**Saturday 30th June 2012 at 10.00 a.m.**

*Chief Guests:*

**The Lord Bishop**
**Rt.Revd.Shantha Francis**
**Bishop of Kurunagalle**
**&**
**Mrs. Priyatharshini Francis**

*Chairman:*

**Ven S.J. Jeyaveerasingan**
Archdeacon of Jaffna & Manager of the College

Parents, Old Boys & Well-wishers are cordially invited

**Principal, Staff & Students**

(சி/978) (6,9,10)

## கடைகள் விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் சகல வசதிகளுடன் கூடிய இரண்டு கடைகள் விற்பனைக்குண்டு.

(19719) (14.34)

தொடர்பு - 0770652379

## லொறி விற்பனைக்கு

L C x x x x தொடரிலக்கமுடைய Ten wheel அசோக் லேடண்ட் லொறி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 7716 243

(சி/977) (45.6.9)

## படிவம்

2013ஆம் ஆண்டு தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆள்சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் விற்பனைக்கு உண்டு.

**பாரதி பதிப்பகம்,**
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. இல. 021 222 3081

(சி-979)(6.3.)

## மரண அறிவித்தல்

### திருமதி மனோன்மணி செல்வராஜா



இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி செல்வராஜா நேற்று (23.06.2012) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்லாச்சி தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற செல்வராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளையின் அருமைச்சகோதரியும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - இராசம்மா தம்பதியரின் அருமை மருமகளும், சண்முகராஜ் (கனடா), விமல்ராஜ், கிரிசாந்தி (சுவீடன்), தர்மினி காலஞ்சென்ற பத்மராஜ் ஆகியோரின் அன்புத்தாயும், அமலேஸ்வரி, பஞ்சேஸ்மலர், சதானந்தபோஸ், விக்கினேஸ்வரன் (ஆசிரியர்) ஆகியோரின் மாமியும், ஜெனிற்றா, நிமேகா, ரஜீவன், தர்சிகா, அருட்செல்வி, கஜானன், லஜிதன், தர்சாளினி, நிறோஜா, சொரூபி, அபிராமி, சாயிறூபினி ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கருவேற்புலம் வீதி,
(கோணவளை வீதி)
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

**தகவல்: குடும்பத்தினர்**

(19716)(6-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வடமராட்சிக் கல்வி வலயத்தில் நடைபெற்ற விஞ்ஞான தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மற்றும் விருந்தினர்கள் வரவேற்கப் படுகின்றனர். சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார் உரையாற்றுகின்றார். (ம-190)





காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய உயர்தர மாணவர் மன்ற வருடாந்த ஒன்று கூடலும் 'நதி' சஞ்சிகை வெளியீட்டு விழாவும் அண்மையில் இடம் பெற்றன. யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார். 'நதி' என்ற சஞ்சிகையை அதிபர் பொன். சிவானந்தராஜா வெளியிட்டு வைக்க பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணசராஜா முதற்பிரதியை பெற்றுக் கொள்கிறார். (ம-250)




விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்துடன் இணைந்து கோண்டாவில் பொதுநூலகம் நடத்திய "வாசிப்பின் மேம்படுத்தல்" தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நூலக மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் நூலக வாசகர் வட்ட மாணவர்களும் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தைச் சேர்ந்த திருமதி சாந்தி சச்சிதானம் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் ஆலோசனை கருத்துரைகளை வழங்கினர். (ம-14)



யு.என்.டிபி நிறுவனத்தின் முன்னேற்றத்துக்கான சமூகம் திட்டத்தின் கீழ் முள்ளி கிராமத்தில் கலைஒளி ச.ச. நிலையமும் ஆனைக்கோட்டை மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து மக்கள் பங்களிப்புடன் முள்ளி கிராமத்தின் வாய்க்கால் கட்டுமாணப் பணிகள் இடம்பெறுகின்றன. (ம-100)




ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலய பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்துள்ளனர். (ம)




சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 33 ஆவது பூர்த்தி விழா கடந்த 19 ஆம் திகதி கழக அலுவலகத்தில் இடம்பெற்றபோது கழகத்தின் ஸ்தாப உறுப்பினர் லயன் சி.கா.நவரத்தினத்துக்கு கழக சிரேஷ்ட உறுப்பினர் லயன் கே.வி.முத்துக்குமாரசாமி பாராட்டுப் பத்திரம் வழங்குகிறார். அருகில் கழகத் தலைவர் லயன் கே.பிரதீபன் உள்ளார். (ம-9)



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி உயர்தர மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிக் கருத்தரங்கு கல்லூரி மண்டபத்தில் அண்மையில் உள்ளகப் பயிற்சி ஆசிரிய மாணவன் சி.சிவசீலன் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பி.தனபாலன் கருத்துரை வழங்குகிறார். (ம-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சதுரங்கத்தில் யாழ். அணிகள் சம்பியன்

வவுனியா, ஜூன் 24

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாகாண மட்ட சதுரங்கப் போட்டிகளில் அனைத்துப் பிரிவுகளிலும் யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளே வெற்றிபெற்றுச் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் போட்டிகள் கடந்த புதன்கிழமை மன்னார் சித்தி விநாயகர் கல்லூரியில் நடைபெற்றன. இதன் போதே யாழ். மாவட்டப் பாடசாலைகள் சதுரங்கத்தில் சிறப்பாக ஆடி இந்தச் சாதனையை நிகழ்த்தின.



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வீரர்கள்



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை வீராங்கனைகள்

15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி, யாழ்.இந்துக் கல்லூரி அணியைத் தோற்கடித்து சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. இப்பிரிவில் மூன்றாம் இடத்தை கிளிநொச்சி மகா வித்தியாலய அணி பெற்றுக் கொண்டது.

19 வயது ஆண்களுக்கான போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும் யாழ்.இந்துக் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன. இதில் ஹாட்லிக் கல்லூரி அணி, யாழ். இந்துக் கல்லூரி அணியை வெற்றிகொண்டு சம்பியனாகியது. மூன்றாம்இடத்தைதெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி பெற்றுக்கொண்டது.

15 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும் மோதின. இதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி சம்பியனாகத் தெரிவானது. மூன்றாம் இடத்தை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அணி பெற்றுக்கொண்டது.

19 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியைத் தோற்கடித்து சம்பியனாகத் தெரிவானது. மூன்றாம் இடத்தை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி பெற்றுக் கொண்டது.

(ங-8-86-400)

# வீழ்ந்தது யாழ். அணி; சம்பியன் மன்னாரிடம்



யாழ்ப்பாணம், ஜூன் 24

வட மாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்டங்களுக்கு இடையே நடத்தும் ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டி கடந்த சனிக்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் ஆண்கள் பிரிவில் மன்னார் மாவட்ட அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. இறுதிப் போட்டியில் மன்னார் மாவட்ட அணியை எதிர்த்து யாழ். மாவட்ட அணி மோதிக் கொண்டது.

ஆட்டம் ஆரம்பமாகியது முதல் இரு அணியினரும் தத் தமது அணிக்கான கோல்களைப் பெற வேண்டு என்ற நோக்கோடு எதிர் அணியினருடைய கோல்க் கம்பத்தை நோக்கி பந்தை நகர்த்துவதவில் குறியாக இருந்தனர்.

இதன் போது மன்னார் மாவட்ட அணியினர் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொண்டனர்.

இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. யாழ். மாவட்ட அணியினர் கோல்கள் பெறுவதற்காக பல முயற்சிகள் மேற்கொண்ட போதும் அவற்றை மன்னார் மாவட்ட வீரர்கள் தடுத்தாடினர்.

**முதல்முறையாக மாகாண ரீதியில் மன்னார் மாவட்ட அணி சம்பியனாகி தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளது.**

ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்ட போது மன்னார் மாவட்ட அணியினர் ஒரு கோலை அடித்து முன்னிலையில் இருந்தனர்.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணியினரும் மிகுந்த உற்சகத்தோடு களம் இறங்கியதால் ஆட்டத்தின் வேகம் அதிகரித்துக் காணப்பட்டது.

இரண்டு அணியினரும் கோல்கள் பெற பல முயற்சிகள் மேற்கொண்ட போதும் அவை கைகூடவில்லை.

இதனால் ஆட்ட முடிவில் மன்னார் மாவட்ட அணியினர் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி தேசிய மட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றனர். (ங-23)

# 'சமபோஷ' கிண்ணம் சுந்தரபுரம் சரஸ்வதியிடம்







வவுனியா, ஜூன் 24

வவுனியா மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட "சமபோஷ" வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம் சம்பியனாகியது.

வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 13 வயதுப் பிரிவில் 7 அணிகள் பங்குபற்றின.

ஒவ்வொரு அணியும் மற்றைய அணியுடன் மோதும் வகையில் லீக் சுற்றுமுறையில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம் சம்பியனாகியது.

இந்தப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை விருந்தினராகக் கலந்துகொண்ட நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய அதிபர் எஸ். அமுதலிங்கம் வழங்கிக் கௌரவித்தார்.

இதேவேளை இந்தப் போட்டியில் வெற்றிபெற்ற சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம், மன்னார் நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ள மாவட்டங்களுக்கு இடையிலான போட்டியில் மன்னார் அரிப்பு றோ.க.த.க. வித்தியாலயத்துடன் மோதவுள்ளது. (ங-400)

# வெற்றி யமாலியாவுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 24

திருகோணமலை உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்திய 5பேர் பங்குபற்றிய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் யமாலியா விளையாட்டுக் கழக அணி சம்பியன் ஆனது.

அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யமாலியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இதில் யமாலியா விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. இந்த நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளரும் திருகோணமலை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் தலைவருமான உபாலி ஏவகே கலந்து கொண்டார்.

(ங-23)

# சோடியாவை வென்றது ஸ்பென்ஸ்

திருகோணமலை மாவட்டக் கிரிக்கெட் சங்கம் நடத்திய மாவட்ட கிரிக்கெட் கழகங்கள் மற்றும் பாடசாலைகளுக்கிடையிலான 50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட வன்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடரில் ஸ்பென்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் சோடியா விளையாட்டுக் கழகமும், ஸ்பென்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்பென்ஸ் அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களில் [illegible] இலக்குகளை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். இந்த அணியின் சார்பில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய கு.பிரசாத் 37 ஓட்டங்களையும், ஜோன்சன் 24 ஓட்டங்களையும் பெற்றனர். சோடியா விளையாட்டுக் கழகத்தின் பந்து வீச்சில் சஞ்சீவ 2 இலக்குகளை வீழ்த்தினார்.201 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலளிக்கத் தொடங்கிய சோடியா அணி வீரர்கள், ஸ்பென்ஸ் விளையாட்டுக் கழக அணியின் வேகப் பந்து வீச்சாளர் பிரதீபனின் துல்லியமான பந்துவீச்சுக்கு முகம் கொடுக்கமுடியாமல் ஆரம்பத்திலேயே இலக்குகளைப் பறிகொடுக்கத் தொடங்கினர். சோடியா அணியின் வீரர் கிருசாந் (30) தவிர வேறு யாரும் பெரிதாகப் பிரகாசிக்காத நிலையில் சோடியா அணி 36 வது பந்துப் பரிமாற்றத்தில் அனைத்து இலக்குகளையும் இழந்து 144 ஓட்டங்களை மட்டுமே பெற்று 56 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது. ஸ்பென்ஸ் அணியின் பந்துவீச்சில் பிரதீபன் 3 இலக்குகளையும், மதன் 2 இலக்குகளையும் வீழ்த்தியிருந்தனர்.

(ங-130)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திணறுகிறது பாகிஸ்தான்

சங்கா முதல் இன்னிங்ஸின் முடிவில்...



இலங்கையுடனான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த பாகிஸ்தான் அணி இலங்கையின் பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாது திணறுகின்றது. நேற்றைய இரண்டாவது நாளின் நிறைவில் பாகிஸ்தான் அணி 48 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து 'பலோ ஒன்' நிலையை எதிர்நோக்கியுள்ளது. முன்னதாக இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 472 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்ற பாகிஸ்தான் அணி, மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்கின்றது. முதலாவது டெஸ்ட் ஆட்டம் காலியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. முதலாம் நாள் ஆட்ட நிறைவில், டில்ஷான், சங்ககார ஆகியோரது சதத்தின் உதவியுடன் 300 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்திருந்தது. களத்தில் சங்ககார 111, ஜெயவர்தன 55 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தனர்.

நேற்றைய இரண்டாவது நாள் ஆட்டம் ஆரம்பமாகி சிறிது நேரத்திலேயே பாகிஸ்தான் அணி, சுழல் பந்து வீச்சாளர் அஜ்மலை பந்து வீச அழைத்தது. அஜ்மல் அழைக்கப்பட்ட இரண்டாவது பந்துப் பரிமாற்றத்திலேயே மஹேல ஜெயவர்தனவை 62 ஓட்டங்களுடன் வெளியேற்றினார். இதன் [illegible]ம் மூன்றாவது இலக்குக்காக 128 ஓட்டங்கள் வரையில் பகிரப்பட்ட இணைப்பாட்டம் தகர்க்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய சமரவீர நீண்ட நேரம் தாக்குப் பிடிக்கவில்லை. 6 ஓட்டங்களுடன் அஜ்மலின் பந்து வீச்சில் சரணாகதியாகி வெளியேறினார். தொடர்ந்து நுழைந்த மத்தியூஸ் ஓட்டமெதனையும் பெறாது முதலாவது பந்திலேயே ஆட்டமிழந்தார். அத்துடன் இலங்கை அணியின் முன்வரிசையின் ஐந்து இலக்குகளையும் அஜ்மல் கைப்பற்றினார். 335 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து இலங்கை அணி தடுமாறியபோதும் மறுமுனையில் சங்ககார நிலைத்து நின்று அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார்.



சங்ககார, பிரசன்ன ஜெயவர்தன இணைந்து ஆறாவது இலக்குக்காக சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். அஜ்மலின் 'ஹற்றிக்' வாய்ப்பை சங்ககார தகர்த்தார். தொடர்ந்து சங்கா சிறப்பாக ஆட இலங்கை அணி 400 ஓட்டங்களை எட்டியது. சங்ககார 312 பந்துகளில் 150 ஓட்டங்களைப் பெற்றார். 15 ஆவது தடவையாக 150 ஓட்டங்களை சங்ககார தாண்டினார். இதன் மூலம் 150 ஓட்டங்களை அதிக தடவைகள் பெற்ற சச்சின், லாரா, பொண்டிங் ஆகியோருடன் இணைந்து கொண்டார்.

இலங்கை அணி 411 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மழை குறுக்கீடு செய்தது. இதன் பின்னர் ஆட்டம் ஆரம்பமான முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த பிரசன்ன ஜெயவர்தன 48 ஓட்டங்களுடன் மொஹமட் ஹபீஸின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். ஆறாவது இலக்குக்காக சங்கா-பிரசன்ன ஜெயவர்தன இடையே 80 ஓட்டங்கள் பகிரப்பட்டது.

தொடர்ந்து கள்மிறங்கிய சுராஜ் ரந்தீவ் 8 ஓட்டங்களுடன் வெளியேறினார். சங்கா தனித்துப் போராடி இலங்கையின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்கப் போராடினார். இருப்பினும் குலசேகரா, ஹேரத், நுவான் ' பிரதீப் ஆகியோர் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்து சங்காவின் இரட்டைச் சத வாய்ப்பை பறித்தனர்.

இலங்கை அணி 153.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 472 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. சங்ககார ஆட்டமிழக்காது 199 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் அஜ்மல் 5, மொஹமட் ஹபீஸ் 3 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய பாகிஸ்தான் அணிக்கு, இலங்கை அணியின் பந்து வீச்சாளர்கள் சிம்ம சொப்பனமாக இருந்து மிரட்டினர். மொஹமட் ஹபீஸ், தௌபீக் உமர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். அணி 17 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தௌபீக் உமர் 9 ஓட்டங்களுடன் குலசேகராவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த அஷார் அலி முதலாவது பந்திலேயே பிரசன்ன ஜெயவர்தனவிடம் பிடி கொடுத்து வெளியேறினார். குலசேகராவின் 'ஹற்றிக்' வாய்ப்பை யுனிஸ்கான் தடுத்தார்.

இதன் பின்னர் மொஹமட் ஹபீஸ், யுனிஸ்கான் இணைந்து சிறிது நேரம் தடுப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களிடையே 26 ஓட்டங்களே இணைப்பாட்டமாகப் பகிரப்பட்டது. ஹபீஸ் 20 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ரந்தீவின் சுழலில் சிக்கி வெளியேறினார். தொடர்ந்து 'நைட் வோட்ச்மனாக' களமிறக்கப்பட்ட அஜ்மல் முதலாவது பந்திலேயே பரணவிதானவிடம் பிடி கொடுத்து வெளியேறினார். ரந்தீவின் 'ஹற்றிக்' வாய்ப்பை தொடர்ந்து நுழைந்த அஷாட் சபிக் தகர்த்தார். இருப்பினும் ஹேரத் வீசிய அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் ஓட்டமெதனையும் பெறாது சபிக் வெளியேற்றப்பட்டார். சபிக் ஆட்டமிழப்புடன் பாகிஸ்தான் அணி 44 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்திருந்தது.

நேற்றைய இரண்டாவது நாள் ஆட்டநிறைவில் 24 பந்துப் பரிமாற்றங்களை எதிர் கொண்டு பாகிஸ்தான் அணி 48 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்துள்ளது. யுனிஸ்கான் 15, மொஹமட் அயூப் 1 ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர். 'பலோஒன்' நிலையை தவிர்க்க பாகிஸ்தான் அணி இன்னமும் 224 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (5)

## அம்பாறை வாசியான சுற்றுலாப் பயணி யாழ். நகரில் போதைவஸ்துடன் கைது

அம்பாறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த முஸ்லிம் சுற்றுலாப் பயணிகளில் ஒருவரிடம் இருந்து போதைப் பொருள் பைக்கற்றை மீட்டதாகத் தெரிவித்து யாழ்.பொலிஸார் அவரைக் கைதுசெய்துள்ளனர்

அந்தச் சந்தேக நபரை நாளை மறுதினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு உத்தரவிட்டுள்ளார்.

சுமார் 45 பேர் கொண்ட குழுவினரே விசேட பஸ் ஒன்றில் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர். அவர்களில் நான்கு பேர் சந்தேகத்துக்கு இடமான முறையில் நிற்பதை அவதானித்த பொலிஸார் அவர்களை விசாரிக்க அணுக தப்பி ஓட முற்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் மட்டும் பொலிஸாரிடம் மாட்டியுள்ளனர்.

## இரவு நேரத்தில் காத்திருக்கும் பெற்றோர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாணப் பகுதியில் தனியார் நிறுவனங்களில் பெண் பிள்ளைகள் இரவு 8 மணி வரை கடமையாற்றுவதால் பெற்றோர் வீதிகளில் காத்திருக்க வேண்டிய நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் எந்தப் பிரதேசத்தில் இரவு நேரத்தில் மின்தடை ஏற்படும் என்பது தெரியாத நிலையில் வாழும் குடும்பங்கள் தமது பெண் பிள்ளைகளை வேலைக்கு அனுப்பிவிட்டு இரவு வேளையில் பஸ் நிலையங்களில் காத்திருக்கின்றனர்.

தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பெண் பிள்ளைகள் மாலை 5 மணியுடன் கடமையிலிருந்து விடுவிக்கவேண்டும் என்ற விதிமுறை உள்ளபோதிலும் சில நிறுவனங்கள் இரவு 8 மணிவரை கடமையாற்ற நிர்ப்பந்திப்பதால் தூர இடங்களுக்குச் செல்லும் பெண் பிள்ளைகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மாலை 5 மணியுடன் வீடு செல்வதற்கு அனுமதிக்குமாறு தனியார் நிறுவன இயக்குநர்களை, பெண் பிள்ளைகள் கோரினாலும் அவர்கள் அனுமதிப்பதில்லை. அத்துடன் அவ்வாறு நேரத்துடன் செல்ல வேண்டுமாயின் வேலைக்கு வரவேண்டாம் என்று கடும் தொனியில் எச்சரிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ந-8)

மேடையில் இருந்து திரைக்கு
யாழ்ப்பாணத்தில் முதல்முறையாக...
6 மாத காலம்
சனி,
ஞாயிறு
வகுப்புகள்
நடிப்பு மற்றும் குறும்படம்
தயாரிப்பு பயிற்சி
மேடை நடிப்பு
திரை நடிப்பு
எழுத்துரு
கமெரா
எடிட்டிங்
நாடகம் மற்றும் குறுந்திரைப்படத்துறையில் பட்டறிவும் தேர்ச்சியும் உள்ளவர்களால் நடத்தப்படும்
பயிற்சி முடிவில், ஒவ்வொருவரும் தயாரிக்கும் படங்கள், ஒழுங்குபடுத்தப்படும் திரைப்பட விழா ஒன்றில் திரையிடப்படும்.
ACTIVE THEATER MOVEMENT (in front of palaly teachers training college) 'Arulagam', Adiyapatham Road, Thirunelveli, Jaffna
அனுமதி மட்டுப்பட்டது. முடிவு திகதி: 30/0[illegible]
[illegible]213216222, 0773112692, activetheatre@gmail.com
Indra graphics, 0778731754

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Engineering-USA** 4,300.Rs Per Module | **BIT Degree** 4,800.Rs Per Semester | **Diploma** 1,000.Rs Per Course Discount | **CIMA** UK 10,000.Rs Per Level Discount

A/L 2012 பரீட்சைக்கு தோற்றுவோரும் கட்டணம் இன்றி விண்ணப்பிக்கலாம்
SMS Your name & Course to 775520940 & Get Schol.
Qualified Lectures panel, 12 Years Experience
**MCAI CAMPUS** Supported by Jaffna Computer Society
கல்வியங்காட்டில் 243,Adiyapatham Road
Bus Route 750 / 751

## 25.06.2012 திங்கள் முதல்

**சு**த்தமான **சு**வையான **சு**காதாரமான
**புரியாணி வகைகள்**
யாழ்நகரில்
**Virunthu @ Yarl Pardy**
Tel : 021 222 6868, 0759 360 370, 0759 232 967
49,51, Amman Road, Nallur, Jaffna
(சி-982)

## வேலை ஆள்கள் தேவை

**ஹோட்டல் வேலை ஆள்கள்**
**முன் அனுபவமுள்ள :**
றூம் சேர்விஸ், வெயிற்றர், பான்றிமரன் (Pantry) , பார் மான் (Bar man) மற்றும் ஆகக்குறைந்தது 3 வருட அனுபவமுள்ள எக்கவுண்டன்ட் (Accountant) உடனடியாகத் தேவை.
**அனுபவமுள்ளவர்கள் மட்டும் தொடர்புகொள்க**
**தொடர்பு : 077 3366446, 021 2285318**
(19267)(6-8)

## நீங்கள் ஓர் ஆங்கில ஆசிரியரா/ ஆங்கில ஆசிரியராக விரும்புபவரா?

எமது நிறுவன ஆங்கில பேச்சுக்கலை (Elocution) நிகழ்ச்சித்திட்டத்தினை விரிவுபடுத்தும் நோக்கில் பல்வேறுபட்ட பிரதேசங்களிலிருந்து ஆர்வமுடையோரை வரவேற்கின்றோம்.
நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவாவோருக்கு 3 மாத காலப் பயிற்சின் பின்னர் மதிப்பீட்டின் மூலம் வேலைக்கான உத்தரவாதம் வழங்கப்படும்.
**விண்ணப்ப முடிவு திகதி : 30.06.2012**
**Spectra Skills**
No:19, Stanley Road, (People's Bank 2nd Floor) Jaffna.
**T.P: 0212221422 / 1423**
E-mail:jaffna@spectraskills.com
(சி-976)

ஸ்ரீ ராமஜெயம்
## ஸ்ரீராம் Gym



15 ஆவது ஆண்டில் வெற்றிகரமாக காலடி எடுத்து வைக்கும் ஸ்ரீராம் ஜிம் பிரத்தியேகமான முறையில் பெண்களுக்கான உடற் பயிற்சிக் கூடத்தை ஆரம்பித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம். பெண்களுக்கான பயிற்சிக் கூடம் மருத்துவ கண்காணிப்பின் கீழ் அவர்களின் உடல் நிலைக்கேற்ப பயிற்சி வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.
ஸ்ரீராம் Gym
லதுசன் பிளாசா, K.K.S. வீதி, இணுவில். 0217903060
(19718) (14.10)

## முக்கிய அறிவித்தல்

கே.கே.எஸ். வீதி அகலிப்புப்பணியை முன்னிட்டு ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் ஆகிய எமது நிறுவனம் நாளை (25.06.2012) ஆம் திகதியிலிருந்து எமது நிறுவனத்தின் பின்புற முகவரியான செம்மா தெரு வீதி, யாழ்ப்பாணம் (ஜும்மா பள்ளிவாசல் வீதி) எனும் முகவரியில் தற்காலிமாக இயங்கும். வீதி அகலிப்பு பணி நிறைவடைந்ததும் வழமைபோல் கே.கே.எஸ். வீதியின் முன்பகுதியில் புதுப்பொலிவுடன் ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் நிறுவனம் இயங்கும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். முன்னர் எமது செய்தி தவறுதலாக புரிந்துகொள்ளப்பட்டதற்கு வருந்துகின்றோம். எமது நிறுவனம் முன்பகுதியிலிருந்து அதே கட்டடத்தின் பின் பகுதிக்கே மாற்றம் பெறுகிறது என்பதனை வாடிக்கையாளர் கவனத்திற் கொள்ளவும்.
தொடர்பு : 212, கே.கே.எஸ். வீதி
T.P : 021 2225542, 021 5671527
(சி/971)(6-8)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு, பலாலி வீதிக்கும் இராச வீதிக்கும் இடையில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(19700)(6.34)
தொடர்பு : 0729636411, 001 647 427 8855

DIALOG இன் விசேட சலுகை
* பகேஜ்
* இன்ரநெற் / டொங்கிள்
* CDMA
* DTV

Dialog
தொடர்புகளுக்கு: N. Jeyabalan
0773335999, 0778171816
(சி-981)(6.34)

## Intermatrix Pvt. Ltd.

**IT** துறைக்கான வேலைவாய்ப்புக்கள்

### Web Developers
- Joomla, PHP, MySQL
- Search Engine Optimization
- Social tools marketing
- Word processing Software

Looking for individuals that are:
- Self-motivated
- hard-working
- Committed

### Tamil Radio Hosts
- தேர்ந்த தமிழ் அறிவு
- தெளிவான குரல் வளம்
- சிரிக்க வைக்கும் தன்மை
- வானொலி துறையில் நாட்டம்

### Salespeople (Telemarketing)
- தொலைபேசி மூலம் விளம்பரங்கள் சேகரித்தல்
- நேரில் சென்று விளம்பரங்கள் சேகரித்தல்
- Marketing Experience & Computer knowledge

E-Mail: janakan884@gmail.com
m.raguwaran@gmail.com
T.P: 021 222 9901
Mobile: 077 3464739 / 0771129329
(சி-974)

உங்கள் வியாபாரக் கனவு நனவாக
**வின்றிச் ஐஸ்கிறீம் இயந்திரம்**
(சி-877)



**50,000/- மேல் மாத வருமானம்**
- சோயா வெனிலா சொக்லட் சுவைகள்
- நவீன தொழில் நுட்பம்
- இலவச பயிற்சி
- விற்பனையின் பின் சேவை

1 வருட உத்தரவாதம்
விலை ரூ 99,000/- இல் இருந்து புத்தம் புதிய
**WINRICH INTERNATIONAL (PVT) LTD.**
(Member of Pluss int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.
தமிழில் தகவல்பெற (யோகேஸ்)
Hot Line: 077 106 6902, 077 3918870

## ACCOUNTING SYSTEMS AND MANAGEMENT CONSULTANTS (PVT) LTD

Established in 1980, Head office in Colombo, Branch in Jaffna provide following services.

1. Accounting - Manual and on Computer
2. Taxation Advisers - (INCOME TAX, VAT, NBT, ESC)
3. Secretarial Services - (Including Formation of Limited Liabilities Companies)

**Head Office:**
**No. 40, Ridgeway Place, Colombo - 04. Sri Lanka.**
**Telephone : 0112506194**
**Fax : 0112506194**
**E-mail : variam@sltnet.lk.**

**Branch:**
**No. 245, Kasthuriar Road, Jaffna. Sri Lanka.**
**Telephone : 0212225372**
**E-mail : variam@sltnet.lk.**
(சி-941)(6.34)

## காணி விற்பனைக்கு

கைதடி வடக்கு கைதடியில் ஐந்து வீட்டுத்திட்ட வீடுகளின் பின்புறமாகவும், சச்சிதானந்தா ஆச்சிரமத்துக்கு அருகாமையிலும் 10 பரப்புக் காணி (3 வீடுகள் மற்றும் அரிசி ஆலை அமைப்பதற்கும் உகந்தது) உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு : 0771024807, 0775052619
(19674)(6.34)

## BIT

Bachelor of Information Technology (UCSC)



# 50% DISCOUNT

**For all UNIVERSITY STUDENTS**
**Including all the Semesters**
RESERVE YOUR SEAT NOW!!!
**ESOFT** ESOFT Computer Studies [Pvt] Ltd
17/1,Brown Road,Jaffna.
Tel : 021 222 4142
SMS Your Details
077 390 5611
(சி-966)

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

### சிறுவர் பராமரிப்பாளர் வெற்றிடங்கள் (பெண்கள்)

சர்வதேச SOS சிறுவர் கிராமத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் SOS சிறுவர் கிராமத்திற்கு சிறுவர்களை குடும்ப சூழ்நிலையில் பராமரிப்பதற்கு வெற்றிடங்கள் கோரப்படுகின்றன. க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், திருமணமாகாத 30-40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவர். தகுதியானவர்கள் கீழ்வரும் முகவரியுடனோதொலைபேசி மூலமோ தொடர்பு கொண்டு எதிர்வரும் 30.06.2012 புதன்கிழமைக்கு முன் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

தொடர்புகொள்ளவேண்டியமுகவரி :

திரு.அருச்சுணன் சுவாமிநாதன்
உதவிப் பணிப்பாளர்
எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமம்
இல: 276,கனகரட்ணம் வீதி
நல்லூர்.

தொலைபேசி இல : 077-2366106,077-3116602,077-0337959
மின்னஞ்சல் : arjunan.swaminathan@soscvsrilanka.org
(19627)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணெய்களின் இயற்கை நற்குணங்கள்



தற்போதைய நவீன உலகில் பெரும்பாலான வீடுகளில் சமைப்பதற்குத் தவிர வேறு எதற்காகவும் எண்ணெய் பயன்படுத்தப்படுவதில்லை.

இதன் காரணமாக ஆரோக்கியத்தில் பாதிப்பு ஏற்படுகிறது. பல்வேறு சருமப் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. உடலுக்கு குளிர்ச்சியும், சருமத்திற்கு பளபளப்பும் தருகிறது என்பதனாலேயே பண்டைய காலங்களில் எண்ணெய்க் குளியல் பரிந்துரைக்கப்பட்டது. இன்றைக்கும் ஆயுர்வேதத்தில் பல சிகிச்சைகளுக்கு எண்ணெய் வகைகள் பரிந்துரை செய்யப்படுகின்றன.

ஒலிவ், எள், கடுகு, தேங்காய், பாதாம், சூரிய காந்தி, ஆமணக்கு முதலியவற்றில் இருந்து பிழிந்து எடுக்கப்படும் எண்ணெய் பல நூறு ஆண்டுகளாக பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாக எள் எண்ணெய், ஒலிவ் எண்ணெய், பாதாம் எண்ணெய் ஆகியவை மசாஜ் செய்யப் பயன்படுத்தப்படும் எண்ணெய்கள் ஆகும்.


## எண்ணெய் கதையின் உண்மை பொய்
## சரியான கொப்பறாவை தெரிந்துகொள்வோம்







நோய்க் கிருமிகள், பிராணிகளுடன் கலந்த தேங்காய் எண்ணெயை பாவித்து நோயாளிகளாக மாறுவோமா?



இவ் அறிவுறுத்தல் எமது நாட்டின் எமது மக்களை ஆரோக்கிமாக பாதுகாத்திட எடுத்திடும் ஒரு நடவடிக்கையாகும்.

# உலகில் நீளமான படகை உருவாக்கி சாதனை



அமெரிக்காவில் செயல்படும் பிரபல கட்டுமான நிறுவனம் தங்களது நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தையொட்டி 407 அடி 7 அங்குல நீளம் கொண்ட உலகின் மிகப்பெரிய படகைத் தயாரித்து, மைனி பிரிபோர்ட் ஏரியில் படகின் வெள்ளோட்டம் நடைபெற்றது.

இதுவே தற்போது உலகின் மிக நீளமான படகு எனக் கருதப்படுகிறது. இதற்கான அங்கீகாரம் கேட்டு கின்னஸ் உலக சாதனை நிறுவனத்தை அணுகி இருக்கிறார்கள்.

# தேங்காய் எண்ணெய்யை உணவில் குறைக்க வேண்டும்

கொழுப்பு அமிலம் இதில் நிறைந்திருக்கிறது. ஒற்றை நிறைவுறாக் கொழுப்பு அமிலம் மற்றும் பன்மை நிறைவுறாக் கொழுப்பு அமிலம் ஆகியவை மிகக் குறைந்த அளவிலேயே உள்ளன. எனவே, இந்த எண்ணெய்யை உணவில் குறைவாகத்தான் சேர்க்கவேண்டும். மழைக் காலத்தில் இந்த எண்ணெய் கட்டியாகி விடும்.

எனவே,உடல் குளிர்ச்சியாக இருக்கும்போது எண்ணெய் கட்டியாகி கொழுப்பாக உடலில் படிந்துவிடும். சாப்பிட்ட சத்துக்கள் உடம்பில் தங்காமல் மலத்துடன் வெளியேறுவதை மால் அப்சார்வசன் (mal absorvation) என்கிறோம்.

இந்தப் பிரச்சினை இருப்பவர்களுக்கும், கணையத்தில் பாதிப்பு இருப்பவர்களுக்கும் இந்த எண்ணெய்யை ஓரளவு மட்டுமே சேர்த்துக்கொள்ளலாம். இதய நோயாளிகள், உடல் பருமன் உள்ளவர்கள், நீரிழிவு நோயாளிகள் இந்த எண்ணெய்யைத் தவிர்ப்பது நல்லது.

# ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றி சாதனை படைத்த யோகாப் பயிற்சி



உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதில் சிறந்த கலையாகக் கருதப்படும் யோகாசனத்தை அடிப்படையாக் கொண்டு பிரமாண்டமான சாதனை ஒன்று நிகழ்த்தப்பட்டுள்ளது. அதாவது அமெரிக்காவிலுள்ள நியூயோர்க் டைம்ஸ் சதுர்க்கத்தில் இடம்பெற்ற யோகாசனப் பயிற்சி ஒன்றில் சுமார் 14,000 வரையான மக்கள் ஒரே நேரத்தில் பயனடைந்ததன் மூலம் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

ashok STEEL


உறுதித்தன்மையுடன் கூடிய தயாரிப்பு

## அசோக் முறுக்குக் கம்பிகள்
கட்டட நிர்மாணத்தின் மூலவுறுதி




375
இல.. 48, 8 மாடி, IBM கட்டிடம், நவம் மாவத்தை, கொழும்பு 02.
தொ. பேசி: 555 3215/8, 738 8940/3 தொலைநகல்: 231 4970 மின்னஞ்சல்: ashoksteel_ipl@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாணயமாற்றலில் காணப்படும் தளம்பல் நிலை காரணமாக தற்போது உறுதியான, நம்பகமான அதிக இலாபத்தினை தரும் முதலீடு ஒன்றை தெரிவு செய்வது சிரமமாகும். எனினும் சந்தன மரக்கட்டைகள் சர்வதேச சந்தையில் மிகவும் பெறுமதி வாய்ந்தவை என்பதுடன் அவற்றின் விலைகளும் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்தே செல்கின்றது

காடுகளை வர்த்தகரீதியில் முகாமைத்துவம் செய்யும் இலங்கையிலுள்ள முன்னனி தனியார் நிறுவனமான சதாஹரித ப்ளாட்டேஷன் இன்று, இப்பெறுமதிமிக்க முதலீட்டில் ஈடுபடும் வாய்ப்பை வழங்குகிறது. எனவே ஒரு தொகுதி சந்தன மரங்களை இன்று வாங்குகள் அவை வளர்ந்து முதிர்வடைந்தவுடன் அவற்றை மீண்டும் நிறுவனத்திற்கே விற்று எதிர்காலத்தில் அதிக இலாபத்தினை அனுபவியுங்கள். அதேவேளை நிலமும் உங்களுக்கே உரித்துடையதாக இருக்கும். இவ் வெற்றி – வெற்றி வாய்ப்பு சதாஹரிதவில் மாத்திரமே உண்டு.

## வரப்பிரசாதங்கள்

- சுற்றாடலுக்கு பாதிப்பில்லாத பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்பவாறான வரிகள் அற்ற இலாபத்தினை தரும் முதலீடு
- அதிக இலாபத்தினை தரும் முதலீடு
- சந்தன மரங்கள் அடங்கிய நிலத்தின் முழு உரிமம் உங்களுக்கே
- விலை நிலைப்படுத்துவதுடன் பரந்த காப்புறுதி
- மேலதிக செலவு இன்றி மரங்கள் நிறுவனத்தினால் பராமரிக்கப்படும்.
- விளைச்சலை உறுதிப்படுத்தும் 'பணம் திருப்பித்தரும்' எதிர்கால விற்பனை ஒப்பந்தம் எதிர்காலத்தினை பலப்படுத்தும்.
- காடுகள் பற்றிய நிபுணர்கள் ஆலோசனை சேவை
- முதிர்வின் பின்னர் நிலத்தில் மீண்டும் சந்தன மரங்கள் நடலாம் அல்லது வேறு ஒரு தேவைக்கான பயன்படுத்தலாம்.
- ஆய்வுகள் மற்றும் அபிவிருத்திகளை மேற்கொள்ளும் ISO 14001:2004 தரச்சான்றிதழை கொண்ட நிறுவனம்.

| காணியின் அளவு (பர்ச்சஸ்) | மரங்களின் எண்ணிக்கை | முதலீடு | எதிர்பார்க்கும் விளைச்சல் |
|---|---|---|---|
| 10 | 12 | 442,000 | 6,000,000 |
| 20 | 24 | 884,000 | 12,000,000 |
| 40 | 48 | 1,768,000 | 25,000,000 |
| 80 | 96 | 3,536,000 | 50,000,000 |
| 160 | 192 | 7,072,000 | 100,000,000 |

மரம் ஒன்றுக்கான விளைச்சல் உத்தரவாத தொகை ரூ. 250,000

கிரீன் லைன் 077 362 6230

www.sadaharitha.com
facebook.com/sadaharitha

ISO 14001 CERTIFIED BY CONTROL UNION

**Sadaharitha**
PLANTATIONS LIMITED

கூட்டுறவு தலைமை அலுவலகம்: 6ஏ, அல்பேர்ட் பிளேஸ், கொழும்பு 03, இலங்கை Tel: (+94 11) 523 4000 | E-mail: premierinfo@sadaharitha.com
பிரீமியர் குளோபல் சென்டர்: 57 டப்ள்யூ.ஏ.டீ இராமநாயக்க மாவத்தை கொழும்பு 02, இலங்கை Tel: (+94 11) 528 8000 | E-mail: premierglobal@sadaharitha.com
யாழ்ப்பாணம் ப்ரீமியர் சென்டர்: 320 பிரதான வீதி, யாழ்ப்பாணம். இலங்கை Tel: (+94 21) 567 3672 | E-mail: ram@sadaharitha.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடும் கிப்பன் குரங்குகள்



ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், சீனா, லாவோ, கம்போடியா மற்றும் வியட்நாம் போன்ற ஆசிய நாடுகளின் மழைக் காடுகளில் காணப்படும் கிப்பன் வகை குரங்குகள் பற்றி ஆய்வு மேற்கொண்டனர்.

பெரும்பாலும் மனிதனை ஒத்துக் காணப்படும் இந்த கிப்பன் குரங்குகள் தங்களுக்கென்று பாடல்கள் வைத்திருக்கின்றன. தனது இணையைக் கவரவும், எல்லைகளைப் பிறருக்குத் தெரியப்படுத்தவும், பிறரோடு தொடர்பு கொள்வதற்கும் என்று பல விடயங்களுக்கு பாடல்களைப் பயன்படுத்துவதை வழக்கமாக கொண்டுள்ளன. இதில் டூயட் பாடல்களும் அடங்கும்.

ஆய்வுக்கு 92 டூயட் பாடல்கள் உட்பட 400 பாடல் மாதிரிகளை சேகரித்தனர் ஆராய்ச்சியாளர்கள். பின்னர் அந்த பாடல்களை ஏறத்தாழ 53 வேறுபட்ட அலைவரிசைகளில் பிரித்து சோதனை செய்தனர். அதில் கம்போடியா, லாவோ மற்றும் வியட்நாம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கிப்பன்கள் ஒரே மாதிரியான டி.என்.ஏ. அமைப்பைக் கொண்டிருந்தன. மேலும் 4 ரகமான தனித்தன்மை வாய்ந்த பாடல்களை அவை பாடுவதும் தெரிய வந்தது. குறிப்பாக வடக்கு வியட்நாம், சீனா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கிப்பன்கள், தெற்குப் பகுதியைச் சேர்ந்த கிப்பன்களைக் காட்டிலும் பல வகைகளில் வேறுபட்டிருப்பது ஆய்வின் முடிவில் தெரியவந்துள்ளது.




# தொழிலுக்கு அதிகநேரம் ஒதுக்குவதால் குடும்ப, சமூக வாழ்க்கையில் இழப்பா?.



பலர் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகத் தொழில்புரியும் இடங்களில் கடுமையாக உழைப்பதிலே கவனம் செலுத்திக் கொண்டிருப்பதால் அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கைக்குப் போதிய முக்கியத்துவம் வழங்க மறுத்துவிடுகின்றனர்.

வாழ்க்கைக்குப் பணம் தேவைதான் என்றாலும் பணத்திலேயே அல்லது தொழில் ரீதியான பணியிலேயே குறியாக இருந்தால் அவர்களின் குடும்ப, சமூக வாழ்க்கை ஆட்டம் காணலாம்.

ஒருவர் உழைக்கக்கூடிய பருவத்தில் குடும்ப வாழ்க்கைக்காக அல்லது வாழ்க்கைக்கா அதிகம் முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்பது குறித்து வாதப் பிரதிவாதங்கள் உள்ளன.

''குறிப்பிட்ட வயதிலேயே உழைக்க முடியும். அதனால் உழைக்கும் பருவத்தில் உழைப்பிற்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும்'' எனச் சிலர் கூறுகின்றனர்.

ஆனால் மற்றொரு தரப்பினர் வேலையைவிட குடும்ப சமூக வாழ்க்கை முக்கியம் என்கின்றனர். தமது கருத்தை வலுப்படுத்துவதற்கு அவர்கள் சுட்டிக் காட்டும் விடயங்கள் சில பின்வருமாறு:-

★ வேலையென்பது ஒருபோதும் முடிவுறும் செயன்முறை அல்ல. உங்களால் எப்போதுமே உங்களது வேலைகளை செய்து முடிக்க முடியாது.

★ உங்கள் வாடிக்கையாளரின் நலன் என்பது உங்கள் குடும்பத்தின் நலன்களை விட முக்கியமானதல்ல.

★ நீங்கள் வாழ்க்கையில் தோல்வியைத் தழுவும் போது கைகொடுக்கும் உங்களுக்குக் கைகொடுக்கப்போவது உங்களது முதலாளியோ தொழிலாளியோ அல்ல. ஆனால், குடும்பத்தினரும் நண்பர்களும் உதவுவார்கள்.

★ வாழ்க்கை என்பது அலுவலகத்துக்குத் தினம் வருவதும், வீட்டிற்குச் செல்வதும் நித்திரை கொள்வதும் அல்ல. ஒரு வாழ்க்கையில் இதைவிட அதிகமான விடயங்கள் உள்ளன. சமூகமயமாகுவதற்கு, கேளிக்கை பொழுது போக்குகளில் ஈடுபடுவதற்கு, உடற்பயிற்சிக்கு, ஓய்வுக்கு என உங்களுக்கு நேரம் வேண்டும். உங்கள் வாழ்க்கையை அர்த்தமற்றதாக மாற்றிக்கொள்ளாதீர்கள்.

★ ஒரு நபர் கண்விழித்து இரவு முழுதும் வேலை செய்பவராக இருந்தால் அவர் கடுமையாக உழைப்பவரென்று அர்த்தமில்லை. அவர் தனது வேலையை குறிப்பிட்ட நேர வரையறையில் திட்டமிட்டு சரியாக நிர்வகித்துக்கொள்ள தெரியவில்லை என்று அர்த்தம். அவர் சொந்த மற்றும் சமூக வாழ்க்கை என்று எதுவுமில்லாத தோல்வியடைந்த ஒருவரென்று அர்த்தம்.

★ நீங்கள் கடுமையாக படித்ததும் வாழ்க்கையில் போராடியதும் இயந்திரமயமான அர்த்தமற்ற ஒரு வாழ்க்கைக்காக அல்ல.

நாம் அதிக நேரத்தை ஒதுக்க வேண்டியது உழைப்புக்கா? அல்லது குடும்பத்துக்கா?







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HDFC வங்கி

HDFC BANK
The Housing Bank...

இல:127,K.K.S.வீதி,யாழ்ப்பாணம்

நிதித்திட்டமிடல் அமைச்சின் கீழ் இயங்கும் வங்கி

**நிலையானவைப்புக்கு கவர்ச்சியான வட்டிவீதம்**

| 01 மாதத்திற்கு | 03 மாதத்திற்கு | 06 மாதத்திற்கு | 12 மாதத்திற்கு | 12 மாதத்திற்கு |
|---|---|---|---|---|
| 11.5% | 13.5% | 14% | 14.5% | 15% சிரேஷ்ட பிரஜைகளுக்கு |

**கூட்டு வீடமைப்பு நிதி ஓய்வூதியத் திட்டம்**
(சேமிப்புக்கணக்கு)
நிரந்தர வைப்புக்கு நிகரான வட்டி

12.75%AER

**தங்கக்கடன் (அடகுசேவை)**
குறைந்தவட்டியில் கூடியதொகை:- மாதத்துக்கு 1.5%

**சேமிப்புக் கணக்கு –உயர் வட்டிவீதம்**
சிறுவர் சேமிப்புக்கணக்கு -உயர் வட்டி மற்றும் பெறுமதிமிக்க பரிசில்கள்.

**அன்றாடசேமிப்புக் கடன்திட்டம்**
(Palm Top Service)

EPF கடன் சேவை.

வீடமைப்புக்கடன் சேவை.

பாதுகாப்புப்பெட்டகசேவை (Safety Locker)
- குறைந்தவாடகை - வருடத்துக்கு ரூ.1500/=

இன்றே நாடுங்கள் அதி உயர் பயனைப்பெறுங்கள்

HDFC வங்கி

021 2219283 / 021 2219284 / 0773657072 / 0775636126




(19240)(2,6,9)


# முதலாம் ஆண்டு நீங்காத நினைவுடன்

தோற்றம்
1994-06-16

மறைவு
2011-06-06



## செல்வி வேலன் (செல்வன்) தாட்சாயினி

தரணியிலே பிறந்த தாட்சாயினி
உன்னைச் சுமந்த கருவறை
உலைக் களம் போல் கொதிக்குதம்மா
உன் உடன் பிறப்புகளோ
உணர்வின்றி வாழ்கின்றனர்
கண்ணே எம் கனியமுதே
காவியத்தின் தமிழ் அழகே
எங்கே எமைத் தவிக்க விட்டு
எட்டாத இடம் தேடி ஓடினாய்
அனைவருக்கும் ஒரு மகளாய்
அவதரித்தாய் கரவையிலே
அவனியிலே தனிக்க விட்டு
அலைகின்றோம் நாம் இங்கு
பாரினில் நீ வாழ
பக்குவமாய் பல செல்வங்கள்
பகலிரவாய் நாம் தேடி - உன்னை
பார்த்து மகிழும் வேளையிலே
ஊரும் உறவுகளும் கதறியழ
உன்னை அறியாமல் எங்கு சென்றாய்.

வளர்மதி,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி,
0779057793.

உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்,

[18667][6,9,10]

# முடிவில்லா துயரலைகளுடன் ௨ஆம் ஆண்டு நினைவில்

மண்ணில் 19★03★1967 விண்ணில் 17★06★2010

## அமரர் கணேசமூர்த்தி சசிதரன் [சசி]



திதி : பஞ்சமி [24.06.2012]

ஈராண்டு சென்றாலும் ஈரவிழி காயவில்லை
உம் முகம் பார்க்காது உள்ளம் வாடுதையா
இனி எங்கு காண்போம் என் சொல்லி அழைப்போம்
வார்த்தை ஏதுமில்லை எம் துயர் துடைக்க
தேற்றுவார் யாருமின்றி தேம்பியழுகின்றோம்
தேடுகின்றன விழியெல்லாம் உமைக் காணமுடியவில்லை
உங்கள் வரவினிச் சாத்தியமில்லை என்ற போதும்
மறு ஜென்மம் எனும் சொல்லை மனதார நம்புகின்றோம்
எம்மோடு வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம் மனதில் உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்.......

பேக்கரி லேன்,
சீரணி, சண்டிலிப்பாய்.

குடும்பத்தினர்

[19675][6-8-9]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணெய் கதையின் உண்மை பொய்
சரியான தேங்காய் எண்ணெய் மற்றும் குக்கிங் ஓய்ல் பற்றி அறிந்துகொள்வோம்

இயற்கையான முறையில் சூடேற்றப்படாமல் (Cold Process) தயாரிக்கப்படும் மரீனா வேஜின் கொகனட் ஓய்ல் (Marina Virgin Coconut Oil) உடலுக்கு மிகவும் ஆரோக்கியமான உற்பத்தியாகும்.

உயர் தரம் கொண்ட கொப்பறாக்களைப் பாவித்து இயற்கையான சுத்திகரிப்பு முறைக்கு உட்படுத்தி அதி நவீன தொழில்நுட்பம் கொண்டு தயாரிக்கப்படும் மரீனா தூய தேங்காய் எண்ணெயில் கொஸ்டிக் சோடா போன்ற உடலுக்கு தீங்கு விளைவிக்கும் இரசாயன திரவங்கள் எதுவும் கிடையாது.

இலங்கையில் தயாரிக்கப்படும் பாம் எண்ணெய் இயற்கை சுத்திகரிப்பிற்கு (Physically Refined) உள்ளாக்கப்பட்டு அதி நவீன தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்படும் மரீனா குக்கிங் ஒயில் மற்றும் மரீனா வெஜிடபல் நெய் உட்பட பேக்கரி தயாரிப்புகள் யாவும் வாடிக்கையாளர்களுக்கு 100% உத்தரவாதத்துடன் வழங்கப்படுகிறது.

எமது பேக்கரி, ஹோட்டல் மற்றும் தொழிற்சாலைகளுக்காக மரீனா மாஜரீன், Bread Fat, Bun Compound போன்ற சர்வதேச சந்தைகளுக்குச் செல்கின்ற தயாரிப்புகளையும் எமது தேசிய வியாபார சந்தைக்கும் வழங்குவதோடு இந்த அனைத்து உற்பத்திகளையும் உயர் தரப் பராமரிப்புடனும் சர்வதேச ISO 22000, HACCP, HALAAL, GMP தரச்சான்றிதழ்களுடனும்

பாவனையாளர்களின் தேவைக்கேற்ப மரீனா வியாபார நாமத்தில் Sunflower, Soya Bean போன்ற எண்ணெய் வகைகளை சந்தையில் தற்போது பெற்றுக்கொள்ளலாம்.

சரியான முறையில் தயாராகும் மரீனா எண்ணெய்

சரியான முறையில் தயாராகும் Marina எண்ணெய் வகைகளை பாவனை செய்து நோயற்ற வாழ்வை அனுபவித்திடுங்கள்.

www.marinacookingoil.com

Marina

CPC

எமது தன்மையை பாதுகாப்பதோடு நோயற்ற சக்தி நிறைந்த நாட்டுக்கு Marina தயாரிப்புகள்.

C1853

# கோடையில் எது சூடு? எது குளிர்ச்சி?



தயிர் சூடு ஆனால், மோர் குளிர்ச்சி. மாம்பழம் சூடு ஆனால், மாம்பழ மில்க் ஷேக் குளிர்ச்சி. பப்பாளியும் பலாவும் வெயில் நேரத்துல வேண்டவே வேண் டாம்.

உணவு விடயத்தில் தமக்குத் தெரிந்ததையும், தெரியாததையும் சேர்த்துக் குழப்ப, இப்படி சில தவறான நம்பிக்கைகள் மக்கள் மத்தியில் எப் போதும் இருப்பதுண்டு. ஒருவருக்குப் பிடிக்காமல் போனதால், குறிப்பிட்ட உணவு, எல்லோருக்கும் பிடிக்காமல் போகாது.

வெயிலின் உக்கிரத்தால் உடலி லுள்ள நீர்ச்சத்து வறண்டு கொண்டே இருக்கும். அதை சரிசெய்ய, இழந்த நீர்ச்சத்தை உடலுக்குத் திருப்பத் தர வேண்டும். நீர்ச்சத்து என்றதும், ஜூஸ்தான் குடிக்க வேண்டும் என்பது பலரது அபிப்பிராயம். ஜூஸ் என்றில் லாமல், எல்லா திரவ உணவுகளையும் சாப்பிடலாம்.

நிறைய தண்ணீர் குடியுங்கள். தாகம் எடுத்தாலும், எடுக்காவிட்டாலும் முடிந்த போதெல்லாம், ஞாபகம் வரும்போதெல்லாம் தண்ணீர் குடி யுங்கள்.

உடலின் நீர்ச்சத்து இழக்கப்படுகிற போது, கூடவே சோடியம், பொட்டா சியம் சத்துக்களையும் சேர்ந்தே இழக் கிறோம். அதை ஈடுகட்ட பழ ஜூஸ் எடுத்துக் கொள்ளலாம். தர்பூசணி, திராட்சை, இளநீர் போன்றவற்றில் சோடியம், பொட்டாசியம், தண்ணீர் என மூன்றுமே இருப்பதால் அவற்றை அதிகளவில் எடுத்துக் கொள்ளலாம்.

பழங்களை அப்படியே சாப் பிடுவது சிறந்தது. ஜூஸாக எடுக் கும்போது, அவற்றிலுள்ள நார்ச்சத்துப் பறி போவதுடன், சுவைக்கு சீனி வேறு சேர்த்துக் கொள்கிறோம். ஜூஸாக தான் குடிப்பேன் என அடம் பிடிக்கிறவர்கள், பழத்தின் கசப்பான தோல் பகுதியையும், விதைகளையும் நீக்கிவிட்டு, சீனியைச் சேர்க்காமல், அப்படியே மிக்சியில் அடித்து கெட்டி யாகக் குடிக்கலாம்.

நீர், மோர் தாகத்துக்கு மிக நல்லது. கூடுதல் சுவைக்கு அதில் கறிவேப் பிலை, கொத்தமல்லி, இஞ்சி, பச்சை மிளகாய் அரைத்துச் சேர்த்துக் குடிக் கலாம்.

பால் குடிக்க அடம்பிடிக்கிற குழந்தைகளுக்கு, அதே பாலை லேசாகக் குளிர வைத்து, அதை ரோஸ் மில்க்காகவோ, பாதாம் மில்க்காகவோ மாற்றிக் கொடுக்கலாம்.

அப்படிக் குளிர்ச்சியாகக் கொடுக் கும்போது, அதை ஒரே மடக்கில், தொண்டைக்குள் விழுங்காமல், சிறிது நேரம் நாக்கிலேயே வைத்தி ருந்து, மெல்ல விழுங்கினால், தொண்டை வரண்டு போகாது. வயதானவர்கள், வெயில் காலத்தில் கூடுதல் கவனத் துடன் இருக்க வேண்டும்

ரூ. 75,000/-* ம் முற்கட்டணத்துடன் முச்சக்கரவண்டியை லீசிங் செய்யுங்கள்...

எசட்லைன் லீசிங் விசேடமாவது:
- 6 வருடங்கள் வரையிலான தவணை கட்டண காலம்
- குறைந்த லீசிங் தவணை
- ஒரே நாளில் லீசிங் பெறக்கூடிய வசதி
- குறைவான /இலகுவான பத்திரங்கள்
- நாடளாவிய கிளை வலையமைப்பினால் இலகுவாக லீசிங் பெறக்கூடிய வசதி
- வருடத்திற்கு வருடம் மாற்றமடையாத வகையில் அமைந்துள்ள தவணை

விசேட ஆயுட் காப்புறுதி இலவசம்!*
(உங்களது லீசிங் வசதியின் பெறுமதி உள்ளடங்களாக)
இக் கொடுப்பனவு ஜுன் 30 வரை மட்டுமே

* நிபந்தனைகள் உண்டு

இவ் விசேட லீசிங் வசதி பற்றிய மேலதிக தகவல்களை அறிந்துக்கொள்ள கீழ் உள்ள எமது பிரதான அலுவலகத்திற்கு அல்லது பிரதேச பிரதிநிதிக்கு அழையுங்கள்.

எசட்லைன்
லீசிங் கம்பனி லிமிட்டட்.
உங்கள் முன்னேற்றத்திற்காகவே அர்ப்பணிக்கப்பட்ட கடன் வசதி
இல.282, கடுவலை வீதி, பத்தரமுல்லை.
தொ.பே: 011 4700100
பெக்ஸ்:0114700101
www.assetline.lk

இரத்தினப்புரி - 077 3203604, 077 3615396, 077 3404412, 077 2009412
அம்பாறை - 077 3613694, 077 3404413, 077 3544624
மாத்தறை - 077 3688301, 077 3544616, 077 3814205, 077 3106195, 077 3497697
கொழும்பு - 077 7685847, 077 3444672, 077 3688302, 077 7264224, 077 2009674
நீர்கொழும்பு - 077 7445460, 077 3056315, 077 7236297, 077 3100924
கண்டி - 077 3444676, 077 3688283, 077 1254300
தம்புள்ளை - 077 3606690, 077 7236301, 077 3544618, 077 3497672
குருநாகல் - 077 3688282, 077 7685854, 077 3749487
வவுனியா - 024 4925152, 077 3609898, 077 7723748

கம்பனி பதிவிலக்கம்: இலங்கை மத்திய வங்கியில் PB 82 FLA/055 எனும் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

C1856

# புதிய வகைத் தவளை இனங்கள்



இந்தியாவில் இதுவரை கண்டறியப்படாத 12 புதிய வகை தவளையினங்களை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இதைத் தவிர அழிந்துவிட்ட தாக கருதப்பட்டு வந்த வேறு 3 தவளையினங்களை யும் இவர்கள் மீண்டும் கண்டுபிடித்துள்ளனர். தென்னிந்தியாவில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் காடுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்தப் புதிய தவளையினங்கள் மிகவும் அரிதானவை என தவளை ஆராய்ச்சிக்கு தலைமையேற்றிருந்த விஞ்ஞானி சத்யபாமா பஜு கூறினார்.

பூனை போல மியோவ் என்று ஒலியெழுப் பக்கூடிய இரவில் வேட்டையாடும் தவளையினம், ஒரு கிரிக்கெட் பந்து அளவுக்கு வளரக்கூடிய கேரளத்தின் வயநாடு பகுதியில் காணப்படுகிறது. இரவில் வேட்டையாடும் தவளையினம் உள்ளிட் டவை புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள தவளை யினங்களில் அடங்குகிறது.

ஸூடாக்ஸா என்ற சர்வதேச அறிவியல் சஞ்சிகை யில் இந்தக் கண்டுபிடிப்புகள் பற்றிய ஆய்வுக் கட்டுரை வெளியாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AVIVA NDB வெ

## விருதுகள் இ



ஜீ.எச்.சீ.திலிப அமிந்திர
சிறந்த பிரதேச அபிவிருத்தி அலுவலக முகாமையாளர்
MDRT - 2005, 2006, 2007, 2010
திஸ்ஸமஹாராம
பிரதேச அபிவிருத்தி அலுவலகம்

டீ.சீ.புஷ்பகுமார
சிறந்த வெல்த் பிளானர் முகாமையாளர்
ஆயுள் காப்புறுதி
களுத்துறை
முகவர் அலுவலகம் பிரிவு 2

திருமதி டீ.ஜீ.ஏ.சுவர்ணா
சிறந்த வெல்த் பிளானர்
ஆயுள் காப்புறுதி
MDRT - 2010 Court of the Table*
MDRT - 2009, 2011 Top of the Table**
MDRT Life Member
MDRT - 2000-2005, 2007, 2008
IQA - 2005, 2007-2011
அனுராதபுரம் பிராந்திய அலுவலகம்

சிறந்

### பிரீமியர் வெல்த் பிளானர்ஸ் முகாமையாளர்கள்



திருமதி டபிள்யூ எச் எம் பிரசாந்திகா
ஹொரண பிராந்திய அலுவலகம்



எம் சீ எச் சிரிமல் பீரிஸ்
கொழும்பு
பிரதான பிராந்திய அலுவலகம்



டபிள்யூ ஏ ஏ கே யூ வனிகசூரிய
கொழும்பு
பிராந்திய அலுவலகம் பிரிவு 3



வை ஜீ ஜீ பீ யட்டிகம்மன
MDRT
மாவனல்ல
பிரதேச அபிவிருத்தி அலுவலகம்



எம் ஏ சீ இந்திர குமார
தங்காலை
பிரதேச அபிவிருத்தி அலுவலகம்



எம் ஜே சசிகுமார்
MDRT
மட்டக்களப்பு
பிராந்திய அலுவலகம்



எஸ் பீ கமகே
உடுகம
பிரதேச அபிவிருத்தி அலுவலகம்

### பிரீமியர் வெல்த் பிளானர்ஸ்



திருமதி கே எச் எச் விமலசேன
MDRT- Court of the Table
கொழும்பு
பிராந்திய அலுவலகம் பிரிவு 1



எம் கே மிருண்டா
MDRT- Court of the Table
நீர்கொழும்பு
பிரதான பிராந்திய அலுவலகம்



கே பீ என் பலவர்தன
MDRT
கொழும்பு
பிராந்திய அலுவலகம் பிரிவு 3



கே டபிள்யூ தசநாயக்க
MDRT / IQA
களுத்துறை
பிரதான பிராந்திய அலுவலகம்



எம் ஏ ஐ ஏ பெரேரா
MDRT
சிலாபம்
பிராந்திய அலுவலகம்



திருமதி எஸ் பத்மாவதி
MDRT / IQA
அனுராதபுரம்
பிராந்திய அலுவலகம்



காமினி திலகரத்ன
MDRT
குருநாகல்
பிராந்திய அலுவலகம் பிரிவு 1



டப்ளியூ வீ ஏ ஆர் எஸ் வேரகொட
MDRT / IQA
கொழும்பு
பிரதான பிராந்திய அலுவலகம்



ஆர் ஜீ எல் எஸ் ராஜபக்ஷ
MDRT / IQA
கொழும்பு
பிரதான பிராந்திய அலுவலகம்



ஏ விஸ்வநாதன்
MDRT
நுவரெலியா
பிராந்திய அலுவலகம்



ரீ எம் ஏ ஆர் செனவிரத்ன
MDRT
குருநாகல்
பிரதான பிராந்திய அலுவலகம்



என் பீ ஜீ ஜீ கெத்மல
MDRT
கொழும்பு
பிராந்திய அலுவலகம் பிரிவு 6



வீ லோரன்ஸ் ஹேவா
IQA
மாத்தறை
பிரதான பிராந்திய அலுவலகம்



என் எம் என் எச் கே நவரத்ன
MDRT
நுவரெலியா
பிராந்திய அலுவலகம்

AVIVA NDB Wealth Planners
உங்கள் நம்பிக்கையை வென்றோர்

உச்சக்கட்ட பெறுமானத்தை அடைந்த AVIVA NDB வெல்த் பிளானர்ஸ், அவர்களின் உன்னதமான செயற்பாட்டிற்கு சமீபத்தில் அங்கீகாரம் பெற்றனர். தாங் நிலையை அவர்கள் அடைவதற்கு வழிவகுத்துள்ளது என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. மிகவும் பிரபல்யம் மிக்க விருதுகளை வழங்கும் இந்த நிகழ்ச் உங்களுக்கு சேவையாற்றும் AVIVA NDB வெல்த் பிளானர்ஸின் ஆர்வத்திற்கும் அர்ப்பணிப்புக்குமான மனப்பூர்வமான பாராட்டாகும்.

**MDRT** (மில்லியன் டொலர் ரவுன்ட் டேபிள்) ஆயுள் காப்புறுதி விற்பனையாளர் பெறக்கூடிய அதியுயர் சர்வதேச அங்கீகாரம். **MDRT - Court of the Table** பெற்ற காப்புறுதி விற்பனை ... எனவும். **MDRT - Top of the Table****: MDRT தகமை பெருவதற்காக தேவைபடும் ஆக ஒதுக்கப்பட்ட என்றவும். IQA (சர்வதேச தர விருது) உலகின் பிரபல ஆயுள் காப்புறுதி சந்தைப்படுத்தல் மற்றும் ஆராய்ச்சி சங்கமான (LIMRA) வினால் வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுவலக பணியாளர்களுக்கு வரும் ஆபத்துக்கள்



எந்த நேரமும் வேலையிலே மூழ்கிப் போகிறவர்களா நீங்கள்? உங்களுக்கெல்லாம் ஒரு எச்சரிக்கை, வேலை செய்வதால் ஏற்படும் நோய்கள் தற்போது பெருகி வருகின்றன என்று ஆய்வு மூலம் கண்டறிந்துள்ளனர். சுமார் 2 கோடி இந்தியர்கள் வேலையால் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு அவதிக்கு உள்ளாகி இருக்கின்றனர்.

வேலை பாதிப்பு என்றால், சுரங்க வேலை செய்பவர்களுக்கு நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்கள், ஆழ்கடலில் மூழ்கி ஆய்வு செய்வோருக்கு ஏற்படும் காயங்கள், கோழிப்பண்ணைத் தொழிலாளர்களுக்கு வரும் காய்ச்சல், அலுவலகங்களில் வேலை செய்வோருக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

அலுவலகத்தில் உங்களின் இருக்கை முறைப்படி வடிவமைக்கப் பட்டதாக இருந்தால், நீங்கள் 6 முதல் 8 மணி நேரம் கணனி முன் அமர்ந்து இருக்கின்றீர்கள் என்றால் உங்களுக்கு முதுகுவலி, மணிகட்டு வலி போன்ற பிரச்சினைகள் வரும். ஆனால் இந்த வேலை செய்பவர்கள் இந்த நோய் சம்பந்தமாக உணர்வது இல்லை

சுமார் 1.9 கோடி இந்தியர்கள் வேலைப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். அவர்களில் 1.20 லட்சம் பேர் ஆயுளை இழக்கின்றனர் என்கிறது பணியிட வியாதிச் சிகிச்சை மற்றும் கட்டுப்பாட்டுக்கான தேசிய திட்டத்தின் புள்ளிவிவரம். இது உலக அளவில் 17 சதவீதம். மரணத்தை ஏற்படுத்துவதில் பணியிடப் பாதிப்புகள் 10 ஆவது பெரிய காரணமாக உள்ளன என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகின்றது.

இந்தியர்களில் 43 சதவிகிதம் பேர் வேலை செய்பவர்கள். எனவே அலுவலக பாதிப்புகளை நாம் அக்கறையுடன் எடுத்துக்கொள்ள வேண்டும் என்கிறார், அகமதாபாத்தில் உள்ள நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஒவ் ஒக்கு பேஷனல் ஹெல்த் இயக்குநர். நாள் முழுவதும் உட்கார்ந்து செய்யும் வேலை, புகைப்பழக்கத்துக்கு இணையாக மோசமானது என்கிறார்கள் வைத்தியர்கள். அது ரைப் 22 சர்க்கரை நோய், இதய நோய், உடல் பருமன் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாகலாம்.

ஒரு நாளைக்கு 6 மணி நேரத்துக்கு மேல் உட்கார்ந்து வேலை செய்பவர்களுக்கு, ஓடி ஆடி வேலை செய்யும் மற்றவர்களை விட அதிக உடல் எடை வரும் வாய்ப்பு இரண்டு மடங்காகும். மணிக்கணக்கில் ஒரே இடத்தில் அமர்ந்து வேலை செய்வதால் ஏற்படும் பாதிப்பை உடற்பயிற்சி செய்தும் போக்க முடியாது என்கிறார்கள்.இருந்து வேலை செய்பவர்கள், ஒரு மணி நேரத்துக்கு ஒருமுறை 10 நிமிட இடைவெளி எடுத்துக்கொள்ள வேண்டும், சோம்பல் முறிப்பது போன்ற எளிய பயிற்சிகள் கூட நன்மை அளிக்கும் என்று வைத்தியர்கள் ஆலோசனை கூறுகின்றார்கள்

பொருத்தமில்லாதவை
பிழையானவற்றிற்கு வழிவகுக்கும்...



அனைத்தும் பொருத்தமாக இருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் பொருத்தமில்லாதவர்களை சேர்த்துக்கொள்ளும்போது அவ்வழகான தருணம் பொலிவிழந்துவிடலாம்,
அதேபோல்...

உங்கள் பஜாஜ் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டிக்கு விரைவில் பழுதாகக்கூடிய, நிறம் மங்கக்கூடிய, சரியாகப் பொருந்தாத, போலி பாகங்களைப் பொருத்துவதனால் அது உங்களின் மொத்த வாகனத்தினது அழகையும் குலைத்துவிடும் என்பது உங்களுக்குத் தெரியுமா?



இங்கு காட்டப்படுவது விரைவில் நிறம் மங்கிக்போய், வர்ணப்பூச்சில் பிளவுகள் ஏற்பட்ட எரிபொருள் தாங்கியாகும். இதேபோன்று பஜாஜ் அசல் பாகங்களில் ஏற்படுவதில்லை.

உங்களின் பஜாஜ் வாகனத்தின் அசல் தோற்றத்தை பேணிக்காத்துக்கொள்ளுங்கள்...

பஜாஜ்
அசல் உதிரிப்பாகங்கள்
மட்டுமே பொருத்திக்கொள்ளுங்கள்...

tradlanka

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600

# உடலில் களைப்பை போக்கும் வழிமுறைகள்

உடலுக்கு ஏற்படும் களைப்பானது பல வழிகளில் ஏற்படுகிறது. அந்த களைப்பை வேலை செய்யும் நாட்களிலே பார்க்காமல், வார இறுதியில் போக்குவார்கள். இப்படி செய்வதால் உடலில் ஏற்படும் களைப்பானது முற்றிலும் போகாது. களைப்பை போக்க நாம் எந்த ஒரு நேரத்தையும் ஒதுக்கத் தேவையில்லை, அனைத்தும் நாம் செய்யும் செயலிலேயே இருக்கிறது. அத்தகைய களைப்பை எவ்வாறு போக்கலாம் என்று பார்ப்போமா?

1. நல்ல ஆழ்ந்த அமைதியான உறக்கம் வேண்டும். ஒரு மனிதன் தினமும் எட்டு மணிநேரம் தூங்கினால், அவன் புத்துணர்ச்சியுடன் இருக்கலாம். ஆகவே வேலை செய்பவர்கள் களைப்பு போக வேண்டும் என்றால் தூங்கிக் கொண்டே இருக்க வேண்டும் என்பதில்லை. எட்டு மணிநேர தூக்கம் இருந்தாலே போதுமானது.

2. நிறையப் பேர் தங்கள் களைப்புப் போக வேண்டும் என்று வார இறுதியில் நீண்ட நேரம் தூங்க முயற்சிப்பார்கள். ஆனால் புத்துணர்ச்சி பெற எட்டு மணிநேர தூக்கத்திற்கு பதில் 10 மணிநேரம் தூங்கினால் களைப்பு போகாது, மேலும் களைப்புத் தான் ஏற்படும். ஆகவே அளவான தூக்கமே உடலுக்கு நல்லது.

3. படுக்கும் முன் சிலர் வயிறு நிறைய எண்ணெய் அதிகமாக உள்ள உணவுகளை சாப்பிட்ட பின் தூங்குவார்கள். இவ்வாறு உண்டால் எப்படி நிம்மதியான தூக்கம் வந்து, களைப்பு போய் மறுநாள் சுறுசுறுப்பாக இருக்க முடியும். ஆகவே அவ்வாறெல்லாம் உண்ணாமல் காய்கறிகள், பழங்கள் போன்ற ஆரோக்கியத்தை தரும் உணவுகளை உண்டு பின் தூங்குங்கள், நன்கு தூக்கம் வந்து மறுநாள் புத்துணர்ச்சியுடன் இருப்பீர்கள்.

4. வேலை முடித்து விட்டு வீட்டிற்கு சென்ற பின் களைப்பைப் போக்க ஒரு கப் சூடான கோப்பி குடிப்போம். ஆனால் அவ்வாறு மாலை நேரத்தில் கோப்பி குடிப்பது நல்லதல்ல. அப்படி குடித்தால் அது தூக்கத்தை பாதிக்கும். ஆகவே அந்த நேரத்தில் வேண்டுமென்றால் சிறிது நேரம் குழந்தைகளுடன் விளையாடலாம் அல்லது நடை பயிற்சி மேற்கொள்ளலாம். இதனால் இரவில் நன்கு தூக்கம் வரும்.

5. களைப்பு ஏற்பட்டால் அடிக்கடி உடலில் வலி ஏற்படும். அப்போது உடலுக்கு ஏற்ற மசாஜ் எதையாவது செய்யலாம். இவ்வாறு மசாஜ் செய்தால் அப்போது வரும் தூக்கத்திற்கு அளவே இல்லை. மேற்கூறியவாறெல்லாம் செய்து பாருங்கள், உடலில் களைப்பு ஏற்படாமல் உடலானது ஆரோக்கியமாக இருக்கும்.

# குழந்தைகளின் மூளை வளர்ச்சியில் உணவு வகைகள்



பாடசாலைக்குச் செல்லும் குழந்தைகள் பரீட்சையில் நல்ல மதிப்பெண்கள் பெற வேண்டுமா? இதற்கு அவர்கள் நன்றாக படித்தால் மட்டும் போதாது, அவர்களுக்கு நல்ல மூளை வளர்ச்சியைத் தரும் உணவுகளைக் கொடுக்க வேண்டும். உணவானது உடலுக்கு மட்டும் நன்மையைத் தருவதில்லை, மூளைக்கும் நன்மையைத் தருகிறது. இத்தகைய மூளையை ஆரோக்கியமாக வைக்கும் உணவுகளை உண்பதால் குழந்தைகளின் நினைவாற்றல் அதிகரிப்பதோடு, அவர்களது ஞாபக சக்தியும் கூடுகிறது.

அத்தகைய உணவு வகைகள்,

பால் மற்றும் பாலால் செய்யப்பட்ட உணவுகளில் அதிகமாக புரோட்டீன், கல்சியம், பொட்டாசியம் மற்றும் விட்டமீன் டி உள்ளது. இவ்வளவு ஊட்டத்தை அளிக்கின்ற பாலானது நரம்புத்தசை மண்டலத்தை நன்கு இயக்கு வதோடு மற்றும் மூளை செல்களை நன்கு செயல்பட வைக்கிறது. அதுவும் வளரும் குழந்தைகளுக்கு இந்த உணவு நல்ல ஒரு உடல் வளர்ச்சியைத் தருவதோடு, மூளையையும் சுறுசுறுப்பாக வைக்கிறது. முட்டை அதிகம் உண்பதால், ஞாபக சக்தி அதிகரிப்பதோடு, மூளையானது களைப்படையாமல் சுறுசுறுப்பாக இருக்கும்.

### தானிய வகைகள்

விற்றமீன் பி மற்றும் குளுக்கோஸ் அதிகம் உள்ள ஓட்ஸ் மற்றும் சிவப்பு அரிசியை அதிகம் சாப்பிட்டால், மூளையானது ஆரோக்கியமாக இருக்கும். நமது உடலுக்கு தினமும் ஏதேனும் ஒரு தானியத்தை சேர்த்தால் நல்லது. மேலும் விற்றமீன் பி அதிகம் இருப்பதால், உடலில் இரத்த ஓட்டம் அதிகமாக இருப்பதால், உடலில் எல்லாப் பாகங்களும் சுறுசுறுப்பாக இருக்கும்.

மீன்கள் மூளை வளர்ச்சிக்கு மிகவும் நல்லது. மற்ற உணவுப் பொருட்களை மீனிலேயே அறிவுத்திறனை கூர்மைப்படுத்தும் திறன் அதிகமாக உள்ளது.

காய்கறிகளில் தக்காளி, கரட், பீன்ஸ், கீரைகள் போன்றவையும் சிறந்தது. ஆகவே மேற்கூறிய உணவுப் பொருட்களை குழந்தைகளுக்கு தினமும் கொடுத்து வந்தால் மூளையானது நன்கு சுறுசுறுப்போடு இருப்பதோடு, ஆரோக்கியமாகவும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமிட் கட்டமைப்புக்களைப் போன்ற தடை செய்யப்பட்ட திட்டங்கள்

# உங்களை அழிவடையச் செய்யும்

## பிரமிட் கட்டமைப்பைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றுதல் சட்ட விரோதமானதாகும்

### "தடைசெய்யப்பட்ட திட்டம்" என்பது யாது ?

- தடைசெய்யப்பட்ட திட்டம் என்பது அதில் பங்குபற்றுபவர்கள் பணத்தினை அல்லது பணப் பெறுமதியினைச் செலுத்துவதற்கு அல்லது பங்களிப்புச் செய்வதற்கு வேண்டிக்கொள்ளப் படுவதுடன் அதில் பெறப்படும் நன்மைகள், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 83C பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி
    1. திட்டத்தில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுதல், அல்லது
    2. பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரித்துச் செல்லுதல் என்பவற்றில் பெருமளவில் தங்கியிருக்கும் ஓர் கட்டமைப்பாகும்.
- இதன் அடிப்படையில் திட்டத்தில் புதிய பங்குபற்றுபவர்கள் இணைந்து கொள்வதற்கு முற்பணமாக ஓர் கட்டணத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிக பங்குபற்றுபவர்களின் மூலமாகவும் அதேநேரம் தற்போதுள்ள பங்குபற்றுபவர்களினால் கொண்டு வரப்படும் புதிய பங்குபற்றுபவர்கள் மூலமாகவும் தான் இலாபங்கள் (பணம் அல்லது ஏனைய சலுகைகள்) கிடைக்கும் என பங்குபற்றுபவர்களுக்கு பின்னர் உறுதியளிக்கப்படுகின்றது. எனினும், இத்திட்டங்களானது பெருமளவில் பொருட்கள் அல்லது சேவைகளினை விற்பனை செய்யும் திட்டங்களாக போலியான முறையில் காணப்படுகின்றன.




**பிரமிட் தன்மையைக் கொண்ட திட்டங்கள் வங்கி தொழில் சட்டத்தின் 83C பிரிவின் கீழ் சட்ட விரோதமானதாகும். மேலும், சில கொடுப்பனவுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் என்பன வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் பணத்தைத் தூயதாக்கல் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படலாம். இப்படியான திட்டங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆரம்பித்தல், வழங்குதல், ஏற்பாடு செய்தல், விளம்பரப்படுத்தல், கொண்டு நடத்துதல், நிதியிடுதல், நிர்வகித்தல் அல்லது நெறிப்படுத்துதல் என்பனவும் சட்ட விரோத செயல்களாகும்.**

### தடைசெய்யப்பட்ட திட்டங்களை வேறுபடுத்திக் காண்பதற்கான அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. **திட்டத்தின் இயல்பு** - இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு திட்டத்தின் ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை பொருட்கள் அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் பணத்தினை முதலீடு செய்வதற்கு வேண்டுகிறார்கள் என்பதுடன் பின்னர் அப்பொருட்கள் அல்லது சேவைகளை விற்பனை செய்வதன் மூலம் இத்திட்டத்திற்கு மேலதிக பங்குபற்றுபவர்களைக் கொண்டு வருமாறும் வேண்டப்படுகின்றனர்.
2. **வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தைப்படுத்தல் இயலுமை** - சந்தையில் இப்பொருட்கள் அல்லது சேவைகளுக்கு பலமான கேள்வி இல்லாதிருப்பதுடன் ஊக்குவிப்பாளர்களினூடாக மட்டுமே இவை கிடைக்கக் கூடியதாகவும் இருக்கின்றன.
3. **உயர் நுழைவுக் கட்டணம்** - இத்திட்டத்தில் சேர்வதற்கான நுழைவுக் கட்டணம் பெரும்பாலும் உயர்வாகவே இருக்கின்றது. இது ஊக்குவிப்பாளர்களினால் வழங்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விலையினூடான கட்டணமாக விதிக்கப்படலாம்.
4. **இரண்டாந்தரச் சந்தையும் விற்பனைக்குப் பிந்திய சேவையும்** - இப்பொருட்களுக்கு இரண்டாந்தரச் சந்தை இல்லாதிருப்பதுடன், விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விற்பனைக்குப் பிந்திய சேவைகளுக்கான உத்தரவாதம் ஊக்குவிப்பாளர்களினால் ஒரு போதும் வழங்கப்படுவதில்லை.
5. **நிதி வருமானங்கள்** - பங்குபற்றுபவர்களால் விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான தரகு அவர்களுக்கு வழமையாக வழங்கப்படுவதில்லை. ஆனால் அதிகூடிய வருமானங்களைப் பெற்றுக் கொள்வதானால் புதிய பங்குபற்றுபவர்களை சேர்த்துக் கொள்ளுதல் வேண்டுமென்று அறிவுரை வழங்கப்படுகின்றது. ஒரு பங்குபற்றுபவரின் நிதி வருமானங்கள் அவரினால் கொண்டு வரப்படும் புதிய ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கையிலேயே தங்கியிருக்கின்றது.
6. **மீண்டும் வாங்கும் கொள்கை** - வாங்கிய பொருட்கள் மீள் விற்பனைக்குரிய தன்மையினைக் கொண்டிருப்பினும் ஊக்குவிப்பாளர்கள் இத்திட்டத்திலிருந்து விலகிய பங்குபற்றுபவர்களின் எஞ்சியிருக்கும் இருப்புக்களை மீண்டும் வாங்கும் கொள்கை ஒன்றைக் கொண்டிருப்பதில்லை.
7. **பொருட்களின் விற்பனையில் கவனம் செலுத்துதல்** - இறுதி நுகர்வோருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை சில்லறையாக விற்பனை செய்யும் நோக்கம் இத்திட்டத்தில் சிறிதளவாகவே காணப்படுகின்றது.
8. **திட்டத்தைப் பற்றிய தகவல்கள்** - பொதுவாக ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர்கள் திட்டத்தின் கம்பனி பற்றிய வதிவிடம், வீதி, விலாசம், அல்லது தொலைபேசி இலக்கம் என்பவற்றை வெளிப்படுத்துவதில்லை.
9. **நம்பமுடியாத வருமானங்கள் பற்றிய தவறான உறுதிகள்** - ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர் நம்பமுடியாத வருமானங்கள் (உ-ம் "சட்டரீதியாக மாதாந்தம் ரூ.100,000 இனைப் பெறுதல்") அல்லது "வளமானதும் சந்தோசமானதுமான வாழ்க்கை", "இலகுவாக புதிய ஆட்களை சேர்த்துக் கொள்ளமுடியும்" போன்ற நன்மைகளைப் பெறமுடியும் என உறுதிகளை அளிக்கின்றனர்.
10. **இணையுமாறு நிர்பந்தித்து ஊக்குவித்தல்** வழமையாக ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை கம்பனி அல்லது பொருட்கள்/ சேவைகள் பற்றிய போதியளவு விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்காமல் ஒப்பந்தங்களுக்குள் நுழைவதற்கு நிர்ப்பந்திக்கிறார்கள்.
11. **பயிற்சிகளும் விற்பனை உதவிகளும்** - ஊக்குவிப்பாளர் விற்பனை மற்றும் ஆட்சேர்ப்பு தொடர்பான பொருத்தமான முன்னெடுத்துச் செல்லும் பயிற்சிச் சந்தர்ப்பங்களை அவனுடைய/ அவளுடைய புதிய பங்குபற்றுபவர்களிற்கு வழங்குவதில்லை.
12. **திட்டத்தின் எதிர்காலம்** - திட்டத்தின் அடிமட்டத்திலிருக்கும் புதிய பங்குபற்றுபவர்கள் புதிய ஆட்சேர்ப்புக்களைச் செய்யமுடியாத நிலை எழும்போது அவர்கள் தமது முதலீட்டை இழக்க வேண்டி நேரிடும் என்பதுடன் அத்திட்டம் முறிவடையும் நிலையையும் அடையும்.
13. **செயற்பாட்டுப் பிரதேசங்கள்** - செயற்பாட்டுப் பிரதேசங்கள், பிரிவு அல்லது செயற்களம் தொடர்பான நியாயமான ஓர் திட்டத்தை கொண்டில்லாதிருப்பதுடன், ஊக்குவிப்பாளர்கள் பொதுவாக எந்தவொரு நியாயமான அல்லது பகுத்தறிவான வரையறைகள் இல்லாமல் அதிகரித்த ஆட்சேர்ப்புக்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.

### குற்றவாளிகளுக்கு சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் தண்டனை மிகவும் கடினமானதாகும்.

மேற்குறிப்பிட்ட செயல்கள் மூலம் ஏதாவது ஒரு நபர் இப்படியான தடைசெய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றிய குற்றவாளியாகக் கண்டு பிடிக்கப்பட்டால் அவர் பின்வருவனவற்றிற்கு உட்படுவார்.

- மூன்று வருடங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனை அல்லது
- ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத அபராதம் அல்லது
- சிறைத் தண்டனை மற்றும் அபராதம்

மற்றைய ஒரு நபருக்கு இழப்பு அல்லது தீமையை உண்டுபண்ணும் விதத்தில் குற்றங்களானது சுய விருப்பத்தினுடன் அல்லது தெரிந்து கொண்டு புரியப்பட்டிருந்தால் அதற்கான தண்டனை

- மூன்று வருடங்களுக்கு குறையாத மற்றும் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத கடூழியச் சிறைத் தண்டனை மற்றும்
- இரண்டு மில்லியன் ரூபா அபராதம் அல்லது திட்டத்தில் பற்குபற்றுபவர்களிடம் இருந்து பெறப்பட்ட இலங்கை நாணயத்தின் முழுத் தொகையின் இருமடங்கு என்பவற்றில் ஆகக் கூடிய தொகையைக் கொண்ட அபராதம்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA


மேலதிக விசாரணைகளுக்கு
தொலைபேசி: 2477100, 2477105, 2477120, 2477129
தொலைநகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனம் கலையுங்கள்



28



05

இலங்கையுடன் மோத தயாராகும் ஐ.நா.




26

விபத்தை குறைக்க வழி என்ன?



12

போர்த் தாய்கள்



04


# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

01

உதயன் 17 ஜூன் 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்தெட்டு


# மழை விட்டும்...



**அண்மைக் காலமாக தமிழர் தரப்பு தொடர்சியாக பல்வேறு ஜனநாயக ரீதியான போராட்டங்களை நடத்தத் தொடங்கியிருக்கிறது. இந்தப் போராட்டங்கள் தீவிரம் பெற்று, சர்வதேசத்தின் காதுகளில் போராட்டத்தில் ஈடுபடுபவர்களின் உரிமைக் குரல்கள் கேட்கத் தொடங்கிவிட்டால் அவ்வளவுதான். அரசுக்கு தலையிடி தொடங்கிவிடும்.**

■ *ஓாண்யன்*

"எங்கள் ஒருத்தருக்கும் சண்டை பிடிக்கிற திலையோ, இல்லாட்டி ட்ரெயினிங் எடுக்கிறதிலையோ எப்பனும் விருப்பமில்லை. ஆனாலும் கட்டாயம் ட்ரெயினிங்குக்கு போக வேண்டிய நிலை. விடியப்பறமே கிழடு கட்டையள் கூட, றோட்டால ஒரு பொல்லாங்கட்டையைத் தூக்கிக் கொண்டு ஓட வேணும். அதுதான் கூடுதலா ட்ரெயினிங். மற்றது என்னென்ன குண்டுகள் எப்படி இருக்கும், அதை எப்படியெல்லாம் ஆமி உருமறைப்புச் செய்து வைச்சிருப்பாங்கள், சிலவேளை அப்படியான குண்டுகளைக் கண்டால் எப்படி அதைக் கையாளவேணும் இப்படியான வகுப்புகளும் நடந்தது. அதுக்குப் பிறகு நாங்களும் எல்லைப்படையாகிட்டம்.''

ஒரு முன்னாள் எல்லைப்படை வீரரின் பயிற்சி அனுபவங்கள்.

---

புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்து விட்டு, புலிகளுடனான போரில் குதித்த படைத்தரப்பு, தனது அணுகு முறைகளை பெருமளவுக்கு மாற்றியிருந்தது. விடுதலைப் புலிகளின் வெற்றிக்கு எந்தெந்த வியூகங்கள் சாதகமாக இருந்தனவோ அவற்றை எல்லாம், அப்படியே கொப்பியடித்து அதில் வெற்றியும் கண்டது. அவற்றில் ஒன்றுதான் எல்.ஆர்.ஆர்.பி. என்று சொல்லப்படும் ஆழ ஊடுருவும் படையணி.

வன்னிக் காடுகளுக்குள் சிறு குழுக்களாக, உள்நுழைந்து, புலிகளினதும் மக்களினதும் நடமாட்டங்களை அதிகம் கொண்டிருக்கும் வீதிகளில் கிளைமோர் தாக்குதல்களில் ஈடுபட்டனர் இந்த எல்.ஆர்.ஆர்.பி. காரர்கள். புலிகளின் கெரில்லாத் தாக்குதல் உத்தியையும், கிளைமோர் தாக்குதல் நுட்பத்தையும் ஒன்றிணைத்தே இந்த எல்.ஆர்.ஆர்.பி. காரர்கள் இத்தகைய தாக்குதல்களை நினைத்தபடி நடத்த முடிந்தது.

விடுதலைப் புலிகளுக்கு இந்தத் தாக்குதல்கள் தலையிடியாக அமைந்தன. மட்டுப்படுத்தப்பட்ட போராளிகளை வைத்துக் கொண்டு முன்னேறிவரும் படைகளுடன் சமர்புரியவே ஆளணிப் பற்றாக்குறைய எதிர்கொண்டிருந்தனர் புலிகள். இந்த நிலையில் வீதிகளில் அடிக்கடி கிளைமோர்களை வெடிக்க வைக்கும் எல்.ஆர்.ஆர்.பி. காரர்களை காடுகளுக்குள், புகுந்து தேடிப் பிடிக்கவும், அவர்கள் வீதிகளில் கிளைமோர்களைப் பொருத்தாத வகையில் கண்காணிப்பை தீவிரப்படுத்தவும் தமது ஆளணியை பலமடங்கு அதிகப்படுத்த வேண்டியிருந்தது. ஆனால் அது சாத்தியமான விடயமுமல்ல.

இந்த நேரத்தில்தான் மக்கள் தம்மைத் தாமே பாதுகாக்கும் வகையில் எல்லைப்படை என்ற கட்டமைப்பை புலிகள் ஏற்படுத்தினர். ஆழ ஊடுவும் படையணி போன்ற எதிர்பாரத ஆபத்துகளில் இருந்து தமக்கு ஏற்படும் இழப்புகளை மக்கள் தாமாகவே குறைப்பதற்கு இந்த எல்லைப் படையினர் உதவ வேண்டும் என்பதே புலிகளின் திட்டம். இலங்கைப் படையினரை இனங்காணல், அவர்கள் குறித்த தகவல்களை புலிகளின் படையணிகளுக்கு தெரியப்படுத்தல், சந்தேகத்துக்கு இடமான - மர்மப் பொருள்களை பாதுகாப்பாக அப்புறப்படுத்தல், பொது இடங்களில் மக்கள் விமானக் குண்டு வீச்சு முதலான ஆபத்துகளில் இருந்து தற்காத்துக் கொள்வதற்காக பதுங்கு குழிகளை அமைத்தல் போன்ற நடவடிக்கைகளுக்கான பயிற்சிகளே இவர்களுக்கு வழங்கப்பட்டன.

ஆனாலும் எல்லைப் படைக்குச் செல்வதற்குக்கூட பெரும்பாலானோர் பின்னடித்தனர். இதனால் வேறுவழியின்றி கட்டாய ஆள்சேர்ப்பின் மூலமே எல்லைப்படை உருவாக்கப்பட்டது. இவ்வாறான கட்டாயச் சேர்ப்பு, உண்மையான அர்ப்பணிப்பில்லாத எல்லைப் படையின் உருவாக்கத்துக்கே வழி வகுத்தது. எனினும் ஏ-9 உள்ளிட்ட பிரதான மார்க்கங்களில் எல்லைப் படையினரை தொடர்ச்சியான காவலில் ஈடுபடவைத்ததன் மூலம் எல்.ஆர்.ஆர்.பி. காரர்களின் நடமாட்டத்தையும், கிளைமோர் வெடிப்புகளையும் ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடிந்தது.

அத்துடன் ஈழவிடுதலைப் போராட்டம் மக்கள் மயப்படுத்தப் பட்டுள்ளதாக புலிகள் கூறிக் கொள்வதற்கும் எல்லைப்படை உருவாக்கம் உதவியாக இருந்தது.

ஆனால் போர் உக்கிரம் கொள்ளத் தொடங்க, எல்லைப் படை என்ற கட்டமைப்பும் சிதறத் தொடங்கியது. எல்லையில் நின்ற பலர் ஆயுதங்களை தூக்கி எறிந்துவிட்டு, குடும்பங்களோடு ஐக்கியமாகிக் கொண்டனர். (இவர்களில் ஒரு சிலருக்கே ஆயுதங்கள் வழங்கப்பட்டிருந்தன.) பின்னர் இதே எல்லைப் படையில் இருந்தவர்கள் பலர் மீண்டுமொரு கட்டாய ஆள்சேர்ப்பில் புலிகளால் கொண்டு செல்லப்பட்டு குறுங்கால கட்டாய ஆயுதப் பயிற்சியோடு களமுனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அப்போதும் ஆயுதங்களை எறிந்துவிட்டு தப்பித்துச் சென்றவர்கள் பலர். மனவிருப்புடன் இணையாத இத்தகையோரின் நடவடிக்கைகளால் புலிகளுக்கு பின்னடைவே ஏற்பட்டது.

அதன் பின்னர், போர் முடிந்த பின்னர் எல்லோரும் நலன்புரி நிலையங்களுக்குள் அடைக்கப் பட்டனர். போரில் சரணடைந்த புலிகளைத் தவிர , தம்மை இனங்காட்டாது மக்களுடன் இணைந்திருந்த புலிகளையும் களையெடுத்து தடுப்புக்கு கொண்டு சென்றனர் படையினர். அதன் பின்னர் அவர்களில் அநேகர் புனர்வாழ்வு என்ற பெயரில் தடுத்து வைக்கப் பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

ஆனாலும் அவ்வாறு விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் தொடர்ச்சியாக படைப் புலனாய்வாளர்களின் கண்காணிப்பு வளையங்களுக்குள்ளேயே இருக்கின்றனர். அவர்கள் சமூகத்துடன் ஒன்றித்து வாழ்வதிலும் தொடர்ச்சியான நெருக்குதல்களை எதிர் கொண்டபடியே உள்ளனர்.

ஒரு சில முன்னாள் போராளிகள் இந்த நெருக்குதல்களின் விளைவால் தற்கொலை கூடச் செய்துள்ளனர். புலிகள் அமைப்பில் இருந்த ஒவ்வொருவரும் விடுவிக்கப்பட்டிருந்தாலும்கூட, ஏன் நாங்கள் புலிகள் அமைப்பில் இருந்தோம்? என அவர்கள் ஒவ்வொருவரும் தம்மைத் தாமே நிதமும் நொந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே, முன்னாள் போராளிகளை நெருக்குதல் வாழ்வுக்குள் படைத்தரப்பு தள்ளியுள்ளது.

போர் முடிவுக்கு வந்து மூன்று வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் ஓரளவுக்கு நிலைமையில் தளர்வு நிலை தென்படத் தொடங்கியுள்ளது. சர்வதேசத்தின் கரிசனம் தமிழர்கள் பக்கம் திரும்பயுள்ளதாலும், ஜெனிவாத் தீர்மானத்தால் அரசுக்கு சிக்கல் நிலை தோன்றியுள்ளதாலுமே இவ்வாறனொதொரு சிறிய ஆசுவாச இடைவெளி தமிழர் தரப்புக்கு கிடைத்துள்ளது.

இந்த இடைவெளியில் படைகள் மீதான தமது பயத்தை மறந்து,

(சூரியகாந்தி 27 பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு வாங்கோவன்



கியூபாவுக்கு பயணம் செய்திருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஷேகுவேராவின் குடும்பத்தினரை சந்திக்க விரும்பினார்.

ஹவானாவிலுள்ள ஷேகுவேராவின் இல்லத்துக்கு காலை 7 மணிக்கு புறப்பட்டு சென்ற ஜனாதிபதியை ஷேகுவேராவின் மனைவி அலீடியா மகன் கமிலோ மற்றும் மகள் ஆகியோர் வரவேற்றனர்.

சுக நலன்களை விசாரித்த ஜனாதிபதி, ஷேகுவேராவின் மகனைப் பார்த்து நீங்கள் என்ன செய்கிறீர்கள்? என்று கேட்டார்.

நான் ஒரு ஒளிப்படக் கலைஞர் என்றார் ஷேகுவேராவின் மகன்...

உங்கள் தந்தையின் கொள்கைகளை எவ்வாறு முன்னெடுக்கிறீர்கள் என்று கேட்டார் ஜனாதிபதி......

புத்தகங்களை வெளியிட்டும் கருத்தரங்குகளை நடத்தியும் முன்னெடுக்கின்றோம் என்றார் ஷேகுவேராவின் மகன்.....

உங்கள் தந்தை இலங்கைக்கும் வருகை தந்திருந்தார். அவர் அப்போது தனது வருகையின் ஞாபகார்த்தமாக மரமொன்றை ஹொரனையில் நட்டார். அதனை நாங்கள் இன்றும் பாதுகாப்பாக வளர்த்து வருகின்றோம் என்றார் ஜனாதிபதி.....

உண்மையாகவா? ஆச்சரியமாகவிருக்கிறது...... இந்த விடயம் எனக்கு இப்போதுதான் தெரியவருகின்றது என்றார் ஷேகுவேராவின் மனைவி.. அத்துடன் தனது கணவனின் இரு நூல்களையும் அன்பளிப்புச் செய்தார்.

இலங்கைக்கு வாருங்களேன்.... ஷேகுவேரா ஆதரவாளர்கள் அங்கும் உள்ளனர்... என்று கூறி அழைத்தார் ஜனாதிபதி.

15 நிமிடங்களை ஷேகுவேராவின் குடும்பத்தினருடன் கழித்த ஜனாதிபதி, அவர்களிடமிருந்து விடைபெற முயன்றபோது, உங்களுடன் இணைந்து ஒரு புகைப்படம் எடுத்துக் கொள்ள விரும்புகின்றோம்....நீங்கள் அதற்கு அனுமதி தருவீர்களா என்று கேட்டார் ஷேகுவேராவின் மகன்...

நிச்சயமாக என்று கூறிய ஜனாதிபதி, அவர்களுடன் இணைந்து புகைப்படமும் எடுத்துக் கொண்டார்... பின்னர் தனது தாயையும் தங்கையையும் ஜனாதிபதியுடன் நிற்க வைத்து ஷேகுவேராவின் மகன் புகைப்படமொன்றையும் எடுத்தார்.

## துல்ஷானால் பதற்றமடைந்த அரசு

கிழக்கு மாகாண சபை முன்கூட்டி கலைக்கப்படுவதை தடுக்குமாறு கோரி அம்பாறை நகரைச் சேர்ந்த சிங்களவர் ஒருவர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இதுக்கு பின்னணியில் இருந்து செயற்பட்டிருக்கிறார், கிழக்கு மாகாண சபையின் ஆளும் தரப்பு தமிழ் உறுப்பினர் ஒருவர்.

இது தொடர்பான விசாரணை 19 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

எதிர் மனுத் தாக்கல் செய்ய ஆளும் தரப்பு மாகாண சபை உறுப்பினர்களின் கையொப்பத்தைப் பெற அரசு தீர்மானித்தது.

17 ஆம் திகதி ஆளும் தரப்பு மாகாண சபை உறுப்பினர்கள் அலரிமாளிகையில் ஒன்று கூடி, ''முன்கூட்டி கலைக்கப்பட வேண்டும்'' என்ற பத்திரத்தில் கையொப்பமிட்டனர்.

ஆனால், மாகாண சபை உறுப்பினர் துல்ஷான் மட்டும் அலரிமாளிகைக்கு அன்று வரவில்லை.

உடன் இந்தத் தகவல் அமைச்சர் பஸில் மற்றும் ஆளுநர் ஆகியோருக்கு போட்டுக் கொடுக்கப்பட்டது.

டென்ஷன் அடைந்தார் அமைச்சர்....

துல்ஷானை தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டார் அமைச்சர் பஸில்...

துல்ஷான் எங்கே இருக்கிறீர்கள்? ஏன் கையொப்பமிட வரவில்லை என்று கேட்டார் பஸில்....

சேர், எனது வாகனம் பழுதடைந்து விட்டது. அதனால்தான், வரமுடியவில்லை..... இப்போதுகூட வாகனம் இல்லாமல்தான் இருக்கிறேன் என்றார் துல்ஷான்.

ஓ...... அப்படியா? மருதமுனையிலுள்ள உங்கள் வீட்டில் சற்று தாமதியுங்கள். கொழும்புக்கு உங்களை அழைத்து வர இப்போதே வாகனம் அனுப்புகின்றேன் என்றார் அமைச்சர் பஸில்.....

கிழக்கு ஆளுநருடன் தொடர்பு கொண்ட அமைச்சர் பஸில், துல்ஷானுக்கு வாகன ஏற்பாட்டை செய்து கொடுக்குமாறு பணித்தார்.

ஆளுநர், துல்ஷானுடன் தொடர்பு கொண்டார்.

முதலமைச்சரின் வாகனத்தை அனுப்பிவைக்கின்றேன். உடன் கொழும்புக்கு புறப்படுங்கள் என்றார் ஆளுநர்...

முதலமைச்சரின் வாகனமும் வந்தது... அலரிமாளிகைக்கு சென்ற துல்ஷான் அந்தப் பத்திரத்தில் கையொப்பமிட்டார்.

## ஐயோ நான் ஹக்கீமை சொல்லவில்லை

பள்ளிவாசல்கள் தாக்கப்படுவது தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் சீறிப் பாய்ந்தது தெரியும் தானே.

அப்போது, அங்கு இன்னுமொரு சம்பவமும் நடந்தது. அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தனது பேச்சை முடித்ததன் பின்னர் கோபத்தோடு எதுவுமே பேசாது அமைதியாக இருந்துள்ளார்.

ஆனாலும், அவரால் தனது கோபத்தை அடக்க முடியவில்லை..

மீண்டும் எழுந்தார்... ஜனாதிபதியை நோக்கிய அவர், ''சேர்.... முஸ்லிம்களையும் இந்த அரசையும் மோதவிட்டு வேடிக்கை பார்க்க முயற்சிக்கின்றனர்..

2005 ஆம் ஆண்டும் இதுதான் நடந்தது. அதே ஆள்கள்தான் இப்போதும் இதே வேலையைச் செய்கின்றார்கள் என்றார்....

அப்போது குறுக்கிட்ட மு.கா.தலைவர் ரவூப் ஹக்கீம், ''நீங்கள் என்னைப் பற்றியா சொல்கிறீர்கள்? நான் அப்படிப்பட்டவன் இல்லை... அந்த மாதிரி வேலையெல்லாம் நான் பார்க்கமாட்டேன் என்று கூறினார்.

ரிஷாத், அப்படிப்பட்டவரல்லர் ஹக்கீம்.

அவ்வாறெல்லாம் நடக்கக் கூடியவர் அல்லர் என்றார் ஜனாதிபதி....

ஐயோ..... சேர், நான் ஹக்கீமை சொல்லவில்லை... அஸ்வர் எம்.பி போன்றவர்களைத்தான் சொல்ல வருகின்றேன் என்றார் அமைச்சர் ரிஷாத்..

இதைக் கேட்டு ஜனாதிபதி உட்பட அனைவரும்,நீங்கள் சொல்வது உண்மை ரிஷாத் என்றனர்.

[மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானால் பள்ளிகளில் பாங்கு சொல்ல முடியாது, குர்பான் கொடுக்க முடியாது என்று 2005 ஆம் ஆண்டுகளில் அஸ்வர் எம்.பி பிரசாரம் செய்ததை சுட்டிக்காட்டியே அமைச்சர் ரிஷாட் பதியுதீன் இந்த கருத்தை கூறியிருக்கிறார்.]

## சொன்னதைச் செய்திட்டார் பாருங்கோ

இலங்கையில் பிரபல்யமிக்க தனியார் தொலைக் காட்சியொன்றுக்கு உரிமையாளராகியுள்ளார் பிரபல்யமிக்க முக்கிய முஸ்லிம் அரசியல் வாதி ஒருவர்.

இதற்காக, அவர் செலவிட்ட தொகை எவ்வளவு தெரியுமா? 50 மில்லியன் அமெரிக்க டொலர்கள்.

வாயை மூடுங்கள்..... ப்ளீஸ்

இதற்கு தரகர் வேலை பார்த்திருக்கிறார் தேசிய கூட்டுத்தாபனமொன்றில் பணியாற்றும் ஒருவர்...

தனியார் தொலைக்காட்சியின் புதிய அலுவலகம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் அமையவுள்ளதாக தெரியவருகின்றது.

'முஸ்லிம்களுக்கு ஓர் ஊடகம் தேவை' என்ற தனது நீண்ட நாள் கனவை இதன் மூலம் நனவாக்கி விட்டாராம் அந்த முஸ்லிம் அரசியல்வாதி.

இனி ''டான் டான்'' என்று அந்த ஒளிபரப்பு நிலையம் நாடு பூராகவும் ஒளிவீசவுள்ளதாம்.

## டியூட்டரி வச்சு வகுப்பெடுங்கோவன்!

தேசிய நல்லிணக்கம் தொடர்பான கலந்துரையாடலொன்று ஜப்பான் தூதரகத்தில் கடந்தவாரம் இடம்பெற்றது.

அமைச்சர்களான டியூ, டிலான், பிரதியமைச்சர் முரளிதரன் [கருணா], எம்.பிக்களான ரஜீவ விஜயசிங்க, சுமந்திரன், திலங்க, இராதாகிருஸ்ணன், புளொட் தலைவர் சித்தார்த்தன் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர். கலந்துரையாடல் நிறைவுற்ற பின்னர் உற்சாக பானமும் பரிமாறப்பட்டது. பிரதியமைச்சர் கருணா அம்மான் ''ரெட் வைன்'' சுவைத்து அருந்தினார்.

''ரெட் வைன்'' அடிச்சு முடிந்ததும், நல்லிணக்கம் தமிழ் தலைவர்கள் மத்தியில் தான் முதலில் ஏற்படுத்த வேண்டுமென்று கருணா அம்மான் நிதானமாகத் [?] தெரிவித்தார்.

''அப்படியா? நீங்கள் டியூட்டரி அமைத்து வகுப்பு நடத்துங்கள்'' என்றார் சுமந்திரன் எம்.பி. ஓம்... ஓம்.... வைக்கத்தான் வேண்டும் என்றார் கருணா அம்மான்....

[illegible] முன்னாள் போராளிகளுக்கு வினாக் கொத்து வழங்கி விடை எழுதிக் கேட்கும் நடவடிக்கைக்கு கலந்துரையாடலின்போது பலத்த எதிர்ப்பும் அதிருப்தியும் தெரிவிக்கப்பட்டது.

## தூதுவர் பதவிக்கு வேட்டு?

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் ஐரோப்பிய நாடொன்றிற்கு பயணம் செய்திருந்தார்.

பயணக் களைப்பில் நல்லாகத் தூங்கிய மஹிந்த, மறுநாள் காலை சமய வழிபாட்டில் ஈடுபட எண்ணினார். அந்த நாட்டிலுள்ள இலங்கை தூதரகத்திற்குச் சென்ற ஜனாதிபதி, வழிபாட்டில் ஈடுபடவேண்டும் சுவாமி சிலை எங்கிருக்கின்றது என்று கேட்டார்.

இலங்கை தூதுவர் உட்பட தூதரக அதிகாரிகள் அனைவரும் விழி பிதுங்கி நின்றனர்.

என்ன... எங்கே இருக்கின்றது சுவாமி சிலை என்று அதட்டிக் கேட்டார் ஜனாதிபதி.

சேர், அதுவந்து... என்று இழுத்த தூதுவர் சுவாமி சிலை இருந்த இடத்தைக் காட்டினார்.

ஜனாதிபதிக்கு ஆச்சரியமும், ஆத்திரமும் பொத்துக்கொண்டு வந்தது.

என்ன இது? சுவாமி சிலையை வைக்குமிடமா இது? என்று தூதரகத்திற்குள் முழங்கினார் ஜனாதிபதி.

உங்களுக்கெல்லாம் என்ன செய்யவேண்டும் என்று இப்போதுதான் புரிகின்றது.

நாட்டுக்குத் திரும்பியவுடன் முதல்வேலை உங்களைப் பற்றிய வேலை தான் என்று கூறிய ஜனாதிபதி, உடன் அங்கிருந்து வெளியேறிச் சென்றுவிட்டார்.

சுவாமி சிலை வைக்கப்பட்டிருந்தது தூதரக குளியலறையில்.

தூதுவர் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தொப்பி புரட்டும் அதாஉல்லா



கொழும்பு மாநகர சபையின்ர நிகழ்வு வெள்ளவத்தையில நடந்தது. இதில பெரிய பெரிய தலைகளெல்லாம் கலந்துகொண்டிருந்தன.

கூட்டம் முடிஞ்சதும் பாதுகாப்புச் செயலாளர், அமைச்சர் அதாஉல்லா, மேயர் முஸம்மில் ஆகியோர் கதைத்துக் கொண்டிருந்தனர்.

சரியான நேரம் பார்த்து பாதுகாப்புச் செயலாளரிடம், அமைச்சர் அதாஉல்லாவை, மேயர் முஸம்மில் போட்டுக்கொடுத்துவிட்டார்.

இண்டைக்கு பிரபாகரனை சாடிப் பேசின அமைச்சர் அதாஉல்லா தான் அண்டைக்கு பிரபாகரனைச் சந்தித்து புரியாணி சாப்பிட்டு வந்தவர். அதுக்காண்டி அவர் [அமைச்சர் அதாஉல்லா] என்ன பாடுபட்டவரென்று தெரியுமோ.


பிரபாகரனை சந்திக்க அண்டைக்கு [2002 ஆம் ஆண்டு] எங்கட கட்சிக் கூட்டத்தில மு.கா தலைவர் ரவூப் ஹக்கீம் கட்சியின் செயலாளர், அப்போது பிரசார செயலாளராக இருந்த பஷீர் சேகுதாவூத் மற்றும் மேலதிக பிரசார செயலாளராகவிருந்த மசூர் மௌலானா ஆகியோர் செல்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

கூட்டம் முடிஞ்சதும் ஹக்கீமை சந்திச்சு கெஞ்சிக் கூத்தாடினவர் அதாஉல்லா.

அவரை[பிரபாகரன்]ச் சந்திக்க ஆசையா இருக்கு எண்டு கேட்டு அந்தக் குழுவோட ஒட்டிற்றுப் போய் புரியாணி திண்டிட்டு வந்தவர், என்று மேயர் போட்டுக் கொடுக்க கோத்தாவும் உதெல்லாம் எனக்குத் தெரிஞ்ச சங்கதிதான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த அமைச்சர் அதாஉல்லா அசடு வழிந்துகொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த சொல்லிய பொய்



■ அன்ரன்

இந்த வார அரசியல் கள நிலவரம்

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் எதிர்வரும் 29ஆம் திகதி கொழும்பு வருகிறார். அவரது பயணத்தை இலங்கை வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியது. மறுநாளே அவர் திரும்பி டில்லி திரும்பி விடுவார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும் மட்டுமே அவர் சந்திப்பார் என்று வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் கூறினர்.

எதிர்க் கட்சித் தலைவர்களையோ தமிழ்க் கட்சிகளின் தலைவர்களையோ இந்தப் பயணத்தின் போது மேனன் சந்திக்க மாட்டார் என்பது உறுதியாகி உள்ளது.

ஜெனிவாவில் நடந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் கடந்த மார்ச் மாதம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், அந்தத் தீர்மானத்தை இந்தியா ஆதரித்திருந்த பின்னர் இலங்கை வரும் உயர் அதிகாரி மேனன்.

அவரது பயணத்தின் போது சம்பூர் அனல்மின் நிலைய விவகாரம், தமிழ் நாட்டிலிருந்து இலங்கை மின்சாரம் பெறும் திட்டம், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம், ஜெனிவா தீர்மானத்துக்குப் பின்னரான நிலைமைகள், மீள்குடியமர்வு போன்ற விடயங்கள் குறித்து அலசப்படும் என்று நிகழ்ச்சி நிரல் அதிகாரிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

**ஜெனிவாவின் பின்னர்**

ஆனால், ஜெனிவா தீர்மானத்துக்குப் பின்னரும், நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இலங்கை நடவடிக்கை எடுக்காமல் இருப்பது குறித்து மேனன், ஜனாதிபதி மஹிந்தவுடனும் கோத்தபாயவுடனும் முக்கியமாகப் பேசுவார் என்று தெரிகிறது.

பரிந்துரைகள் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படும் என்று இலங்கை அதிகாரிகள் மீண்டும் மீண்டும் கொடுத்த வாக்குறுதிகளின் அடிப்படையிலேயே ஜெனிவா தீர்மானத்தில் நெகிழ்வுத் தன்மையைக் கடைப்பிடிக்குமாறு புதுடில்லி வொஷிங்டனிடம் விடாப்பிடியாக நின்றது.

அதை அடுத்தே இலங்கை அரசு மீது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு இருந்த ஒரே பிடியையும் அமெரிக்கா தளர்த்தியது. ஆனாலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மூன்று மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும் பரிந்துரைகளை நிறைவேற்றும் நடவடிக்கைகளில் இலங்கை அரசு ஒரு படிகூட முன்னேறவில்லை.

இதனால் ஏற்படப்போகும் நெருக்கடிகள் குறித்தும், ஜெனிவாத் தீர்மானத்துக்குப் பின்னர் இந்திய விரோதப் போக்கை வெளிப்படுத்தும் ஜனாதிபதி மற்றும் கோத்தபாயவின் நடத்தைகள் குறித்தும் மேனனின் பயணத்தின்போது நிச்சயம் ஆராயப்படும் என்று புதுடில்லியில் உள்ள அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஜெனிவா தீர்மானத்துக்குப் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்ட மனக்கசப்புக்களைச் சரிசெய்வதற்காக அமைச்சர் பஸில் ராஜபக்ஷ டில்லிக்குச் செல்ல முயன்றார். ஆனால் அவரது பயணத்துக்கு பச்சைக் கொடி காட்டப்படவில்லை. மூன்று தடவைகள் கேட்கப்பட்ட போதும் அந்தக் கோரிக்கைகள் குறித்து டில்லி அலட்டிக் கொள்ளவில்லை.

**பஸிலுக்கு அனுமதி மறுப்பு**

போர் நடந்தபோது இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட அதியுயர் மட்டக் குழுவில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் முக்கிய உறுப்பினராக இருந்தார். இந்தியத் தலைவர்களுடன் அவருக்கு நல்லுறவு இருந்தது. ஆனாலும் இந்தத் தடவை அவரை ஏற்று உபசரிக்க இந்தியா தயாராக இருக்கவில்லை. அதற்குக் காரணம், டில்லிக்குத் தொடர்ச்சியாக வழங்கப்பட்ட வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்றாமையே.

இனப்பிரச்சினைக்கு 13ஆவது திருத்தத்தையும் தாண்டிச் சென்று தீர்வு காணப்படும் என்று வழங்கப்பட்ட உறுதி மொழி உட்பட பலவற்றில் இலங்கைத் தலைவர்கள் ஏமாற்றி விட்டனர் என்பதே டில்லியின் இன்றைய நிலைப்பாடு.

இந்தப் பின்னணியிலேயே மேனன் கொழும்பு வருகிறார். பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடத்திய பேச்சுக்களின் தொடர்ச்சியை 29ஆம் திகதிய சந்திப்பின் போது மேனன் கொழும்பில் மேற்கொள்வார் என்று இந்திய வெளியுறவுச் செயலர் ரஞ்சன் மாத்தாய் தெரிவித்தார்.

ரியோ டி ஜெனிரோவில் மன்மோகன் - மஹிந்த சந்திப்பு மிகக் குறுகியதாகவே இருந்தது. முதலில் இருவரும் தனியே சந்தித்துப் பேசிக் கொண்டார்கள். அதன் பின்னர் இரு தரப்பு அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் உள்வாங்கப்பட்டார்கள்.

**பொய் சொன்ன மஹிந்த**

இந்தச் சந்திப்பின்போது, வடக்கின் மீள்குடியேற்றம் குறித்து இலங்கை ஜனாதிபதி மன்மோகனுக்கு விளக்கினார். "3 லட்சமாக இருந்த, உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை தற்போது 3 ஆயிரமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார்" என ரஞ்சன் மாத்தாய் ஊடகங்களுக்கு வெளியிட்ட குறிப்பில் தெரிவித்திருக்கிறார்.

> "3 லட்சமாக இருந்த, உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை தற்போது 3 ஆயிரமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார்"

ஜனாதிபதியின் இந்தப் புள்ளி விவரம் தவறானது, அவர் இந்தியப் பிரதமரை ஏமாற்ற முயன்றிருக்கிறார் என்ற குற்றச்சாட்டுக்கள் உடனடியாகவே கிளம்பி உள்ளன. ஏனெனில் கடந்த திங்கட்கிழமை மனித ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 20ஆவது மாநாட்டில் சமர்ப்பித்த அறிக்கையில், இறுதிப் போரில் இடம்பெயர்ந்த மக்களில் இன்னமும் 6022 பேர் மீளக் குடியமர்த்தப்பட வேண்டியிருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதே போன்று, அரச சார்புப் பத்திரிகையான 'டெய்லி நியூஸ்' நேற்று வெளியிட்ட செய்தி ஒன்றில் 6034 பேர் இன்னமும் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளது. இராணுவப் பேச்சாளர் ருவான் வணிக சூரியவை மேற்கோள்காட்டி அந்தச் செய்தி எழுதப்பட்டிருந்தது.

ஜனாதிபதி சரியான புள்ளி விவரங்கள் இன்றி வாய்க்கு வந்தபடி பேசுகிறார் என்ற விமர்சனங்கள் இதன் மூலம் ஏற்பட்டுள்ளன. மஹிந்த உண்மை பேசுவதில்லை எல்லா விடயங்களிலும் இப்படித்தான் என்று உதாரணம் காட்டுவதற்கு, விமர்சிப்பாளர்களுக்கு இது வசதியாகவிட்டது.

மேனனின் இலங்கைப் பயணத்தின் போது தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை அவர் சந்தித்துப் பேசாவிட்டாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் புதுடில்லியில் இந்த வாரம் முக்கிய இந்தியத் தலைவர்களைச் சந்தித்துப் பேச வாய்ப்புக்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

**சம்பந்தன் சென்னையில்**

சென்னையில் இருதய அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட சம்பந்தன், அதன் தொடர் சிகிச்சைக்காக கடந்த 6ஆம் திகதியளவில் புறப்பட்டுச் சென்றார்.

அதற்கு முன்னர் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டமைப்புக் கட்சிகளின் தலைவர்களுடனான சந்திப்பில் அவர் கலந்துகொண்டார். அந்தச் சந்திப்பில் கூட்டமைப்பை நிர்வகிப்பதற்கென ஒரு உயர் சபையை அமைப்பதற்கு ஏனைய தலைவர்களுடன் சேர்ந்து அவர் இணங்கி இருந்தார் என்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என்கிற புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்திருந்தார். அது குறித்த இறுதியான தீர்மானத்தை எட்டுவதற்காக 17ஆம் திகதி மீண்டும் கூடி ஆராய்வது என்று கட்சித் தலைவர்கள் அந்தக் கூட்டத்தில் இணங்கிக் கொண்டனர்.

அந்தக் கூட்டம் நடந்த சில நாள்களில் சம்பந்தன் சென்னைக்குப் புறப்பட்டு விட்டார். இந்த மாத இறுதி வரைக்கும் தான் இலங்கை திரும்ப மாட்டார் என்பது அவருக்குத் தெரிந்தே இருந்தது. அவர் இல்லாத நிலையில் 17ஆம் திகதி நடக்க இருந்த கூட்டமைப்புத் தலைவர்களின் கூட்டம் நடக்கவில்லை.

ஆனாலும் இந்தியா புறப்படும் போதே, வாய்ப்புக் கிடைத்தால் டில்லியில் முக்கிய தலைவர்களைச் சந்திக்கும் திட்டம் சம்பந்தனுக்கு இருந்தது. திருகோணமலையில் அவர் ஆற்றிய உரை குறித்து இந்திய அதிகாரிகளிடம் சில மனக்கசப்புக்கள் இருந்ததாகத் தகவல்கள் கசிந்த நிலையில் அவர் இந்தச் சந்திப்புக்களுக்குத் திட்டமிட்டிருக்கக் கூடும்.

எனினும் அவர் பிரதமர் மன்மோகன் அல்லது வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவைச் சந்திப்பாரா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.


**பேச்சுக்கு வாய்ப்பு இல்லை**

எப்படி இருந்தாலும் இந்த மாதத்துக்குள் மஹிந்தவும் சம்பந்தனும் சந்தித்துக் கொண்டு இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான சாத்தியங்கள் ஏதுமில்லை என்றே கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ஜெரா

# போர்த் தாய்கள்



தமிழ்ச் சமூகத்தில் கணவனை இழந்த பெண்கள் தனி அடையாளத்துக்கு உரியவர்களாகின்றனர். ஆண் துணையற்ற அவர்கள் பொதுப்புத்திப் பார்வையின்படி கழிவிரக்கப்பட வேண்டியவர்களாகவும், எப்போதும் குறித்த சமூகத்தின் கறைபடிந்த பக்கங்களுக்கு எடுத்துக் காட்டாய் இருப்பவர்களாகவுமே நோக்கப்படுகின்றனர்.

மனித அந்தஸ்தின் அடிப்படையில், முதலாம் அடுக்கில் ஆண்களும், இரண்டாம் அடுக்கில் பெண்களும், மூன்றாம் அடுக்கில் ஆண் துணையை இழந்த இந்தப் பெண்களுமே அடுக்கமைவு பெற்றிருக்கின்றனர். ஒருவகையில் ஆண் வழிப்பட்ட தமிழ்ப் பாரம்பரியத்தில் இவர்கள் ஒதுக்கப்பட்டவர்கள். இப்போதும் நம் மத்தியில் பொட்டழித்த பெண்கள் பற்றிய பார்வை குற்றம் நிரம்பப் பெற்றதாகவே இருக்கின்றது. அனைத்திலும் முற்போக்குத்தனம் புகுந்து கொண்டதாகக் கற்பனை செய்து கொண்டாலும் குறித்த விடயத்தில் மட்டும் மாற்றம் நிகழ்ந்தமைக்குச் சான்றில்லை.

### துணையிழந்தோர் பற்றிய குறிப்பு

தமிழ்ப் பண்பாட்டு மரபில் சங்க காலத்துக்குப் பின்னர் அதிக எண்ணிக்கையான பெண்கள் ஆண் துணையை இழந்தது, ஈழ விடுதலைப் போராட்ட காலத்தில்தான். சங்க காலத்திலும் இதேபோல் நிலச் சண்டைகள் ஆண் துணைகளைக் கூட்டமாக இறக்க வைத்தன.

அன்று போர்க்களத்தில் கணவன் மாய்ந்த கையோடு, மனைவி உடன்கட்டை ஏற்றப்பட்டாள். ஆனால் இப்போது தமிழ்ப் பண்பாட்டில் ஏற்பட்டுவிட்ட நெகிழ்வுத் தன்மை அனைத்தையும் அனுசரித்துப் போகச் செய்திருக்கின்றது. பெண்கள் உடன்கட்டை ஏற்றப்படுவதில்லை. அதற்குச் சமமான படிநிலையில் வைத்துப் பார்க்கப்படும் நிலையோடு அவர்களுக்கான கணவன் இழப்புத் தண்டனை மட்டுப் படுத்தப்பட்டிருக்கின்றது.

### அதிகரித்த விதவைகள்

இப்படித் தண்டனைக்கு உள்ளாக்கப்படுபவர்களின் எண்ணிக்கையை ஆயுதப் போராட்டம் என்றுமில்லாதவாறு அதிகரித்தது. போரில் கணவன் இறத்தல், காணாமல் போதல், சுட்டுக்கொலை செய்யப்படல் போன்றவற்றால் அதிக எண்ணிக்கையான பெண்கள் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனால்தான் இவர்கள் போர் விதவைகள் என்னும் பெருந்தொகுதியினராகத் தனித்து அடையாளம் காணப்படுகின்றனர்.

இலங்கையில் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் கணிப்பு ஒன்றை மேற்கொண்ட தொண்டு நிறுவனங்களும், துறைசார்ந்த அமைச்சும் போர் விதவைகள் குறித்த ஆச்சரியம் தரும் புள்ளி விவரத்தை வெளியிட்டன.

### அதிர்ச்சி தரும் புள்ளி விவரம்

இலங்கை மகளிர் விவகார மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்ட ஆய்வில், வடக்குக் கிழக்கில் மட்டும் 89 ஆயிரம் போர் விதவைகள் இருக்கின்றனர் என்ற விடயம் வெளிவந்துள்ளது. ஆனால் ஐ.நாடுகள் சபையின் கணிப்பின்படி 90 ஆயிரம் விதவைகள் வடக்குக் கிழக்கில் உள்ளனர் என்ற தகவல் வெளிவந்துள்ளது.

இந்த 89 ஆயிரம் பேரில் 49 ஆயிரம் பேர் கிழக்கு மாகாணத்திலும், 40 ஆயிரம் பேர் வடக்கிலும் இருக்கின்றனர். இதில் 12 ஆயிரம் பேர் 40 வயதுக்குக் குறைந்த போர் விதவைகள். 80 ஆயிரம் பேர் ஆகக் குறைந்தது மூன்று பிள்ளைகளோடு இருப்பவர்கள் என்று அந்த அறிக்கை குறிப்பிடுகின்றது.

யாழ்ப்பாணத்தில் 26,340 விதவைகளும் (40 வயதுக்குட்பட்டவர்கள் 3,118 பேர், 20வயதுக்கும் 38 வயதுக்கும் உட்பட்டவர்கள்). போர் அதிகம் இடம்பெற்ற பகுதியான கிளிநொச்சி மாவட்டத்தில் 5,403 பேரும், வவுனியா மாவட்டத்தில் 1,303 பேரும், மன்னார் மாவட்டத்தில் 3,994 பேரும் போர் விதவைகளாக இருக்கின்றனர் என்று வடக்குப் பெண்கள் அபிவிருத்தித் திணைக்களத்தின் 2010ஆம் ஆண்டுக்கான கள ஆய்வு அறிக்கை ஒன்று குறிப்பிடுகின்றது.

இதில் இறுதியாகப் போர் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கும் போர் விதவைகள் பற்றிய கணிப்பீடு இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### எதிர்காலத்தின் மீது பாறாங்கல்

ஆக ஆச்சரியப்பட வைக்கும் போர் விதவைகள் பற்றிய புள்ளி விவரம் நமது எதிர்காலம் குறித்த சிந்தனையில் பெரிய பாறாங்கல்லைத் தூக்கிப் போடுகின்றது. இந்தப் பெண்களின் எதிர்காலம், இவர்களின் பிள்ளைகளின் எதிர்காலம் என்பன இருட்டுக்குள் நிகழும் குருட்டாட்டமாகத்தான் இப்போதும் இருக்கின்றது.

கணவன் இறந்தார் என்பதை உறுதிப்படுத்தி மரணச் சான்றிதழ் வழங்கினால் மாத்திரம் 50,000 ரூபாவை நட்ட ஈடாக அரசிடமிருந்து பெறலாம். பல போர் விதவைகளுக்கு தமது கணவன் இருக்கிறாரா இல்லையா என்பது கூடத் தெரியாது. இறுதிப் போரில் தமது மனைவியுடன் வந்தே இராணுவத்திடம் சரணடைந்திருக்கின்றனர். ஆனால் இராணுவம் இப்போது ''தாம் கைது செய்யவேயில்லை'' எனச் சத்தியம் செய்துவிட்டது.

சாத்திரக்காரர்கள் தரும் ''அவர் வருவார்'' என்ற நம்பிக்கையால் அந்தப் பெண்கள் இன்னமும் கணவனை

> “ சவால்களைத் தாண்டி நிமிர உழைக்கும் போர் விதவைகளுக்காக தமிழ்ச் சமூகம் என்ன செய்யப் போகின்றது? வட்டியில்லாக் கடன்களும், குறைந்த வட்டிக் கடன்களும், சிறு உற்பத்திக்கான கடன்களும் பல கட்டமாக வழங்கப்பட்டாயிற்று. ஆனால் போர் விதவைகள் அதனால் அடைந்த முன்னேற்றத்தைத் தேடித்தான் பார்க்க வேண்டும். இந்த நிலையில் அவர்தம் வாழ்வுப் படிகளை உயர்த்தக் கூடிய புதிய வழிமுறைகளைக் கண்டறிதல் அவசியமானதாகும்.

எதிர்பார்த்து இருக்கின்றனர். எதிர்ப்படும் முகங்களில் எல்லாம் தம் கணவனைத் தேடி அலைகின்றனர். இந்த நிலையில் மரணச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டுகின்றனர். மரணச் சான்றிதழ் சமர்ப்பிக்காதவர்களுக்கு மாதாந்தம் 150 ரூபா கொடுப்பனவு மட்டும்தான் வழங்கப்படும். இப்போது இருக்கும் விலைவாசி உயர்வுகளுக்கு மத்தியில் மாதாந்தம் 150 ரூபா பெறுவது நகைப்புக்கிடமான ஒன்று. அதை வைத்து ஒரு நேர சாப்பாட்டுப் பொழுதைக் கூடக் கழிக்க முடியாது. அதுவும் மூன்று பிள்ளைகளோடு வாழும் தாயின் நிலை என்னவாகும்?

### வெங்காய வாழ்க்கை

இந்த நிலையில் அவர்கள் கடக்கப் போகும் பொருளாதாரக் கஷ்டங்கள் எப்படியிருக்கும்? வாழ்வில் கிடைத்த அனைத்துத் தேட்டங்களையும் முள்ளிவாய்க்காலில் இழந்து கடைசியாய் கணவனையும் இழந்த இவர்களிடம் இனி இழக்க எதுவுமில்லை. வடக்கில் தண்ணீருக்குப் பஞ்சமில்லாததால் கண்ணீருக்கு மட்டும் குறைவில்லாமல் இருக்கின்றது.

பல கட்டப் பதிவுகளுக்கு மத்தியில் கிடைக்கும் மாதாந்த நிவாரணங்கள் போர் விதவைகளின் வாழ்வுக்கு ஒளியேற்ற முயற்சிக்கின்றன. அதுவும் ஒழுங்காகக் கிடைப்பதில்லை. நம்மிடையே ஊறியிருக்கும் பாரபட்சம், முன்னைய கோபத்துக்கான பழிவாங்கல் என்பன நிவராண வழங்குதலிலும் தாக்கம் செலுத்துகின்றன.

இவ்வளவையும் மீறிப் பெற்றுக்கொள்ளப்படும் நிவாரணப் பொருள்கள் பல வேளைகளில் எந்தவித பயனையும் தராமல் போவதுமுண்டு. தைக்கத் தெரிந்தவர்களுக்குத் தையல் இயந்திரம் கிடைப்பதில்லை. அவர்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கப்படும். அதை வைத்து அவர்களால் என்ன செய்ய முடியும்? குறைந்த விலைக்கு யாருக்கும் அதை விற்பனைசெய்து விட்டுக் கொஞ்ச நாள் பொழுதைப் போக்குவர். பின் மீண்டும் வறுமை சூடுபிடிக்கத் தெருவுக்கு வந்துவிடுவர்.

நிறுவனங்களும் என்ன செய்யமுடியும்? தமக்கு வழங்கப்படும் நிதியில், கட்டுப்படியான பொருள்களை எந்த பேதமுமின்றி வழங்கி நழுவி விடுகின்றன. அவற்றினால் உணரப்படும் பயன்பற்றி கரிசனை கொள்வார் யாருமில்லை.

இதிலிருந்து தேறிக் கிடைக்கும் உதவிகளைக் கொண்டு வசந்த காலம் நோக்கிப் பயணிக்கத் தொடங்கும் பெண்கள் வன்னிப் பகுதியில் இல்லாமலில்லை. அவர்களின் முன்னுதாரணத்தைப் பின்பற்றுபவர்களைவிட அதனை விமர்சிப்பவர்கள் அதிகம் இருப்பதால் அந்தக் கரத்தையும் யாராலும் பற்றிப் பிடிக்க முடியாமல் இருக்கின்றது.

### அழுக்காகும் விதவைகள்

எல்லா முயற்சிகளும், முடிவுகளும் வறுமையில் கொண்டுவந்து விட போர் விதவைகள் அழுக்குப் பொருளான நிலைக்கு வருகின்றனர். வறுமை என்ற ஒன்று மானம், மரியாதை, கலாசாரம், பண்பாடு என அனைத்தையும் வெங்காயமாக்கி விடுகின்றது.

அழும் பிள்ளையின் பசி தீர்க்க, யாரோ ஒருவனின் தசைப்பசி தீர்க்க வேண்டிய கட்டாயத்துக்குள் சிலர் தள்ளப்படுகின்றனர். மர்மக் குழந்தைகள் எறியப்படுகின்றன. புதைக்கப்படுகின்றன.

இது சரியா? தவறா? என்ற முடிவைக்கூட எடுக்க முடியாத நிலையில் பல புத்திஜீவிகளும், எழுத்தாளர்களும் திணறி நிற்கின்றனர்.

### முன்னேற வழியுண்டு

இதை ஏற்காத, வலுவுள்ள பெண்கள் கூலி வேலைக்குப் போகின்றனர். வீதி திருத்த வேலைகளில் ஈடுபடுகின்றனர். பல பெண்கள் மேசன்களுக்கான முட்டாள்களாகக் கூட பணியாற்றுகின்றனர். இந்த வேலைகள் மிகவும் கஷ்டமானவையாக இருக்கின்ற போதிலும், வீட்டில் இருக்கும் பிள்ளைகளின் பசியும், சமூகப் பார்வையும் போர் விதவைகளைத் துயரத்தைத் தாங்கி நடக்க வைக்கின்றது.

இதில் கிடைக்கும் முன்னேற்றம் அவர்களின் வாழ்வை வசந்தகாலம் நோக்கி நகர்த்திச் சென்றால் அந்தத் துயரம் பெறுமதியானதுதான். ஆனால் பலருக்கு அதுதானும் கிடைப்பதில்லை. ''பட்ட காலிலேயே படும்'' துயரை இவர்கள் பல தடவைகள் எதிர்கொள்கின்றனர். குறைந்த ஊதியமும், வேலைத்திறன் விருத்திக் குறைவும், கூலி வேலையைக் கூட தட்டிப் பறிக்கச் செய்து விடுகின்றன.


### யாரும் உயர்த்திவிடலாம்

இவ்வாறான சவால்களைத் தாண்டி நிமிர உழைக்கும் போர் விதவைகளுக்காக தமிழ்ச் சமூகம் என்ன செய்யப் போகின்றது? வட்டியில்லாக் கடன்களும், குறைந்த வட்டிக் கடன்களும், சிறு உற்பத்திக்கான கடன்களும் பல கட்டமாக வழங்கப்பட்டாயிற்று. ஆனால் போர் விதவைகள் அதனால் அடைந்த முன்னேற்றத்தைத் தேடித்தான் பார்க்க வேண்டும். இந்த நிலையில் அவர்தம் வாழ்வுப் படிகளை உயர்த்தக் கூடிய புதிய வழிமுறைகளைக் கண்டறிதல் அவசியம். பெரும் பணக்காரர்களாக உலகமெங்கும் வாழும் தமிழர்களின் கடைக்கண் பார்வை பட்டாலே போதும். பல போர் விதவைகளுக்கு பொற்காலம் பிறந்துவிடும். ஏதோ ஒருவகையில், நடந்து மௌனித்த ஆயுத விடுதலைப் போரட்டத்தில் போர் விதவைகளின் பங்கும் கணிசமானது. அவர்கள் நமக்காக இழந்த வாழ்க்கையின் ஒரு பகுதியையாவது மீட்டுக் கொடுக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமை. இதனை யார் செய்வார்கள்? காலம்தான் பதில் தர வேண்டும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியகாந்தி - தகவல் பெட்டி





பொப் இசை மன்னி மடோனா, தான் இசை நிகழ்ச்சி நடத்தும் இடத்தைக் கழுவித் துடைத்து அடையாளம் தெரியாமல் அழித்துவிட தனி ஒரு படையை நியமித்திருக்கிறார். ரசிகர்கள் யாரும் தனது மரபணுவை (டிஎன்ஏ) எடுத்து விடாமல் இருக்க இந்த ஏற்பாடாம். உதிரும் தலைமுடி, ஆடைகளின் பாகங்கள் என்று எதையும் விட்டு வைக்காமல் அள்ளிவிட வேண்டும். இதுவே தனிப்படைக்குரிய வேலை. இதற்கிடையில் உலகெங்கும் தனது இசை நிகழ்ச்சியை நடத்திவரும் மடோனா இஸ்தான் புல்லில் மார்பகத்தையும் இத்தாலியில் பின்புறத்தையும் ரசிகர்களுக்குத் திறந்து காட்டப் போய் விமர்சனங்களில் சிக்கிக் கொண்டிருக்கிறார். ←



பிரிட்டனில் இரண்டு நாள்கள் தொடர்ந்து மழை பெய்ததைத் தொடர்ந்து சேற்றுத் திருவிழா நடந்தது. எண்ணுக்கணக்கற்ற வகையில் ஆள்கள் வந்து குவிந்ததில் முன்கூட்டியே டிக்கெட் வாங்கிய பலரால் திருவிழா இடத்தையே அடைய முடியாதபடிக்கு வாகன நெரிசல் ஏற்பட்டுவிட்டது. ↑

டென்னிஸ் நட்சத்திரம் அன்டி முராரே, ஒரு கார் பிரியர். அடிக்கடி புதிய கார்களை வாங்கிக் குவிப்பதில் வல்லவர். இப்போது புதிய சில்வர் நிற ஜக்குவார் கார் வாங்கியிருக்கிறார். அதன் பெறுமதி மட்டும் 85 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்ஸ். →





மியன்மாரின் ஜனநாயகத் தலைவி ஆங்ஷான் சூகி பிரிட்டனுக்குச் சென்ற போது நல்ல வரவேற்புக் கிடைத்தது. சிறப்பாக கௌரவிக்கப்பட்டார். பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெமரூன் அவரை அழைத்துக் கொண்டு பூங்காவிலும் உலவினார். அந்தப் படங்களைப் பார்த்து, பிரிட்டனில் பொருளாதாரக் கஷ்டம் வந்தாலும் வந்தது ஒரு ஒழுங்கான குடை கூடவா வாங்க முடியவில்லை பிரதமருக்கு என்று ஊடகங்கள் கேள்வி எழுப்பியுள்ளன. ↓

ஹொலிவூட் நடிகை பாரிஸ் கில்டன் திடீரென வீதியில் ரசிகர்களுக்குக் காட்சி கொடுத்ததால் அவர்கள் திக்கு முக்காடிப் போயினர். அவர்களின் விருப்பத்தைக் கெடுக்காமல் அவர்களுடன் ஒளிப்படங்களும் எடுத்துக் கொண்டார். வாய்ப்புக் கிடைத்தவர்கள் வானத்துக்கும் பூமிக்கும் துள்ளிக் குதித்துக் கொண்டார்கள். →



© Splash News




இலங்கைத் தமிழ்ப் பூர்வீகத்தைக் கொண்ட மியா என்கிற மாதங்கி அருள்பிரகாசம், பிரிட்டனின் பாடகி. லண்டன் ஒலிம்பிக்கில் அவரது பாடலும் இந்த முறை இடம்பெறுகிறது. ↑




...wspapers Ltd


உலகில் மிக அதிக சம்பளம் பெறும் 'மொடல்' சின்டி கிராபோர்ட். அவரது அழகான, அம்சமான 10 வயது மகளும் நிச்சயம் 'மொடல்' உலகுக்கு வருவார் என்று ஆரூடம் கூறுகின்றன மேற்கு ஊடகங்கள். அண்மையில் பிரிட்டனில் உள்ள பிரபலங்களுக்கு மட்டுமான விடுதியில் தாயும் மகளும் மகிழ்ந்திருந்த சந்தர்ப்பத்தைப் பார்த்து மகளை எப்போது 'மொடல்' உலகுக்குள் விடப் போகிறீர்கள் என்ற கேள்வி சின்டியை துளைத்து எடுக்கிறதாம். ↓



கியூபாவின் முன்னாள் அதிபர், இரும்பு மனிதன் பிடல் காஸ்ட்ரோ இப்போதெல்லாம் யோகாசனம் செய்வதில் அதிக நாட்டம் காட்டுகிறாராம். நோய்வாய்ப் பட்டிருந்தாலும் தனது மக்களுக்காக ஊடகங்களில் எழுதுவதை பிடல் தவிர்த்ததில்லை. அவர் செவ்வாயன்று எழுதியது யோகா பற்றியே! ↑

ஹொலிவூட் நடிகர் ஜாஸன் டார் மனைவி கேத் ஆகியோருக்கு மூன்று குழந்தைகள். இரண்டாவதாக பிறந்தவர்கள் இரட்டையர்கள் (3 வயது) தமது தாயைவிட, வீட்டில் கூடவே இருக்கும் புரூக்கே என்ற 28 வயது இளம் பெண்ணுடன் ஒட்டிக் கொள்கின்றனர். உண்மை என்னவென்றால் புரூக்கேதான் இரட்டையர்களான வெல்வெட் மற்றும் பீலிக்ஸின் கருமுட்டை அம்மா. அதாவது புரூக்கேயின் கருமுட்டையில் கருக்கட்டிய குழந்தைகளைத்தான் கேத் பெற்றெடுத்தார். குடும்பம் முழுவதும் இன்று சந்தோஷமாக இருக்கிறது. அப்போ! வழக்கு என்று வந்தால் உண்மையான அம்மா யார்? ↓





↑ சீனா கால்பந்தாட்டத்திலும் வேகமாக வளர்ந்து வருகிறது. செல்ஸியா அணியின் முன்னாள் முன்கள வீரரான ட்ரொக்பா, சீனாவின் ஷங்காய் ஷென்கூஆ அணியில் இணைந்து அடுத்த பருவத்தில் ஆட உள்ளார். வெளிநாட்டின் புகழ்பெற்ற வீரர்கள் சீன உள்ளூர் கழகங்களின் போட்டியில் ஆட இருப்பது இதுவே முதற்ற [illegible] மட் [illegible] மில்லியன் டொலர் சம்பளமாக வழங்கப்பட உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்து போன மக்கள் பிரதிநிதிகள்

■ உசிலமணி

ஆறடி நிலத்தில் அடங்கும் வாழ்க்கைக்காக மக்கள் எல்லோருமே போராடிக் கொண்டிருக்கின்றனர். தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அந்த ஆறடி நிலம் கூடக் கிடைக்குமா என்று ஏங்க வேண்டியிருக்கிறது.

நிலப் பறிப்பே, ஓர் இனத்தின் அடக்கு முறையின் ஆரம்பப் புள்ளி. அந்த நிலப்பறிப்பை சிங்கள தேசம் திட்டமிட்டு தொடர்ச்சியாக தமிழினத்தின் மீது மேற்கொண்டு வந்திருக்கின்றது. கல்லோயா குடியேற்றத் திட்டத்தில் பிள்ளையார் சுழி போடப்பட்ட நில அபகரிப்பு இற்றைவரையில் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

இந்தத் திட்டமிட்ட தமிழின அழிப்புக்கு எதிராகவே தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தொடங்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் இவ்வாறான நில அபகரிப்பு நடவடிக்கைகள் தடுக்கப்பட்டிருந்தன. ஏற்கனவே குடியிருந்தவர்களும் விரட்டப்பட்டிருந்தனர். தமிழரின் ஆயுதப்பலத்துக்கு அஞ்சிய அரசுகள் நில அபகரிப்பையோ, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களையோ மேற்கொள்ளவில்லை.

ஆயுதப் பலம் தமிழர்களிடமிருந்து பிடுங்கப்பட்டு விட்ட பின்னர் தமது இன அழிப்பு நடவடிக்கைகளை மீளவும் சிங்கள தேசம் முனைப்புடன் மேற்கொள்ளத் தொடங்கியிருக்கிறது. இதற்காக சிங்கள அரசுகள் திட்டமிட்ட வகையில் பன்முகத் தாக்குதல்களை ஒரே நேரத்தில் தமிழர்கள் மீது தொடுத்திருக்கின்றது.

தமிழர்களின் தனித்துவமான பண்பாட்டைச் சீரழிப்பது, தமிழர்களின் பூர்வீக இடங்களில் சிங்கள மக்களை மீளக்குடியமர்த்துவது, புத்தர் சிலைகள் அமைப்பது என்று பலமுனைத் தாக்குதல்கள் ஒரே நேரத்தில் தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்டுள்ளன.

இதனை விட யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினர் தாம் நிலை கொண்டுள்ள நிலங்களைத் தங்களுக்கே வழங்குமாறு கோரத் தொடங்கியுள்ளனர். சர்வதேசத்தின் பார்வைக்கு தாங்கள் சட்டரீதியாகவே நிலங்களை கோருவதாக வெளிக்காட்டும் படையினர் மறுமுனையில் மிரட்டல் தொனியில் காணிகளைப் பெற்று விடத் துடிக்கின்றனர்.

பிரதேச செயலர்களால் படையினர் கோரிய காணிகள் வழங்கப்படாததைத் தொடர்ந்து வடக்கு மாகாண ஆளுநர் அந்த விடயத்தை தன் கையிலெடுத்தார். பிரதேச செயலர்களை மிரட்டுகின்றார். வடக்கில் இருக்கும் ஒவ்வொரு குடிமகனுக்கும் ஆளுநரின் ஆட்சி எப்படிப்பட்டதென்பது தெரியும். அவ்வாறான நிலையில் ஆளுநர் தனது அதிகார எல்லை வரம்பை மீறி பிரதேச செயலர்களிடம் காணி கேட்பதை யாராலும் தடுக்க முடியாத நிலையே காணப்படுகின்றது.

ஆளுநர் மற்றும் கட்டளைத் தளபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மூவரும் தமிழ் மக்களின் தனியார் காணிகளை சுவீகரிக்கவில்லை. அரச காணிகளையே கேட்கின்றோம் என்கின்றனர். ஆனால் தனியார் காணிகளையும் தமக்குப் பெற்றுத் தருமாறு கோரி பிரதேச செயலகங்களுக்கு அந்தந்தப் பகுதி இராணுவத்தினர் கடிதங்கள் அனுப்பியுள்ளனர். இந்தக் கடிதங்கள் கட்டளைத் தளபதிக்கு தெரியாமல் அல்லது பாதுகாப்புச் செயலரின் அனுமதி பெறப்படாமல் அனுப்பப்பட வாய்ப்பில்லை ?

யாழ். மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அரச காணிகள் என்று எவையும் இல்லாத நிலையே காணப்படுகின்றது. ஒவ்வொரு அரச திணைக்களத்துக்கும் ஒதுக்கப்பட்ட காணிகளே உள்ளன. அந்தத் திணைக்களங்களுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளில் அந்த திணைக்களங்கள் இயங்க முடியாதவாறு இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்துக் கொண்டுள்ளனர். மேலும் பொதுவாக மக்களுக்கு சேவை வழங்கும் திணைக்களங்கள் மக்கள் குடிப்பரம்பல் அமைந்துள்ள இடங்களிலேயே காணிகளைப் பெற்றிருந்தன. இந்த இடங்கள் இராணுவ முகாம்கள் அமைப்பதற்கு பொருத்தமற்றவை. ஏனெனில் தவறுதலான வெடி விபத்துச் சம்பவங்கள் இடம்பெறுகின்ற பொழுது பொதுமக்களும் பாதிக்கப்படுவர். இவ்வாறானதொரு நிலையில் படையினரின் இத்தகைய நில ஆக்கிரமிப்புக்கு எதிராக கடந்த வாரம் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளின் ஆயுத ஒடுக்கல்களுடன் மக்களின் உரிமைக் குரல்களும் அடக்கப்பட்டு விட்ட பின்னர் உரிமை கேட்டு மக்கள் நடத்திய போராட்டங்கள் இவை. புலிகள் களத்திலிருந்து அகற்றப்பட்ட பின்னர் யாழ். மண்ணில் தமிழ் கட்சிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆர்பாட்டங்கள் எதுவும் இடம்பெறவில்லை. தென்னிலங்கைக் கட்சிகளே யாழில் வந்து ஆர்பாட்டங்களை மேற்கொண்டிருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதற்கு அரசுடன் இணக்க அரசியல் நடத்தும் கட்சிகள் தவிர்ந்த ஏனைய கட்சிகள் ஆதரவுக் குரல் கொடுத்திருந்தன. இருப்பினும் ஆர்பாட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் நீதிமன்றில் பொலிஸார் குறித்த ஆர்பாட்டத்துக்கு தடையுத்தரவு பெற்றிருந்தனர்.

அசம்பாவிதங்கள் நடைபெறும் என்று உறுதியான தகவல்கள் கிடைக்கப் பெற்றிருப்பதால் இந்த ஆர்பாட்டத்துக்கு பொலிஸார் நீதிமன்றில் தடையுத்தரவு கோரியிருந்தனர். நீதிமன்றினால் வழங்கப்பட்ட தடையுத்தரவில் என்ன காரணத்திற்காக தடை விதிக்கப்படுகின்றது என்பது குறிப்பிடப்படாமலேயே நீதிமன்றம் தடையை விதித்திருந்தது.

பொலிஸாருக்கு அசம்பாவிதங்கள் நடைபெறும் என்று உறுதியாகத் தெரிந்தால் அந்த அசம்பாவிதத்திலிருந்து ஆர்ப்பாட்டக்காரர்களைப் பாதுக்க வேண்டியது தானே அவர்களது பொறுப்பு. அப்படியிருக்கையில் ஆர்ப்பாட்டமே நடைபெறாமல் தடையுத்தரவு வாங்குவதற்கு காரணம் என்ன ? குறித்த ஆர்ப்பாட்டம் ஆரம்பமாவதற்கு பல மணி நேரத்துக்கு முன்பாகவே நூற்றுக்கு மேற்பட்ட இராணுவப் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் இவ்வாறு அளவுக்கதிகமாக ஏன் குவிக்கப்பட்டிருந்தனர்.

மக்கள் தங்களது உரிமைகள் மீறப்படுகையில் அதற்கு எதிராக குரல் கொடுக்க முடியாது என்று வடக்கில் தடுக்கப்படும் அதே வேளையில் தெற்கில் ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைபால் வலி.வடக்கில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்ட போது அதனையும் பொலிஸார் தடுக்க முற்பட்டனர். இருப்பினும் மக்களின் உணர்வு எழுச்சிகளை கட்டுப்படுத்த முடியாததால் ஆர்ப்பாட்டம் அங்கே வெற்றியளித்தது.

தமிழர்கள் தங்களது உரிமைகளுக்காக மீண்டும் குரல் கொடுக்கக் கூடாது. அதனைத் தடுப்பதற்கு அரசு தனது சகல வகையான உத்திகளையும் கையாள்கின்றது.

தமிழர்களின் இந்த நில அபகரிப்பு போராட்டங்களை தடுக்க அரசு முயற்சிக்கும் அதேவேளையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களும் உறுப்பினர்களும் என்ன செய்து கொண்டிருக்கின்றனர்? வலி.வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் தெல்லிப்பழை, சுன்னாகம், மானிப்பாய், சங்கானை, நல்லூர், பருத்தித்துறை பிரதேச சபைகளின் தலைவர்கள் மாத்திரமே கலந்து கொண்டனர். அத்துடன் மிகச் சொற்பமான உறுப்பினர்களே வந்திருந்தனர்.

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 13 உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றியிருந்தத. 144 உறுப்பினர்கள் கூட்டமைப்பு சார்பில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். மக்களின் உரிமைகளுக்குக் குரல் கொடுக்கவே அவர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

ஆனால் அதில் 6 சபைகளின் தலைவர்கள் உள்ளடங்கலாக 30 உறுப்பினர்கள் வரையிலேயே குறித்த ஆர்ப்பாட்டத்துக்குச் சென்றிருந்தனர். மக்களின் தலைவர்கள் மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்காமல் வேறு என்ன செய்யப் போகின்றார்கள்.

மக்கள் உரிமைக்காகப் போராட முடியாதவர்கள் உறுப்பினர்களாக இருந்தாலென்ன இல்லாவிட்டால் என்ன? பிரச்சினை வேண்டாம் என்று கருதுபவர்கள் ஏன் அரசியலுக்கு வந்தார்கள்.

எங்கள் தலைவர்களே இப்படியிருந்தால் சிங்களவர்களின் நில அபகரிப்பை எந்தக் காலத்திலுமே தடுக்க முடியாது.

# கருக்கப்படும் மொட்டுக்கள்

■ நித்தியா

இன்றைய உலகம் பலவிதமான புதிய பிரச்சினைகளை நாளுக்கு நாள் சந்தித்துக்கொண்டே இருக்கின்றது. அதில் அண்மைக் காலமாக உலகையே உலுக்கிக் கொண்டிருக்கும் ஒரு மகாபாதகச் செயலாக உருவெடுத்திருப்பது சிறுவர் பாலியல் துன்புறுத்தல்களாகும்.

நறுமணம் மிக்க மலர்களாக மலர்ந்து நாளை மணம் பரப்ப வேண்டிய சிறுவர்களாகிய மொட்டுக்கள் முளையிலேயே கருக்கப்படுகின்றனர். காமவெறிபிடித்த அயோக்கியர்களினால் தீய நடத்தைகளால் சிறுமிகள் துன்புறுத்தப்படுகின்றனர். இதனால் உடல் மற்றும் உணர்வு ரீதியாகப் பாதிக்கப்பட்டு பிள்ளைகளின் எதிர்காலமே கேள்விக் குறியாகிவிடுகின்றது.

இவர்களால் பாதிக்கப்படுபவர்கள் சிறுமிகளாக மட்டும் அல்லாமல் சிறுவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை அமெரிக்காவின் அறிக்கை ஒன்று சில நாள்களின் முன்பு உறுதிப்படுத்தி உள்ளது.

இலங்கையில் தினமும் 3 பிள்ளைகளுக்கு குறையாது வன்புணர்வுக்குட்படுத்தப்படுகின்றனர் என்று தெரிவிக்கும் பொலிஸார் பொலிஸ் பதிவுகளுக்கு உட்படாத சம்பவங்களும் அதிகம் என்று கூறியிருப்பது வருத்தத்துக்குரியது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக ஊடகங்கள் நாளுக்கு நாள் உடனுக்குடன் செய்திகளை வெளியிடுகின்றன. சில குற்றவாளிகளும் கைது செய்யப்படுகின்றனர். எனினும் சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி அவர்கள் விரைவில் வெளியே சென்று மீண்டும் மீண்டும் இத்தகைய செயல்களில் ஈடுபடுகின்றனர்.

சமூக நீதி, கலாசாரம், பண்பாடு என்பவற்றைப் பற்றி பொருட்படுத்தாமல் அலட்சியத்துடன் வாழும் மனிதர்களே தற்போது அதிகரித்து வருகின்றனர். இவர்களின் பெருக்கமே இவ்வாறான கீழ்த்தரமான சமூக மாற்றங்களுக்கும் நடத்தைகளுக்கும் காரணமாகின்றன.

அதைவிட வருந்தத்தக்க விடயம், பிள்ளைகளுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடியவர்கள் என்று கருதப்படும் குடும்ப உறவினர்களால் பிள்ளைகள் சீரழிக்கப்படுவதே. இந்த இடத்தில் தந்தைமுறையினரும் பின்னிற்கவில்லை. சமூகத்தை உயர்த்துகின்ற ஆசிரியர்களும் இந்த இடத்தைப் பிடித்து வருகின்றனர். இதைவிட வெட்கப்பட வேண்டிய வேதனைப்பட வேண்டிய விடயம் உலகில் வேறொன்றும் இல்லை.

சிறுவர் தொடர்பான அமைப்புக்களும் தொண்டு நிறுவனங்களும் எதிர்காலத்தில் இத்தகைய தீங்குகள் இடம்பெறாமல் இருப்பதற்குரிய வழிவகைகள் குறித்து கருத்தரங்குகள் போன்ற பல்வேறு வழிகாட்டல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்த போதிலும் இதைக் கட்டுப்படுத்துவது மிகப்பெரிய சவாலாகவே உள்ளது.

வீட்டிலும் வீதியிலும் சமூகத்திலும் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டியது அரசின் கடமையே என்றாலும் இந்த விடயத்தில் குடும்பத்தவரின் அவதானிப்பும் முக்கியமானது.

எவரும் தமது பிள்ளைகளுடன் இலகுவில் தொடர்பு கொள்ளக்கூடிய அளவுக்கு கண்டும் காணாமல் பெற்றோர் இருக்கும்போது தீய குணமுடையவர்கள் பிள்ளைகள் மீது தவறு புரிகின்றனர். இதற்குப் பெற்றோரின் கவனக்குறைவே காரணம். நமது குழந்தைகள் எந்தத் தவறும் செய்யமாட்டார்கள் என்ற எண்ணத்தில் பிள்ளை பற்றி எந்தத் தகவலும் அறியாமல் அக்கறையின்றி பெற்றோர் இருக்கும் சந்தர்ப்பங்களில் இதுபோன்ற பிரச்சினைகள் எழுகின்றன.

இதைவிட பொருளாதாரப் பலவீனம் காரணமாகச் சில பெற்றோர், பிள்ளைகளுடன் தவறாக நடக்க முயற்சிக்கும் குறிப்பிட்ட நபர் மூலம் தமக்குக் கிடைக்கும் உதவிகளை நினைத்து சில விடயங்களைக் கண்டும் காணாததும் போல் இருந்து விடுகின்றனர். இதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி சிறுபிள்ளைகளை ஏமாற்றியும் சிலர் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

மற்றும் குடியிருக்கும் இடங்களில் தனிமையாக இருக்கும் சந்தர்பங்கள், இடநெருக்கடி மிகுந்த குடியிருப்புக்களில் வசிக்கும் நிலை, எல்லோரையும் உடனடியாகவே நம்பும் நிலை போன்ற காரணிகளே சிறுவர்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கான முக்கிய சந்தர்ப்பங்களாக அமைகின்றன.

இலங்கையில் 2000-2010 வரையான ஆண்டுக் காலப்பகுதிக்குள் 27, 003 சிறுவர்கள் தவறான நடத்தைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றனர் என்று சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. 2000-2011 ஆண்டு வரையில் 10,164 சிறுமிகள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கொடுமையை அவர்களுக்கு இழைத்தவர்கள் பெரும்பாலும் அவர்களது குடும்ப உறுப்பினர்களே என்பது அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது.



இவ்வாறான முறைகேடுகளுக்கு உள்ளாகும் பிள்ளைகள் குறித்து நடவடிக்கை எடுப்பதற்கு அரசு புதிய பல கொள்கைகளையும் தீவிரமான தண்டனை முறைகளையும் உருவாக்கி நடைமுறைப்படுத்த முனைப்புக் காட்டுகின்றது. எனினும் இந்த சமூகப் பிறழ்வுக்கான காரணங்களைக் கண்டு அதற்கு உடனடித் தீர்வு காணாதவரை இதற்கான தீர்வை எட்ட முடியாது.

இந்த நாட்டில் உள்ள சகல பிள்ளைகளும் எமது சொந்தப் பிள்ளைகள், சகோதரர்கள், எமது கலாசாரத்தைப் பேணவேண்டும், மதிக்கவேண்டும், ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்ற உணர்வை அனைவரது மனங்களிலும் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். எண்ணங்கள் நல்லவையாக இருந்தால் செயற்பாடுகளும் நல்லவையாகவே அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லாலங்கடி

> "கலகமடக்கும் பொலிஸாரும் தயாராகவே இருந்தனர். இது போதாதென்று கண்ணீர்ப் புகைக் குண்டுகளை மக்கள் மீது ஏவத் தயாராகவும் இருந்தனர். எனினும் ஆர்பாட்டத்தைத் தடுக்கும் அவர்களது முயற்சி தோல்வியில்தான் முடிந்தது.



# பிறந்த மண்ணை கேட்பது தப்பா...?

## வந்தவன் ஆள நினைக்கிறான் வாழ்ந்தவனை ஏறி மிதிக்கிறான்

"எங்கட நிலத்தில எங்களை இருக்க விடுங்கோ. எங்கட பரம்பரை ஆண்ட நிலத்தில இருக்க விடுங்கோ எண்டுதானே கேக்கிறம். அது தப்பா ? இண்டைக்கு நாங்கள் வேற இடத்தில இருந்து கொண்டு விடுகிற கண்ணீர் கொஞ்ச நஞ்சமில்ல. ஒரு வருசமா இரண்டு வருசமா இருபத்தி மூன்று வருசம் வெளியில இருக்கிறம். எங்கட பிள்ளைகளுக்கு எங்கட நிலத்தை தெரியாது. நாங்கள் உயிரோட இருக்கேக்கை அவங்களுக்கு அந்த நிலத்தை காட்ட வேணும். அடுத்தவேயின்ர காணியளுக்குள்ள இருந்து கொண்டு காலமெல்லாம் சீரழியேலாது. நாங்கள் அவ்வளவு துன்பத்தை அனுபவிச்சிட்டம். இனியாவது எங்கள இருக்க விடுங்கோ எண்டு கேட்டுத் தான் போனாங்கள். அதுக்கு இந்த அநியாயத்தை செஞ்சிட்டுப் போறாங்கள். தலையில முழுகிற மாதிரி ஊத்துறாங்கள் ஒயிலால. அண்டைக்கு ஊத்துப்பட்ட ஒயிலால வேட்டி, சீலை இனி ஒண்டுக்கும் உதவாது."

வலி. வடக்கு மக்கள் நடத்திய வாழ்வுரிமைப் போராட்டத்தில் கலந்து கொண்டு திரும்பிய வேளை கல்லெறி வாங்கி கழிவு ஒயிலால் ஊத்தப்பட்ட பின்னர் இவ்வாறு தனது ஆத்திரத்தை கொட்டித் தீர்த்தார் ஒரு தாய்.

மயிலிட்டி, காங்கேசன்துறை, பலாலி போன்ற விளை நிலங்களில் வசித்த மக்கள் 1989 ஆம் ஆண்டு போர் காரணமாக இடம்பெயர்ந்திருந்தனர். 23 ஆண்டுகளை விழுங்கி விட்டது அவர்களது இடப்பெயர்வு. இன்னமும் சொந்த நிலத்துக்குள் செல்லாது அந்தரிக்கும் இந்த மக்களின் காணிகளை நிரந்தரமாக விழுங்கி விடத் துடிக்கின்றனர் படையினர்.

இடம்பெயர்ந்து பருத்தித்துறையில் வசித்து வரும் இந்த மக்கள் இன்னொருவர் காணிகளில் இருந்து கொண்டு தினம் தினம் துன்பங்களைச் சுமந்து கொண்டிருக்கின்றனர்.

கடல்தொழிலை பிரதானமாகக் கொண்ட மக்கள், கடலில் இறங்குவதற்கே இடமில்லாமல் அவஸ்தைப்படுகின்றனர். இலங்கை அரசு வழங்கி வந்த அற்ப சொற்ப நிவாரணங்களும் நிறுத்தப்பட்ட நிலையில் அந்த மக்களின் வாழ்வு கேள்விக் குறியாகியுள்ளது.

தமது சொந்த நிலத்தை ஆள முடியாமல் தவிக்கும் நேரத்தில், இராணுவம் தான் ஆக்கிரமித்துள்ள நிலப் பரப்பை அப்படியே விழுங்குவதற்கு துடிக்கின்றது.

இந்த நிலையில்தான் வலி. வடக்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் வலி. வடக்கு மக்களின் வாழ்வுரிமைப் போராட்டம் என்ற தொனிப்பொருளில் ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வலி. வடக்குப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து 23 வருடங்களாக மக்கள் பல்வேறு திக்குகளில் வாழ்ந்து வருகின்றனர். வலி. வடக்குப் பிரதேசத்தில் இன்னமும் 23 கிராம சேவகர் பிரிவுகளில் மக்களை மீளக் குடியமர்த்தப்பட வேண்டியுள்ளது. இந்தப் பகுதிகளில் மீளக்குடியமர்வுக்காக 26 ஆயிரம் மக்கள் வரையில் விண்ணப்பித்துள்ளனர். அத்துடன் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் மக்களும் இந்த ஆர்பாட்டப் பேரணியில் பங்கெடுக்கத் தயாராகி இருந்தனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு முதல் நாள் நலன்புரி நிலையங்களுக்குச் சென்ற ஈ.பி.டி.பியின் வலி. வடக்குப் பிரதேசப் பொறுப்பாளர் "ஆர்ப்பாட்டத்துக்குச் சென்றால் என்ன விளைவு வரும் எண்டு தெரியும் தானே ? " என்று மிரட்டியிருந்தார்.

அவர்கள் எதுவும் செய்வார்கள் என்பதால் நலன்புரி நிலைய மக்கள், ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள மறுத்தனர். " எங்களுக்கும் எங்கட வீட்டுக்குப் போக விருப்பம் தான். ஆனா இவங்கள் வந்து இப்பிடி வெருட்டிப் போட்டாங்கள். வந்தா ஏதாவது செய்து போடுவாங்கள்" என்று வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவரிடம் தெரிவித்துள்ளனர்.

இருந்த போதிலும் பருத்தித்துறையில் வாழ்ந்து வரும் வலி. வடக்கு மக்கள் தற்துணிவோடு ஆர்ப்பாட்டத்துக்கு வந்தனர். இராணுவ அடக்கு முறைக்கு உட்பட்டிருந்தயாழ். மண்ணில் நீண்ட காலத்துக்குப் பின்னர் தமிழர் தரப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்துக்கு நூற்றுக்கணக்கான மக்கள் வந்திருந்தனர்.



தெல்லிப்பழை துர்க்கை அம்மனின் ஆசியுடன் ஆர்ப்பாட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே பொலிஸார், ஆர்ப்பாட்டத்துக்கு முட்டுக்கட்டை போட்டனர். மக்களை உளரீதியாக தாக்கும் விதமாக அதிகாலையிலிருந்தே ஆர்ப்பாட்டம் இடம்பெறும் பகுதி முழுவதும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் கலகமடக்கும் பொலிஸாரும் தயாராகவே இருந்தனர். இது போதாதென்று கண்ணீர்ப் புகைக் குண்டுகளை மக்கள் மீது ஏவத் தயாராகவும் இருந்தனர். எனினும் ஆர்ப்பாட்டத்தைத் தடுக்கும் அவர்களது முயற்சி தோல்வியில்தான் முடிந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா விடாப்பிடியாக நின்று மனுவை, தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்குச் சென்று கையளிக்கச் செய்தார். வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தனிடம் இந்த மனுக் கையளிக்கப்பட்டது.

அதன் பின்னர் மக்கள் மத்தியில் அமைதியான முறையில் நாடாளுமன்ற உறுப்பினரின் உரை இடம் பெற்றது. ஆர்ப்பாட்டம் முடிவுக்கு வந்தது.

கலவரத்தைக் கட்டுப்படுத்த வந்த பொலிஸார் அசடு வழிந்து கொண்டு திரும்பிச் சென்றனர். ஆர்ப்பாட்டம் வன்முறையாக மாறாமல் கட்டுப்படுத்தவே தாம் அங்கு வந்ததாக காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர், நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்திருந்தார்.

எல்லாம் முடிந்த பின்னர், இடம்பெயர்ந்து தங்கியுள்ள இருப்பிடங்களுக்கு திரும்பிக் கொண்டிருந்த மக்கள் மீது தமது கையாலாகத் தனத்தை " இனந்தெரியாதோர் " காட்டினர். தமிழனின் எந்தவொரு போராட்டமும் வெற்றி பெற்று விடக் கூடாது என்பதில் குறியாக இருக்கும் சிங்கள அரசுக்கு சப்பாணி போடும் கூட்டம் தனது கடமையைச் செய்தது என்பதில் இரு வேறுபட்ட கருத்துக்கு இடமில்லை.

யாழ்ப்பாணத்தில் தற்போது புதிதாக முளைக்கத் தொடங்கியிருக்கும் கழிவு ஒயில் கலாசாரத்தின் விண்ணர்கள் தங்களது வீர தீர செயல்களை அப்பாவி மக்கள் மீது காட்டினர். ஆர்ப்பாட்டம் முடிந்து திரும்பிய மக்கள் சுன்னாகம் சந்தியூடாக புத்தூர் வீதி வழியாக பஸ்ஸில் வந்து கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் குறித்த பஸ் பின் பக்க கண்ணாடியை கல்லால் எறிந்து உடைத்தனர். தீடிரென கேட்ட சத்தத்தால் மக்கள் அதிர்ச்சியில் உறைந்தனர். அந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கிடையில் ஜன்னல் கண்ணாடிகளுக்கு ஊடாக கழிவு ஒயிலை பஸ்ஸினுள் ஊற்றினர். பஸ் நிறுத்தப்படாமல் மோட்டார் சைக்கிள்களில் சென்றவர்களை கலைக்கத் தொடங்க அவர்களது வேகங்கள் அதிகமாகி 'எஸ்கேப்' ஆயினர். அந்த மக்கள் செய்த பிழைதான் என்ன ? அவர்களுடைய மண்ணை அவர்களது பரம்பரை வாழ்ந்த மண்ணில் அவர்கள் வாழக் கேட்பது பிழையா ? " அப்பு ஆச்சியர் வாழ்ந்த பூமி இந்தப் பூமிதானடா, அப்பு காமியே ஆள இங்குமே விட்டதாரடா? " எங்கோ கேட்ட பாடல் வரிகள்தான் நினைவுக்கு வருகின்றது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.ரூபினி, நல்லூர்

# பயன்தரும் வளங்கள் பாவனைக்கு வருமா?



யாழ்ப்பாணத்தின் பெருமையைப் பறைசாற்றுவதற்கு இங்குள்ள வளங்களே தனித்துவமாகவுள்ளன. நீர்வளம், நிலவளம் என இயற்கை கொடுத்த அரும்படைப்புக்களால் இன்னும் வானுயர்ந்து காட்சி கொடுக்கும் காட்டு வளமும் கொடுத்தார்க்கு குறைவில்லை என்பது போல் அள்ள அள்ள வாரி வழங்கும் கடல் வளமும் யாழ்ப்பாணத்துக்கே உரிய ஒன்றாகும்.

வறுமையின் பிடியிலும், இயலாமையாலும் ஒரு சாண் வயிற்றுப் பசிக்கு தீனி போட்டுக் கொண்டிருக்கும் இத்தகைய அரிய வளங்களே யாழ்ப்பாணத்து மக்களை பட்டிணிச் சாவில் இருந்து அன்னையைப் போல் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றன.

மக்களது அன்றாட சீவியத்துடன் ஒன்றிணைந்துள்ள இயற்கை வளங்களில் பனை வளம் யாழ்ப்பாணத்து மக்களின் பண்பாட்டோடு பின்னிப் பிணைந்து கொண்டிருக்கிறது. இந்தப் பனை வளத்தைக் கொண்டு ஜீவனத் தொழிலாக காலாகாலமாக மேற்கொண்டு சிறந்த வருவாயைப் பெற்றது மட்டுமல்லாது பிரதேச வளங்களின் பெருமையை வேறு பிரதேசங்களுக்கு பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பனை உற்பத்திப் பொருள்கள் உள்நாட்டுச் சந்தையில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் கூட பெயர் பெறும் அளவுக்கு சிறந்த சந்தைப் பொருளாக மக்கள் மத்தியில் பாவனைக்கு இருந்துள்ளது.

ஆனால் இன்று சந்தையில் விற்பனையாகும் பிளாஸ்ரிக் உற்பத்திப் பொருள்கள், கண்ணாடிப் பொருள்கள், சில்வர் பாத்திரங்கள் என்பன காலத்துக்கு ஏற்றாற்போல் மக்களது பாவனைப் பொருளாக திகழ்கிறது.

மக்களின் பாவனை பொருள்கள் சந்தையில் விலை போவதற்கு சாதகமாக அமைந்துள்ளமையால் பனைசார் உற்பத்திப் பொருள்களுக்கு சந்தை வாய்ப்பு குறைந்துள்ளது. இந்த நிலையில் மக்களிடையே பாவனையும் அருகி வருகிறது. பனைசார் உற்பத்திப் பொருள்களை விட பனம் பொருள் உற்பத்திகளையும் இன்று மக்கள் மத்தியில் பாவனையில் காண முடியாது உள்ளது.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள பனம்பொருள் உற்பத்தி நிலையத்தில் கடந்த 3 வருடங்களாக பணியாற்றும் மாதர் சங்கத் தலைவி குணரட்ணம் பேக்மன் தற்போது யாழ்ப்பாணத்தில் அருகி வரும் பொருள்களின் பாவனை, அவற்றுக்கான காரணம் தொடர்பாக தெரிவிக்கும் போது,

ஆரம்ப காலங்களில் யாழ்ப்பாணத்துப் பண்பாடுகளில் ஒன்றாக பனை சார் உற்பத்திப் பொருள்களின் பாவனை இருந்தது. மக்களின் பாவனைக்கு ஏற்றாற் போல் சந்தை வாய்ப்பும் அதிகமாக இருந்தது. இதன் காரணமாக பிரதேச வளம் மண்ணோடு மண்ணாக்கப்படாமல் மக்களின் பாவனைக்கு உகந்ததாக இருந்தது. இது மட்டுமல்லாமல் பலருக்கு தொழில் வாய்ப்பையும் பெற்றுக் கொடுத்துள்ளது.

இதனை விட பனை சார் உற்பத்திப் பொருள்கள் இயற்கையுடன் ஒன்றித்ததால் நோய்த் தாக்கமற்ற சுகமான வாழ்வுக்கு சிறந்த மருந்துப் பொருளாகவும் பாவிக்கப்பட்டன.

ஆனால் இவையெல்லாம் தற்போது மாயமாகிக் கொண்டிருக்கின்றன. பனை சார் உற்பத்திப் பொருள்கள் எவை என்று கூடத் தெரியாத அளவுக்கு எமது தலைமுறையினர் தொல்பொருள் காட்சியகங்களில் பார்வையிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இவை எமது பாரம்பரியத்துக்கு ஏற்பட்ட இழுக்கு மட்டுமல்லாது அவற்றால் கிடைத்த நன்மைகளையும் மெல்ல மெல்ல இழந்து கொண்டே இருக்கின்றோம் என்றுதான் கூற வேண்டும்.

ஆரம்ப காலங்களில் சூழல் பாதுகாப்பு, சுத்தம், குறைந்த செலவு, நீடித்த பாவனை, உடம்புக் களைப்பு நீக்குதல், உடற்சூட்டைத் தணித்தல் போன்ற நன்மைகள் பனைசார் உற்பத்திப் பொருள்களில் மட்டுமல்லாது மரம் சார்ந்த உற்பத்திப் பொருள்களிலும் இருந்து கிடைக்கப் பெற்றதை பலரும் அறிவர்.

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு வீடுகளிலும் பாவனைப் பொருள்களாகக் கிடைத்து வந்த இவையெல்லாம் இன்று அருகி இரும்புப் பொருள்களுக்கும், பிளாஸ்ரிக் பொருள்களுக்கும் தஞ்சம் புகுந்தள்ளனர்.

யாழ்ப்பாணத்து மக்கள் மத்தியில் இப்பொருள்களுக்கு ஈடுபாடு குறைந்தாலும் வேறு மாவட்டங்களைச் சார்ந்தோர், வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்வோர், உல்லாசப் பயணிகள் போன்றோர் தற்போது இப் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் அர்வம் காட்டி வருகின்றனர்.

எமது பிரதேசம் சார்ந்த உற்பத்திப் பொருள்களைத் தவிர்த்து ஏனைய பிரதேசம் சார்ந்த அல்லது வெளிநாட்டு உற்பத்திப் பொருள்கள் மீது மோகம் கொண்டுள்ளதால் அதனால் கிடைக்கும் தீமைகள் தொடர்பாக எம்மவர்கள் சிந்திக்கவில்லை.

கடந்த காலங்களில் கிராமம், நகரம் என அனைவர் மத்தியிலும் இருந்த பாவனைப் பொருள்கள் தற்போது அருகிப் போவதற்கு மூல காரணம் மாற்றமடைந்த எம்மவர்களின் வாழ்வியல் செயற்பாடுகளே. நுகர்வோர்களின் பாவனை எண்ணிக்கை குறைவடைந்தமையால் பனைசார் மற்றும் மரம் சார் உற்பத்திப் பொருள்களைத் தயாரிக்கும் தொழில்களில் ஈடுபட்டோர் அதன் மூலம் இலாபம் கிடைக்காத காரணத்தால் அந்தத் தொழிலையே கை விட்டு விட்டனர் என்று கூறப்படுகிறது.

சில நிறுவனங்கள், பெண்கள் முன்னேற்றச் சங்கங்கள் ஊடாக தயார் செய்யப்படும் ஒரு சில பொருள்களே இன்று ஆங்காங்கே ஊசலாடிக் கொண்டிருக்கின்றன. எம்மவர்களின் வாழ்வியல் மாற்றத்தை எமது பாரம்பரியத்துடன் ஒத்ததாக திசை திருப்பும் பட்சத்தில் எமது பாரம்பரியம் பாதுகாக்கப்படும் என்று ஒரு வித சோர்வுடன் கூறினார்.

குணரட்ணம் பேக்மன் கூறியதைப் போன்றுதான் எமது பிரதேசத்தில் பாரம்பரியமான பொருள்களின் பயன்பாடு அருகிச் செல்கின்றன. எனவே இதனைத் தொடர்ந்து சோர் வடைய விடாமல் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு எமது பண்பாட்டுடன் ஒத்த பொருள் பயன்பாடுகளை மக்கள் மத்தியில் கொண்டு வர சமூகசேவை நிறுவனங்களும் உரிய அதிகாரிகளும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ✸

---

பீ.ஏ.அந்தோனிமார்க்

(ஜூன் 5 சர்வதேச சுற்றாடல் தினம்)

# உலகப் பேரழிவை நோக்கி

> “காற்றை அசுத்தமாக்கும் புகை போக்கிகளை தவிர்ப்பதற்கு ஏற்ற மாற்று முறைகளை தொழிற்சாலைகளில் கடைப்பிடிக்க வேண்டும்.

சுற்றாடல் எம்மைச் சூழ்ந்துள்ள நீர், நிலம், காற்று அத்துடன் தாவரங்கள், மிருகங்கள் என்று அனைத்தையும் உள்ளடக்கியது. மனிதனுடைய பொருளாதார மனோநிலை மற்றும் சமூகம் எனும் அனைத்துப் பிரிவுகளும் சமூகம் எனக்கொள்ளப்படுகிறது. ஆனால் இன்று மனிதனின் பல்வேறு நடவடிக்கைகள் இந்தப் பௌதிக வளங்கள் மாசடைவதால்மனித நாகரிக முன்னேற்றப் பாதையில் மேற்கொள்ளப்படும் தொழிநுட்ப வளர்ச்சி கைத்தொழில் சாலை அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பன சூழல் மாசடைவதற்கான அடிப்படைக் காரணங் களாகின்றன.

அபிவிருத்தியால் காடுகள் அழிக்கப்படுகின்றன. காடுகளின் அழிவால் மழை வளம் குறைகின்றது. வறட்சி அதிகரிக்கின்றது. தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுகளால் நீர் நிலைகள் மாசுபடுகின்றன. கடலில் கொட்டப்படும் கழிவுகளால், கடல் வாழ் உயிரினங்கள் அழிக்கப்படுகின்றன. விண்வெளியில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளால் ஆகாயம் மாசுபடுகின்றது. ஓசோன் படலம் பாதிப்படைகின்றது. இவற்றால் ஏற்படக் கூடிய பாரதூரமான விளைவுகள் எவை என்று அறிந்திருந்தும் சர்வதேச மட்டத்தில் பல நாடுகள் இத்தகைய நடவடிக்கைகளை இன்னும் மேற்கொண்டு வருகின்றன.

இரசாயன செறிவுள்ள கிருமி நாசினிகளின் பாவனை நமது மண் வளத்தையும் நீர் வளத்தையும் சுற்றாடலையும் மாசுபடுத்துகின்றது. இவற்றால் காய்கறி வகைள் மற்றும் உணவுகள் நஞ்சாகின்றன. இதனால் தான் பல நோய்களுக்கு ஆளாக்கப்படுகிறோம். நம் மூதாதையர் இயற்கையோடு இசைவுபட்டு வாழ்ந்தவர்கள். சூழல் மாசுபடுத்தும் செயல்களை அவர்கள் மேற்கொள்ளவில்லை. இயற்கைப் பசளைகளை உபயோகித்தனர். தேவைகளை குறைத்துக் கொண்டு எளிமையான வாழ்க்கை நடத்தினர். காடுகளை அழிக்கவில்லை, நீர் நிலைகளை மாசுபடுத்தவில்லை அதனால் காலா காலத்தில் பருவமழை பெய்தது பயிர்கள் நன்றாக விளைந்தன, உற்பத்தி பெருகியது நோய் நொடிகள் குறைவாக இருந்தன ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். அதனால் அவர்களின் சராசரி ஆயுள்காலம் கூடியிருந்தது.

சூழல் மாசடைவதனால் ஏற்படும் பேரவலத்தை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து சூழலை மாசடையச் செய்யும் நமது அசமந்தப் போக்கை நிறுத்தவேண்டும். பாதுகாப்பான ஒரு சூழலை நமது எதிர்கால சந்ததியிடம் ஒப்படைக்க வேண்டும். சூழலை மாசடையாமல் செய்ய நாம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியே நாம் ஆராய வேண்டும்.

மரங்கள் மருந்துகளையும் தருகின்றன. மார்பகம் மற்றும் இடயங்களில் உண்டாக்கும் புற்றுநோய்க்கு பசிபிக் பகுதியில் வளரும்“யூ” எனப்படும் மரத்தில் இருந்து பெறப்படும் டாக்சோன் என்ற வேதி வலுவான மருந்தாகிறது.

இரசாயனப் பசளைகளைத் தவிர்த்து இயற்கைப் பசளைகளை உபயோகி[illegible] [illegible] விவசாயத் திணைக்களம் பல செயல் முறைகள் அறிமுகப்படுத்தியுள்ளது. வயல் அறுபடையின் பின்னர் வயலில் உள்ள வைக்கோல்களை எரிக்காமல் அதைப் பசளையாகப் பயன்படுத்தி நிலத்தை உழுதுவிடலாம். குப்பைகளைப் புதைத்து மண்வளத்தை பெருக்கலாம்

கிருமி நாசினிகளைத் தவிர்ப்பதற்கு சூழற்சி முறைப் பயிற்செய்கையை விவசாயத் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது. அதைப் பின்பற்றலாம் கிருமி நாசினி கொல்கலன்களை நீர் நிலையில் வீசுவதைத் தவிர்த்து அவற்றை புதைத்து விடலாம். ஒன்றிணைக்கப்பட்டுள்ள பீடை முகாமைத்துவத்தைப் பயன்படுத்தி நோய்க் கிருமிகளை அழிக்கலாம் இது இயற்கை முறை.

காற்றை அசுத்தமாக்கும் புகை போக்கிகளை தவிர்ப்பதற்கு ஏற்ற மாற்று முறைகளை தொழிற்சாலைகளில் கடைப்பிடிக்க வேண்டும்.

சாதாரண கழிவு நீர், வெப்பமான நீர் இரசாயனப் பொருள்கள் அல்லது வேறு ஏதேனும் பொருள்கள் ஒரு நீர் தேக்கத்தினுள் சென்றால் அந்த நீர்தேக்கம் மாசடைகின்றது. உலோகக் கைத்தொழில், நெசவுக்கைத்தொழில், இரசாயனக் கைத்தொழில் போன்றவற்றில் பல்வேறு மூலப் பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இவற்றில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் நீர்தேக்கங்களையும் சுற்றாடலையும் பாதிக்கின்றது. அதே நேரம் வாயு வடிவில் வெளியேறும் கழிவுப் பொருள்கள் வளிமண்டலத்துடன் கலந்து காற்றை நச்சுத்தன்மை அடையச் செய்கிறது. தொழிற்சாலையிலிருந்து அகற்றப்படும் கழிவுப் பொருள்களுடன் பெரும்பாலும் இரசம், செம்பு, ஈயம், குளோரின் போன்ற பதார்த்தங்களும் கலந்துள்ளன. இத்தகைய கழிவுகள் ஆறுகளிலும் அருவிகளிலும் அகற்றிவிடப்படுகின்றன. இரசச் செறிவுகள் கொண்டுள்ள மீன்களை உண்பதனால் மூளைக் கலங்கள் சேதமுறுவதாகவும் அதைத் தொடர்ந்து மரணத்துக்கு இட்டுச் செல்லத்தக்க நரம்பு நோய்களும் குருட்டுத் தன்மையும் உண்டாவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கழிவுகளும் அழுக்குகளும் தகுந்த முறையில் பரிகரிக்கப்படாமல் கடலுக்குள் கலக்கிவிடப்படுவதால் கரையோரப் பிரதேசங்கள் மாசடைகின்றன.

நாட்டின் அபிவிருத்தி அதிகரிக்கும் பொழுது சூழல் பாதிப்படையக்கூடும். அபிவிருத்தியையும் சூழல்பாதுகாப்பையும் சமப்படுத்த வேண்டும். மாவட்டங்களுக்கு தேவையான தந்திரோபாயங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். சுற்றாடலைப் பாதுகாக்க பல சட்டங்கள் உள்ளன. இவற்றை நடைமுறைப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. சூழல் மாசடைவதற்கு முக்கிய காரணம் அதிகரித்துவரும் உலக சனத்தொகைப் பெருக்கமாகும். சனத்தொகை பெருக்கத்துக்கு ஏற்ப குடியிருப்புக்காகக் காடுகளை வெட்டி காணிகளாக பயன்படுத்துகிறார்கள். வீட்டுத் திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், போக்குவரத்து நெடுஞ்சாலைத் திட்டங்கள், தொழிற்சாலைகள், கைத்தொழில் பேட்டைகள் இவற்றின் உருவாக்கமும் சூழல் பாதிப்பதற்கு பெரும் காரணியாகவுள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவாளிகள் கூண்டில் ஏற்றப்படுவார்களா?

விஷ்ணு

மாற்றத்துக்குள்ளாகிக் கொண்டிருக்கும் எமது சமூகத்தில் இடம்பெறும் சமூகச் சீரழிவுகளும் மாற்றத்துக்குள்ளாகத் தவறவில்லை. பல இடங்களில் புதிய வடிவங்களில் இடம்பெறும் சீரழிவுகளுக்கு இன்றுவரை குறைவிருக்கவில்லை.

போதைப் பொருள் கலாசாரம், திருட்டு, கொள்ளை, கொள்ளைக்காக கொலை எனத் தொடர்ந்து தற்பொழுது கழிவு ஒயில் வீச்சுக் கலாசாரம் முன்னெடுக்கப்படுகிறது. இன்னும் சில மாதங்களில் இது வேறொரு வடிவில் மாற்றமடைந்து சீரழிவை முன்னெடுக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

கழிவு ஒயில் வீச்சுக் கலாசாரம் கடந்த வாரமே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது வைத்தியர் ஒருவரது வீட்டுக்கு வீசுவதில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இங்கு நடந்த சம்பவத்தை சற்று வேறுபடுத்திப் பார்க்கலாம். தனிப்பட்ட விரோதம் காரணமாகவே வைத்தியர் வீட்டில் அந்த முதல் வீச்சு இடம்பெற்றுள்ளது. அதற்கும் பின்னர் வேறு இடங்களில் தொடர்ந்த விடயங்களும் வேறுபடுத்திப் பார்க்கப்படவேண்டியதே.

போதனா வைத்தியசாலையில் வைத்திய சங்கத்தினருக்கு ஆதரவான ஒரு குழு, எதிரான ஒரு குழு, நடுநிலை வகிக்கும் ஒரு குழு என்று இருந்தாலும், சங்கத்துக்கு எதிரான நிர்வாகத் தரப்பினருடன் இணைந்த குழுவில் படைத் துறையினருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி படைத்துறைக்குத் தகவல்களை வழங்கி வரும் ஒரு சில வைத்தியர்களும் உள்ளடங்குகின்றனர் என்பதுதான் வேதனையளிக்கும் ஒரு விநோத உண்மை.

போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பில் இடம்பெற்ற முரண்பாடு காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று பலதரப்பட்டோர் மத்தியிலும் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. அங்கு தாக்குதல் நடத்தப்பட்ட வடிவம் - ஜன்னல் கண்ணாடிகள் அடித்து உடைக்கப்பட்டு கழிவு ஒயில் ஊற்றப்பட்டுள்ளது. இந்த வடிவமே பின்னர் சமூகச் சீரழிவாக வன்முறைப் பிரயோகமாக முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து இரண்டாவது நாள் யாழ். பிறவுண் வீதியில் இரண்டாம் ஒழுங்கையில் இரவு நேரம் இதே பாணியில் கழிவு ஒயில் ஊற்றப்பட்டுள்ளது. வீட்டுக்காரர் கூக்குரலிட சூத்திரதாரிகள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர் .

அங்கு திருட்டு முயற்சியோ வேறு எந்த ஒரு சம்பவமுமோ இடம்பெறவில்லை. பாடசாலை மாணவர்களது குறிப்புப் புத்தகங்கள் மற்றும் உடுபுடைவைகள் என்பன கழிவு ஒயிலால் நாசமாக்கப்பட்டன. தமக்கு எதிரானவர்கள் என்று எவரும் இல்லை என்று அந்த வீட்டுக்காரர் கூறுகிறார்கள். அப்படிப் பார்க்கும் போது இரவு நேரம் இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டவர்கள் யார்? எதற்காக இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டனர்? என்பது விடை காண முடியாத வினாக்களாகவே தொடர்கின்றன.

புற்றுநோய் வைத்தியர் வீடு மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல், வைத்தியசாலையில் இடம்பெற்ற விவகாரத்தின் விசாரணையைத் திசை திருப்புவதற்கான ஒரு நடவடிக்கையா என்ற சந்தேகத்தையும் எழுப்பாமல் இல்லை. இதே பாணியில் தெல்லிப்பழையில் மக்கள் ஆர்ப்பாட்டம் முடித்து வாகனத்தில் செல்லும்போது கழிவு ஒயில் ஊற்றப்பட்டது.

இராணுவப் புலனாய்வாளர்களே வாகனக் கண்ணாடியை உடைத்து பொதுமக்கள் மீது கழிவு ஒயில் ஊற்றினார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார். அதனை மறுப்பதற்கு எந்தக்காரணங்களையும் எவராலும் சொல்ல முடியாது? படையினரின் கட்டுப்பாட்டில் முகாங்களும் உள்ளன. தெல்லிப்பழையில் படையினருக்குத் தெரியாமல் படையினரது அனுமதியின்றியும் பொலிஸாருக்கும் தெரியாமல் இவ்வாறான செயலில் ஈடுபடுவார்கள் வேறு யாராக இருக்கமுடியும்?

தமது காணிகளை மீட்க மக்கள் போராட்டம் நடத்திவரும் நிலையில் அவர்களது காணிகளைத் தம்வசப்படுத்த முயலும் படைத்தரப்பு மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவார்கள் என்பதில் எந்த விதமான சந்தேகத்துக்கும் இடமில்லை. இவர்களின் இவ்வாறான செயற்பாடுகளால் மக்கள் பின்வாங்கப் போவதில்லை என்ற உண்மையையும் எவரும் மறந்துவிடக் கூடாது. இந்த மூன்று சம்பவங்களுக்குப் பின்னர் இனிமேல் எங்கு, யாருடைய வீடு மீது கழிவு ஒயில் ஊற்றப்படப் போகின்றதோ அது அவர்களுக்கே வெளிச்சம்.

இத்தனைக்கும் இச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் யாராவது பொலிஸாரால் கைது செய்யப்பட்டனரா என்றால் இல்லை என்றே பதில் தரப்படுகிறது. சந்தேக நபர்களை இனங்கண்டு விட்டோம். விரைவில் கைது செய்வோம் என்று பொலிஸார் கூறுகின்றனரே தவிர செயலில் எதுவும் இல்லை என்ற நிலைமைதான் தொடர்கிறது.

பொலிஸாரின் வாராந்த ஊடகவியல் சந்திப்பில் பல குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் பலரைக் கைது செய்துள்ளோம் என்று மட்டும் கூறுகிறார்கள். அவர்களில் உண்மையில் குற்றச்செயலுடன் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்களா என்பது கேள்விக் குறியே. நீதிமன்ற விசாரணைகளில் அவர்கள் தாம் நிரபராதி என்று நிரூபித்து விட்டுச் செல்கின்றனரே? அப்படிப் பார்க்கும் போது கைது செய்யப்படுபவர்கள் வெறும் சந்தேக நபர்கள் மாத்திரமேயன்றி குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்படவில்லையா என்ற கேள்வியும் எழாமல் இல்லை. இந்த நிலையில் குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ளும் அதேவேளை எந்தக் குற்றமும் செய்யாதவர்கள் [illegible] அவமானப்பட்டு வரவேண்டிய நிலைதான் தொடர்கிறது.



சிறுவயது லிங்கன்

# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்

பா.உண்மை

நெடுந் தொடர்

6

அமெரிக்கர்களால் தமது முதலாவது அதிபர் என்று கொண்டாடப்படும் ஜோர்ஜ் வோஷிங்டனின் வரலாறு பற்றிய நூல் வீம்ஸ் என்பவரால் எழுதப்பட்டு வெளிவந்துள்ளதாக அறிந்ததும் ஆபிரஹாமுக்கு அதனை எப்படியாவது படித்துவிட வேண்டும் என்ற வெறி வந்தது. அன்றிலிருந்து அந்தப் புத்தகம் எங்கே கிடைக்கும் என்று அவன் அலைந்து கொண்டிருந்தான்.

ஜோஸ்ய கிராஃபோர்டு என்ற விவசாயிடம் அந்தப் புத்தகம் இருப்பதாகக் கேள்விப்பட்ட பொழுதில் ஆபிரஹாமின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அதற்குக் காரணம் இருந்தது. ஏனெனில் அந்த விவசாயியை ஆபிரஹாமுக்கு நன்கு தெரியும். அவருடைய வயலில் சில சமயங்களில் வேலைகூடப் பார்த்திருக்கிறான் ஆபிரஹாம். உடனே கிளம்பிவிட்டான். கிராஃபோர்டு இருக்கும் ஊர் பக்கத்தில் இல்லை. பன்னிரண்டு மைல் தூரம் தள்ளியிருந்தது. ஆபிரஹாமுக்கு அது ஒரு பொருட்டாகத் தெரியவேயில்லை. சைக்கிள் அல்லது வேறு வண்டிக்காக ஆபிரஹாம் காத்திருக்கவில்லை. விறுவிறுவென்று நடந்தான். அவன் நின்றபோது அது கிராஃபோர்டின் பண்ணையாக இருந்தது. வழக்கமான உபசாரங்களுக்குப் பிறகு, கிராஃபோர்டு விசயத்துக்கு வந்தார். ''இப்போது எதற்கு என்னைத் தேடி வந்தாய் ஆபிரஹாம்'' என்றார் அவர். ''வீம்ஸ் எழுதிய ஜோர்ஜ் வோஷிங்டனின் வாழ்கை வரலாறுப் புத்தகத்தை உங்களிடம் வாங்கத்தான் வந்தேன். தருவீர்களா?'' என்றான் பரிதாபமாக.

அவர் யோசனையோடு பார்த்தார். படிக்க வேண்டும் என்ற ஆவலில் இத்தனை மைல்கள் நடந்து வந்திருக்கும் அவனைப் பார்க்க அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. இவன் என்ன பையன் என்று நினைத்துக் கொண்டார்.

பலத்த யோசனையின் பின்னர் ''சரி! தருகிறேன்'' என்றார். ஆபிரஹாமுக்கு ஆகாயத்தில் பறப்பது போன்று இருந்தது. ''எப்போது திருப்பித் தருவாய்'' என்ற கிராஃபோர்டின் கேள்விக்கு ''எவ்வளவு கெதியாக முடியுமோ அவ்வளவு கெதியாக'' என்ற பதில் பறந்தது.

''எனக்குப் புத்தகம் பொக்கிஷம் மாதிரி. கசங்காமல் கிழியாமல் ஒழுங்காகப் புத்தகத்தைத் தரவேணும்'' என்றார் கிராஃபோட். ''எந்தச் சேதமும் இல்லாமல் கவனமாகத் தருவேன்'' என்றான் ஆபிரஹாம்.

கிராஃபோர்ட் உள்ளே போனார். புத்தகத்தை எடுத்து வந்து அவன் கையில் கொடுத்தார். ஆபிரஹாமுக்கு அப்படியே வானத்தில் மிதக்கிற மாதிரி இருந்தது. அவருக்கு நன்றி கூறிவிட்டு நடந்தான். புத்தகத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தான். நடந்து கொண்டே படித்தான்.

அவன் வீட்டுக்கு வருவதற்குள் இருட்டிவிட்டது. அடுப்பு வெளிச்சத்தில் அமர்ந்திருந்து படித்தான். தூங்குகிற நேரம் வரும் வரை படித்துவிட்டு, புத்தகத்தைச் சுவரின் இடுக்கில் சொருகி வைத்து விட்டுத் தூங்கிப் போனான்.

அன்றைக்கு அவனுக்கு கிடைத்தது நிம்மதியான ஆழ்ந்த உறக்கம். அதற்காகவே காத்திருந்ததுபோல,சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று வந்தது காற்றுடன் கூடிய மழை. ஆபிரஹாம் அசந்த நித்திரையில் இருக்க, வெளுத்து வாங்கிய மழை அவன் இரவல் வாங்கி வந்த புத்தகத்தை ஈரமாக்கி நைந்து போகச் செய்து விட்டது.

காலையில் எழுந்து புத்தகத்தைப் பார்த்த ஆபிரஹாம் பதறிப் போனான். புத்தகம் தொப்பலாக நனைந்திருந்தது. சில பக்கங்கள் கிழிந்து வேறு போயிருந்தன. அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை இரவல் கொடுத்தவருக்குப் பதில் சொல்லியாக வேண்டுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்சாங் சூச்சிக்கு 'நொபெல்' பரிசு

■ ரம்யன்



பர்மாவின் ஜனநாயக ஆதரவு அரசியல்வாதியான ஆங்சாங் சூச்சி இப்போது ஐரோப்பிய நாடுகளில் பிரயாணம் மேற்கொண்டிருக்கிறார்.

அமைதிக்கான நொபெல் பரிசு அவருக்கு வழங்கப்படுவதற்கான அறிவிப்புபலவருடங்களுக்கு முன்பே விடுக்கப்பட்டாலும் தடுப்புக் காவலில் இருந்தமையால் இப்பொழுதுதான் அதனை அவர் நேரில் சென்று பெற்றுக் கொண்டுள்ளார்.

நோர்வேயில் ஒஸ்லோ நகரில் நொபேல் பரிசு வழங்கும் வைபவத்தில் ஆங்சாங் சூச்சி ஏற்புரை வழங்கினார். அழகான ஆங்கிலத்தில் பேசிய அவர் பர்மாவில் ஜனநாயக்துக்கு போராடிய தாம் இன்று விடுதலை பெற்றிருந்தாலும் இன்னும் அநேகர் விடுதலைக்காக காத்திருக்கிறார்கள் என்றார். இந்தப் பரிசானது உலகம் முழுவதும் பர்மாவில் ஜனநாயகத்துக்காக மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அங்கீகரிபபதாக உள்ளது என்றார்.

அசை போட ஒரு விடயம் 33

அவருடைய பெயர்Aung Saang Saukyi என்று எழுதப் பெற்றாலும் ஆங்சாங் சூச்சி என்றே உச்சரிக்கப்படுகின்றது.

ஒஸ்லோவில் வழங்கப்படும் இந்தப் பரிசுக்கு பெயர் Nobel Prize என்பதாகும். அதாவது நொபெல் பரிசு என்றுதான் அது எழுதப்பட வேண்டும். நோபல் (Noble) அல்ல. நொபெல் என்பது ஒரு பிரமுகரின் பெயர். நொபெல் என்பவரின் பெயரிலேயே இந்தப் பரிசு வழங்கப்படுகின்றது. ஆனால் பலரும் நோபல் பரிசு என்று தமிழில் எழுதுகிறார்கள். Noble என்று குறிக்கப்படும் மிக சிறந்த அல்லது உயர்ந்த என்ற கருத்தில் இந்த பரிசு வழங்கப்படுவதாக கருதிற் கொண்டு இப்படி எழுதப் படுகின்றது. இது தவறு.

நொபெல் Nobel பரிசானது அல்பிரட் பேர்ன் ஹார்ட் நொபெல் என்பவர் எழுதி வைத்துள்ள உயிலின் பிரகாரம் இந்தப் பரிசு வழங்கப்படுகின்றது. அவர் ஒரு ஸ்வீடிஷ் பொறியியலாளர். 1896 ஆம் ஆண்டில் காலமான அவரது உயிலின்படி அவர் வைப்பிலிட்டுள்ள நிதியின் வட்டியிலிருந்து வருடம் தோறும் வைத்தியம், இரசாயனம், உடற்கூறு அல்லது மருந்து கண்டுபிடிப்பு போன்ற துறைகளில் மிக உன்னத பங்களிப்பை செய்கிறவர்களுக்கு பரிசு பகிர்ந்தளிக்கப் படுகின்றது. அது மட்டுமின்றி உலக அமைதிக்கும் இலக்கியத் துறைக்கும் அவ்வாறு பங்களிப்பு செய்துள்ளவர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. ஆங்சாங் சூச்சிக்கு லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிக்கின்றது.

1930 ஆம் ஆண்டு ஒளிச் சிதறல் தொடர்பான பணிகளுக்காகவும் ராமன் இபெக்ட் என்ற தத்துவத்தை வெளியிட்டமைக்காகவும் தமிழரான (இந்தியர்), சேர் சந்திரசேகரராமன் பௌதிகத்துக்கான நொபெல் பரிசைப் பெற்றார்.

சேர் ராமன் தொடர்பான கதையொன்று உண்டு. அவர் காலத்தில் அதாவது 19 ஆம் நூற்றாண்டில் சேர் ராமன் சென்னையில் இருந்து வடநாட்டுக்கு ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி நடந்து கொண்டிருந்தது.

நொபெல் பரிசு பெற்ற பிரமுகர் என்பதால் முதல் வகுப்புப் பெட்டியில் பயணம் செய்து கொண்டிருந்தார்.

அதே பெட்டியில் இரண்டு ஆங்கிலேயர்களும் இருந்தனர். கறுப்பரான சேர்ராமன் தங்களுடன் ஒரே பெட்டியில் பிரயாணம் செய்வது அவர்களுக்கு விருப்பமில்லை. சேர் ராமன் அவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் போய்க் கொண்டிருந்தார்.

ஒரு முக்கியமான நிலையம் வந்தபோது ரயில் நின்றது. ராமன் எழுந்து தான் தலையில் அணிந்திருந்த தலைப்பாகையைக் கழற்றி தமது ஆசனத்தில் வைத்துவிட்டு, கொஞ்சம் வெளியில் சென்று வருகிறேன். இதை பார்த்து கொள்ளுங்கள் என்று அவர்களிடம் கூறிக்கொண்டு எழுந்து சென்றார். சிறிது நேரம் கழித்து ராமன் திரும்பி வந்தபோது தலைப்பாகையைக் காணவில்லை. வெள்ளையர்களிடம் கேட்டார்.

''உங்கள் தலைப்பாகை ஜன்னல் வழியாகப் பாய்ந்து சென்று விட்டது. எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை'' என்று விஷமத்துடன் சிரித்தார்கள். ராமன் ஒன்றும் பேசாமல் தன் இடத்தில் அமர்ந்து தாம் கொண்டு வந்த நூலை படிக்க ஆரம்பித்தார். வெகு தூரம் சென்றதும் ரயில் நின்றது. வெள்ளையர்கள் எழுந்து வெளியில் சென்று வருகிறோம் எமது தொப்பியைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு தொப்பிகளை வைத்துவிட்டு சென்றார்கள். சிறிது நேரத்தில் திரும்பி வந்து பார்த்தபோது தொப்பிகளைக் காணவில்லை. ''எங்கே எங்கள் தொப்பிகள்'' என்று முறைப்புடன் கேட்டார்கள். என் தலைப்பாகையைத் தேடி அவை போய் விட்டன என்று ராமன் பதில் அளித்து விட்டு பேசாமல் நூலைப் படிக்க ஆரம்பித்தார்.

**தூதுவரும் ஸ்தானிகரும்**

ஸ்தானிகர் என்பதும் தூதுவர் என்பதும் ஒரே கருத்தையுடைய சொற்கள்தான். ஆங்கிலத்தில் High Commissioner என்றும் Ambassador என்றும் வழங்குகிறார்கள் பொதுவில் சில நாடுகளின் தூதுவர்கள் உயர் ஸ்தானிகர் என்று குறிக்கப்படுவதுண்டு. அதாவது கொமன் வெல்த் என்ற பொதுநலவாய ஸ்தாபனம் உருவாக்கப்பட்ட போது இந்த நாடுகளின் தூதுவர்களை உயர் ஸ்தானிகர்கள் என்று அழைத்துக் கொள்வதென்று முடிவு செய்யப்பட்டது. இது தெரியாத பலர் இரண்டு விதமானவர்களையும் தூதுவர்கள் என்றே குறிப்பிடுவதைப் பார்க்கிறோம்.

கொமன் வெலத் நாடு ஒன்றின் தூதுவர் என்பதில் ஒரு வித்தியாசம் இருக்க வேண்டும் என்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. High Commissioner என்பதை அந்தக் காலத்தில் உயர் ஸ்தானிகர் என்றே தமிழ்ப் பத்திரிகைகள் எழுதி வந்தன. பிற்காலத்தில் இந்த விவரம் தெரியாதவர்கள் இரண்டையும் தூதுவர் என்றே தமிழில் எழுதுகிறார்கள்.

# உறவுகள் மதிக்கப்பட வேண்டியவை



முதலில் நாம் உறவுகளைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். மனிதர்களையும் அவர்களது குணங்களையும் முழுமையாகவும் முறையாகவும் புரிந்து கொள்வது தான் அவர்களுடன் நல்லுறவையும் நெருக்கத்தையும் வளர்த்துக்கொள்ள உதவும்.

■ சுவாதி

அவசரமான இந்த வாழ்க்கையில் மனிதர்களும் இயந்திரங்களாகி விட்டனர். தேவைக்கு மட்டுமே உறவு வைத்துக்கொள்வது இன்று இயல்பாகிவிட்டது.

இன்றைய வாழ்க்கையின் அழுத்தம், மனிதனின் பலவீனம், பிரச்சினைகளை எதிர்கொள்ளத் திறமையின்மை போன்றனவும் ஒருவருடன் அதிகம் பழகுவதற்குத் தடை விதிக்கின்றன என்றும் கருத்துக் கூறப்படுகின்றது. குழந்தைகளை மற்றவர்களுடன் பழக விடாமல் படிப்பிப்பதும் இதன் பின்னர் வீட்டு வேலைகள், எமது குடும்பம் எமது வாழ்வு என்றவாறாகஇன்றைய மக்களின் நிலைமை மாறிவிட்டது.

குடும்பத்திலும், அலுவலகத்திலும், சமூகத்திலும் இன்று மனிதர்கள் மட்டும் இருக்கிறார்கள். மனித உறவுகள் மறைந்து போய்விட்டன. ஏன் ஒரு குடும்பத்தை எடுத்துக் கொண்டால் முன்னைய காலங்களில் கூட்டுக் குடும்பமாகவே வாழ்வர். இதில் எந்த வகையான மாற்றங்களுக்கும் இடமிருக்காது. ஆனால் இன்று கூட்டுக் குடும்பம் என்றால் என்ன என்று கேட்கும் அளவுக்கு நிலைமை மாறிவிட்டது. இன்று வீடுகளில் முதியோரைக் காணுவது என்பது முயல் கொம்பாகத் தான் இருக்கிறது. முதியோர் இல்லங்களில்தான் அவர்கள் வாழ்வாகிவிட்டது. இந்த நிலைமைக்கு இன்றைய உறவுகளின் உள்ளார்ந்தும் இருக்கிறது.

இது மட்டுமன்றி அலுவலகங்கள் என்றாலும் சரி பாடசாலை என்றாலும் சரி ஒருவர் மீது ஒருவர் குறைபட்டுக் கொண்டுதான் இருப்பார்கள். அவர் இப்படிச் சொல்கிறார். இவர் இப்படிச் சொல்கிறார் என்று ஒருவரை ஒருவர் குறைபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். நாம் இங்கு எதற்காக வந்தோம். இங்கு கடமைக்கு அப்பால் தனிப்பட்ட ரீதியிர் யார் மீதாவது எமக்குக் கோபம் இருக்கிறதா என்று சற்று எண்ணிப் பாருங்கள். நிலைமை சுமூகமாகிவிடும். ஆனால் இந்த மனநிலை யாருக்கும் வராது என்று தான் சொல்ல வேண்டும்.

இவ்வாறாக இன்று மனிதர்களுக்கிடையில் ஏற்படும் சின்னச் சின்ன முரண்பாடுகள் அவர்களிடையே பெரிய அளவில் விரிசல்களை ஏற்படுத்திவிடுகின்றன. இது காலம் முழுவதுக்கும் அவர்களிடையே ஒரு வடுவாகிவிடும்..

இந்த நிலையில் நாம் ஒரு விடயத்தை அவதானித்தாக வேண்டும். நாம் ஒருவருடன் சண்டை போடுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்தச் சண்டைக்கான காரணங்கள் எமக்கு நினைவில் இருக்காது. அவை மறந்து போய் விடும். ஆனால் எமது கோபம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

முரண்பாட்டுக்கு ஆளாகிக் கோபப்பட்டுக் காலா காலமாகத் தாம் எதிரிகள் என்று கூறிக்கொண்டு இருக்கும் இருவரிடம் சென்று நீங்கள் இருவரும் எதற்கு இவ்வாறு எதிரிகளாக இருக்கிறீர்கள் என்று ஒரு கணம் கேட்டுப் பாருங்கள். அவர்களுக்கு அதற்கான காரணம் எதுவும் தெரியாது. அவர்களிடம் இருந்து தெரியாது என்ற பதில்தான் வரும். தில் எந்த மாற்றமும் இருக்காது. ஒரு தரம் முயற்சித்துப் பாருங்கள் உண்மை விளங்கும்.

முதலில் நாம் உறவுகளைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். மனிதர்களையும் அவர்களது குணங்களையும் முழுமையாகவும் முறையாகவும் புரிந்து கொள்வதுதான் அவர்களுடன் நல்லுறவையும் நெருக்கத்தையும் வளர்த்துக்கொள்ள உதவும்.

முதலாவது நாம் உறவுகள் மீது அக்கறை உடையவர்களாகவும் அவர்களின் வாழ்விலும் வளர்ச்சியிலும் முழுமையான விருப்பமுடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

உதாரணமாக ஒரு நண்பரை எடுத்துக் கொள்வோம். அவர்களுடன் சாதாரணமாகக் காணும்போது சிரிப்பது கதைப்பது கூட உணவு உண்பது இவற்றுடன் மட்டும் இன்று பெரும்பாலானோரின் [illegible] [illegible]. இத்துடன் எல்லாமே முடிந்துவிட்டது என்று கருதும் எத்தனையோ பேர் இன்று இருக்கத்தான் செய்கிறார்கள். ஏன் இதற்கு ஒரு படி மேலே சென்றால் என்ன. அது குற்றமாகிவிடுமா என்ன?

அவர்களின் இன்ப துன்பங்களை உணர்வு ரீதியாகப் புரிந்து கொள்ளுங்கள். நீங்களும் அவர்களுடன் மனம் விட்டுப் பேசுங்கள். நீங்கள் அவர்களிடம் எதை எதிர்பார்க்கிறீர்கள் என்பது போல்தான் அவர்களும் உங்களிடம் எதிர்பார்ப்பார்கள். அதையும் புரிந்து கொள்ளுங்கள். உங்கள்மீது நம்பிக்கை வைத்து அவர்கள் கூறும் எந்தவொரு விடயத்தையும் அவர்கள் இல்லாத போது பிறரிடம் கூறி உங்கள் நட்பைக் கொச்சைப்படுத்தி விடாதீர்கள்.

இது உங்களுக்கும் பொருந்தும். நீங்கள் உங்கள் வாழ்வின்மேல் காட்டும் விருப்பம் மற்றவர்களிடம் காட்டும் விருப்பத்தைவிடப் பல மடங்குஅதிகம் என்பது உண்மைதான்? இதை உணர்ந்து செயற்படுவீர்களானால் உங்கள் உறவுகளிடையே விரிசல் தானாகவே குறைந்துவிடும்.

மனிதனின் செயல்பாடுகள் அனைத்தும் அவனது சுயமுன்னேற்றம், சுயவிருப்பம் மற்றும் சுயஉயர்வைச் சார்ந்தது என்பதை மறந்துவிடக் கூடாது.

ஒவ்வொருவரும் தனக்கான சிந்தனையை முன்வைத்தே செயல்படுகின்றனர். அதுவே மனித இனத்தின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இருந்து வருகின்றது. தான் என்ற உணர்வில் மாற்றம் இருக்காவிட்டாலும் இதில் சற்றுத் தளர்வு இருந்தாலே போதுமானது.

மனிதர்கள் தனக்கான, தனது உயர்வுக்கான விருப்பத்தை எந்த அளவுக்கு கொண்டுள்ளனர் என்ற உண்மையை அறிவது அவர்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்த மிகவும் அவசியம். இந்த உண்மையை மறக்காது இருந்தால் மற்றவர்களுடன் உறவை ஏற்படுத்தும் திறனையும் ஆற்றலையும் இது கொடுக்கும்.

ஒவ்வொரு மனிதனும் முதலில் தனது உயர்வில்தான் அதிகம் விருப்பம் கொண்டுள்ளான். மற்றவர்களின் உயர்வு பற்றி இரண்டாவதாகவே எண்ணுகின்றான். மற்றவர்களோடு பேசும்போதும், பழகும் போதும் இதே உண்மையை நினைவில் கொள்ள வேண்டும் அதற்கேற்ப நம் பேச்சு மற்றும் அணுகுமுறை இருக்க வேண்டும் என்பதையும் மறந்துவிடலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# மரணத்தின் உயிர்ப்பில்



ஆ.கண்ணப்பன்,
கல்முனை- 1

நேரமும் நண்பகலாகிவிட்டது. இராணுவத்தின் துப்பாக்கி ரவைகளால் விதவையாக்கப்பட்ட ஒரே மகள் செல்லத்துக்குச் சின்ன வெங்காயத்தையும் பச்சை மிளகாயையும் கிள்ளுகளாக்கி உப்பையும் சேர்த்துப் பிசைந்து கொடுத்துவிட்டு வெறுவயிற்றோடு காத்து வைத்திருந்தாள் கனகம். பழஞ்சோறும் நாறிப் பதங்கெட்டாயிற்று. எங்கோ நடந்து முடிந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்காக ஒரு வாரத்தின் பின் இங்கே வந்து வீடு வீடாக அவர்கள் சோதனை நடத்துகிறார்கள். இறுதி மூச்சுகளை எண்ணியபடி இன்றோ நாளையோ கண்களை மூடக் காத்துக்கிடக்கும் பிள்ளையார் கோயில் பெரிய வண்ணக்கரைப் பார்த்து வருவதாகக் கூறிச் சென்ற தனது வயதான கணவர் நாகனைத்தான் வழி பார்த்திருந்தாள் கனகம்மா.

மாதவிலக்காகியிருந்த மகள் செல்லம் இன்றுதான் தலைமுழுகப் போகிறாள். அவளுடைய கணவன் இருந்திருந்தால் ஏதாவது கறிபுளியை வாங்கி வந்து ஆக்கிக் காய்ச்சச் சொல்லியிருப்பான். அரைப்பட்டினி, முழுப்பட்டினி கிடந்து நாள்களைக் கழிக்கும் மகளுக்கு இன்றைக்கேனும் எதையாவது காய்ச்சிக் கொடுப்போம் என்றுதான் கனகம்மா நாகனிடம் சொல்லியனுப்பினாள். ஊத்தை உடுப்புகளும் ஊறவைத்தபடி கிணற்றடியில் கிடக்கிறது. குளிக்கவும் தோய்க்கவும் சவர்க்காரங்களை வாங்கி வரும்படியும் மறக்காமல் நாகனிடம் கனகம் கூறியிருந்தாள்.

இல்லாமையையும் இயலாமையையும் நினைத்து வெறுங்கையால் முழம்போட்டுப் பெருமூச்செறிந்து நிமிர்கையிலே நாகரும் வெறுங்கையுடன்தான் வந்து நின்றார். எதிர்பார்ப்புக்கள் சருகாகி உதிர, ஏமாற்றத்துடன் பார்க்கும் மனைவியிடம் ''இஞ்சபாரு... வெட்டொண்டு துண்டு இரண்டாகக் கடைக்காரன் சொல்லிப்போட்டான். பழைய கடன் அறுநூறு ரூபாவையும் தந்தாத்தானாம் புதுசாக் கடன் தருவானாம். என்ன செய்யிறது..? அது சரி, நம்மட பெரிய வண்ணக்கருக்கு இப்ப ஓரளவு சுகம். கண்ணமுழிச்சுப் பார்த்துக் குடுக்கிற தண்ணிவென்னியைக் குடிக்கிறார்'' என்று கூறி முடித்த நாகனுக்கு எலிகள் வீட்டுக்குள் கீச்சிடும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்து முகட்டு வளையைப் பார்த்தார். அங்கே முகட்டிலிருந்த எலியொன்று வீட்டு மூலையில் தொங்க வைக்கப்பட்டிருந்த அவரது பறைமேளத்தின் மீது தொப்பென விழுந்து ஓடி மறைந்தது. சந்தேகமடைந்த நாகன் பறைமேளத்தை எடுத்துப் பார்த்தபோது பறைமேளத்தின் தோற்பகுதிகளையெல்லாம் எலிகள் நன்றாகவே பதம் பார்த்திருந்தன. சுமார் ஆறு மாதங்களுக்கு முன்புதான் வாய் வயிற்றைக் கட்டி முருகனிடம் கொடுத்து மூட்டி எடுத்த பறைமேளம் வாழ் வாதாரமான பறைமேளம் இல்லாவிட்டால் மூன்று ஜீவன்களின் இரைப்பைகள் நிரந்தரமாகவே வெறுமையாகிவிடும்.

இப்போதெல்லாம் கந்தன், முருகன், நாகனைப் போல் ஏழோ, எட்டோ பேர்கள்தான் பறைமேளத்தையே நம்பி வாழ்கின்றனர். ஏனையோர் வெவ்வேறு தொழில் துறைகளில் ஈடுபட்டு படித்து முன்னேறி வெளிநாடுகளுக்குச் சென்று பொருளாதாரத்தை ஈட்டித் தங்களது வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றிக் கொண்டுள்ளனர். சாதியத்தொழில் புரியும் இவர்களை இவர்களது சொந்தங்கள் கூட ஒதுக்கியே வாழ்கின்றனர். சமூக அந்தஸ்து காரணமாகப் பல்வேறு மூத்த கலைகள் வழக்கொழிந்துபோயின. அவற்றுள் சில இவ்வாறான வறுமைக்குள்ளும் நிர்ப்பந்தங்களிலும் செத்துக் கொண்டிருக்கின்றன. இந்த விடயங்கள் பற்றி என்றுமே சிந்திக்க முடியாத நாகன், தொழிலைத் தெய்வமாக மதிப்பவன். அந்தப் பறைமேளத்தை எடுத்து மிகுந்த கவலையோடு அதன் தோற்பகுதிகளைக் கழட்டுகிறான். இரண்டு தோல் தட்டுகளையும் கழற்றியதும் சுற்றிமடித்தவாறு நோட்டு வந்து விழுகிறது. பிரித்துப் பார்த்தபோது மூன்று நூறு ரூபா நோட்டுக்கள் இருந்தன. குப்பைக்குள் கூடக் குண்டுகள் இருக்கும். இன்றைய காலத்தில் பறைமேளக் கொட்டுக்குள் பணநோட்டுக்கள் இருந்தது, நாகனுக்கு அதிசயமாகத் தெரியவில்லை. மேளக் கொட்டையும் அதற்கான பொருள்களையும் மேளத்தை மூட்டித் தருமாறு முருகனிடம் கொடுக்கும்போது மூட்டுக் கூலியாக முந்நூறு ரூபாவையும் நாகன் கொடுத்தபோது முருகன் அதனை விடாப்பிடியாக மறுத்தான். நாகன் அதற்கு, பிள்ளை, குட்டிக்காரனுடைய கூலியை நான் எடுக்கமாட்டேன் என்று கட்டாயப் படுத்திக் கொடுத்துவிட்டு வந்தான். அந்த முந்நூறு ரூபாவையும் பெற விரும்பாத முருகன் மேளக்கொட்டினுள் வைத்து மேளத்தை மூட்டியிருக்கிறான் என்பது நாகனுக்கு நன்றாக விளங்கிவிட்டது.

கண்ணீர் கசிய மனம் நெகிழ்ந்த நாகன் ''கனகம்..., கனகம்'' என்று மனைவியை உற்சாகத்துடன் அழைத்து விடயத்தையும் எடுத்துச்சொல்லி, தலையிலே தண்ணீர் ஊற்றவிருக்கும் மகள் செல்லத்துக்கு நல்லதொரு கறியை அரைச்சுக் காய்ச்சிக் கொடுக்குமாறு கூறிக் காசையும் கொடுத்தபோது தலைக்கு மேலால் 'கிக்கிலி' பறவை ஒன்று பயங்கரமாக அலறியபடி பறந்து செல்ல, அந்தநேரம் பார்த்துத் தெரு நாய்களும் ஊளையிட்டுக் குரைத்தன. இந்தச் சம்பவங்களையெல்லாம் கூர்மையுடன் அவதானித்த கனகம் ''இஞ்ச பாருங்கோப்பா... இதெல்லாம் துக்குறிகள். காகங்களும் கூடிக் கரையிற சத்தமும் கேக்குது. ஒருவேளை பெரிய வண்ணக்கர் பெரியபதம் அடையப் போறாரோ தெரியல'' என்றாள்.

கனத்தின் ஊகம் வீண்போகவுமில்லை, பொய்க்கவுமில்லை என்பதை ஊர்ஜிதப் படுத்தியவாறு சிறிது நேரத்தின்பின் பெரிய வண்ணக்கர் காலமான செய்தி ஊர் முழுவதும் பரவியது. ''என்ன நாகன்... உங்களுக்கு இன்னும் வியளம் வரலையா?'' என்று வினவியபடி தண்டக்காரன் தம்பி முத்துவும் அரைத்தள்ளாட்டத்துடன் மரணவீட்டுக்குக்'கூரை முடிகள்' வைப்பதற்கான உற்சாகத்துடன் நடந்து கொண்டிருந்தான்.

பெரிய வண்ணக்கர் மரணித்த செய்தி விசுவாசமுள்ள நாகனுக்குத் தாங்க முடியாத இழப்பாக இருந்தது. மறுபுறத்தில் தனது பறைமேளம் பாவிக்க முடியாத நிலையை அடைந்துவிட்டதே என்ற தோல்வி ஈடுசெய்ய முடியாததாகத் தென்பட்டது. சொந்தக்காரர்கள் எல்லாம் வெளிநாடுகளில் இருக்கிறார்கள். அடக்கம் செய்வதற்கு எப்படியாவது இரண்டு, மூன்று நாள்களாவது செல்லும். எப்படிப் பார்த்தாலும் ஆயிரத்தி ஐந்நூறு ரூபா வரைக் கிடக்குமே என்றெல்லாம் நாகனின் மனம் அல்லற்பட்டபோது ''மாமா... மாமா...'' என்று கூவியபடி வாசலிலே வந்து நின்ற முருகன், ''மூன்று சோடி மேளம் கேக்கிறாங்க..., இல்ல; நீங்க கெதியா வெளிக்கிட்டு வீட்டுக்கு வாங்க; எல்லோரும் ஒன்று கூடிப் போவம்'' என்றான்.

முருகன் சொன்னவற்றையெல்லாம் அமைதியோடு கேட்டிருந்த நாகன் தனது மேளத்தின் நிலையைக் காண்பித்தான். அதிர்ந்துபோன முருகன் தலையிலே அடித்துக்கொண்டான். பெரிய இடம். நான் எப்படித்தான் சமாளிக்கப் போறேனோ என்று ஆடிப் போனவனாய் நடையைக் கட்டினான். கவலை ஒருபுறம், நஷ்டம் மறுபுறமாய் தனது பறைமேளக் கொட்டனையே வெறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தான் நாகன். வெறுமையடைந்த பறைமேளக் கொட்டும் கனத்துப் போன நாகனின் மனதும் ஒன்றையொன்று பார்த்துக் கேலி செய்து கொண்டன. முருகனும் நீண்டதொரு பெருமூச்சுடன் விறாந்தைக் கட்டிலில் உட்கார்ந்தபோது ''மாமா... மாமா...'' என்று மூச்சுத் திணற ஓடிவந்த முருகன் ''மாமா பெரிய வண்ணக்கர் மூத்த மகன் உங்கள எங்கையெண்டு கேக்க . நானும் நடந்ததுகளச் சொல்ல நீங்க இல்லாம மேளத்தில நகத்தால கூடத் தெறிக்கப்படாது எண்டு சொல்லி உங்கள உடனே கூட்டி வரச் சொன்னார்'' என்றான். பெரியவண்ணக்கர் நாகனின் ஏழ்மைக்குள் மீண்டொரு உயிர்ப்பைப் பெற மரண வீடு சென்ற நாகன் தனக்கு உதவி ஒத்தாசைகள் புரிந்த பெரிய வண்ணக்கரின் ஆத்மசாந்தி வேண்டியவனாக முருகன் கொடுத்த பறைமேளத்தில் மனிதத்தை ஒலிக்கச் செய்தான்.



குட்டிக்கதை

# அவளுக்காகவே...

திருமாறன் வீட்டில் பெண் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை எத்தனையோ பெண்களைப் பார்த்தும் ஒருவரையும் அவனுக்குப் பிடிக்கவில்லை. இருப்பினும் தனக்குப் பிடித்த தன் இயல்பான வாழ்க்கைக்கு ஒத்து வரக் கூடிய பெண்ணைத் தேடிக் கொண்டிருந்தான். தனக்குப் பிடித்த ஒருத்தி எங்காவது இருப்பாள் என்ற நம்பிக்கையுடன் இருந்தான். திருமாறன் நன்றாகப் படித்தவன்: ஆனாலும் அவன் செய்யும் வேலைக்கு ஏற்ற சம்பளம் கிடைக்காது விட்டாலும், குடும்பச் சுமையைத் தாங்குவதற்காக தினமும் வேலைக்குச் சென்று வருபவன்: தினமும் பஸ்ஸில் சென்று வருவான். வேர்க்க விறுவிறுக்க செல்லும் இவன் மிகவும் சகிப்புத் தன்மை உள்ளவன். சேமிப்புப் பழக்கம் கொண்டவன். காதல், பொழுது போக்கு எல்லாவற்றையும் தாண்டி, வாழ்ந்து கொண்டிருப்பவன்.

ஒரு நாள் ஒரு பெண்ணைப் பார்க்க பெற்றோர்களுடன் சென்றான் திருமாறன். பெற்றோர்கள் பெண் வீட்டாருடன் கதைத்துக் கொண்டிருக்கும் போது பெண் அழகானவள், வசதியானவள், நல்ல குணாதிசயங்கள் உடையவள் என்று பெண்வீட்டார் கூறிக் கொண்டிருக்கையில், பெண் மாப்பிள்ளை வீட்டார் முன் வந்து நிற்கவே எதுவும் பேசாமல் திருமாறன் வாயடைத்துப் போக திருமண நாளை நிச்சயித்துவிட்டுச் சென்றனர் திருமாறனின் பெற்றோர்.

அவசர அவசரமாகத் திருமணம் நடைபெற்றது. அழகு, அறிவு, வசதி இருப்பினும் ஏதோ ஒரு குறை இருப்பது இயல்பானது. அதற்கு ஏற்றாற் போல திருமணம் முடிய பல எதிர்பார்ப்புகளுடன் இருந்த திருமாறன் தனது மனைவி யாழினியைப் பார்த்து ஆசையுடன் பல கேள்விகள் கேட்க, எதுவும் பேசமுடியாதவளாய் தலை குனிந்தபடி யாழினி இருக்க.. இது வெட்கமோ என்று இவனும் எதுவும் பேசவில்லை. இதே போல மறுநாள் அவளுடன் பேச முயற்சித்த திருமாறன் உண்மை தெரிய வந்ததும் திகைத்தான். கலங்கிப் போய் இருந்தான். யாழினி ஊமை மட்டுமல்ல காது கேளாத ஒரு பெண் என்பதையும் அன்றே அறிந்தான். முதலில் எல்லோருமே ஆத்திரப்பட்டனர். யாழினியையும் அவளுடைய குடும்பத்தினரையும் ஆத்திரத்துடன் திட்டினர். முதலில் கலங்கிய திருமாறன் ''தேவதையை திருமணம் செய்துள்ளேன்; தேவதை அருள் தரும் அதிகம் பேசாது தான்: குறை உடம்பில் இருப்பினும் மனதில் இல்லை''. என்ற முடிவுக்கு வந்தான். பெற்றோரின் சம்மதம் இல்லாது போனாலும், திருமாறனின் உறுதியான முடிவு ஆயுள் முழுவதும் யாழினியுடன் இனிது வாழ்வதே.

சா.ஜிந்துஜா, கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அமைதிக்கு வழிசெய்ய ஐ.நாவிடம் வாக்கெடுப்புக் கோரிக்கை

## ஆனால் தமிழர்களிடையே கட்சிச் சண்டை மக்கள் ஒன்றுபட்டாலே தலைமை தானாக நிமிரும்

எஸ்.எம்.கோபாலரத்தினம்




பிரிவினை வாதிகள் என்று நாட்டில் தமிழர்களுக்கு எதிராக பேரினவாதிகள் துவேஷத்தை ஊட்டி, தமிழர்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ முடியாத நிலையை ஏற்படுத்தினர். இதன் பின்னர்தான் தந்தை செல்வநாயகம் 1976 ஆம் ஆண்டில் இழந்த தமிழரசை மீண்டும் அமைக்க வேண்டுமென்று நாடாளுமன்றத்தில் பிரேரணை கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்தார். இதுவே பின்னர் வட்டுக்கோட்டையில் கூடிய தமிழ்க் கட்சிகளின் கூட்டணியில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. இழந்த தமிழரசை மீண்டும் அமைப்பதற்கான கோரிக்கையே 1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழர் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனமாக வைக்கப்பட்டது. தமிழ் மக்கள் இதை ஏற்று 1977 ஆம் ஆண்டு தேர்தலில், தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பெரும்பான்மை பலத்துடன் நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்தனர்.

இந்தத் தேர்தல் முடிவைக் கண்டு அச்சமடைந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, யாழ்ப்பாணத்தில் நடந்த களியாட்ட விழாவில் காவல்துறையினர் மூலம் கலகத்தைத் தொடக்கி நாடு முழுவதும் இனக்கலவரமாக்கி தமிழர் இன அழிப்புக்கு வழிவகுத்தார். இந்தக் கலகம் பற்றி பின்னர் நடத்தப்பட்ட சன்சோனி விசாரணைக்குழு அறிக்கை எங்கே என்று தெரியாமலே போய்விட்டது.

சிங்களப் பேரினவாதம் தனது இன அழிப்புச் செயற்பாடுகளினாலும், இன வெறிப் போக்கினாலும் நாட்டைப் பிளவுபடும் நிலைக்கு கொண்டுசென்றது. இஸ்லாமிய நாடுகளுக்கு இஸ்லாமிய அமைச்சர்களை அழைத்துக்கொண்டு ''ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திக் விஜயம் செய்து நாடு முன்னேறிச் செல்கிறது என்றும், பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டது இனி நாட்டை அபிவிருத்தி செய்ய உலக நாடுகள் உதவிசெய்ய வேண்டும்'' என்றும் கோரிக்கை விடுத்து வருகிறார். அதாவது அபிவிருத்திக்கு யாசகம் கேட்கிறார்.

தம்புள்ள பள்ளிவாசல் சம்பவம் பற்றி எதுவுமே தெரியாதது போன்று ஆட்சி பீடம் நடந்துகொள்கிறது. 1977 ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழ் மக்கள் தமது பிரதிநிதிகளுக்கு வழங்கிய ஆணையைத் தூசு போல் உதறித்தள்ளி தமிழ் இன ஒழிப்பில் ஆட்சியாளர் ஈடுபட்டதுதான் தமிழ் இளைஞர்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கையை இழந்து ஆயுதம் ஏந்தக் காரணமாக அமைந்தது.

தமிழ் இளைஞர்கள் தமது மக்களுக்காகவும், தமது மண்ணைக் காப்பாற்றவுமே ஆயுதம் ஏந்தினர். இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தவில்லை. ஆனால் இலங்கையில் ஆட்சியைக் கவிழ்த்து அதைக் கைப்பற்றுவதற்காக ஆயுதம் ஏந்தி பலரைக் கொலைசெய்து அழிவுகளை ஏற்படுத்தியவர்களும், தலதாமாளிகைக்குள் பூத்தட்டில் ஆயுதம் கொண்டு சென்றவர்களும் இன்று தேசாபிமானிகளாகக் கூறப்படுகிறார்கள்.

இனவாதத் தீயை மூட்டிய பண்டார நாயக்காவே அதை அணைப்பதற்காக அதிகாரப் பரவலாக்கலுக்கு தந்தை செல்வ நாயகத்துடன் ஒப்பந்தம் செய்தார்.

அதையும் பிரிவினை என்று முத்திரை குத்திய இனவெறியர்கள், லட்சக்கணக்கான தமிழர்களை இன்றுவரை அழித்தும், இன்னமும் இனவெறியைக் கைவிடத் தயாராக இல்லை.

இந்த நிலையில்தான் இல்லாத பிரிவினையை இருப்பதாகச் சொல்லி இன அழிப்பில் ஈடுபட்டவர்கள் நிஜமான பிரிவினையை காணக்கூடிய நிலை உருவாகிக்கொண்டிருப்பதை விரைவில் உணர்ந்து கொள்வர்.

### ''ஐ.நா. மூலம் தமிழர்களுக்கு தனிநாடு கிடைக்க...''

''இலங்கைத் தமிழர்கள் மீது நடத்தப்படும் மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்தவும், அங்கு அமைதி நிலவவும் வகைசெய்யும் தனி ஈழத்தை அமைக்க ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்த ஆவனசெய்ய வேண்டும்'' என்று யுனெஸ்கோ அமைப்பின் ஆசிய பசிபிக் மனித உரிமைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆலோசகராகப் பொறுப்பேற்றுள்ள அசன்முகம்மது ஜின்னா யுனெஸ்கோ அமைப்பின் செயலாளர் நாயகம் டாக்டர் டேசுல் கிம்மிற்கு கடிதம் எழுதியுள்ளாரென ஒரு தகவல் கூறுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னெடுப்பில் பொது வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி தனித் தமிழீழம் அமைத்துத்தர வேண்டும் என்ற கோரிக்கை மனித உரிமைகளிலும், மனித சமுதாயத்தின் நல்லிணக்கத்திலும் நம்பிக்கை உள்ள அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றாகும்.

போர் முடிவுற்ற பிறகும் தமிழர்கள் மீது தொடர்ந்து நடத்தப்படும் அத்துமீறல்கள் குறித்தும், தங்களின் மேலான கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். தமிழர்கள் வாழும் பகுதிகளில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்படுவதும், தமிழர்கள் வாழும் பகுதிகளிலுள்ள அனைத்து மதத்தினரின் வழிபாட்டுத் தலங்கள் தகர்க்கப்படுவதும் தமிழர்களின் பாரம்பரிய சின்னங்கள் அழிக்கப்படுவதும் தொடர்ந்து நடைபெறுகின்றன.


தமிழர்கள் வாழும் ஊர்களின் பெயர்கள் கூட மாற்றப்பட்டு, ஒரு கலாசார அழிப்புக்கான படையெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது. இது தமிழர்களின் உரிமைகளைப் பறிக்க திட்டமிட்டுச் செயற்படுத்தப்படும் சதியாகும். இதனை இலங்கையில் போர் என்ற பெயரில் நடைபெற்ற இன அழிப்பின் தொடர்ச்சியாகவே கருதவேண்டும்.

இலங்கையில் எஞ்சியுள்ள தமிழர்கள் வாழும் பெரும்பாலான பகுதிகளில், அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டும், பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பற்றும் உள்ளனர். வாழ்வாதாரமும் அடிப்படை மனித உரிமையும் நிராகரிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு, கல்வி அறிவியல் மற்றும் சமூகமேம்பாடு ஆகியன எட்டாக் கனியாகவே இருப்பதால், எந்த வகையில் பார்த்தாலும் அவர்கள் தங்கள் அடையாளங்களை முற்றிலுமாக இழந்தவர்களாகி பாதிக்கப்பட்டுள்ளனர்.

# விபத்துகளைக் குறைக்க வழி என்ன?

சோபனா

உயிரிழப்புகள் தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்தாலும் இவற்றைத் தவிர்ப்பதற்கோ கட்டுப்படுத்துவதற்கோ வழிகளை உருவாக்கிக் கொள்ள முடியும் . இதன் மூலம் அநாவசியமான முறையில் ஏற்படுகின்ற உயிரிழப்புகளை தவிர்க்க முடியும்.




யாழ். மாவட்டத்தில் கடந்த வருடத்தை விட இந்த வருடம் காலாண்டுப் பகுதிக்குள் மட்டும் அதிகமான வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் புள்ளி விவரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. இந்த வீதி விபத்துக்களால் அநாவசியமான உயிரிழப்புகளையும் சந்திக்க நேரிடுகிறது. இவற்றில் அதிகம் மோட்டார் சைக்கிள் விபத்துகளே என்றும் பதிவாகியுள்ளன.

இந்தத் தகவல்களின் அடிப்படையில் அதிகரித்துள்ள இந்த வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

வீதி விபத்துகள் எதனால் ஏற்படுகின்றன. அவற்றுக்கான காரணங்கள் என்ன என்பது தொடர்பாகவும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும்.

யாழ். மாட்டத்தில் பொது மக்கள் தமது போக்குவரத்து தேவைகளை இடர்பாடின்றி நிவர்த்தி செய்யும் நோக்குடன் தனிப்பட்ட ரீதியாக சொந்த வாகனங்களை அதிகமாக பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். பொது மக்களின் தேவைகள் அதிகரித்தமைக்கு ஏற்றால் போல் வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன. இந்த நிலையில் வீதிகளில் வாகனக் கட்டுப்பாட்டைக் கொண்டு வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் வீதிகளில் வாகன நெரிசல் அதிகரித்துள்ளதுடன் விபத்துகளும் அதிகரித்துள்ளன.

மக்களின் போக்குவரத்து பாவனையைக் கட்டுப்படுத்த முடியாவிட்டாலும், வீதி ஒழுங்கு முறை தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தமுடியும். இவை உரிய வகையில் வழங்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

கடந்த காலங்களில் அதிகமானோர் சைக்கிள்களையே பயன்படுத்தி வந்துள்ளனர். தற்போதைய சூழ் நிலையில் மோட்டார் சைக்கிள் பாவனையாளர்கள் அதிகரித்துள்ளனர். இவை பொருளாதார வளர்ச்சியின் எடுத்துக்காட்டாக இருந்தாலும் அதன் விளைவு பாரதூரமானதாகவே உள்ளது.

இந்த நிலையில் அதிகரித்துள்ள வீதி விபத்துக்களால் இளம் சமூகத்தினரிடையே அநாவசியமான உயிரிழப்புகளைச் சந்திக்க நேரிட்டுள்ளது.

யாழ். பேதனா வைத்தியசாலையில் இந்த வருடம் காலாண்டுப் பகுதியில் மட்டும் எட்டுப் பேர் உயிரிழந்ததுடன் தொள்ளாயிரத்து 14 பேர் காயமடைந்து சிகிச்சை பெற்றுள்ளனர். இந்த வீதி விபத்துகளுக்கு ஆளானோர் பெரும்பாலும் இளவயதினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் கடந்த வருடம் 37 பேர் உயிரிழந்ததுடன் ஆயிரத்து 785 பேர் காயமடைந்தும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

வைத்தியசாலையின் புள்ளி விவரங்களின் அடிப்படையில் எமது பிரதேசத்தில் வீதி விபத்துகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

முக்கியமாக வீதி ஒழுங்கு முறைகளை சரியாகப் பின்பற்றத் தெரிந்த தகுதியுடையவர்களுக்கே சாரதி அனுமதி பத்திரம் வழங்கப்பட வேண்டும். மாறாக சரியான முறையில் வாகனம் செலுத்தத் தெரியாத ஒரு நபருக்கோ அல்லது வீதி ஒழுங்கு முறைகள் பற்றித் தெரியாத ஒரு நபருக்கோ சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் போது விபத்துகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

இதனை விட சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளாத ஒருவர் வாகனம் செலுத்தும் போது தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தற்போது வீதியோரங்களில் இளைஞர்கள் தாம் செலுத்தும் வாகனங்களின் வேகக் கட்டுப்பாட்டையும் மீறி வாகனம் செலுத்துவதை அவதானிக்க முடிந்துள்ளது. இந்த நிலையில் வீதிகளில் அவசியம் ஏற்படும் போது வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமைக்குத் தள்ளப்படுகின்றனர். இந்த நிலையில் நிச்சயம் விபத்தையே இவர்கள் எதிர்கொள்கின்றனர். வீதிகளில் வாகனங்கள் செலுத்துவோர் வீதி விதிமுறைகளைக் கடைப்பிடிக்காது உள்ளமையும் விபத்துகள் அதிகரிப்பதற்குக் காரணமாகின்றன.

இந்த நிலையில் இவ்வாறான விடயங்கள் குறித்த விழிப்புணர்வு பாடசாலை மட்டத்தில் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம். ஆரம்பத்திலேயே இவர்களுக்கு இவ்வாறாக கல்வி ஊட்டப்படும் நிலையில் சரியான வழிநடத்தலுக்குள் எமது சமூகம் செல்லும் என்பது நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறியர் என்று இகழ்ந்து நோவு செய்வன செய்யேல்

இலக்கியக் காட்சி 139

தசரதச் சக்கரவர்த்திக்கு மனைவியர் மூவர்; ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர். ஒருவருக்கும் பிள்ளைப்பேறு இல்லை.

மன்னன் ஒருமுறை சம்பராசுரனுடன் யுத்தஞ் செய்யும் நிலை ஏற்பட்டது. இடையில் தேர்ச்சாரதி இறந்துவிட்டான். தோல்வி ஏற்படாவண்ணம் கைகேயி சாரத்தியம் செய்கிறாள். வெற்றியுடன் தசரதன் திரும்பி வருகிறான்.

''எனது தந்தை (கேகயன்) எனக்குப் பயிற்சியளித்த வகையில் நான் உங்களுக்கு உதவி செய்யும் வாய்ப்புக் கிடைத்தது'' என்று கைகேயி மகிழ்ச்சியில் கூறுகின்றாள். அப்போது,''உனக்குப் பரிசு கொடுக்க வேண்டும். ஏதாவது மூன்று பரிசு கேள்'' என்கிறான் தசரதன். ''என்னால் முடிந்த உதவியைச் செய்தேன், இதற்குப் பரிசா?'' என்றவள், ''சரி தேவைப்படும் வேளை கேட்கிறேன்'' என்று அந்தப் பேச்சை முடித்துவிட்டாள்.

காலம் நகர்கிறது. வழக்கம்போல் வேட்டைக்குச் சென்றவேளை, யானை என்று எண்ணிச் சிறுவனை அம்பால் கொன்ற தன் இளமைக்கால நிகழ்வை ஒருநாள் எண்ணிப் பார்க்கிறான் தசரதன். ஆம் , கொலையுண்ட சிறுவனை அவனது பெற்றோரிடம் எடுத்துச் சென்றபோது அவனுக்குச் சாபம் கிடைக்கிறது. கண்ணிழந்த பெற்றோருக்கு அந்தச் சிறுவன் கண்போல் இருந்தவன். ''எமது பிள்ளையை இழந்து - வாழ இயலாது நாம் உயிர்விடுவது போன்று நீயும் பிள்ளையைப் பிரிந்து உயிர்விடுவாய்'' என்று சொல்லி அந்தப் பெற்றோர் (முனிவர்) இறந்து விடுகின்றனர்.

ஆக, சாபம் இப்படி இருப்பதால் பிள்ளைப் பேறு இருக்கவேண்டுமே! முனிவர்களோடு திட்டமிட்டு யாகம் செய்கிறான். மக்கள் நால்வரைப் பெற்று மனைவி மக்களோடு மகிழ்ச்சியோடு வாழ்கிறான் மன்னன். மக்கள் கல்வி கேள்விகளிலும் படைக்கலப் பயிற்சிகளிலும் சிறந்து விளங்குகிறார்கள்.

''சவுளமொடு உபநயனம் விதிமுறை தருகுற்று
இவளவது என ஒரு கரை பிறிது இலவா
உவள் அரு மறையினொடு ஒழிவு அறு கலையும்
தவள் மதி புனை அரன் நிகர் முனி தரவே''.(கம்பர்)
(சவுளம்=குடுமி)

என வசிட்டர் கல்வி கற்பிக்கின்றார்.

''யானையும் இரதமும் இவுளியும் முதலான
ஏனைய பிறவும் அவ் இயல்பினில் அடைவுற்று
ஊன் உறு படைபல சிலையொடு பயிலா
வானவர் தனிமுதல் கிளையொடு வளர''. (கம்பர்)

படைக்கலப் பயிற்சியும் பெற்று தசரத குமாரர்கள் வாழ்கின்றனர். பின்னர் விசுவாமித்திரரின் வேள்வி காத்தலும் சீதா கல்யாணமும் நடைபெறுகின்றது. பரதன், தனது தாய்நாடான கேகய நாட்டுக்குத் தம்பி சத்துருக்கினுடன் செல்கிறான்.

அந்தக் காலகட்டத்தில் தசரதன், 'தனது முதுமையை எண்ணி இராமனுக்குப் பட்டாபிஷேகத்தை நடத்திவைத்துவிட்டுத் தான் தவத்தை நடத்த வனத்தை நண்ணுவேன்' என்கிறான்.

''ஆதலால் இராமனுக்கு அரசை நல்கி இப்
பேதையைத் தாய்வரும் பிறப்பை நீக்குறு
மாதவம் தொடங்குறு வனத்தை நண்ணுவேன்
யாது நும் கருத்து? என இனைய கூறினான்''.(கம்பர்)

மந்திரசபை ''ஆம்'' என்று மகிழ்ந்து சொன்னதும் மக்கள் நகரை அலங்கரிக்கத் தொடங்கினர். தசரதன் மகனைப் பெற்ற போதும், மிதிலையில் வில் முறித்தபோதும் உண்டான மகிழ்ச்சியிலும் பார்க்க மகிழ்ந்து இராமனிடம் இதுபற்றிக் கூறுகின்றான்.

இராமன், ''இதனால் காதல் உற்றிலன் இகழ்ந்திலன் கடன் இது'' என்கிறான்.

இராமர் பட்டாபிஷேக நினைவில் அயோத்தி மக்களும் அரண்மனை மக்களும் மகிழ்ச்சியோடு அதற்கான ஆயத்தங்களைச் செய்து அமளிப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், கூனி (மந்தரை) என்ற கிழவி மாத்திரம் அதனை விரும்பாத தன்மையொடு தோன்றுகிறாள் என்கிறார் கம்பர்.

''அந்நகர் அணியுறும் அமலை, வானவர்
பொன்னகர் இயல்பு எனப்பொலியும் எல்லையில்
இன்னல் செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னரும் கொடுமனக்கூனி தோன்றினாள்''.(கம்பர்)

கூனியின் கோலத்தை இவ்வாறு காட்டுவார் கம்பர்.

''தோன்றிய கூனியும் துடிக்கும் நெஞ்சினள்
ஊன்றிய வெகுளியால்; உளைக்கும் உள்ளத்தாள்
கான்று எரி நயனத்தார்; கதிக்கும் சொல்லினாள்;
மூன்று உலகினுக்கும் ஓர் இடுக்கண் மூட்டுவாள்'' (கம்பர்)

இனிமேல் மூன்று உலகத்தவரும் அனுபவிக்கப் போகின்ற துன்பத்துக்கெல்லாம் தீ மூட்டுபவளாக இந்தக் கூனியைச் சிங்க நோக்காகக் காட்டும் புலமை கம்பருக்கன்றி வேறுயாருக்கு இருக்கும்?

இராமனிடத்தில் பரதனைக் கண்டு மகிழ்ந்த கைகேயியின் தூய சிந்தையைத் திரிபு படுத்திய கூனியின் கோபம் எம்மாத்திரம்? ஆயினும், ''நாம் ஒன்று நினைகத் தெய்வம் ஒன்று நினைக்கும்'', ''விதி'' என ஒன்று உளது என்பதனையும் காட்டுகிறார் கம்பர்.

''அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல் அருள் துறந்தனள் தூமொழி மடமான்
இரக்கம் இன்மைன அன்றோ இன்று இவ்வுலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகுகின்றதுவே'' (கம்பர்)

எனத் தூய சிந்தையுடையவளான கைகேயியின் மனம், கூனியின் சூழ்ச்சியினால் மாறியதானாலேதான் இராமனது புகழை மூவுலகும் அறிந்து அனுபவிக்கும் படியான இராமாயண காவியம் தோன்றியது என்கிறார் கம்பநாடர். அதேசமயம் இராவணன் முதலிய தீயோரை அழிப்பதற்காகவே இராமவதாரம் நிகழ்கிறது என்பதனையும் புலவர் காட்டுகிறார்..



வாலிவதம் முடிந்ததும் சுக்கிரீவனுக்கு முடிபுனைந்து வைத்து, ஓர் அரசனுக்கு இருக்கவேண்டிய தகுதி பற்றிக் கூறும் போது, முன்பு தான் கூனிக்குச் செய்த குறும்பு பின்னர் தனக்குத் துன்பத்தைக் கொடுத்த கதையையும் கூறுகின்றான் இராமன்.

''சிறியர் என்று இகழ்ந்து நோவு செய்வன செய்யல் மற்று இந்
நெறி இழைத்தது யான் ஓர் தீமை இழைத்தலால் உணர்ச்சி நீண்டு
குறியதாம் மேனி ஆய கூனியால் குவவுத் தோளினாய்
வெறியன எய்தி நொய்தின் வெந்துயர் கடலின் வீழ்ந்தேன்''.

எனத் தான் இன்று சீதையை இழந்து துன்பப்படுவதற்குத் தனது குறும்பு காரணமெனக் கூறுகின்றான். ''முற்பகல் செய்தது பிற்பகல் விளைந்தது'' என்கிறான்.

ஒரு சிறிய கூனிக்கிழவி வலிமையான தோள் உடைய என்னையே துன்பப்படச் செய்துவிட்டாள் பார்த்தாயா!'' எனக் கூறி சுக்கிரீவனையும் விழிப்படையச் செய்கிறான் இராமன். முதலில் கூனியும் கைகேயியும், பஞ்சவடியில் சீதையைக் கண்ட சூர்ப்பனகையும், இராவணன் சீதையைக் கவர்ந்துசெல்ல எண்ணியதும் எல்லாம் மங்கையர் பொருட்டால் விளைந்தவை என எண்ணுகிறான் இராமன்.

''மங்கையர் பொருட்டால் எய்தும் மாந்தர்க்கு மரணம் என்றல்
சங்கையின்றி உணர்தி; வாலி செய்கையால் சாலும், இன்னும்
அங்கு அவர் திறத்தினானே அல்லலும் பழியும் ஆதல்
எங்களின் கண்டி அன்றே; இதற்கு வேறு உவமை
உண்டோ?'' (கம்பர்)

என, எங்களுடைய விடயத்திலேயே பார்ப்போமே' என்று சாதாரண மக்கள் பேசிக்கொள்வதுபோல் இராமனைக் கூற வைக்கும் திறனை இங்கு காண்கிறோம்.

மேலும் ''யான் இப்படிச் சொல்வதனால் என்னைப் பெரிய மனிதனாக (நாயகனாக) எடுத்துக் கொள்ளவேண்டாம். நம்மைப் பெற்றெடுத்த தாய் நமக்குக் கூறும் உபதேசமாகக் கொண்டு நீ அரசாளப் போகும் மக்களைக் காப்பாற்றுவாயாக; என்றும் கூறுகின்றான் இராமன். தொடர்ந்து தர்மத்தில் வழுவாதிருப்பதற்குத் தீயவர் தீமை புரிந்தால் அதற்குத் தண்டனை வழங்க வேண்டும் என்பதையும் இராமன் கூறுகின்றான்.

''நாயகன் அல்லன்; நம்மை நனி பயந்து எடுத்து நல்கும்
தாய் என இனிது பேணித் தாங்குதி தாங்குவாரை
ஆயது தன்மையேனும், அற வரம்பு இகவா வண்ணம்
தீயது வந்தபோது சுடுதியால் தீமையோரை''. (கம்பர்)

என்றும் கூறிவைக்கிறான் இராமன். மேலும் தொடர்ந்த இராமன் ''இறப்பும் பிறப்பும் அவரவர் செய்வினைப் பயனால் நிகழ்பவை. பிரமதேவனுக்காயினும் அறவினை தவறும் நாள் வாழ்நாளின் இறுதியாகும். அது உறுதியானது அன்பனே! ஆக்கமும் கேடும் அவர்தம் அறமும் பாவமும் ஆகும். ஆகவே அறத்தைச் செய்யுங்கள்; பாவத்தைவிடுங்கள்.''

''மாரிகாலம் அண்மிக்கின்ற படியால் உனது பெரிய சேனையைக்கொண்டு கூடிய விரைவில் என்னிடம் வரவேண்டும்'' என்று கூறி இராமன் சுக்கிரீவனை அனுப்பிவிட்டு, தான் தம்பியோடு தனது இருப்பிடம் செல்கிறான்.

ஆக, இராமன் தான் வனவாசம் செய்ய நேரிட்டதும் தனது பிரிவால் தந்தை இறந்ததற்கும் மூலகாரணமாய் நிற்பவள் கூனி; அவள் அதைச் சாதித்துக் காட்டியதுதான் சிறுவயதில் செய்த குறும்பு என்பது இராமன் அடிமனதில் இருந்து இன்னும் மறைவில்லை. அதனாலேயே ''சிறியோர்க்காயினும் இகழ்ந்து நோவு செய்வன செய்யேல்'' என்று சுக்கிரீவனுக்கு அழுத்திக் கூறுகின்றான். தான்செய்த ஓர் அற்ப தவறுக்காக வருந்தும் இராமனைக் கம்பர் இங்கே காட்டுகின்றார்.

'கீழோராயினும் தாழ உரை'-
ஔவையார்.



மட்டுவில் நல்லதம்பி

# வயிற்றுளைவு தணிக்கும் குடசப்பாலை

## நலம் தரும் தெய்வீக மூலிகைகள்

**குடசப்பாலை**
**வேறுபெயர்- கசப்பு வெட்பாலை, குளப்பாலை, வெள்ளைப் பாலை, குளப்பாளை.**
**தாவரவியற் பெயர்-**
Holarrhena antidysenterica
**(ஹொலரீனா அன்ரிடிசென்ரெரிக்கா)**
குடும்பம்- Apocyanacea
(அப்போசயனேசியே)
சிங்களப் பெயர்- ஹெலிந்த
சமஸ்கிருதப் பெயர்:- குடஜா



வெட்பாலை, குடசப்பாலை ஆகிய இரண்டும் ஒரே மாதிரியான மருத்துவ குணமுடைய மூலிகைத் தாவரங்களாகும். குடசப்பாலை ஈரலிப்பான நிலங்களில் வளரும். சிறுமர வகுப்புக்குரியது. பட்டை அழுத்தமானது. நரை நிறம். தனியிலைகள். நீள்வட்டமானவை. நுனி கூரானது. பூக்கள் வெள்ளை நிறம். நறுமணமுள்ளவை.

**கழிச்சலுக்கு-** குடசப்பாலைப் பட்டையைக் குடிநீர் செய்து கொடுத்து வர கழிச்சல், வயிற்றுக் கடுப்பு, வயிற்றுளைவு என்பன தணிவடையும்.

வயிற்று நோவுக்கு- பட்டைச் சாற்றுடன் சமவளவு இஞ்சிச் சாறு சர்க்கரை சேர்த்துச் சாப்பிட்டு வரத் தணிவடையும்.

**நாட்பட்ட கழிச்சலுக்கு-** குடசப்பாலைப் பட்டை, வில்வம்பழச்சதை, மாதுளம் பட்டை என்பவற்றைச் சமவளவு எடுத்து உலர்த்திப் பொடிசெய்து அதில் ½- 1 தேக்கரண்டி அளவு தூள் எடுத்துத் தேனுடன் சேர்த்துக் காலை, மாலை சாப்பிட்டுவர கழிச்சல், நாள்பட்ட கழிச்சல், சீதபேதி முதலியன நீங்கும்.

**வெட்பாலை**
**வேறு பெயர்-குடசம், வெட்பாலையரிசி**
**தாவரவியற் பெயர்-**Wrightia Tinctoria **(ரைற்றியா ரிங்ரோரியா)**
குடும்பம்- Apocynaceae
**(அப்போசைனேசியே)**
**சிங்களப் பெயர்:- இத்த, குடசப்பாலை, வெட்பாலை**



இது பெருஞ் செடி அல்லது சிறு தனி இலைகள். நீள்வட்டமானவை. விளிம்பு அலை வடிவானது. பூக்கள் வெண்ணிறம்.

**பல் வலிக்கு-** வெட்பாலை இலையை வாயிலிட்டு மென்று சுவைக்க பல் வலி தணியும்

**வயிற்றுப் பொருமலுக்கு-** இதன் விதையைப் பொடி செய்து அல்லது குடிநீரிட்டுக் கொடுத்துவர வயிற்றுப் பொருமல் மாறும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D. (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு நினைவு மட்டுமே!



என்
சிரிப்புக்களை
சில்லறையாக்கி
உறவுகளை
சுவர்ப்படமாக்கி
மேதையான
என்னை
உன்னிடம்
பேதையாக்கியது
உன் ஒரு நினைவு
மட்டுமே!

எஸ்.சுஜந்தகாசி

## அமைதி வாழ்வுக்கா?



பரந்த திசையெல்லாம்
வெண் புறாவின்
வருகை வேண்டித்
தவமிருக்கும்
ஈழத்து ஜீவன்கள்
தடம் பதிக்கப்பட்ட
வரலாற்றின்
கொடூரமான இரத்தக்
கறைகள்
இனியும் வேண்டாமென
கசிந்துருகும் மானிடங்கள்
முடிந்து போன
இழப்புகள்
முடிவாக அமைய
இதயத்தில் இறைஞ்சி
இனிமை தேடும்
இளம் சிட்டுக்கள்
நம்பிக்கையே
வாழ்க்கையென்று
நகர்ந்த நாள்கள்
இனி இல்லையென்றாலும்
ஏதோ ஓர் எதிர்பார்ப்பு....
இத்தனையிலும் ஊசலாடிக்
கொண்டிருக்கிறது
பரிதாப ஜீவன்களின்
அமைதி வாழ்வு...?

பொ.கோகுலன்
மீசாலை

## தணல்கள்

மதிப்புக்குரிய எம் தேசத்தின்
ஜனாதிபதியே
உங்கள் தோள்துண்டு
எங்கள் இனப்படுகொலையின்
குருதியில் நனைந்த
ஈரத்துண்டு தானோ?

வேப்பங்கன்றுகளையும்,
தேக்க மரங்களையும்
தறிக்கும் போது வேரில்
சிக்கிய விலா எலும்புகளும்
மக்கிப் போகாத
மனித எச்சங்களும் தான்
இப்போது கிடைக்கின்றன
எம் மண்ணில்

இன்னொரு போரில்
நாங்கள் வாங்குவதற்கும்
கொடுப்பதற்கும்
ஒன்றுமில்லாமல்
குசினிக்குள் உடைந்த
மண்பானை போலக் கிடக்கிறது
வாழ்க்கை!

இழப்பதற்கு அங்கங்களுமில்லை,
வடுக்கள் வாங்குவதற்கு
உடம்பில் வெற்றிடமுமில்லை,
புதைக்க நிலங்களுமில்லை
எது நடந்தாலும்
கேட்பதற்கு நாதியுமில்லை

நாங்கள் ஊரெல்லாம் சொல்லி
ஒரு திருமணச் சடங்கை
முடிப்பது போல இலங்கை
உலகெல்லாம் சொல்லி
ஓர் இனப்படுகொலைத்
திருவிழாவை நடத்தி முடித்து விட்டது

நாங்கள் செத்துக்
கொண்டிருந்த போது
நல்லிணக்கத்தை ஏற்படுத்தாத
ஐ.நா.
மனித உரிமைப் பிரேரணையை
இப்போதுதான்
எம்மண்ணிலிருந்து
தோண்டி எடுத்து
தூசு தட்டுகிறதா?

வெற்றிக் கொடிகளை நாட்டி
தொப்புள் கொடிகளை
அறுத்தவர்களே!
அதோ முள்ளிவாய்க்கால்
மட்டுமல்ல முழுத் தேசமும்
முனங்குகிறதே கேட்கிறதா?

ஓர் விடியலை அல்ல,
ஓர் இனத்தின் விடியலையே
இருட்டாக்கிய பெருமை
படைத்தவர்களே!
உங்கள் சிம்மாசனங்கள்
எம் ஆன்மாக்களை
உறுஞ்சி விட்டு
உட்கார்ந்திருக்கின்றன!

எம் ஆணி வேருக்குள்
நஞ்சு திணித்தவர்களே
நாட்டில் ஓர் இனம் கண்ணீருள் வாழ,
இன்னோர் இனம்
ஆயுத அரங்கேற்றங்களோடு
கை கொட்டிச் சிரிக்கிறது

வாழ்க! இன நல்லிணக்கம்,
வளர்க! இலங்கை தேசம்!

எம்.நேதா,
நெடுந்தீவு.

## நட்பு

பள்ளி ஆடையின்
வெள்ளை நிறம் போன்ற
கள்ளம் கபடமற்ற
தூய்மையான நம் நட்பை
மாசுபடுத்துகிறார்கள் நண்பனே!

நட்புக்கும் காதலுக்கும்
வித்தியாசம் தெரியாத குருட்டுச் சமூகம்
காதல் என அர்த்தம் கற்பிக்கின்றது
களங்கமில்லாத நம் நட்புக்கு

அவர்களுக்கு என்ன தெரியும் நண்பனே
அவர்கள் கண்டதெல்லாம்
நட்பு என்ற பெயரில்-பிறரை
ஏமாற்றும் காதல் விரசத்தை தான்

அதனால் நாம் கலங்க வேண்டியதில்லை
வானத்தைப் பார்த்து நாய் ஊளையிட்டால்
நாய்க்குத் தான் பெரும் நஷ்டம்
உலகம் உள்ளவரை நிலைத்திருக்கும்
நம் நட்பு என்றென்றும்



செ.டிலக்சனா
வேரவில்

## துரோகம்



எனக்குக் கிடைத்த
பரிச்சயங்களில்
சினேகிதியாக
கிடைத்தவள் நீதான்
என் மனக் காயத்தை
உன் இசையால்
வருடிச் சென்றவள் நீதான்
என் சோகத்தை
உன் சோகமாக
ஏற்றுக்கொண்டவளும் நீதான்
என் உறவுகளை
உன் உறவாக
நினைத்துக் கொண்டவளும் நீதான்
என்னவரை
உன் அவராக
மாற்றி எடுத்தவளும் நீதான்

க.செல்வமலர்
திருநெல்வேலி

## அன்றும் இன்றும்

உன் புன்னகை கண்டு
மயங்கிப்போனேன் அன்று
உன் அழுகை பார்த்து
துடித்துப்போனேன் இன்று
உன் அருகாமையில் அன்று
நான் இருந்த வேளைகள்
நினைவுகளாய் மலர்கின்றன இன்று
என்மீது நீ கொண்ட பாசம்
மறந்து போனது அன்று
உன் பாசம் புரிந்து கொண்டதால்
என்னை நானே நொந்துகொண்டேன்
இன்று உன் வாழ்நாளின் இறுதிவரை
அன்றும் இன்றும் என்றும்
தொடர்ந்து வருவேன்...
நிழலாக அல்ல நிஜமாக

கே.சவுந்தரி



## எங்கள் பிணங்களின் மேல்

எங்கள் பிணங்களின் மேல்
நீங்கள் நடத்திய
சீட்டிழுப்பில்
வென்றது உண்மைதான்
ஆனாலும் நாங்களோ
தொடர்ந்தும்
முடிவு தெரியாக்
கதையொன்றின்
பயண வெளியில்
அன்றாடம் அகதியாய்
அல்லற்பட்டு
செத்துப் பிழைக்கிறோம்
எமக்காய்
கண்ணீர் விடுவதாய்
நடிக்கின்றீர்களா ?
உண்மையாகவா ?
உலகப் பந்தில் எப்போ
விடியும் எம் வாழ்வு ?



புலோலியூர்
வேல்நந்தன்

## நான் என் செய்வேன்?

இறக்கையையும் தந்து
பறக்கவும் சொல்லித்தந்து
ஏன் உயரப் பறக்கிறாய்?
என்று கேட்டது போல்...
அன்பையும் தந்து
அன்பாகவும் பழகி
இப்போது
"ஏன் என்னுடன் பழகினாய்?"
என்று கேட்டால்
நான் என் செய்வேன்...?



கி.ஜெ.ஷண்கிளிங்ரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவிமார்களே!

## புறம் பேசுவதைத் தவிருங்கள்

"இவ வாய் இருக்கே, எப்ப பார்த்தாலும் தொண தொண என்று யாரையாவது குறை சொல்லிக்கொண்டே இருக்கும்" என்று சில பெண்கள் குறித்துச் சொல்வார்கள். அவர்கள் உள்ளுக்குள் பலாப் பழம் போல இருந்தாலும் வெளியில் முள்ளாகத் தெரிவார்கள்.

குறிப்பாகக் கணவரிடம் எப்போது பார்த்தாலும் சண்டை பிடித்தபடி இருப்பார்கள் இந்தப் பெண்கள். வாழ்க்கை முழுவதும் தன்னுடன் வரும் கணவரைக் குறை சொல்வதில் இதுபோன்ற மனைவிகளுக்கு ஆத்ம சந்தோஷம்.

வாழ்க்கை முழுவதும் நான் உனக்கு, நீ எனக்கு துணை என்று திருமணம் செய்து கொள்கிறார்கள். அப்படிப்பட்ட வாழ்க்கைத் துணையைப் பற்றிக் குறை சொல்லிப் பேசுவதில் பல பெண்களுக்கு மகா திருப்தி. எம்முடைய பாட்டிமார், அம்மாமார் போன்று இன்றைய காலப் பெண்கள் இல்லை. எதையும் நிதானித்துச் செய்வது, பொறுத்துப் போவது, சமாளித்துக் கொள்வது எனப் பல விடயங்களிலும் இவர்கள் பலவீனமாகவே இருக்கிறார்கள்.

பல பெண்களுக்குத் திருமண வாழ்க்கை சில மாதங்களில் கசந்துவிடுகிறது. கணவன் மனைவிக்கு இடையிலான பல சண்டைகள், பூசல்கள், மோதல்களை பக்கத்து வீட்டுக்காரரிடம் சொல்லி அழும் பெண்கள் நிறையவே இருக்கின்றனர்.

கணவன் மனைவி இடையே எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அதில் மூன்றாம் மனிதரைத் தலையிட விடுவது விபரீதத்தில் தான் முடியும் என்பதைப் பெண்கள் உணர வேண்டும்.

அவர்கள் இவ்வாறு அடுத்த பெண்களிடம் குறைபாடினால் அந்தப் பெண் என்னதான் அக்கறையாக இருப்பதுபோல் பேசினாலும் மனதிற்குள்" நீ சந்தோஷமா இல்லையா, ஆஹா இதுதான் எனக்கு வேண்டும்" என்று திருப்திப்பட்டுக் கொள்வார்கள். ஆனால் வெளியில் அப்படியாம்மா, அழாதேம்மா என்று ஆறுதல் கூறுவது போன்று நடித்து உங்களுக்கு எதிராக உங்களையே திருப்பி விட முயலலாம்.

அதுமட்டுமன்றி அவர்கள் இல்லாததும், பொல்லாததும் சொல்லி உங்கள் வாழ்க்கையைக் கெடுத்துவிடும் வாய்ப்புண்டு.

வீட்டில் இருக்கும் பெண்கள்தான் வேலையின்றி இவ்வாறு செய்கிறார்கள் என்றால்,வேலைக்குப் போகும் பெண்களும் அவர்களுக்கு சற்றும் சளைத்தவர்கள் இல்லை. மதிய உணவு இடைவேளையில், கையில் சாப்பாடும், வாயில் கணவர்களையும் போட்டு பிசைந்து சாப்பிடும் பெண்கள் அதிகம் உள்ளனர். ஏனைய பெண்களுடன் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டே கணவரைக் குறைபாடுவது, மாமியாரை மகா கடுமையாகப் பேசி குதறி எடுத்து விடுவது.ஒருவர் இப்படிப் பேச ஆரம்பித்தால் உடனே மற்றவர்களும் சேர்ந்துவிடுவார்கள்.

எதையுமே, எதிலுமே நேர்மாறான மனோபாவம் இருந்தால் தான் நாம் வாழ்க்கையில் வெல்ல முடியும் என்பது பொன்மொழியாகும். கணவரிடம் குறை இருந்தால் அதை அவரிடமே சொல்லித் திருத்த முயற்சிக்கலாம். முடியாவிட்டால் அவரே உணர்ந்து திருந்தும்படி நாம் நடந்து, சரி செய்யலாம். அகிம்சைக்கு இருக்கிற வலிமை எதற்குமே கிடையாது.

கணவர்தான் என்றில்லை, மனைவி சரியில்லாவிட்டாலும் கூட இதேபோன்று கடைப்பிடித்து அவர்களைத் திருத்த கணவர் முயற்சிக்கலாம். இப்படி இரு தரப்பிலுமே விட்டுக்கொடுத்து, நீக்குப் போக்காக நடந்துகொண்டால்தான் வாழ்க்கை சிறக்கும், உறவுகள் வலுப்பெறும். மாறாக புறம் பேசுவதினாலோ, குறை கூறிக் கொண்டு மட்டும் இருப்பதினாலோ எதுவுமே சாதிக்க முடியாது.

இப்படி நடந்துகொண்டால் விவாகரத்து உட்பட எந்த வியாதியுமே எந்தத் தம்பதியையும் அணுக முடியாது. எனவே, புறம் பேசும் மனைவிமார்களே! கணவர்மார்களே!

இனியாவது பேச்சைக் குறைத்துச் செயலில் காட்ட முயற்சியுங்கள்...

- சந்தியா



# பெண்ணுக்குரிய சடங்கு, ஆசாரங்கள்

## வளையல் அணிதல்



ஒரு பெண்ணுக்கு மூன்று காப்புகள் அணிவிக்கப் படுகின்றன. அவள் தாய் வயிற்றில் இருக்கும் போது வளை காப்பு. பிறந்த ஏழாம் நாளில் ஏழாங் காப்பு. அவள் கர்ப்பமாக இருக்கும் பொழுது ஒரு வளையல் காப்பு ஆக மூன்று காப்புகள்( முக்காப்பு) அணிகின்றனர். சென்ற காலம், நிகழ்காலம், எதிர்காலம் மூன்றிலும் பாதுகாப்புத் தரவேண்டிச் செய்வதுதான் காப்பணி விழாவாகும்.

பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் துர்தேவதைகளால் இன்னல்கள் ஏற்படும் என்பதை, 'கந்தசஷ்டி கவசம்' என்ற நூல் "பெண்களைத் தொடரும் பிரம்மராக்ஷ தரும் பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்" என்று கூறுகிறது. ஆகையால் தான் பெண்கள் கர்ப்பமாக இருக்கும்போது எல்லாத் தெய்வங்களையும் வேண்டி வளைகாப்பு அணியச் செய்கின்றனர்.

தமிழ் இலக்கியங்களில் பிள்ளைத்தமிழ் இலக்கியம் என்பது ஒன்று. அதில் முதற்பருவம் காப்புப் பருவமாகும். பாட்டுடைத் தலைவனை, குழந்தையாகப் பாவித்துப் பாடுவது. பெண்கள் மாதவிடாய்க் காலத்திலும் கர்ப்பமாக இருக்கும் காலத்திலும், பாதுகாப்பு வேண்டி எப்பொழுதும் வளையல் அணிந்து கொள்வது சிறந்தது.

- நித்தியா

# தொலைபேசிக் கல்யாணம்

கல்யாணம் என்று அவசரமாய் மணமுடித்து
அஞ்சாறு நாளிலேயே அமெரிக்கா போய்விட்டான்

அவனுக்கும் அவளுக்கும் இப்போது
தொலை பேசியில்தான் தாம்பத்யம்

சாப்பிட மனமில்லை எதற்கு சமைக்க?
அவள் உள் மனம் கேட்கிறது
சும்மா இருந்த சங்கை
ஊதிவிட்டான் ஆசாமி
ரெண்டு வருடங்கள்
காத்திருக்க வேணுமாம்...

வெளியிலே சிரித்துக் கொண்டு
உள்ளுக்குள் அழுகிறாள்
உணர்வுகளை ஒளித்துவிட்டு
ஓட்டடை அடிக்கிறாள்
வீட்டுக்கு..
அவள் உணர்வுகள்
சந்தோசம், அன்பு ,பாசம்
எல்லாமே
வெறும் நான்கு
சுவர்களுக்குள்ளே
நர்த்தனம் ஆடுகின்றன

- நிலா



# நாடும் வீடும் உயர்வு பெற

நாட்டு முன்னேற்றத்தில் ஈடுபாடு கொண்ட பெண்கள் நிறைந்த நாடு வளர்ச்சி அடையும். அத்தகைய பெண்களை உருவாக்க வேண்டும் என்று பாரதிதாசன் எண்ணியுள்ளார். பெண்கள் நாட்டு முன்னேற்றத்தில் ஈடுபடுவதற்கு அவர்கள் அடிமைகள் இல்லை என்ற நிலை முதலில் உருவாக வேண்டும். எனவே,

*"பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு*
*மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற்கொம்பே"*

என்று பாடியுள்ளார்.

முயலுக்குக் கொம்பு கிடையாது. இல்லாத கொம்பு எப்படி முயலுக்கு வளராதோ அதைப் போன்று பெண்ணுக்கு விடுதலை இல்லை என்றால் நாட்டுக்கும் விடுதலை கிடையாது என்று இந்திய விடுதலைக்கு முன்பே பாரதிதாசன் பாடியுள்ளார்.

இதேவேளை பெண்களுக்கு விடுதலை பிறரிடமிருந்து வருவதில்லை. அவர்களிடமிருந்தே தோன்ற வேண்டும் என்ற உணர்வைப் பெண்களுக்கு ஊட்ட வேண்டும் என்றும் பாரதிதாசன் விரும்பினார்.

*"ஆடை, அணிகலன்கள், ஆசைக்கு வாசமலர்*
*தேடுவதும் ஆடவர்க்குச் சேவித்திருப்பதுவும்*
*அஞ்சுவதும் நாணுவதும் ஆமையைப் போல் வாழுவதும்*
*கெஞ்சுவதுமாகக் கிடக்கும் மகளிர் குலம்*
*மானிடர் கூட்டத்தில் வலிவற்ற ஓர் பகுதி"*

என்னும் பாடலில் ஆடை, அணிகலன் முதலியவற்றில் மட்டும் ஆர்வம் காட்டும் பெண்களை வலிமையற்றவர்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெண்கள் அறிவும் வீரமும் துணிச்சலும் கொண்டவர்களாய் விளங்க வேண்டும். அப்போதுதான் அவர்களால் நாடு நன்மை பெறும். எனவே பாரதிதாசன் அறிவும் வீரமும் கொண்ட வீரத்தாயாக விஜயா என்னும் பெண்ணை 'வீரத்தாய்' என்னும் காவியத்தில் படைத்துள்ளார். அவளது அறிவுக் கூர்மையாலும் வீரத்தாலும் அவள் தனது மகனையும் நாட்டையும் காத்தாள். அவள் தன் மகனிடம் கூறும்போது,"நிற்கையில் நீ நிமிர்ந்து நிற்பாய் குன்றத்தைப் போல்" என்று கூறி அவனுக்கு வீரத்தைக் கொடுத்தாள். இந்த விடயங்கள் எல்லாம் பெண்கள் விடயத்தில் நிறைவேறினால் நாடும் வீடும் பெருமை அடையும், உயர்வுபெறும்.



- இலக்கியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஊரில் சுந்தரம் என்று ஒரு ஏழை இருந்தான். அவன் மனைவி பெயர் விஜயா. அவர்கள் வீட்டுக்கு அடுத்த வீட்டில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் பெயர் ரங்கன். இருவரும் மிகுந்த ஏழை. சுந்தரமும் விஜயாவும் வெட்டிக் கதை பேசுவதில் வல்லவர்கள். கனவுலகத்திலேயே சஞ்சரிப்பவர்கள். உடமை என்று சொல்லிக் கொள்ள அவர்களிடம் சில சட்டி பானைகள் மட்டுமே இருந்தன. ஆனாலும் தினசரி என்ன வியாபாரம் செய்யலாம். என்ன தொழில் செய்யலாமென்று கணவனும், மனைவியும் பேசிக் கொண்டே இருப்பர். ஏதாவது ஒரு தொழில் செய்யலாமென்று தீர்மானிப்பர். உடனே அந்த தொழில் எப்படி விருத்தியாகிறது. எவ்வளவு லாபம் கிடைக்கிறது. தாங்கள் என்னென்ன சுகம் அனுபவிப்பது என்றெல்லாம் வாய் கிழிய பேசி பொழுதை கழிப்பர்.

அதை எல்லாம் அடுத்த வீட்டு ரங்கன் கேட்டுக் கொண்டே இருப்பார். அவருக்கு சிரிப்பு வரும். 'வெறும் கையால் முழம் போடுகிறார்களே பாவம்' என்று எண்ணுவார். ஒரு நாள் கணவன், மனைவி இருவரும் பால் வியாபாரம் செய்வதைப் பற்றி பேச ஆரம்பித்தனர். ''என்னிடம் பணமிருந்தால் பசுக்கள் வாங்குவேன்'' என்றான் சுந்தரம். ''பசுக்களை மேய்ச்சல் தரைக்கு ஓட்டிப் போய் மேய விடுவேன். அங்கே அவைகள் போடும் சாணத்தை கூடையில் எடுத்து வந்து நம் வீட்டுச் சுவற்றில் வரட்டி தட்டுவேன். அவைகளை விற்று காசு சேர்ப்பேன்'' என்றாள் விஜயா.

''நான் என்ன செய்வேன் தெரியுமா ? கறந்த பாலைக் கொண்டு போய் விற்று காசாக்குவேன்'' என்றான் சுந்தரம்.

''விற்காது மீதமான பாலை காய்ச்சி அதை தயிராக்குவேன். தயிரைக் கடைவேன். வெண்ணெய் கிடைக்கும். வெண்ணெயைக் காய்ச்சுவேன். நெய் கிடைக்கும், தயிர், மோர், வெண்ணெய், நெய் எல்லாம் கூடையில் எடுத்துக் கொண்டு தெருத் தெருவாக போய் விற்பேன். விற்று காசாக்குவேன்.'' காசை பணமாக்குவேன்...'' எனக்கு அவ்வளவு திறமை இருக்கு தெரியுமா? என்றாள் விஜயா.

''அப்படி செய்தும் பால், தயிர், வெண்ணெய், நெய் மிச்சமாகி விட்டால் என்ன செய்வது ?'' என்று கவலைப்பட்டான் சுந்தரம்.

''இதற்காக கவலைப்படுவார்களா என்ன? நாலு வீடு தள்ளித்தானே என் தங்கை குழந்தை குட்டிகளோடு இருக்கிறாள். அவளுக்கு கொடுத்து விடுவேன்!'' என்றாள் விஜயா. அதைக் கேட்டதும் கோபம் பொத்துக் கொண்டது.

''நாம் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் சொத்தை உன் தங்கைக்கும், குழந்தைகளுக்கும் கொண்டு போய் கொடுப்பாயா? அவைகளை நீ கொண்டு போய் கொடுக்காதபடி செய்து விடுகிறேன் பார்'' என்று கத்தியபடி வீட்டிலிருக்கிற நான்கு பானைகளை தயிர், மோர், வெண்ணெய், நெய் இருப்பதாக நினைத்துக் கொண்டு எல்லாப் பானைகளையும் உடைத்து விட்டான் சுந்தரம். இவைகளை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார் பக்கத்து வீட்டு ரங்கன் பகல் கனவு கண்டு கடைசியில் தம் கைப் பொருளை இழக்கும் இருவருக்கும் புத்தி வர ஏதாவது செய்ய வேண்டும் என்றெண்ணினார்.

சுந்தரம் வீட்டினுள் நுழைந்தார். அங்கு மூலையில் சாத்தி வைத்திருந்த ஒரு கோலை எடுத்து வெறும் வெளியில் அப்படி இப்படி வீசி, ''ஹை... ஹை..'' என்று விரட்டினார்.

''ரங்கா...! எதை விரட்டுகிறீர்கள்?'' என்றான் சுந்தரம்.

''உன் பசு என் தோட்டத்தில் நுழைந்து செடிகளை எல்லாம் நாசமாக்கிவிட்டது. எனக்கு நஷ்டஈடு கொடு'' என்றான். ''என்ன கேட்கிறாய்... இது என்ன புது கதை... என்னிடம் ஏது பசு?'' என்று ஒரே நேரத்தில் சண்டைப் போட்டனர் கணவன், மனைவி இருவரும்.

''இப்போ புரிகிறதா... இல்லாத பசுக்களை வைத்து சண்டைப் போட்டே இருவரும் இவ்வளவு நாள்கள் பிழைப்பை ஓட்டி விட்டீர்கள். இதனால் லாபம் என்ன? உங்க வீட்டுப் பொருள்கள் போனதுதான் மிச்சம். இனி இந்தக் கற்பனை கோட்டையை எல்லாம் மூடை கட்டி வைத்து விட்டு உழைக்கிற வழியை பாருங்கள்'' என்றார். இருவரும் வெட்கத்தில் தலை குனிந்தனர்.



# கற்பனைக் கோட்டை







சி.பிரகோபன், தரம்- 1,
யா/ஜோன்.பொஸ்கோ
வித்தியாலயம்.



ம.ஜொகான்சன், தரம்- 5,
யா/ சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

சா.அபிசாந், தரம்- 1,
யா/புனித ஜோன்.பொஸ்கோ.

## விடை தெரியுமா? 165

### உங்களுக்கும் பரிசில்கள்

1. இலங்கையில் மிகப் பெரிய மாவட்டம் எது?
2. சாரணர் இயக்கத்தை தோற்றுவித்தவர் யார்?
3. மூக்கில் பல் உள்ள விலங்கு எது?
4. கரப்பான் பூச்சியின் இரத்தம் என்ன நிறம்?
5. மனிதனுடைய கருவில் முதலில் உருவாகும் உறுப்பு எது?

### விடைகள் 163

1. கண்டி நகர்
2. மோகனதாஸ்
3. 63
4. டென்மார்க்
5. 1948.02.04

## அறிவுக்கு விருந்து

★ அமெரிக்கா எனும் புது உலகைக் கண்டுபிடித்தவர்
கிறிஸ்டோபர் கொலம்பஸ்

★ தென் ஆபிரிக்காவின் நன்னம்பிக்கை முனையை கண்டுபிடித்தவர்
பார்த்தலோமியோ டயஸ்

★ மிசிசிப்பி நதி சமவெளியைக் கண்டுபிடித்தவர்
ஜெக்யிஸ் காட்டியவர்

★ பிறேசியைக் கண்டுபிடித்தவர்
கப்ரால்

★ ஸ்பெனியோலா தீவைக் கண்டுபிடித்தவர்
கிறிஸ்டோபர் கொலம்பஸ்

க.கிரிஷாந்,
வ/வ.த.ம.ம.வி., வவுனியா.



## பாடல்

அம்மா சுட்ட தோசை
எல்லோருக்கும் ஆசை
இடிச்ச சம்பலோட
இனிப்புச் சீனியோட
அப்பாவுக்கு நாலு
அம்மாவுக்கு மூன்று
தங்கச்சிக்கு பாதி
எனக்கு மட்டும் இரண்டு
அம்மா சுட்டுத் தருவார்
எல்லோருமாய் உண்போம்
விருந்துபோல உண்போம்

வி.சதுர்த்திகா, ஆ.தர்மிதா,
யாழ்.புனித ஜோன்பொஸ்கோ
வித்தியாலயம்.

### வெற்றி பெற்றோர் விவரம் (163)

★ த.கீர்த்திகா, தரம் 8 'வி', வரணி மகா வித்தியாலயம்.
★ சி.சௌமியா, தரம் 5 'ஏ', குமுளமுனை மகாவித்தியாலயம்.
★ நா.றகிதா, தரம் 9, மிருசுவில் திருக்குடும்ப கன்னியர் மடம்.
★ செ.விஜித்தா, தரம் 8, கிராஞ்சி அ.த.க.பாடசாலை.
★ தி.பிரவீணா, தரம் 7, கொக்குவில் இந்துக் கல்லூரி.
★ கி.பிரசன்னா, தரம் 5 'ஏ', யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 30.06 .2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.



## இலங்கையின் கல்வித் துறை சார்பான விடயம்


1945 - இலங்கையில் இலவச கல்வித் திட்டம்
1952 - புலமைப் பரிசில் திட்டம்
1966 - பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டது
1980 - இலவசப் பாடநூல் வழங்கப்பட்டது
1986 - மகாபொல புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம்
1987 - தேசிய பாடசாலை உருவாக்கம்
1989 - இலவச மதிய உணவுத் திட்டம்
1993 - இலவச சீருடை விநியோகம்
[illegible] மட்டக் கணிப்பீட்டு முறை
[illegible] - பாடசாலைக் கல்வி அமைச்சு உருவாக்கம்

பிரணவரூபன் எழிலினி, தரம்-7, யா/விக்ரோறியாக் கல்லூரி

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிதண்ணீர் புற்றுநோயாக்கியா?



கே.குணா

யாழ்ப்பாணம் நன்னீருக்காக ஏங்கும் அவலத்தை சந்திக்கப் போகின்றதா? என்ற வினா பொதுவாக இன்று எல்லோரிடமும் மேலோங்கி நிற்கின்றது.

யாழ்ப்பாணத்தில் இயற்கையாக அமையப் பெற்ற ஆறுகள், குளங்கள் போன்ற மேற்பரப்பு நீர் நிலைகள் காணாமல் போயுள்ள நிலையில் நிலத்தடி நீரே ஏறத்தாழ 99% அடிப்படைத் தேவைகளான வீடு, தொழிற்சாலை மற்றும் விவசாயம் போன்றவற்றுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

இந்த நிலையில் நிலத்தடி நீர் மீதான கேள்வி மிக அதிகமாகவே இங்கு காணப்படுகிறது. அதனால் அது மாசுபடுத்தப்படும் அல்லது தரமிழக்கச் செய்யப்படும் நிலைமை தாராளமாகவே நடந்தேறுகிறது.

நிலத்தடி நீர் இயற்கைக் காரணிகள் மற்றும் மனித செயற்பாடுகள் போன்றவற்றால் மாசுபடுத்தப்படுகிறது. இவற்றில் மனித செயற்பாடுகள் நிலத்தடி நீர் மாசுபடுத்தலில் முக்கிய செல்வாக்கு செலுத்துகின்றன. அத்துடன் இயற்கைக் காரணிகளான நிலத்தில் உள்ள அமைப்பு மற்றும் புவியியல் சார்ந்த காரணிகளும் பங்களிப்பு செய்கின்றன.

மனித செயற்பாடுகளை கருத்தில் கொள்ளும் போது விவசாய நடவடிக்கைகளின் போதான மிதமிஞ்சிய வளமாக்கிப் பாவனைகள், கிருமிநாசினிப் பாவனைகள் போன்ற நடவடிக்கைகள் கணிசமான அளவு நிலத்தடி நீரை மாசுறச் செய்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இன்று நிலத்தடி நீர் பிரதானமாக மூன்று பிரச்சினைகளை எதிர்கொள்கிறது.

1.நன்னீர் உவர்நீராதல்
2.நைத்திரேற்று
3.மலக்கிருமி கலப்பு

இவற்றுள் நன்னீர் உவர்நீராதல் மிதமிஞ்சிய உறிஞ்சல் காரணமாக ஏற்படுகிறது. நன்னீர் உவர் நீருக்கிடையில் காணப்படும் படலம் மாற்றமடைவதே இதற்குக் காரணம். மலக்கிருமித் தொற்று திட்டமிடாத முறையில் மேற்கொள்ளப்படும் மலசல கூட அமைப்புகளால் ஏற்படுகிறது.

யாழ்ப்பாணம் விவசாயத்தையே பெரிதும் நம்பியுள்ள பிரதேசம். அத்துடன் வளமாக்கிப் பாவனை அபரிதமாகவே காணப்படுவதாக அண்மைய தரவுகள் கூறுகின்றன.

வளமாக்கிகள் அதிகளவான நைத்திரேற்று, பொசுபேற்று மற்றும் இதர மூலகங்களை கொண்டுள்ளது. நைத்திரேற்று பல விஞ்ஞான ஆராய்ச்சி முடிவுகளின் படி புற்று நோய்க் காரணிகளில் ஒன்றாக அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக இந்த நைத்திரேற்றுகள் வயிறு மற்றும் களம் ஆகிய புற்றுநோய்களை ஏற்படுத்துவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நைத்திரேற்றுகள் குடிதண்ணீர் மூலமாகவோ உணவு மூலமாகவோ உள்ளெடுக்கப்படும் போது அவை நைத்திரேற்றுக்களாக மாற்றம் பெற்று பின் உடலியல் சார்ந்த செயற்பாடுகளால் சேர்வைகளாக மாற்றப்படுகிறது. இவை புற்றுநோய் உருவாவதற்கு காரணமாகின்றன.

இலங்கையின் புற்றுநோய் தரவுகளின் படி வடமாகாணம் புற்று நோய்த் தாக்கத்தில் முதன்மை பெற்று விளங்குகிறது. அதிலும் வயிறு மற்றும் களப் புற்றுநோய் 2 ஆம் நிலையிலுள்ளது. யாழ்ப்பாண நிலத்தடி நீரில் இந்த நைத்திரேற்றுக்களின் அளவுகள் உலக சுகாதார ஸ்தாபனத்தால் அறிவிக்கப்பட்ட நியம அளவான 10 mg/l இலும் அதிகளவாகக் காணப்படுவதாக விஞ்ஞான ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாண நிலத்தடி நீரானது தரையின் கீழ் காணப்படும் கல்சியம் காபனேற்றாலான முருகைக்கற் பாறைகளின் இடைவெளிகளில் சேமிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாய நடவடிக்கைகளின் போது பாவிக்கப்படும் மிதமிஞ்சிய வளமாக்கிகளில் பிரதானமாகக் காணப்படும் நைத்திரேற்றுகள் மற்றும் இதர இரசாயனச் சேர்வைகள் இலகுவாக Leaching மூலமாக நிலத்தடி நீரை சென்றடைகின்றன.

2011 ஆம் ஆண்டு தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவால் வழங்கப்பட்ட நிதி உதவியுடன் யாழ். பிராந்திய தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை, றுகுணு பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக துறைசார் நிபுணர்களால் யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் நிலத்தடி நீரின் நைத்திரேற்று அளவும் அதனுடனான வயிறு மற்றும் களப் புற்று நோய்க்கான தாக்கத்தின் அளவும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டது.

முதலில் யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் பிரிவில் பேணப்பட்ட தரவுகளின் அடிப்படையில் (2000-2010 வரை) வயிறு மற்றும் களப் புற்றுநோய் பாதிக்கப்பட்டவர்களின் விவரம் பெறப்பட்டது.

பின்னர் இந்த தரவுகள் பிரதேச செயலர் அடிப்படையில் தரம் பிரிக்கப்பட்டு புற்றுநோயின் தாக்கம் அதிகளவாக உள்ள 3 பிரதேச செயலர் பிரிவுகளான சுன்னாகம், வலி. கிழக்கு, வடமராட்சி மற்றும் யாழ்ப்பாணம் என்பன ஆய்வுக்கென தெரிவு செய்யப்பட்டன.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் புற்று நோய்த் தாக்கம் கண்டறியப்பட்டோர் வசிக்கும் பத்து இடங்கள் தெரிவு செய்யப்பட்டு அந்த இடத்து நீர் மாதிரி சேகரிக்கப்பட்டதோடு கட்டுப்பாட்டு பரிசோதனைக்கென புற்று நோய்த் தாக்கம் இல்லாத பத்து இடங்கள் தெரிவு செய்யப்பட்டு நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு யாழ்ப்பாண நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் ஆய்வு கூடத்தில் இரசாயனவியலாளர்களின் மேற்பார்வையில் பரிசோதிக்கப்பட்டன.

இவ்வாறான மூன்று பிரதேச செயலர் பிரிவிலும் மொத்தமாக 60 கிணறுகளின் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு நைத்திரேற்று மற்றும் நீரின் இதர பௌதிக, இரசாயன காரணிகள் பரிசோதிக்கப்பட்டன.

ஆராய்ச்சி முடிவுகளின் படி இந்த மூன்று பிரதேசங்களிலும் நோய்க் காரணியாகக் கருதப்படும் குடிதண்ணீரில் காணப்படும் நைத்திரரேற்றுக்கும் வயிறு மற்றும் களம் ஆகிய புற்று நோய்களுக்கும் இடையில் தொடர்பு ஒன்று காணப்படுகின்றது.

எனினும் இதை உறுதி செய்யத் தொடர்ச்சியான நீண்ட கால ஆய்வுகளுடன் உடற் கூற்றியல் பரிசோதனைகளும் அவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

காலங் காலமாக பல்வேறு ஆராய்ச்சியாளர்களாலும் துறைசார் நிபுணர்களாலும் தெரிவித்து வரப்படும் குடாநாட்டு நைத்திரேற்று பிரச்சினையைக் குறைப்பதற்கு அல்லது மாற்றுவழிகளை தேடுவதற்கான பொறிமுறைகளைக் கண்டறிந்து கொள்ள வேண்டும்.

குடாநாட்டு நிலத்தடி நீர் நைத்திரேற்றின் பிரதான மூலப் பொருளாக மிதமிஞ்சிய விவசாய வளமாக்கிகளே விளங்குகின்றன. எனவே விவசாயத் திணைக்கள உதவியுடன் நியம அளவுகளின் படியான வளமாக்கிகளை விவசாயத்தில் பயன்படுத்த ஆவன செய்ய வேண்டும். அத்துடன் நைத்திரேற்றால் ஏற்படக் கூடிய அபாயங்களை மக்களுக்கு சுகாதார உத்தியோகத்தர்கள் மூலமாக விழிப்புணர்வை உண்டாக்க வேண்டும்.

மத்தியப்படுத்தப்பட்ட, சுத்திகரிக்கப்பட்ட குழாய் மூலமான உலகத் தரத்துக்கு இணையான பாதுகாப்பான குடிதண்ணீர் திட்ட பொறிமுறை ஒன்று குடாநாட்டுக்கு இன்றியமையாதது. இதனை கருத்தில் கொண்டு அரசு இரணைமடு நீர் விநியோகத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

அத்துடன் எளிய முறையில் நைத்திரேற்றை குடி தண்ணீரில் இருந்து அகற்றும் பொறிமுறைகள் இன்றும் பரிசோதனை மட்டத்தில் காணப்படுவதால் நைத்திரேற்று அளவு நியமத்திலும் அதிகளவாக உள்ள பிரதேசங்களில் மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை ஊக்குவிக்க முடியும்.

# முரண்பாடற்ற சமூகத்தை உருவாக்குங்கள்

சி.நற்குணலிங்கம்,
*தலைவர், மத்தியஸ்தர்சபை-கரவெட்டி*

ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களிடையே வேறுபட்ட, மாறுபட்ட கருத்துக்களின் அடிப்படையில் உருவாகும் பிரச்சினைகள், பிணக்குகள் முரண்பாடு எனப்படும்.

முரண்பாடுகள் வலுவடையும்போது அவை பெரும் பிரச்சினைகளாக உருவாக்கம் பெறுகின்றன. முரண்பாடுகளை உடனடியாக மத்தியஸ்தர் சபைகளுக்கு கொண்டு செல்வதன் மூலம் இலகுவாக சாதகமான தீர்வுகளை எட்டக்கூடியதாக அமையும்.

தீவிர உணர்ச்சிகள், பலவீனமான தொடர்பாடல்கள், தவறான ஊகங்கள், தீங்கு விளைவிக்கும் நடத்தைகள் மீண்டும் மீண்டும் நடைபெறுதல், தவறான தகவல்கள், பெறுமானங்களைத் தரக்குறைவாக மதிப்பிடுதல், குவிக்கப்பட்ட அதிகாரங்கள் அல்லது சமனற்ற அதிகாரங்கள், பல அர்த்தம் கொண்ட தரவுகள், இணக்கப்பாட்டுக்கு வருவதற்கான தரவுகள் போதியளவு இல்லாமை, தேவைகளைப் பூர்த்திசெய்வதில் ஏற்படும் போட்டித் தன்மைகள், மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள் போன்றன முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் காரணிகளாக அமைகின்றன.

ஐந்துவகையான முரண்பாடுகள் உள்ளன.

* தரவுகள் சம்பந்தமான முரண்பாடுகள்.
* அமைப்புக்கள் சம்பந்தமான முரண்பாடுகள்.
* தேவைகள் அடிப்படையிலான முரண்பாடுகள்.
* உறவுகள் சம்பந்தமான முரண்பாடுகள்.
* ஒழுக்கம் சம்பந்தமான முரண்பாடுகள்.

சம்பந்தப்பட்ட தரவுகள் சம்பந்தமான ஒருமைப்பாடு இல்லாதவிடத்தும், இருக்கும் தரவுகள் பல அர்த்தம் கற்பிக்கப்படும் போதும், எழும் முரண்பாடு தரவுகள் சம்பந்தமான முரண்பாடு எனப்படும்.

வளங்கள் நேரகாலம் தொடர்பாகவும், தொடர்பாடல் காரணமாகவும், சங்கங்கள் போன்ற அமைப்புக்களில் தோன்றும் முரண்பாடு அமைப்புக்கள் சம்பந்தமான முரண்பாடுகள் எனப்படும்.

தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதில் ஏற்படும் போட்டித்தன்மை காரணமாக எழும் முரண்பாடுகள் தேவைகள் அடிப்படையிலான முரண்பாடுகள் எனப்படும்.

புண்படக்கூடிய தீவிர உணர்ச்சிகளைத் தவறாக விளங்கிக் கொள்வதன் மூலம் ஏற்படும் முரண்பாடுகள் உறவுகளின் அடிப்படையிலான முரண்பாடுகள் எனப்படும்.

ஒவ்வொருவரது பெறுமானங்களிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவை காரணமாகவும் குடும்ப, சமூக ஒழுக்கங்கள் மீறப்படும் போது எழும் முரண்பாடுகள் ஒழுக்கம் சம்பந்தமான முரண்பாடுகள் எனப்படும்.

இந்தவகை முரண்பாடுகளில் தேவையின் அடிப்படையில்தான் கூடுதலான முரண்பாடுகள் தோன்றுகின்றன. பொருள், செயன்முறை, உளம், இந்த மூன்றின் அடிப்படையிலேயே தேவையின் அடிப்படையிலான முரண்பாடுகள் தோன்றுகின்றன. அமைப்புக்கான அதிகாரங்கள், குடும்பங்களுக்கான அதிகாரம் குவிக்கப்பட்ட அதிகாரங்களாக காணப்படுமிடத்து அவை சர்வாதிகாரப்போக்குக்கு வழிவகுப்பதுடன் அழிவுக்கும் இட்டுச்செல்லும்.

முரண்பாடுகளை நிர்வகிக்க தவிர்த்தல், பின்வாங்குதல், பலாத்காரம் பிரயோகித்தல், இடைநடுவிலான இணக்கத்தை ஏற்படுத்தல், வெற்றிகரமான தீர்வைத் தேடல் என ஐந்து வழிமுறைகள் உண்டு. இவற்றில் வெற்றிகரமான தீர்வைத் தேடுவதே சிறந்தவழியாகும். இதற்கு மத்தியஸ்தர் சபைகளையே நாடமுடியும். அங்கு முரண்பாடுகள் தொடர்பான விடயங்களைப் பிணக்காளிகளிடமிருந்து செவிமடுத்தல், விளங்கிக்கொள்ளல், ஒருங்கிணைந்த நோக்கங்களை உருவாக்கிக்கொள்ளல் என்பன மூலம் முரண்பாடுகளுக்குத் தீர்வுகாணப்படும்.


ஒவ்வொரு வகை முரண்பாடுகளிலும் அவற்றால் பல்வகைப் பிரச்சினைகள் தோன்றும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. மத்தியஸ்தர் சபைகள் முரண்பாட்டுக்கான அடிப்படைக் காரணியை அறிந்துகொள்வதன் மூலம், அவற்றிலிருந்து ஆரம்பித்து செல்வதன் மூலம் முரண்பாடுகளுக்கு தீர்வுகள் காண்பதன் மூலம் மீண்டும் அவை நிகழாவண்ணம் தடுப்பதுடன், முரண்பாடு தீர்ந்தவர்களிடையே தொடர்புகளை மேம்படுத்தவும் முடியும். எனவே முரண்பாடுகளை முளையிலேயே கிள்ளி எறிந்து ஒருவருக்கு ஒருவர் திருப்தியடையக்கூடிய முடிவுக்கு வருவதற்கு சுயேச்சையாக பின்பற்றும் வழியைக்கொண்டுள்ள, முரண்பாடுகளைத் தீர்க்கும் சிறந்த வழியாக மத்தியஸ்தர் சபைகள் அமைந்துள்ளன.

முரண்பாட்டின் அடுத்தகட்டம் மோதல், அடுத்த கட்டம் நெருக்கடி. நெருக்கடிநிலை தோன்றும் போது உளரீதியான பாதிப்பு ஏற்படுவதுடன், அழிவுகளும் ஏற்படும். அத்துடன் நெருக்கடி நிலையில் தீர்வு காண்பதும் கடினம். எனவே முரண்பாட்டின் போதே மத்தியஸ்தர் சபையை நாடுவது சிறந்த வழியாகும்.

முரண்பாட்டை எல்லோரும் இணைந்து தவிர்த்துக்கொள்வதன் மூலம் ஆரோக்கியமான உடலை, மனதை வளர்ப்பதுடன், ஆரோக்கியமான குடும்பம், சமூகம், நாடு என்பன உருவாக வழிசமைக்கும் எனலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 220




அனுப்புபவர் பெயர்:.......................................................

விலாசம்:.......................................................

.......................................................

கையொப்பம்:.......................................................

### இடமிருந்து வலம்

1.போக்கு
4.வெட்டும் ஆயுதம்
6. நீரின்மையால் பயிர்களுக்கு நேர்வது
7. தண்ணீர் பொங்கி எழும்போது தோன்றுவது
8. கூடிக் குலாவி மகிழ்தல்
10. ஒரேயளவான
11. செல்வம்
12. யோசி
13. இரண்டாவது மனைவி
14. தங்கிச் செல்லுதல்
16. ஒரு நட்சத்திரம்
17. மன அமைதி/ ஆறுதல்
19. ஏந்துதல்
20. ஒரு வகைத் தோல் வாத்தியம்
21. பெரியவர்

### மேலிருந்து கீழ்

1. இது நின்றால் உயிர் பிரிந்து விடும்
2. தேவாரம்
3. உலகம் முழுவதிலும் அமெரிக்கா செலுத்துவது
4. எல்லையில் இருப்பது
5. திருமணமான பெண்ணின் முன்னால் போடப்படும் அடைமொழி
7. உமது
9. குடித்தல்
10. பல தெருக்கள் கூடும் இடம்
12. மூளை
13. புதினம்
14. தங்களது
15. அமர்வதற்கானது
17. எடை
18. போதை தருவது

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 218 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) விரகதாபம் (6) சங்கு (7) எரு (8) துவக்கு (10)சினம் (11) ராகு (12) கல (13) சக (14) அரும்பு (16) ரம்பம் (18) புத்தி (20) சமாதி (22) தரி (23)குவளை(24) சைவன்

**மேலிருந்து கீழ்**

(1) விருது (2) கசக்கு (3) தாங்கு (4) பகு (5) விரும்பு (7) என (9) வராகம் (10) சிலம்பு (12)கரு (13) சரக்கு (14) அம்மா (15) புத்தன் (17) பசளை (19) திரி (21) திசை

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 220**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 04.07.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.220இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 08.07.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 218 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**செ.கணேசன்,**
அன்புபுரம், முழங்காவில்

**2 ஆம் பரிசு**
**இ.கி.யோ.றெஜீஸ்,**
இல. 97, ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.

**3 ஆம் பரிசு**
**ஆசை தியாகராஜா,**
இல.19, கே.கே.எஸ். வீதி, தெல்லிப்பழை

**4 ஆம் பரிசு**
**இ.கண்ணகை**
கடற்கரை வீதி, அளம்பில்.

**5 ஆம் பரிசு**
**செல்வி டி.ஹஸ்ரன் றோய்,**
இல.27/9, புதிய வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

**செ.யோகபாலன்,**
இல.40, முதலாம் ஒழுங்கை, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

**செ.சி.இராமகிருஷ்ணன்,**
பிரதான வீதி, சின்னக்கடை, மன்னார்.

**க.இரத்தினேஸ்வரன்,**
செம்பாடு, பொலிகண்டி மேற்கு, வல்வெட்டித்துறை.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.*

# பண்பாடுகள் பேணப்படுமா?

*பாண்டியம்மா*

ஒவ்வொரு மதமும் தத்தமது மதங்களுக்கு ஏற்றாற்போல் உரிய சிந்தனைகளை மக்கள் மத்தியில் எடுத்துக் கூறுவதற்கு தயங்குவதில்லை. மதங்கள் எடுத்துக்கூறும் சிந்தனைகளே மிருக குணமுடைய மனிதனையும் நற்சிந்தனைப் போக்குடையவனாக மாற்றும் சக்தி கொண்டவையாக இருக்கின்றன.

ஒவ்வொருவரும் தாம் சார்ந்த மதம் மீது ஒவ்வொரு நம்பிக்கையையும், சம்பிரதாய முறைகளையும் உருவாக்கி மதவழிபாடுகளை நிலை பெறச் செய்து கொண்டிருக்கிறார்கள். மதங்கள் மூலம் தெரியப்படுத்தும் சம்பிரதாய முறைகள் அனைத்தும் மனிதனாலே உருவாக்கப்பட்டவை.

இந்த மத சம்பிரதாய முறைகள் சமுகத்தின் மத்தியில் தீங்கை ஏற்படுத்தும் ஒன்றாக இருக்குமானால் மதம் மீது நாம் கொண்ட நம்பிக்கையை இழக்கும் அல்லது சந்தேகிக்கும் விளைவைப் பெற்றுத் தருவதாக அமைந்து விடும்.

எல்லாம் அவன் செயல் என செய்வதெல்லாவற்றையும் நாமே செய்து விட்டு இறைவன் மீது பழி சுமத்துவது எமது சுய நோக்கத்தையே பிரதி பலித்துக் காட்டுகிறது.

நீ இப்படிச் செய் , அப்படிச் செய் என இறைவன் ஒன்றும் எமக்குக் கற்றுக் கொடுக்கவில்லை. எல்லாவற்றையும் நாமாகவே செய்து கொண்டிருக்கிறோம். எமது செயல்களின் வடிவம் இறைவனாக இருக்க முடியுமே தவிர நாம் செய்யும் தீங்குக்கு இறைவன் பொறுப்புடையவராக இருக்க முடியாது.

எமது முன்னோர் மதம் சார்ந்ததாக ஒவ்வொரு சம்பிரதாய முறைகளையும் எமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். இவற்றில் சில நன்மை பெற்றுத் தரக் கூடியனவாகவும் சில தீமை பெற்றுத் தரக் கூடியனவாகவும் அமைந்துள்ளன.

யாழ்ப்பாணத்தின் தனிச்சிறப்பு இங்குள்ள இந்து ஆலயங்கள் ஆகும் இந்த ஆலயங்கள் எமது பிரதேசத்தின் பெருமையைப் பறை சாற்றுவதுடன் இந்து மதத்தின் சிறப்பையும் அழிய விடாது நிலை பெறச் செய்துள்ளன.

ஆரம்ப காலங்களில் கொட்டில்களாக இருந்த ஆலயங்கள் இன்று வானுயர்ந்து கோபுர கலசங்களுடன் காட்சி கொடுக்கின்றன. இவை மக்களின் நம்பிக்கை ஆலயத்தின் புனிதம் இவற்றால் உயர்வடைந்துள்ளன என்றே கூற வேண்டும்.

ஆனால் இவற்றுக்கு மாறாக ஆலயங்கள் எத்தகைய வளர்ச்சியைக் கண்டாலும் சில ஆலய நிர்வாகிகள் தமது ஆலயங்களில் சுய இலாபங்களுக்காக சம்பிரதாய முறைகளை விட்டுக் கொடுப்பதாக இல்லை. இவர்கள் மேற்கொள்ளும் சம்பிரதாய முறைகள் மதத்துக்கு இழுக்கு ஏற்படுவதை நினைத்தும் அவர்களுக்கு கவலை கிடையாது.

தாம் பரம்பரை பரம்பரையாக நடத்தும் நிகழ்வுகளை யாருக்காகவும் விட்டுக் கொடுப்பதாக இல்லை. யாழ். மாவட்டத்தில் எமது முன்னோர்களின் வழித் தோன்றலில் வழிப் போக்கர்களால் உருவாக்கப்பட்ட ஆலயங்களே அதிகம்.

அண்மையில் நான் ஓர் ஆலத் திருவிழாவுக்காக சென்றிருந்தேன். தற்போது ஆலயத் திருவிழாக்களில் இறுதித் திருவிழா அன்று இசை நிகழ்வுகளை நடத்துவது வழமையான ஒன்றாக உள்ளது. அதனைப் போன்று இந்த ஆலயத்திலும் கலை நிகழ்வுகள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அது ஒரு கிராமம் சார்ந்த ஆலயம் என்பதாலும் இரவு நேரம் என்பதாலும் ஆலய சூழலில் கிராம மக்கள் அனைவருமே ஒன்று கூடி இருந்தனர். நிகழ்வுகள் ஆரம்பமாகின. பக்தி பரவசத்துடன் மேளக்கச்சேரி, நாதஸ்வர இசை என மக்களைப் பரவசத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தன.

இந்த நிகழ்வுகளில் இளவயதினரின் வரவு சற்றுக் குறைவாகத் தான் இருந்தது. எனினும் தொடர்ந்து என்ன நடக்கப் போகின்றது என ஊகித்துக் கொண்டிருந்த மக்களுக்கு இசை மழை பொழிய ஆரம்பித்தது. பிரபல இசைக் குழுவினரின் இன்னிசை கானங்கள் நிகழ்வு ஆரம்பமே ஒரு சிங்களப் 'பைலா' பாடலுடன் ஆரம்பமானது.

மக்களுக்கும் எதுவும் விளங்கவில்லை. இளசுகள் வயிலாப் பாடலுக்கு ஏற்றாற் போல் ஆலய சூழலில் ஆங்காங்கே தமது உடல் அசைவை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். இது யாரைத் திருத்திப்படுத்தவதற்கு என்று தெரியவில்லை.

அன்று நடைபெற்ற இசைக் கச்சேரியில் சிங்களப் பாடல்களே அதிகம் பாடப் பட்டன. இளசுகளுக்கு கொண்டாட்டம், முதியவர்களுக்குத் திண்டாட்டம். இறுதியில் மது போதையில் ஆட்டம் பாட்டம் என இருந்த இளைஞர் கூட்டம் கல்லெறிய , பொலிஸ் அவர்களை அடித்து நொருக்க ஆலய சூழலே அல்லோல கல்லோலமாகியது.

இது போன்றுதான் தற்போது அதிகமான இந்து ஆலயங்களில் திருவிழாக்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. திருவிழாக் காலங்களில் மக்களிடம் இருந்து வசூலிக்கப்பட்ட பணத்தைக் கொண்டு ஆலயத்துக்கு எந்தவித உபயோகமும் அற்று தனிப்பட்ட சுயலாபங்களுக்காகக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆரம்ப காலங்களில் திருவிழாக் காலங்களில் நிகழ்வுகள் நடைபெறுவது வழமையான ஒன்றுதான். ஆனால் அவை மக்களுக்கு பயன் தருவதாக இருந்ததுடன் கிராம கலைஞர்கள் மதிக்கப்படுவதற்கும் பாரம்பரியக் கலைகள் பேணப்படுவதற்கும் ஒரு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்தன.

காத்தவராயன் கூத்து, வில்லுப்பாட்டு, கிராமிய இசை, புராணக் கதைகள், காட்சியும் காணமும், நாடகங்கள், கோலாட்டம், கும்மிப்பாட்டு என்று நிகழ்வுகள் களை கட்டும். இவை ஆலயத்துடன் இணைந்து மதம் சார்ந்த பாரம்பரியம் சார்ந்த கருத்துக்களை மக்கள் மத்தியில் எடுத்து இயம்புவனவாக இருந்தன.

ஆனால் தற்போது ஆலய நிர்வாகிகளால் ஏற்பாடு செய்யும் நிகழ்வுகள் யாரைத் திருப்திப்படுத்துவதற்கு என்று தெரியவில்லை. எமது மதத்தை தவறான பாதைக்கு கொண்டு செல்லவே இவையெல்லாம் நடத்தப்படுகின்றன. இதனைவிட மிருக பலி என்பது குறைவதாக இல்லை வேள்வி என்ற பெருடன் இவை இன்று தொடர்ந்த வண்ணம்தான் இருக்கின்றன.

மதம் சார்ந்த அமைப்புகள் உட்பட சமூக நோக்கம் கொண்ட பொது மக்கள், மத நம்பிக்கை கொண்டோர் இவற்றைக் கண்டித்தும் ஆலயங்களில் இவை நிறுத்தப் படுவதாக இல்லை. இறைவன் பெயரைக் கூறி "வேள்வி" எனும் பெயருடன் வகை தொகையில்லாமல் கடாக்களை வெட்டிச் சரிப்பதும் மதவழிபாட்டு இடங்களை விற்பனைச் சந்தையாக்கி பங்குபோடும் நிலைக்கு கொண்டு வந்துள்ளமையும் கவலைதரும் விடயங்களே.ஆலய நிர்வாகம் என்பது மதத்துக்கு இழுக்கு ஏற்படாத வகையில் ஆலய வளர்ச்சியில் தம்மை ஈடுபடுத்தும் தகுதியுடையவர்களாக இருக்க வேண்டும். மாறாக தமது சுய லாபத்துக்கு ஆலயத்தை வியபாரத்தலமாக மாற்றி இந்து மதத்தின் பண்பாடுகளை அழிக்கும் நிலைக்குக் கொண்டு செல்லக் கூடாது .

இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை இந்துமதம் சார்ந்த அமைப்புகள் கடுமையாக எடுக்க வேண்டும். இந்து மதத்தின் தார்ப்பரியத்தை நிலைபெறச் செய்வதற்கு வழி செய்ய வேண்டும். ஆலய நிர்வாகிகளின் தனிப்பட்ட சுயலாபத்துக்கு நடத்தப்படும் நிகழ்வுகளுக்கு தலையசைக்காது இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வெற்றி

## பெறலாம் வாங்க!

6

ராகவன் அல்பி



திட்டமிடுதல் வெற்றிக்கு அவசியம். அதிலும் உங்கள் வாழ்க்கைத் திட்டத்தைச் சரியாக வைத்திருப்பது மிக மிக அவசியம். உங்கள் வாழ்க்கைத் திட்டம் என்னவென்பதை எழுதி வைத்துக் கொள்வதே அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இலகுவானது.

**சாதிக்கும் வகையில் உருவாக்குதல்**

மிக விரிவான திட்டத்தை எழுத வேண்டும் என்று யோசித்துக்கொண்டே இருந்துவிடக்கூடாது. உடனடியாகச் செய்ய வேண்டிய இலக்குகளை எழுதிக் குளிர்சாதனப் பெட்டியில் ஒட்டிவிடுவதற்கு எதையுமே எழுதாமல் இருப்பது மேலானது. மற்றொரு முக்கியமான விடயம் எழுதிய திட்டத்தை மிக விரைவில் தொடங்கிவிட வேண்டுமென்பது தான்.

ரோம அரசு ஒரு நாளில் உருவானதல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள். அது போன்றுதான் உங்களின் எதிர்காலமும். எல்லாவற்றையும் உடனே செய்திட வேண்டுமென முயற்சி செய்யாதீர்கள். ஆனால் மெல்ல மெல்லத் தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும்.

**இலக்கை அடைவதற்கான 10 எளிய வழிகள்**

இலக்குகளை சாதிப்பதற்கான 10 வழிகள் உள்ளன. அவற்றை இப்போது பார்க்கலாம்.

**சின்னச்சின்ன அடிகள்:** ஏணியின் உச்சிக்கு ஒரு அடியில் ஏறிவிட முடியாது. சுய முன்னேற்றமும் அது போன்றதுதான். நீங்கள் செய்ய விரும்பும் ஒவ்வொரு மாற்றத்தையும் சின்னச் சின்ன அடிகளாகப் பிரித்துக்கொள்ளுங்கள். அதன் பிறகு ஒரு நேரத்தில் ஒரு விஷயம் என எடுத்துச் செய்யுங்கள்

**எழுதுங்கள்:** செய்யத் தீர்மானித்திருக்கும் திட்டங்களை பேப்பரில் எழுதுங்கள். அதனால் திட்டம் உங்கள் மனதில் இன்னும் நன்றாகப் பதியும்

**உங்கள் நாயகன்:** நீங்கள் விரும்பும் துறையில் வெற்றி பெற்ற நபர்கள் பற்றிப் படியுங்கள். அவர்கள் அதை எப்படி சாதித்தார்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். மேலும் அவர்கள் இந்தப் புகழையும் அதிர்ஷ்டத்தையும் அடைவதற்கு எவ்வளவு சிரமப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்.

**வேகத்தைக் கட்டமையுங்கள்:** உங்கள் லட்சியம் பெரிதாக இருக்க வேண்டும். ஆனால் அதற்குப் போதுமான நேரம் இருக்க வேண்டும். உறுதி செய்து முடித்து விட வேண்டுமென நினைக்கும் இலக்குகளைப் பெரும்பாலானோர் பாதியிலேயே விட்டுவிடுவார்கள். நீங்கள் வேகமாக இருக்க வேண்டியதில்லை. ஆனால் நீடித்து உழைக்கும் திறனுடன் இருக்க வேண்டியது முக்கியம்.

**யதார்த்தமானவராக இருங்கள்:** நீங்கள் நிலவுக்கு போவதாகக் கனவு காணும் போது சிகரத்தை அடைவதென்பது எளிதாகி விடும். உங்களுக்குத் திறமையும் இளமையும் தூண்டுதலும் இருந்தால் நீங்கள் விண்வெளி வீரராகவும் பயிற்சி எடுக்கலாம்.

**ஆலோசகரைத் தேர்ந்தெடுங்கள்:** குடும்பம், நண்பர்கள் அல்லது வேலை செய்யும் இடத்தில் நீங்கள் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்டு ஊக்கமும் ஆதரவும் தரும் நபர் ஒருவரைக் கண்டு பிடியுங்கள்.

**மைல்களைக் குறித்து வையுங்கள்:** ஒவ்வொரு மைல்கல்லை அடைந்ததும் குறித்து வையுங்கள். அத்துடன் உங்களுக்குச் சிறிய பரிசுகளை நீங்களே கொடுத்துக் கொள்ளுங்கள். சாதனைகளைக் கண்டுணர்வதும் அதைக் கொண்டாடுவதும் மிக முக்கியமானது.

**நின்று யோசித்துப் பாருங்கள்:** நீங்கள் எதை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறீர்களோ அதில் கவனத்தைக் குவியப்படுத்துவது எளிதானதுதான். அதே சமயம், இதுவரை எவ்வளவு தூரம் வந்திருக்கிறீர்கள் என்பதை மறந்து விடக்கூடாது என்பதும் மிக முக்கியமான விஷயம். அவ்வப்போது இதுவரை என்ன செய்திருக்கிறீர்கள் என்று நின்று யோசித்துப் பாருங்கள்.

**அளவுகோல்:** இது பெரிய வார்த்தைதான். ஆனால் நீங்கள் பயன்படுத்தும் போது இது நல்லவிதமாக ஒலிக்கும். நீங்கள் இலக்கை நோக்கி முன்னேறும் போது, அது இதுவரை என்ன முன்னேற்றம் நடைபெற்றிருக்கிறது என்பதையும் அளவிட உதவும்.

**நேர்மையாகச் சிந்தியுங்கள்:** இது செய்துமுடிக்கக் கூடிய விஷயம்தான் என்று நீங்கள் நம்பினால், அது நிச்சயம் எளிதாக முடிந்துவிடும். அதேசமயம் உங்கள் மனதில் சந்தேகத்தை வளர்த்துக் கொண்டு இருந்தால் விஷயம் முடிவது என்பது கடினமானதாகி விடும்.

# இப்போதாவது மாற முயல்வோமா?

தானா

கல்விப் பாண்டித்தியத்தால் கிட்டும் அறிவாற்றலை விட அனுபவ அறிவு ஒருபடி மேலானது என்பது எம்மில் ஒரு சிலரது நம்பிக்கை. வாழ்க்கையின் பல படிகளிலும் அடிபட்டு, அனுபவப்படுவதன் மூலம் கிட்டும் அறிவு மனிதருக்கு இள, நடுத்தர வயதுகளில் கிட்டும் ஒன்றல்ல.

நீண்ட வாழ்க்கை அனுபவத்தினூடாக கிட்டும் அந்த அறிவு, வாழ்வின் பட்டுணர்வின் மூலம் நல்லது கெட்டதைப் பகுத்துணர்ந்து எந்தவொரு விடயத்திலும் நியாயமான, பொருத்தமான, சரியான முடிவொன்றை மேற்கொள்ளத்தக்க வாய்ப்பை வழங்குகின்றது என்கின்றனர் பெரியோர்.

நினைத்தபடி வாழ்வதல்ல வாழ்க்கை; நேர்ந்தவிதம் வாழ்வது தான் வாழ்க்கை என்ற நிலைப்பாட்டில் கட்டுக்கோப்புடன் வாழ்ந்து காட்டிய பெருமை எம் தமிழ் இனத்திற்கே உரியது. ஆனால் இன்றைய கால ஓட்டத்திற்கு ஏற்ப நம்மை மாற்றிக்கொண்டு வாழப் பழகாவிட்டால், வாழ்க்கையில் பின்தங்க வேண்டிய நிலை நமக்கு தவிர்க்க இயலாததொன்றாகி விடும்.

தமக்கெனத் தனியான கலாசார பழக்க வழக்கங்கள், வாழ்வியல் நடைமுறைகளை வகுத்து வாழ்ந்ததால்தான் தமிழ் இனத்தின் வரலாறு பேசப்பட்டது; போற்றப்பட்டது. அந்த வகையில் எம் தமிழினம் பண்டைய கால கட்டங்களில் சமூகத்தில் கற்றறிந்தோர், முதியோர் என்போருக்கு வழங்கிய கௌரவமும், மதிப்பும் விதந்து பேசப்பட்டமைக்கு வரலாறு சாட்சி. அதற்கும் மேலாக, எம் முன்னோர் அன்று தம் மனச்சாட்சிக்கு மதிப்பளித்தும், தெய்வத் தண்டனை குறித்த அச்சத்தோடும் நன்னெறி நின்று வாழ்ந்தமை வரலாறு கூறும் செய்திகள்.

ஆனால் இன்றைய விஞ்ஞான தொழில்நுட்ப யுகத்தில் நமது வாழ்க்கை வெறும் இயந்திரமயமானதொன்றாக ஆகிப் போயுள்ளது. பண்டைய நம் தமிழ்ச் சமூகம் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்ற மனித ஆசைகளை மனிதனது உழைப்பின் ஊக்கத்துக்கான உயிர் நாடிகளாகக் கொண்டியங்கினாலும், அதிலும் கட்டுக்கோப்பான, கட்டுப்பாடான வாழ்வியல் வழக்கங்களுக்கமைந்தே வாழ்ந்து காட்டியது. ஆயினும் இன்று நாம் பண்டைய எமது தமிழ்ச் சமூகங்கள் கடைக்கொண்ட வாழ்வியற் கட்டுப்பாடுகள் அத்தனையையும் உடைத்தெறிந்து, இன்று எம் மனம் போன போக்கிலல்லவா செயற்பட விளைகிறோம்.

அன்று தமிழ்ச் சமூகம் தனக்கெனத் தான் வகுத்துக் கொண்ட வாழ்வியல் நடைமுறைகளை மீறிச் செயற்பட அஞ்சியது. எந்தவித கட்டுப்பாடுகளை மீறி, பிறழ்ந்து வாழ முயன்றோரை சமூகம் புறந்தள்ளிவைத்துத் தண்டித்துத் திருத்தியது.

எழுத்துருவில் இருக்காத எமது தமிழ்ச் சமூகத்தின் அன்றைய வாழ்வியற் கட்டுப்பாடுகள் காலப்போக்கில் முடியாட்சி கழிய, மக்களாட்சி தலைதூக்க சட்டங்கள் என்பதாக உருமாறி அவற்றை, உரிய விதமாக முகாமைத்துவப்படுத்தவென அரசுகள் நிர்வாகத்தைக் கையில் எடுத்தன.

வகுத்த சட்டங்களை அந்தந்த நாடுகளை நிர்வகித்த அரசுகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தியதன் மூலம், நாட்டில் நீதியும் நியாயமும் நிலை நிறுத்தப்பட்டன. அங்கெல்லாம் மக்கள் ஆட்சி நாட்டின் மக்களுக்கான, நாட்டுக்கான சுபீட்சத்தை, மக்களது வாழ்க்கை உயர்ச்சிக்கான நலத் திட்டங்களைச் செயற்படுத்தியதால் அந்தந்த நாடுகள் வளம் பெற்றன. அமைதியும் திருப்தியும் மக்கள் மத்தியில் நிலவின; நிலைகொண்டன. இனமத பேதமின்றி நாட்டு மக்கள் அனைவருக்கும் சமநீதி, சம அந்தஸ்து கிட்டியதால் மக்களின் ஆர்வமும் உற்சாகமும் நாட்டைத் தன்னிறைவு காண வைத்தது; நாடு நாட்டு மக்களால் முன்னேற்றம் கண்டது. இதற்கெல்லாம் அடிப்படையாய் அமைந்தது, நாட்டை நிர்வகித்த அரசுகள் நாட்டின் கற்றறிந்தோரின், அனுபவஸ்தர்களின், புத்திஜீவிகளின் ஆலோசனைகள், வழிகாட்டல்களின் வழிநின்று, நாட்டைச் சீரிய முறையில் நிர்வகித்தமையே.

ஆனால் இன்று உலக நாடுகள் பலவற்றிலும் சமதர்மம், சமநீதி என்ற அலங்கார வார்த்தைகள் வெறும் வாய்ப்பேச்சளவில் உச்சரிக்கப்படுகின்றனவே தவிர, நாட்டை நிர்வகிக்கும் அரசுகள் நாட்டின், நாட்டு மக்களின் சுபீட்சத்துக்கும், உயர்ச்சிக்கும் உழைக்காது, ஆட்சியாளர் ஒவ்வொருத்தரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு, சுய இலாப நோக்கு, பதவி ஆசை, அவற்றைத் தொடர்ந்தும் தக்கவைத்துப் பேணும் எத்தனம் என்பவற்றின் அடிப்படையிலே நாட்டை நிர்வகிக்கும் போக்கையே நோக்காகக் கொண்டு செயற்படுவதால், பிணக்குகளும் பேதங்களும் மலிந்து நாடு நலிவுற நேர்கிறது. இது யதார்த்தம். இந்த யதார்த்தம் இன்று எமது நாட்டில் நிதர்சனமாகி நாட்டையே குட்டிச் சுவராக்கி வைத்துள்ளது. அரசியல் ஒரு சாக்கடை என்ற ஆங்கில முதுமொழியொன்று வழக்கில் உள்ளது. இன்று இந்த முதுமொழி எமது நாட்டின் அரசியல் நிர்வாக நடைமுறைக்கு முற்று முழுக்க, மிகப் பொருத்தமாய் அமைவதொன்றாகும்.

இந்த நாட்டின் அரச நிர்வாகம் இந்த நாட்டில் வாழும் மொழியால், மதத்தால், பண்பாடுகளால் வேறுபட்ட பல்லின மக்களையும் நாட்டின் பிரஜைகள் என்ற ஒரே குழுமத்துள் அடக்கி, சகலருக்கும் சமநீதி வழங்கி பேதமற்ற முறையில் நிர்வகிக்கப்பட்டால் மாத்திரமே, இந்த நாட்டு மக்கள் தம்மைத்தாம் 'நாம் இலங்கையர்' என்ற மன எழுச்சியுடன் சிந்திக்க வாழ, வைக்கும் தேசிய நல்லிணக்க வாழ்க்கை நடைமுறையை உருவாக்க வாய்ப்பமைக்க முடியும். அதைவிடுத்து ஆட்சி அதிகாரம் வாய்க்கப் பெற்றோர், பேரினவாதச் சிந்தனையின் பாற்பட்டு நின்று நாட்டில் வாழும் ஒரு இனத்தவருக்கு மற்றைய இனத்தவர் நிகரானவர் அல்லர் என்ற கோட்பாட்டுடன் நாட்டை நிர்வகிப்பதால் தேசிய நல்லிணக்கமும் நாம் இலங்கையர் என்ற நிலைப்பாட்டுச் சிந்தனையும் இந்த நாட்டின் சிறுபான்மையினரான தமிழ் மக்கள் மனங்களில் ஒருபோதும், ஏற்படப் போவதில்லை. வெறும் வாய்ப்பேச்சிலும், எழுத்திலும் தேசிய நல்லிணக்கம் எனக் கூறி இந்த நாட்டு மக்களை காலாதி காலத்துக்கும் ஏமாற்றி அரசியல் நிர்வாகத்தை மேற்கொள்ளலாமேயன்றி நாடும், நாட்டு மக்களும் தலை நிமிர இயலாது.

இந்த யதார்த்த உண்மையை உணர்ந்து நாட்டின் ஆட்சியாளர்கள், அரசியல் என்ற குறுவட்டத்துக்குள் சுற்றிச் சுற்றி வராது, அதிலிருந்தும் வெளியேறி திறந்த மனதுடன் நாட்டின் கற்றறிந்தோர், புத்திஜீவிகளின் ஆலோசனைகளைக் கருத்தில் எடுத்து, இந்த நாட்டின் சகல இன மக்களுக்கும் நீதியும் நியாயமும் அமையத்தக்க தீர்வொன்றை எட்டுவது மட்டுமன்றி, அதனை நடைமுறைப்படுத்துவதுமே இன்றைய காலத்தின் தேவையாகும். பதவிகளைக் கைப்பற்றவும், அவற்றைத் தக்கவைக்கவுமென இந்த நாட்டின் பெரும்பான்மையின அரசியல் வாதிகளால் நாட்டு மக்கள் மனங்களில் விதைக்கப்பட்ட இனவாதம் என்ற கண்ணிவெடிகளை அகற்றி, சகல இனத்தவர்களின் உரிமைகளையும் ஸ்திரப்படுத்த வேண்டிய கட்டாயக்கடன்தான் இன்றைய நிலையில் ஆட்சி அதிகாரத்தைக் கைகளில் கொண்டுள்ள தரப்பினர் தாம் இதுவரை நாட்டு மக்களுக்கு விளைவித்த அரசியல் அவலங்களைப் போக்கிவைக்கும் பிராயச்சித்தமாக அமையும். அந்தவிதம் செயற்பட முன்வந்தால் மாத்திரமே, அவர்கள் தாம் இதுவரை இழைத்த பாவங்களுக்கான பாவமன்னிப்புக் கிட்டும். இந்த வேளையிலாவது, உலகமே ஒன்று சேர்ந்து இந்த நாட்டின் ஆட்சி மீது குற்றப் பத்திரம் வாசிக்கும் இந்த வேளையிலாவது ஆட்சி அதிகாரம் கொண்டுள்ளோர் தம்மிடையேயான அதிகாரப் போட்டிகளை ஒரு கணம் மறந்து இந்த நாட்டின் பரிதாப நிலையை மாற்றியமைக்க முன் வருவார்களா? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசாவிளான் தவமைந்தன்

# ஈழத்தின் முதுபெரும் தமிழிசைக் கவிஞர் இயலிசை வேந்தன் அ.கி.ஏரம்பமூர்த்தி

தாய் மொழியில் இசை பாடுதல் என்பது ஒரு மனித இனத்தின் பண்பாட்டுக் கூறுகளுள் சிறப்பான பகுதியாகத் தொன்று தொட்டு விளங்கி வருகின்றது. இதனைத் தாலாட்டில் இருந்து ஒப்பாரி வரையான இசைப் பாடல்களின் ஊடாக நாம் உணர்ந்து கொள்ளலாம். எமது பண்பாட்டில் முக்கனிச் சாறாய் இனிக்கும் பல விதமான கலைகளுள் குரலிசை என்பது முதன்மையான இடத்தில் வைத்துப் போற்றப்படுகின்றது. இக்குரலிசையின் அடி நாதமாய் இருப்பவை தேனென இனிக்கும் தமிழிசைப் பாடல்களாகும்.

பாடல்களை இயற்றுபவர்களைக் கவிஞர் என்கிறோம். இசையமைப்பவரை இசையமைப்பாளர் என அழைக்கிறோம். ஆனால் இவ்விரு திறன்களுடனும் பாடலுக்குரிய சுரக்குறிப்பையும் ஒழுங்குபடுத்தித் தருபவரையே இயலிசைப் புலவர் (வாக்கேயக்காரர்) எனக் கருதுகிறோம். இவ்வாறான திறன் கொண்டவர்கள் இசைத்துறையில் மிக அரிதாகவே தோன்றுகின்றனர்.

ஈழத்தின் இயலிசைப் புலவர் வரிசையில் முதன்மையான ஒருவராகவும் சிறந்த இசைநாடகக் கலைஞராகவும் சமூகத் தொண்டுகளில் ஈடுபாடு கொண்ட இனிமையான மனிதராகவும் ஆசிரியத் துறையில் அரை நூற்றாண்டுக்கும் மேலான அனுபவம் கொண்ட ஆசானாகவும் தனது புத்தாக்கங்களை அழகுடன் வெளியிட்டு வருகின்ற அற்புதப் படைப்பாளியாகவும் கலைப்பணியாற்றி வருபவர் சங்கீதபூசணம் அ.கி. ஏரம்பமூர்த்தி.


அமரத்துவம் அடைந்த கிருஷ்ணசாமி தங்கம்மா தம்பதியரின் மகனாக 16.11.1927இல் மீசாலையில் இவர் பிறந்தார். மீசாலை அமெரிக்கன் மிசன் பாடசாலையில் கல்வி கற்ற இவர் தனது பள்ளிப் பருவத்திலேயே கவிதை, கட்டுரை, இசைநாடகம் போன்ற துறைகளில் ஈடுபட்டு வந்தார். ஞானசவுந்தரி, நல்லதங்காள், இராமாயணம், இலாதாங்கி போன்ற இசைநாடகங்களில் ஆண், பெண் வேடங்களில் நடித்து வந்ததுடன் சமூக நாடகங்களிலும் விருப்புடன் ஈடுபட்டு வந்தார். இவ்வாறான நாடகத் துறை சார்ந்த பட்டறிவினூடாக இசையிலும் தமிழிலும் ஆழமான அறிவு கொண்டவராக இளம் வயதிலேயே இவர் காணப்பட்டார்.

வீ.கே.கந்தையா பிள்ளையிடம் இசையையும் குமாரவேலு நடராஜரிடம் புராணப் படிப்பையும் தாவடியூர் இராசையாவிடம் திருமுறை இசையையும் கற்ற இவர் 1949இல் தமிழகத்தின் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சென்று நான்கு ஆண்டுகள் குரலிசையையும் வயலினையும் கற்று சங்கீதபூசணம் என்னும் பட்டத்தைப் பெற்றார். இந்தக்காலத்தில் கும்பகோணம் சிவவடிவேற்பிள்ளை, மாயூரம் கோவிந்தராசபிள்ளை, இலால்குடி நீலமேகம் பிள்ளை, ரி.என். சிவசுப்பிரமணியம் பிள்ளை ஆகியோரிடம் வரன்முறையான இசையைக் கற்று 1954 இல் தாயகம் திரும்பினார்.

பாடல்களை இயற்றுவதிலும் இசை வகுப்புக்களை நடத்துவதிலும் இசையரங்குகளை ஆற்றுகைப்படுத்துவதிலும் ஆர்வமுடையவராகப் பல ஆண்டுகள் பணியாற்றி வந்த இவர் தனது குரலிசை அரங்கேற்றத்தைச் சொந்தப் பாடல்களாலேயே வடிவமைமைத்துச் சாவகச்சேரி இசைக்கலை மன்றத்தில் சிறப்புற நடத்தித் தனது இசைப்பணியை மேலும் விரிவாக்கிக் கொண்டார்.

1958இல் ஆசிரிய நியமனத்தைப் பெற்று, மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம், ஏறாவூர், வாழைச்சேனை, கிரான், கைதடி மகா வித்தியாலயங்களிலும் பணியாற்றி அதன் பின் எழுதுமட்டுவாள் கணேச வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியைத் தொடர்ந்து 1960இல் ஓய்வு பெற்றார்.

அரச பணியில் பல ஆண்டுகள் அனுபவம் கொண்டிருந்த இவர் இசை ஆற்றுகையாளராகவும் புத்தாக்கத் திறன் கொண்டவராகவும் எமது தமிழிசையின் வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றி வந்துள்ளார். பக்தி இரசம் ததும்பும் கீர்த்தனைகளை ஏராளமாக இயற்றத் தொடங்கிய இவர் 1964இல் செந்தமிழ்க் கீதமாலை என்னும் நூலை வெளியிட்டார். இதனைத்தொடர்ந்து தெய்வக் கீதமாலை, கீர்த்தன மாலை, மழலைகள் கீதமாலை போன்ற பல நூல்களின் ஊடாக நூற்றுக் கணக்கான தமிழிசைப் பாடல்களை எமக்குத் தந்துள்ளார்.



## 48

## சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம்

ஏராளமான ஆலயங்களுக்கு ஊஞ்சற் பாடல்களையும் நாட்டிய நாடகங்களையும் இயற்றியிருக்கும் இவர் சிறந்த இசைச் சொற்பொழிவாளராகவும் தனது தனித்துவத்தை நிலைநிறுத்தியுள்ளார். காலனை வென்ற பாலன், கண்ணப்பநாயனார், அன்னை அபிராமி, மாணிக்கவாசகர், ஆனைமுகனின் அற்புத லீலை, சிறுத்தொண்டர் போன்ற தலைப்புக்களில் பல நூற்றுக் கணக்கான இன்னிசை விரிவுரைகளை நிகழ்த்தியுள்ளமை இவரது பன்முக ஆளுமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

நானூறிற்கும் அதிகமான இசை உருப்படிகளையும் முப்பந்தைத்துக்கும் அதிகமான சிறுவர் பாடல்களையும் இதுவரையில் இயற்றியிருக்கும் இவர் சகல விதமான இசைநுட்பங்களையும் தனது ஆக்கங்களில் கையாண்டுள்ளார். தூய தமிழிலும் வேறுபாடுகள் கொண்ட சந்தங்களிலும் இனிமையான இராகங்களிலும் நுட்பமான தாளங்களிலும் பக்தி இரசம் பொங்கும் வண்ணம் இவரால் உருவாக்கப்பட்டிருக்கும் பாடல்கள் ஈழத்தின் இசைக்கலைக்குக் கிடைத்திருக்கின்ற அரும்பெரும் சொத்தாகும் என்பதில் சந்தேகமில்லை.

தாய்மொழியில் பேசுவது எம்மிடையே மகிழ்ச்சியை உண்டாக்குகின்றது. அந்தத் தாய்மொழியில் இசை பாடுதல் எல்லையற்ற பேரானந்தத்தைத் தருகின்றது. மேடையிலே பாடிக்கொண்டிருக்கும் பாடகருக்கும் கேட்டுக்கொண்டிருக்கும் சபையோருக்கும் விளங்கக் கூடியதாகவும் அடிமனதில் இரசனையை ஏற்படுத்தக் கூடியதாயும் இசைக் கச்சேரி அமையவேண்டுமாயின் எமது பாடகர்கள் தமிழ்ப் பாடல்களைத் தமது இசை அரங்குகளில் அதிகமாகப் பயன்படுத்த வேண்டும்.

எனக்கு இசை கற்பித்த ஆசான்கள் தமிழிசையின் தொன்மையையும் தூய்மையையும் ஆழத்தையும் இசையோடு கலந்து ஊட்டி வளர்த்தார்கள். இயல்பாகவே தாய்மொழியில் காதல் கொண்டிருந்த நான் தமிழிசையே எனது உயிர் மூச்சு என வளர்ந்தேன். இறைவன் திருவருளால் பாடல்களைப் புதிதாக உருவாக்கி அவற்றை ஆற்றுகைப்படுத்துவதிலும் மாணவர்களுக்குக் கற்பிப்பதிலும் மன நிறைவும் கண்டேன். தனித்துவமான பண்பாட்டு மரபுகளைக் கொண்ட எமது தமிழினம் எம் தேசத்தில் இருக்கும் ஆலயங்களைப் பாடிப் புகழ்ந்து போற்ற வேண்டும். இசையாளர்களின் இவ்வாறான புத்தாக்கத் திறன் கொண்ட முயற்சிகளின் ஊடாக எமக்குரியதான இசைப் பண்பாடானது இவ்வுலகில் வரையறுக்கப்பட்டு நிலைநிறுத்தப்படும் என்று தனது கருத்துக்களை இவர் நம்பிக்கையுடன் கூறுகின்றார்.

## சொற்போர்

"...யாரோ ஒருவன் சொன்னான் என்று சீதையை நடுக்காட்டில் விட்டு வரும்படி தன் தம்பியிடம் கூறி அனுப்பியபோது இராமனின் மென்போக்கு எங்கே போயிற்று?..."

– உரும்பிராய் ஞானம்பிகை

### இராமன் செயல் நீதியே!

இராமனுக்கு இருந்தது மென்போக்குத் தானே எனும் தலைப்பில் சில வன்கருத்துக்களை ஒருவர் குறிப்பிட்டிருந்தமை வருத்தத்திற்குரிய விடயமாகும்.

அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதற்காக எடுக்கப்பட்ட அவதாரமே இராமாவதாரம் ஆகும். இத்தகைய அவதாரத்தில் குற்றம் காண விழைவது கொடுமையிலும் கொடுமை.

ஒருவன் சொன்னான் என்பதற்காக சீதையை நடுக்காட்டில் இராமன் விடவில்லை. வேற்றான் வீட்டில் சில மாதங்கள் தங்கியிருந்த மாதுவை ஒரு வேந்தன் எப்படி வைத்திருக்க முடியும். அவ்வாறானதொரு மனைவியை வைத்திருக்கும் ஒரு வேந்தன் மக்களுக்கு நல்ல வழிகாட்டியாக அமைய முடியுமா? மன்னன் எப்படியோ வையகமும் அப்படியே எனும் குறிக்கோளுக்கு இணங்க தன் செயல் மக்களிடையே தீமையை வளர்ப்பதற்கு ஏதுவாக அமையும் என்பதாலும் சீதையை சிலகாலம் பிரிந்திருக்க முடிவுசெய்தான். இதில் என்ன தவறு?

இன்றைய சமுதாயச் சூழலிலே அனேகமானோர் மனைவியை விவாகரத்துச் செய்தவர்களாகத் தான் இருக்கிறார்கள். அதில் ஒருவராவது இராமனைப் போல மென்போக்குடையவர் என நிரூபிக்க முடியுமா? இத்தகைய வன்போக்குடையவர்களே விவாகரத்துச் செய்கிறார்கள் என்றால் இராமனைப்போல மென்போக்குடையவர்கள் விவாகரத்துச் செய்வது என்ன தவறு.

இராமனது வாய்க்குள் தான் முத்து இருப்பதாக நினைக்கிறீர்கள் போலும். இராமனது மேனியே முத்துக்களால் நிறையப் பெற்றது தான். எனவே வாய் திறந்தால்தான் முத்துக் கொட்டுப்படும் நியதி இராமனுக்கு இல்லை.

- வி. எழில் (பருத்தித்துறை)

### மென்போக்கல்ல பலபோக்கே!

இராமன் குருவிடம் பாடம் கேட்பதற்காக வீதி வழியே செல்லும்போது எதிர்ப்படும் மக்களை அரவணைத்துக் குசலம் விசாரிப்பது வழமையாகும். பாலகாண்டம் ஆற்றுப்படலத்தில் "எதிர்வரும் அவர்களை..." எனத் தொடங்கும் 132ஆம் பாடலில் இதனைக் காணலாம். தன்னாட்டு மக்கள் மீது கொண்ட அக்கறையினாலும் பற்றுதலினாலுமே அவர்களின் சுகதுக்கங்களை அறிய அவாவுகின்றான். இந்த அக்கறையை வைத்து இராமன் மென்போக்கானவன் எனக் காட்டுவதற்கு எந்த முகாந்திரமும் இல்லவே இல்லை. மென்போக்கு என்பது மென்னடை எனவும் படும். வேறு விதமாகச் சொல்வதானால் மிருதுவான போக்கு என்றும் மென்மையான நடை என்றும் கொள்ளலாம். இந்த மென்போக்கு பெரிதும் பெண்களுக்கே பொருந்தும். காரணம் அந்த மெல்லியலார் இயல்பிலேயே மென்மையானவர்கள். அலகில் கற்புடைச் ஜானகிக்கு மென்போக்கு என்பது பொருந்தலாம். ஆனால் வில்வீரன் பெருவலி இராமனுக்கு பொருந்தவே பொருந்தாது.

சிறை மீண்ட கற்பின் செல்வி மேல் இராமன் சந்தேகப்படுகின்றான். துயர் தாழாது தன் உயிர் மாய்க்க எண்ணியே தீயிலே குதித்தாள். தீயிலே அவள் கருகி மடியவில்லை. உத்தமியாய் அவள் உயிர்மீண்டாள். இந்த நிகழ்வின் மூலம் மிகப்பெரியதோர் தத்துவம் உலகோர்க்கு உணர்த்தப்படுகிறது. இராமனுக்கு இருந்தது மென்போக்குத்தானே என்பது தவறானது. அவனிடம் பல போக்குகள் இருந்தன என்பதே சரியாகும்.

இராமாயணத்தில் பல்பரிமாணங்களில் இராமனைக் காணலாம். பெற்றோர்க்குத் தலைசிறந்த தலைமகனாகவும் குகன், சுக்கிரீவன் போன்ற எளியோரையும் உடன்பிறப்புகளாகக் கருதிய சோதரனாகவும், ஏக பத்தினி விரதனாகவும், வில்லோத்த வீரனாகவும், எதிரிகள் யாவரையும் வதம் செய்து முடி சூடிய செங்கோலனாகவும், மிதிலையிலே காதலனாகவும், பல முகங்களில் இராமனைப் பார்க்கின்றோம். அவைகளுக்கிடையில் இராமனின் மென்போக்கையும் காணலாம்.

- மு.தர்மலிங்கம் (J.P, பருத்தித்துறை)

வாசகர்களே!
இந்தப் பகுதியில் பிரசுரமாகும் கருத்துக்களை ஒட்டியும், வெட்டியும், கீறியும், கிழித்தும், சேர்ந்தும், தோள் கொடுத்தும் உங்கள் கருத்து எதுவானாலும் 'சூரியகாந்தி' 361, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 100 சொற்களுக்குள் அனுப்பிவையுங்கள்.

தரமும் பண்பும் கண்டு பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

தருபவர் - வித்தியா

## 24.06.2012 முதல் 30.06.2012 வரை

### மேடம்

நிகழ்கால பிரச்சினைகளுக்குத் தீர்வும், எதிர்கால வருமானத்துக்கு வாய்ப்புக் கிடைத்தபோதும். அதைத் தக்கவைத்துக்கொள்ள சற்று போராட்டமான சூழ்நிலை நிலவும். எதிர்பார்த்த உதவிகளும் கிடைக்கப்பெறுவீர்கள். முக்கியஸ்தர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் தொடர்புகளை பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வீர்கள். வெளிவட்டாரப்பழக்க, வழக்கங்களில் செலவுகள் சற்று கூடுதலாக இருக்கும். தொழில் துறையை நவீனமயமாக்க முயற்சிகள் மேற்கொள்வீர்கள். உத்தியோகத்தர்களுக்கு, வரவும் அதற்கேற்ப செலவும் இருக்கும். தொழிலாளர்களுக்கு, கடன் குறையும். பெண்கள், சற்றுப் பொறுமையோடு எந்த ஒரு விடயத்தையும் மேற்கொள்ளுதல் நல்லது. குழந்தைகளின் பழக்கவழக்கங்களில்கவனம் இருக்கட்டும். அரசியலில் மாற்றுக் கட்சி நபர்களுடன் சுமூகமான உறவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

### இடபம்

நீங்கள் முக்கிய காரியங்கள், அதிமுக்கிய காரியங்கள் என பிரித்து விரைவாகச் செயற்படுவீர்கள். நிதி நிலையில் சிற்சில மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் சில சீர்திருத்தங்களை மேற்கொள்வீர்கள். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களால் சில காரியங்களை எளிதாகச் செய்து முடிப்பீர்கள். தொழில் வகையில், புதிய திட்டங்கள், ஒப்பந்தங்கள் என விறுவிறுப்பான செயல்பாடுகளைக் கொண்ட வாரமாக இது இருக்கும். உத்தியோகத்தர்கள், பணிகளில் மேற்கொள்ளும் தீவிரத்தால் மேலதிகாரிகளிடம் பாராட்டுப் பெறுவீர்கள். பெண்களுக்கு, தகுந்த நேரத்தில், நீங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள், குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும். குழந்தைகளால் பெருமைகூடும்.

### மிதுனம்

பொறுப்புக்கள் கூடும். கௌரவத்திற்காக சில பணிகளை மேற்கொள்வீர்கள். சில நபர்களின் சந்திப்புக்களைப் பயன் உள்ளதாக்கிக் கொள்வீர்கள். நிதி நிலையில் எதிர்பார்த்த பணவரவுகள் தாமதப்பட்ட போதும் கிடைக்கப்பெறுவீர்கள். வியாபாரிகளுக்கு, கொள்முதலில் அதிக கவனம், போட்டிகளை எதிர்கொள்ள ஏதுவாக அமையும். உத்தியோகத்தர்களுக்கு, சில சலுகைகள் கிடைக்கும். இடமாற்றங்களுக்கு அவசரப்பட வேண்டாம். மேலதிகாரிகளின் கருணைப் பார்வை உங்கள் மேல் ஏற்படும். தொழிலாளர்களுக்கு, நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டு சில சாதனைகளைச் செய்வீர்கள். குழந்தைகளால் பெருமை கொள்வீர்கள். அரசியல் பகைமை பாராட்டிய நண்பர்களும், நட்புப் பாராட்டி, உங்களுக்கு உதவி புரிவார்கள்.

### கடகம்

முயற்சிகள் வெற்றி தரும். சுகங்களுக்குக் குறைவிருக்காது என்ற போதும் சிற்சில அசௌகரியங்கள் தவிர்க்க இயலாது. செலவுகளில் கவனம் தேவை. எதிர்பார்த்த பண வரவுகள் வரும். சில செலவுகளுக்காக கடன்களை எதிர்பார்க்க வேண்டிய சூழ்நிலையே. தொழில் வகையில் திருப்தியற்ற நிலை என்றபோதும், பாதிப்பு என்று எதுவும் இருக்காது. உத்தியோகத்தர்கள் தேவையற்ற பேச்சுக்கள், மற்றும் விவகாரங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். தொழிலாளர்களுக்கு புதிய தொழில்களுக்கான கூட்டு முயற்சிகளை மேற்கொள்வீர்கள். பெண்களுக்கு, குடும்ப சூழ்நிலைகளை அனுசரித்துச் செல்வது வீண் சச்சரவுகளைத் தவிர்க்க உதவும். குழந்தைகளின் பழக்க வழக்கங்களில் கவனம் தேவை.

### சிங்கம்

நீங்கள் பெருமைப்பட்டுக்கொள்ள பல நிகழ்ச்சிகள் இருந்த போதும், சில விவகாரங்களில் கவலைகள் நீடிக்கவே செய்யும். குடும்ப சம்பந்தப்பட்ட வகையில், சிற்சில மனச்சங்கடங்கள் ஏற்பட்ட போதும், பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள். தொழில் வகையில், சந்தையில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளுக்கு ஏற்ப உங்களைத் தயார்படுத்திக் கொள்வீர்கள். உத்தியோகத்தர்கள் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பணியில் தேவையற்ற தாமதங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். தொழிலாளர்களுக்கு, பணியில் பளு அதிகரிக்கும். உடன் பணியாற்றும் ஊழியர்களோடு கருத்து வேற்றுமை ஏற்படலாம். உறவினர்களிடம் அனுசரணையான போக்கு நல்லது. பெண்களுக்கு, குடும்பத்தில் சிறு சிறு தவறுகளை பெரிதுபடுத்திக்கொள்ளாமல் கொண்டு செல்லுதல் குழப்பங்களை தவிர்க்க உதவும்.

### கன்னி

உங்களின் எண்ணங்கள் நிறைவேறும். குடும்ப விவகாரங்களில் சற்று கூடுதல் நிதானம் விமர்சனங்களைத் தவிர்க்கும். பொதுக்காரியங்களில் தலையீடுகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். முக்கியஸ்தர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் சற்று தாமதப்படும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களால் செலவுகளே அதிகமாகும். தொழில் துறையில் அடுத்தடுத்து சில நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள். உத்தியோகத்தர்கள் பணியில் உற்சாகம் அற்று செயற்படுவீர்கள். மனநிலையைக் கொஞ்சம் மாற்றிக் கொள்ளுங்கள். தொழிலாளர்களுக்கு, முதலாளி களின் எண்ணத்துக்கு ஏற்ப தாங்களும் செயற்பட முயற்சியுங்கள். பெண்க ளுக்கு, உடல்நிலையில் சில தொந்தரவுகள் ஏற்பட்டு விலகும். வீட்டிலும் பணி புரியும் இடத்திலும், தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

### துலாம்

மனநிறைவான சூழ்நிலை அதிகம் காணப்படும். தொழிலில் சிற்சில பிரச்னைகள் ஏற்பட்டு விலகும். பெண்களால் சில ஆதாயங்களைப் பெறுவீர்கள். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களில் சில இடர்பாடுகள் ஏற்பட்டபோதும், பெரிய பாதிப்பு என்று எதுவும் இருக்காது. உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு சுமாராகவே இருக்கும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள் மிகுந்த பயன் உள்ளதாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு சாதாரணமான பணிகள்தான் என்றபோதும் மனச்சோர்வு அதிகமாகக் காணப்படும். புதிய முயற்சிகள் யாவும் சிறுசிறு தடைகளைத் தரும். தொழிலாளர்களுக்கு, வருமானத்தை அதிகரிக்க சில புதிய முயற்சிகளை மேற்கொள்வீர்கள்; அதில் கூடுதல் கவனம்தேவை.

### விருச்சிகம்

எந்த ஒரு விவகாரத்திலும் நிதானத்துடன் செயற்பட முயற்சிப்பீர்கள். வீட்டிலும், வெளியிடங்களிலும் என்னதான் நல்லவிதமாகச் செயற் பட்டாலும் நற்பெயர் எடுப்பது சிறிது சிரமமாகத்தான் இருக்கும். முக்கியஸ்தர்களின் சந்திப்பின்போது, உங்களின் கோரிக்கைகள், பேச்சுக்கள் மிகத்தெளிவான வகையில் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். தொழில்துறையில் திடீர் நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகத்தில் இருந்த கெடுபிடிகள், சங்கடங்கள் குறையும். தொழிலாளர்களுக்கு, கூட்டு முயற்சியில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கப் பெறுவீர்கள். பணிபுரியும் இடத்தில் குடும்ப விவகாரங்கள் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

### தனுசு

சில விவகாரங்களில் முக்கிய முடிவுகள் எடுத்துச் செயற்படுவீர்கள். புதிய ஒப்பந்தங்களில் விழிப்போடு செயற்படுங்கள். முடியாத காரியங்களை முடிக்க, தேவையற்ற கோபம் மற்றும் அலைச்சல்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். சில சந்திப்புக்கள் மனநிறைவை அதிகரிக்கும். எதிர்கால சிந்தனைகள் சற்று அதிகம் காணப்பட்டபோதும், நிகழ்காலப் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுங்கள். நண்பர்களின் ஆலோசனைகளும், அறிவுரைகளும் மிகுந்த பயனுள்ளதாக இருக்கும். நிதிநிலையில் வரவுக்கு மீறிய செலவுகள்தான் ஏற்படும். கொடுக்கல் வாங்கல் வகையில் விழிப்புடன் செயற்படுங்கள். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படுவர். பெண்களுக்கு அவர்களின் பேச்சுக்கள் பெருமை சேர்க்கும்.

### மகரம்

உங்களின் சாதுரியங்கள் வெளிப்படும். வார்த்தைகளால் முடியாத காரியங்களை முடிவுக்குக் கொண்டு வருவீர்கள். வழக்குகளில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்க முயற்சியுங்கள். புதிய பொறுப்புகளுக்கு அவசரப்பட வேண்டாம். நிதி சம்பந்தப்பட்ட வகையில், எதிர்பார்க்கும் உதவிகள் கிடைக்கப்பெறும். வெளிவட்டா ரப் பழக்க வழக்கங்கள் மிகுந்த பயன் உள்ளதாக இருக்கும். உத்தியோகத்தர் களுக்கு சாதாரணமான பணிகள்தான் என்றபோதும் மனச்சோர்வு அதிகமாகக் காணப்படும். தொழிலாளர்களுக்கு, வருமானமும், வசதிகளும் அதிகரிக்கும். கலைத் தொடர்புள்ள தொழில் புரிவோர்களுக்கு எதையும் கொஞ்சம் போராடியே முடிக்க வேண்டி இருக்கலாம். பெண்கள் தாம் எடுத்துக் கொண்ட பணிகளில் தீவிரமாகக் கவனம் செலுத்தி, சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள்.

### கும்பம்

எந்த ஒரு விவகாரத்திலும் ஒரு தீர்மானத்தோடு செயற்படுவீர்கள், வெற்றியும் பெறுவீர்கள். தொழில் மற்றும் வியாபார சம்பந்தப்பட்ட வகையில் அடுத்தகட்ட வளர்ச்சியை நோக்கி முன்னேறுவீர்கள். நிதி நிலையில் எதிர்பாராத பற்றாக்குறை ஏற்பட்டபோதும் சாதுர்யமாகச் சமாளிப்பீர்கள். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள், மிகுந்த கவனமான செயற்பாடு நட்டத்தை தவிர்க்கும். தொழில்துறையில் இழுபறியாக இருந்த பிரச்சினைகளை நல்லதொரு தீர்வுக்குக் கொண்டு செல்வீர்கள். உத்தியோகத்தர்கள் அன்றாட அலுவல்களை உற்சாகத்துடனும் சுறுசுறுப்பாகவும் செய்து முடிப்பீர்கள். தொழிலாளர்களுக்கு, உழைப்புக்கு ஏற்ற சம்பளம் கிடைக்கும். பெண்களுக்கு, பொன் ஆபரணங்களின் சேர்க்கை ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு, சில சலுகைகள் கிடைக்கும். இடமாற்றங்களுக்கு அவசரப்பட வேண்டாம். மேலதிகாரிகளின் கருணைப் பார்வை உங்கள் மேல் ஏற்படும்.

### மீனம்

கவலைகளை மறந்து கடமைகளில் கவனம் செலுத்துவீர்கள் வார்த்தைகளில் நகைச்சுவை அதிகரிக்கும். உடல்நிலையில் கவனம் தேவை. புதிய அறிமுகங்களால் எதிர்பார்த்த நன்மை கிடைக்கப்பெறும். தொழில் துறையில் விரிவாக்கத்துக்காக சில நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள். பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் கவனம் தேவை. உத்தியோகத்தர்கள் பணிபுரியும் இடத்தில் முடிந்தளவுக்கு அமைதியாகச் செல்ல முயற்சியுங்கள். தொழிலாளர்களுக்கு, சில புதிய முயற்சிகளில் இறங்க சிந்தனை மேற்கொள்வீர்கள். சற்று தாமதப்படுத்துதல் நல்லது. பெற்றோர்களுக் காக சில பணிகளை மேற்கொள்வீர்கள். பணிபுரியும் இடத்தில் பதற்றம் அதிகமாக இருக்கும்; எனினும் அதைப் பெரிதுபடுத்திக் கொள்ளாதீர் கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ஆனதி

# வெட்டவெளி வெயிலில் வாடி வதங்கினர் மக்கள்

13

இறுதி நாள்களும் எனது பயணமும்

எஞ்சிய மக்களும் போராளிகளும் படையினர் வசம் வந்திருந்தனர். முல்லைத்தீவின் அந்தப் பெரியவெளி மக்களால் பிதுங்கி வழிந்தது. அன்றைய பகலும் மக்களைப் பாடாய் படுத்தியது. நேரம் பத்தைத் தாண்டவே மக்கள் அரை மயக்கத்தை தாண்டத் தொடங்கிவிட்டனர்.

சிலர் துணிகளையும் பாய்களையும் தலைக்குமேலாகப் பிடித்துக்கொண்டு இருந்தார்கள். காயமடைந்த தம் உறவுகளை தூக்கிக்கொண்டு வந்தவர்களோ அவர்களைப் பராமரிப்பதற்காக படாதபாடு பட்டார்கள்.

தண்ணீருக்கும் உணவுக்கும் பலத்த தட்டுப்பாடு நிலவியது. என் பார்வை மிகவும் மங்கலாகிவிட்டது. காரணம் இதுதான் என்று சொல்லத்தெரியவில்லை அழுகை வந்தது. ஆனால் கண்கள் கலங்குவதற்கு ஈரமிருக்கவில்லை.

விழியோடு இமை உரசுவதை உணர முடிந்தது. எனினும் கண்கள் தானாய் மூடிக்கொண்டன. நெஞ்சக்கூடு வெறுமையாகிவிட்டதான உணர்வு.

இருக்கிறேனா படுத்திருக்கிறேனா என்பதையே புரிந்துகொள்ள முடியவில்லை. இறந்துவிட்டால் எவ்வளவோ நன்றாக இருக்குமே என்று மனது மரணத்துக்கு ஆசைப்பட்டது.

எவ்வளவு நேரம் அப்படியே கிடந்தேனோ தெரியவில்லை. மாமியின் மகன் ஒரேயொரு சிறிய பிஸ்கட் பொதியுடன் வந்தான்.

சனங்களா இதுகள். பேய்மாதிரி நிக்கிதுகள். ஆமிக்காரன் நாய்களுக்கு போடுற மாதிரி வெளியால நிண்டுகொண்டு எறியிறான். அவன் எறியிற ஐம்பதுக்கும் ஆயிரம்பேர் நிக்கிதுகள்.

சின்னப் பிள்ளையொண்டை உழக்கிப் போட்டுதுகள் பிசாசுகள். பிள்ளை செத்திட்டெண்டுதான் நினைக்கிறன்.

என்றபடி, தான் கொண்டுவந்த பிஸ்கட் பையை பிய்த்து அதிலிரண்டை எடுத்து தன் மகளுக்கு ஊட்டினான்.

இந்தாப்பா இதை கவனமா வைச்சிருந்து பிள்ளைக்கு குடு. என்று மிகுதியை சுற்றி தன் மனைவியிடம் கொடுத்தான். அந்த சின்னஞ்சிறிய பிஸ்கற்களை பார்க்க எனக்கு வேதனையாகத்தான் இருந்தது.

என்வீட்டு நாய்க்குட்டிக்கு போடக்கூட அதை வாங்கியதாக எனக்கு நினைவில்லை. பாவம் அவர்களும்தான் என்ன செய்வார்கள், லட்சக் கணக்கானவர்களுக்கு உடனடியாக உணவளிக்க எங்கேதான் போவார்கள்? என்று என்மனதை தேற்றிக்கொள்ள வேண்டியதானது.

சனங்கள் பசியோட கிடக்கிதுகள். இப்ப லொறி லொறியா கொண்டந்து கொட்டினாலும் அதுகளுக்கு பசி அடங்காது என்று உண்மை நிலையை சொன்னார் மாமி. குடை ஒன்றை விரித்துப் பிடித்துக்கொண்டிருந்த மச்சாளுக்கருகில் நான் சரிந்துவிட்டேன். ஏனென்றால் எனக்கு கண்களை இருட்டிக்கொண்டு மயக்கம் வருவதைப்போல இருந்தது.

உணவுதான் இல்லாமல்போனாலும் பறவாயில்லை, குடிப்பதற்கு தண்ணீரையாவது தாராளமாகத் தரலாமே என்று சனம் புறுபுறுத்தது.

திடீரென்று ஒரு பெண்ணின் குரல் அலறியது.

ஐயோ என்ர அப்பா அப்பா. இவ்வளவு கஸ்ரப்பட்டு உங்கள கூட்டிக்கொண்டு வந்ததெல்லாம் இதுக்குத்தானா அப்பா. என்ர அப்பா என்ன விட்டிட்டு போயிடாதீங்க. அப்பா கண்ண திறவுங்க அப்பா. என்ன பாருங்க அப்பா, என்ர அப்பா என்ற மனதை கலங்கடித்த அப்பெண்ணின் கதறல் அத்தனை பேரையும் திரும்பிப் பார்க்க வைத்தது.

அந்தப் பெண் சோர்ந்து விழுந்த தன் தந்தையை தாங்கிப் பிடித்துக்கொள்ள முடியாதவளாய் தானும் விழுந்தாள். விழுந்தவள் தன் தந்தையின் தலையை தன் மடியில் கிடத்திக்கொண்டு பதறினாள்.

தந்தையாரின் கன்னங்களை தட்டித் தட்டிக் கதறினாள். ஆயிரக் கணக்கானவர்கள் அதை பார்த்துக்கொண்டிருந்தாலும் எவரும் ஓடிப்போய் அவர்களுக்கு உதவுவதாய் தெரியவில்லை. உதவவேண்டும் என்ற துடிப்பு பலருக்கும் இருந்திருக்கும்.

ஆனால் பலரால் எழும்பவே இயலவில்லை. மற்றவர்களுக்கும் பார்வையாளர்களாய் இருப்பதைத் தவிர வேறு வழியுமில்லை.

ஆங்காங்கு துப்பாக்கிகளுடன் நின்ற படையினரில் இருவர்மட்டும் வந்து என்ன என்று பார்த்தார்கள். அவர் இறந்துவிட்டாரா இல்லையா என்பது எவராலும் உறுதிப்படுத்தப்படவில்லை.

ஆனால் அந்தப் பெண்ணிண் கதறல் அவர் உயிரிழந்துவிட்டார் என்பதைத்தான் பறைசாற்றியது. பிணம் போலக் கிடந்தவரையோ அல்லது பிணத்தைத்தானோ தெரியவில்லை, மக்களில் இருவரைக்கொண்டு படையினர் தூக்கிச்சென்றார்கள். அவர்களின் பின்னாலேயே கதறிக்கொண்டோடினாள் மகள்.

அடுத்த சில நிமிடங்களிலேயே அந்தப் பரபரப்பு மறைந்துபோய்விட மனிதர்கள் மீண்டும் மயக்க நிலைக்குத் தயாரானார்கள்.

அக்கா அக்கா உங்கள ஆனந்தா அக்கா வரட்டாம் என்று ஆனந்தாவின் தம்பி நிதன் வந்துநின்றான்.

அவர்கள் எனது குடும்ப நண்பர்கள். ஆனந்தா என்னைக் கண்டவுடன் ஓடோடி வந்திருப்பாளே! எதற்காக என்னை தன்னிடம் வரச்சொல்லி விட்டிருக்கிறாள் என்ற யோசனையோடு எழுந்த நான் தலையை பிடித்துக்கொண்டு மீண்டும் நிலத்தில் சரிந்தேன்.

வாறன் தம்பி. எவடத்தில இருக்கிறிங்க என்றேன். படையினரின் பதிவிடத்திற்குச் செல்லும் முட்கம்பிப் பாதையை நோக்கி நெளிவும் சுழிவுமாய் நீண்டிருக்கும் வரிசையைக் காட்டி, அந்தா அந்த வரிசையில நிக்கிற சனத்துக்கு கிட்ட என்று அவன் சுட்டிக்காட்டிய இடத்தில் ஆனந்தா படுத்துக் கிடந்ததை கண்டேன்.

அவவுக்கு காயமக்கா. நடக்கேலாது. என்றான் தம்பி.

அதை அறிந்த பின்பு என்னால் தாமதிக்க முடியவில்லை. என்னோடு மச்சாளும் கூடவே வர ஆனந்தாவிடம் சென்றோம். என்னை கண்டவுடன் ஆனந்தாவின் முகம் இருண்டு கண்கள் குளமாகிவிட்டன.

அக்கா எனக்கு தண்ணி வேணும். என்றவள் அழுதே விட்டாள். மச்சாள் உடனே சென்று தன் அண்ணன் கொண்டு வந்து வைத்திருந்த தண்ணீரில் கொஞ்சத்தை எடுத்துக்கொண்டுவந்து கொடுத்தாள்.

ஒரு சோடா போத்திலை பாதியாக வெட்டிய சிறிய குவளைபோன்ற அதில் அரைவாசிக்கு இருந்த தண்ணீர் கலங்கிய நிறத்தில் இருந்தது. சிறுமியைப் போல் ஆனந்தா இரண்டு கைகளாலும் குவளையை பிடித்துக்கொண்டு கலங்கிய குளத்துநீரைப்போல இருந்த அதை மடமடவென்று குடித்தாள்.

எஞ்சிய சொட்டு நீரான மண்டியில் அவளது முகத்தை நனைத்து துடைத்தேன். அவள் என் மடியிலேயே சுருண்டு விட்டாள்.

ஆனந்தாவின் தாயார் தாக மேலீட்டால் துடித்தார். அவர் இயல்பாகவே தேநீர் பிரியர்.

உணவே இல்லாவிட்டாலும் இருப்பாரே தவிர தேநீர் இல்லாமல் மட்டும் இருக்கவே மாட்டார். அதுவும் இப்படியான களைப்பு ஆட்கொண்டிருக்கும் வேளையில் எப்படித் தவித்திருத்திருப்பார். யாராவது அடுப்பு மூட்டுகிறார்களா என்று பார்த்துப் பார்த்து ஓடுப்பட்டுத் திரிந்தார். நிறைய அடுப்புகள் எரிகின்றன தான்.

அறியாத மனிதர்களிடம் கேட்டால் எல்லோரும் அனுமதிக்க மாட்டார்களே. சிறிய கற்களாலும் [illegible] ரிக்கப்பட்ட [illegible] யும் காகிதங்களையும் அட்டைப்பெட்டி மட்டைகளையும் கொண்டு எரித்தார்கள்.

சிறிய சட்டிகளும் நெஸ்ரமோல்ட் பேணிகளுமே கொதிநீர் பாத்தரங்களாகின. மூன்று மீன்பேணிகள் கவிழ்க்கப்பட்டது அடுப்பாக இருந்தால் அதன்மீது தண்ணீர் கொதிக்கும் பாத்திரம் ஒரு நெஸ்ரமோல்ட் பேணியாக இருக்கும்.

பொதுவாக போராளிகள் களமுனையில் வாழ்ந்த வாழ்க்கையைவிட மக்கள் கடினமான வாழ்க்கையை அந்த வெட்டைவெளியில் அப்போது அனுபவித்தார்கள்.

அந்த அடுப்புகளும் பாத்திரங்களும் ஓயாமல் மாறிமாறி பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருந்தன.

எப்படியோ தெரிந்தவர்களது அடுப்பொன்றை கண்டுபிடித்துவிட்ட ஆனந்தாவின் தாயார் சுடச்சுட தேநீர் ஆற்றிக் கெண்டுவந்து தந்தார். அப்பா, அம்மா, ஆனந்தா, அவளது சித்தி, அவரது மகன் நிதன், நான் என்று எல்லோரும் தேநீர் பருகினோம். வாழ்நாளிலும் மறக்க முடியாத தேநீர்களில் அதுவுமொன்றுதான்.

அந்தத் தேநீர் தொண்டைக்குள் இறங்கியது இன்பமாய் இருந்தது. ஆனால் அந்த இன்பம் அரை மணித்தியாலம்கூட ஆகமுன்னர் காணாமல்போய் விட்டிருந்தது. மீண்டும் நா வரண்டு தண்ணீருக்காக ஏங்கியது.

அன்றைய பகலும் வெய்யில் அப்படி ஒரு எரி எரித்தது. ஐயோ என்று குளற வேண்டும்போல இருந்தது. சனங்கள் அனலிடைபட்ட புழுக்களைப்போல துடித்தார்கள்.

ஆனந்தா மயங்கிவிட்டாள். நான் சிறிதளவு தண்ணீரை எடுத்து அவளது முகத்தில் அறைந்து துடைத்துவிட்டு அவளின் கன்னத்தில் தட்டி குடிக்கவும் கொடுத்தேன்.

வெய்யில் எங்கள்மீது நெருப்பைப் போலகொட்டிக்கொண்டு இருந்ததால் கண்களை விழித்துப்பார்க்கவே அச்சமாக இருந்தது.

தண்ணிபடேக்கை வெக்கை குறைவாக்கிடக்கு. பிள்ளைய அங்கினேக்க கூட்டிக்கொண்டு போவம். அவடத்த ஊத்தை தண்ணியாவும், ஒரே அரியண்டமாயும்தான் கிடக்கு. ஆனா இதில கிடந்து சாக ஏலாது. பிள்ளையக் கூட்டிக்கொண்டு நடவுங்கோ என்றார் ஆனந்தாவின் தாயார்.

அரை மயக்கத்தில் கிடந்த அவளை தூக்கி நிறுத்தினோம். ஏலுமா? ஏலாதா? நடப்பியா மாட்டியா? என்ற எந்த கேள்வியும் கேட்கவில்லை. நானே அவளை தோளில் தாங்கிக்கொண்டேன்.

மறுபக்கத்தில் தம்பி தாங்கிக்கொண்டான். ஒரு நூறு மீற்றர் தூரத்திற்குக்கூட நடப்பேன் என்று நான் நினைத்திருக்கவில்லை. என்றாலும் அவளையும் தாங்கிக்கொண்டு நடந்தேன் என்பது உண்மை.

மெல்ல மெல்ல நகர்ந்தோம். நாற்றமடித்த மனிதக்கழிவுகளை கடந்து தண்ணீர் படகடிக்குச்சென்றோம். சேறும் சகதியுமாகக் கிடந்த கம்பிவேலியின் மூலையில் தண்ணீர்படகொன்று தண்ணீரில்லாமல் கிடந்தது.

இதமான ஈரமாயிருந்த இடத்தைக் காட்டி, இதில இருத்துவம் என்றார் அம்மா. நிதன் பைகளை தொப்பென போட்டுவிட்டு பொறுங்க வாறன் என்றுவிட்டு நகர்ந்தான். அம்மாவும் நானுமாக ஆனந்தாவை கம்பிவேலியருகே இருத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தோம்.

அது படையினருக்கும் மக்களுக்கும் இடையிலான வேலிக்கம்பி. சுருள் [illegible] அந்த முள்ளுக்கம்பியில் [illegible] சேலையொன்றை போட்டு நிலத்தில் இன்னொரு சேலையை விரித்து ஆனந்தாவை இருத்திவிட்டோம். அவ்விடத்தில் உண்மையாகவே வெக்கை குறைவாகத்தான் இருந்தது.

நான் போய் அப்பாவையும் சித்தியையும் கூட்டிக்கொண்டு வாறன். மகளோட கொஞ்சநேரம் நில்லுங்க என்று என்னிடம் சொல்லிவிட்டு அம்மா போய்விட, நான் ஆனந்தா இருப்பதற்கு வசதியாக உதவினேன்.

ஏனெனில் தொடையில்பட்ட சிதறுதுண்டு தசையை ஊடுருவி உள்நுழைந்திருந்த காரணத்தால் அவள் மிகவும் சிரமப்பட்டாள். அந்தக் காலை எப்படி வைத்தாலும் அவளுக்கு வலியாகத்தான் இருக்கும்.

பச்சைக்காயத்தின் தாங்கமுடியாத வேதனையால் அடிக்கடி அவளது கண்கள் கலங்கின. வேலிக்கு அப்புறமாய் பனைமரநிழலில் நின்று எங்களையும் அவதானித்துக்கொண்டிருந்த படையினரை, கண்டும் காணாதவர்கள்போல நடந்துகொண்டோம்.

சற்றுநேரத்தில் அம்மா இரண்டு பைகளையும் காவிக்கொண்டு, ஆஸ்துமா நோயால் அவதிப்பட்டுக்கொண்டிருந்த ஆனந்தாவின் சித்தப்பாவையும் கூட்டிக்கொண்டு வந்துசேர்ந்தார். கையோடு நிதனும் ஓட்டமும் நடையுமாய் வந்து சேர்ந்தான்.

பெரியம்மா நீங்களும் ஆனந்தாக்காவும் இப்ப போறிங்க. காயக்காரரை ஏத்திக்கொண்டுபோற வாகனத்தில போக உங்கட பேர்கள பதிஞ்சிட்டு வந்திட்டன். உடன வாங்க. காயக்காரரோட காயப்படாத ஆக்கள் போக ஏலாதுதான். நடக்கமுடியாத ஆக்களோட ஒராள மட்டும் போக விடுவான். அதால நீங்க போங்க பெரியம்மா. என்று சொன்னான்.

ஆனால் அம்மாவுக்கு ஏனையவர்களை விட்டுவிட்டுப்போக விருப்பம் இருக்கவில்லை.

பெரியம்மா. பெரியப்பாவையும் அம்மாவையும் நான் கூட்டிக்கொண்டு வாறன். இப்ப நீங்க கெதியா வாங்க. போறதுக்கு ஒரு பஸ் ரெடியா நிக்கிது. இந்த பஸ்லயே போயிரலாம் பெரியம்மா. விட்டால் திரும்பவும் இடம்பிடிக்கிறது கஸ்ரம் பெரியம்மா. சொன்னா கேளுங்க என்று கெஞ்சினான்.

அவர்களில் எவரும் எவரையும் பிரிந்துபோக மனமற்றவர்களாய் முடிவெடுக்க முடியாமல் தடுமாறினார்கள்.

நீங்களும் ஆனந்தாவும் போறது தானம்மா நல்லது. யோசிக்காம வெளிக்கிடுங்க என்று நானும் சொன்னேன். அவர்களின் பைகளைத் தூக்கி தோளில் மாட்டிக்கொண்ட நிதன்.

எழும்புங்க ஆனந்தாக்கா என்று அவளை உலுக்கினான். எனக்கும் அவர்களை அனுப்பிவைப்பதில் விருப்பம் இருந்ததால் ஆனந்தாவைத் தூக்கி நிறுத்தினேன்.

உடனே சித்தப்பா அவளை தாங்கிப் பிடித்து நடத்திக்கொண்டு செல்ல மிகுதியாகக் கிடந்த ஒரு பைக்கு காவல்காரியாக அவர்கள் போவதையே பார்த்துக்கொண்டு நின்றேன்.

[பயணம் தொடரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ஜேர்மனியின் கோல் மழையில் 'மண்குதிரை' கிரீஸ் கரைந்தது

ஐரோப்பிய கிண்ண உதைபந்துத் தொடரில் நேற்று நடந்த காலிறுதி ஆட்டத்தில் ஜேர்மனி 4-2 என்ற கோல் கணக்கில் கிரீஸ் அணியை வீழ்த்தி அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது.

ஐரோப்பிய உதைபந்துத் தொடரில் நேற்று நடந்த இரண்டாவது காலிறுதியில் கிரீஸ் அணி, ஜேர்மனியை எதிர்கொண்டது. தடை காரணமாக கிரீஸ் அணித்தலைவர் கராகுனிஸ் களம் இறங்கவில்லை. ஜேர்மனி அணியில் மரியோ ஹோம்சுக்கு பதிலாக 33 வயது மூத்த வீரர் மிராஸ்லாவ் குளோஸ் 'ஸ்டிரைக்கராக' விளையாடினார். 'பயர்ன்மியூனிச்சின்' தோமஸ் முல்லரும் முதல் 11 பேர் அணியில் இடம்பெறவில்லை.

முதல் பாதியில் ஜேர்மனியின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது.தொடர்ச்சியான தாக்குதல் ஆட்டத்தின் விளைவாக 39 ஆவது நிமிடத்தில் ஜேர்மனி முதல் கோல் அடித்தது. மெசூட் ஓசில் 'பாஸ்' செய்த பந்தை பிலிப் லாம் அழகாக கோலுக்குள் அடித்தார். முதல் பாதியில் ஜேர்மனி 1-0 என்று முன்னிலை பெற்றது.

பிற்பாதி ஆட்டத்தில் 55 ஆவது நிமிடத்தில் 'கில்லர்' கிரீஸ், ஜேர்மனிக்கு அதிர்ச்சி அளித்தது. ஜெர்மனியின் 'பெனால்டி ஏரியாவுக்குள்' பந்துடன் புகுந்த சல்பென்ஜிடிஸ் அதனை அழகாக 'குரொஸ்' செய்தார். அந்தக் 'குரொஸ்' சமராஸ் வலைக்குள் தள்ள ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையடைந்தது. ஆனால் அடுத்த 6 ஆவது நிமிடத்தில் ஜேர்மனி 2 ஆவது கோலை அடித்து ஜாம்பவான் என்று நிரூபித்தது. மைதானத்தின் வலப்புறம் இருந்து ஜெரோம் போடங் 'குரொஸ்' செய்த பந்தை அற்புதமாக கோலாக மாற்றினார் ரியல் மாட்ரிட்டின் சமி கெடிரா. ஜேர்மனி மீண்டும் முன்னிலை பெற 'கில்லர்' கிரீசும் விடாமல் போராடியது.

ஆனால் கிரீஸ் வீரர்களின் போராட்டத்துக்கு 33 வயது மிராஸ்லாவ் குளோஸ் முற்றுப்புள்ளி வைத்தார். மெசூட் ஓசில் அடித்த 'கோர்னர் கிக்கை' தலையால் முட்டி குளோஸ் கோலுக்குள் அடிக்க ஜேர்மனி இரு கோல்கள் முன்னிலை பெற்றது. இரு கோல்கள் பின்தங்கியதால் கிரீஸ் வீரர்கள் சோர்வடைந்தனர். ஆனாலும் விடாத ஜேர்மனி வீரர்கள் விரட்டி விரட்டி கோல் அடித்தனர். ஆட்டத்தின் 74 ஆவது நிமிடத்தில் ஜேர்மனியின் ரவுஸ் தன் பங்குக்கு ஒரு கோல் அடித்தார். ஆட்டத்தின் இறுதிக்கட்டத்தில் கிரீஸ் அணிக்கு ஒரு பெனால்டி கிடைத்தது. இதனை சல்பென்ஜடிஸ் கோலாக மாற்றினார். இத்துடன் ஆட்டம் நிறைவுக்கு வர ஜேர்மனி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.


கடந்த 2004 ஆம் ஆண்டு யூரோவுக்குதான் கிரீஸ் முதல்முறையாக தகுதி பெற்றது. பங்கேற்ற முதல் தொடரிலேயே ஜாம்பவான் அணிகளை எல்லாம் வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது. அது முதல் கிரீஸ் அணியை கண்டால் ஜாம்பவான் அணிகளுக்கு ஒருவித பயம். இந்த ஆட்டத்தில் கூட கிரீஸ், ஜேர்மனிக்கு அதிர்ச்சி அளிக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் 'கில்லர்' கிரீஸ் மண்குதிரையாக கரைந்து போனது. (5)

# விதி தெரியாததால் தண்டம்

ஐரோப்பிய கிண்ண உதைபந்துத் தொடரில் 'பி' பிரிவில் இடம் பெற்றிருந்த போர்த்துக்கல் மற்றும் டென்மார்க் அணிகள் மோதிய ஆட்டத்தில் டென்மார்க் வீரர் பெட்னடர் இரு கோல்கள் அடித்தார். இதில் இரண்டாவது கோல் அடித்த மகிழ்ச்சியில் பெட்னடர் தனது 'ஜெர்சியை (ரீ-சேட்)' உயர்த்தியபடி ஓடி வந்தார். அப்போது 'ஷோர்ட்ஸின்' உள்ளே அணிந்திருந்த உள்ளாடையும் வெளியே தெரிந்தது.

உள்ளாடையில் 'பட்டி பவர்' என்ற கல்பந்து பெட்டிங் நிறுவனத்தின் பெயர் இடம் பெற்றிருந்தது. இது 'பீபா' விதிகளுக்கு புறம்பானது. அதிகாரப்பூர்வ ஸ்பொன்ஷர் நிறுவனங்களின் பெயரைத் தவிர வேறு எந்த நிறுவனத்தின் பெயரும் ஆடைகளில் இடம்பெறக் கூடாது என்பது 'பீபா'வின் விதி. இதை தொடர்ந்து பெட்னடர் விதிமுறையை மீறியதாக 'பீபா' அவருக்கு 65 லட்சம் ரூபா (ஒரு லட்சம் யூரோ)அபராதம் விதித்துள்ளது. மேலும் ஒரு ஆட்டத்தில் விளையாடவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை எதிர்வரும் உலகக் கிண்ண தகுதிச் சுற்று அல்லது உலக கிண்ண ஆட்டத்திலும் கூட இருக்கலாம்.

ஆனால் இந்த விதி குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று 24 வயது பெட்னடர் தனது டுவிட்டர் தளத்தில் தெரிவித்துள்ளார். (5)



பெட்னடர்

# கோல் வழங்காதவர் நீக்கம்

இங்கிலாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் மார்கோ டெவிக் அடித்த கோலை வழங்காத நடுவர் குழு யூரோவில் இருந்து நீக்கப்பட்டுள்ளது என்று 'பீபா' நடுவர் குழுத் தலைவர் கோலினா அறிவித்துள்ளார்.

ஐரோப்பிய கிண்ணத் தொடரில் இங்கிலாந்து 1-0 என்ற கோல் கணக்கில் உக்ரேன் அணியை தோற்கடித்தது. இந்த ஆட்டத்தில் உக்ரேன் வீரர் மார்கோ டெவிக் அடித்த பந்து எல்லைக் கோட்டைத் தாண்டியது. ஆனால் நடுவர் விக்டர் கசாய் உக்ரேன் அணிக்கு கோல் வழங்க மறுத்து விட்டார். இதுகுறித்து 'பீபா' நடுவர்கள் குழு தலைவரும் இத்தாலியைச் சேர்ந்த உலக புகழ்பெற்ற முன்னாள் நடுவருமான பெர்லுகி கோலினா கூறியதாவது:

ஐரோப்பிய கிண்ணத்தில் முதல்முறையாக 5 நடுவர்கள் பணியாற்றி வருகின்றனர். இங்கிலாந்து-உக்ரேன் அணிகளுக்கிடையேயான ஆட்டத்தில் மார்கோ டெவிக் அடித்த பந்து கோல் எல்லையைத் தாண்டி 50 சென்ரி மீற்றர் சென்றுவிட்டது. ஆயினும் நடுவர் கோல் அளிக்கவில்லை. நடுவர்களும் மனிதர்கள்தானே தவறு செய்வது இயல்பு. ஆயினும் இனி மேல் வரும் எந்தப் போட்டியிலும், உக்ரேன்- இங்கிலாந்து போட்டியில் நடுவராகப் பணியாற்றிய விக்டர் கசாய் மற்றும் அவரது உதவியாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படாது - என்றார்


ஹங்கேரியை சேர்ந்த விக்டர் கசாய் ஐரோப்பாவின் மிகச்சிறந்த நடுவராகக் கருதப்பட்டாலும் இந்தக் கோலால் சர்ச்சையில் சிக்கிவிட்டார்

தற்போது 'பீபா' நடுவர் குழு தலைவராக உள்ள கோலினா உலக புகழ்பெற்ற நடுவராக விளங்கியவர். இவர் நடுவராக இருந்தால் வீரர்கள் ஒருவித நடுக்கத்துடனே விளையாடுவார்கள். மிகத் துல்லியமாக அவரது முடிவு இருக்கும். கடந்த 2002 ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில் ஜேர்மனி-பிரேஸில் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் நடுவராக பணியாற்றியவர் கோலினாதான். கடந்த 1995 ஆம் ஆண்டு நடுவர் பணியை தொடக்கிய கோலினா 2005 ஆம் ஆண்டு நடுவர் பணியில் இருந்து ஓய்வு பெற்றார். தற்போது அவருக்கு வயது 52. (5)

விக்டர் கசாய்







# தோல்வியில் ஓய்வு

உக்ரேன் அணித் தலைவரும் ஏ.சி.மிலான் முன்னாள் சூப்பர்ஸ்டாருமான அன்ட்ரே ஷெவ்சென்கோ சர்வதேச உதைபந்தாட்டத்தில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

ஐரோப்பிய கிண்ணத் தொடரில் உக்ரேன் கடைசி லீக் ஆட்டத்தில் இங்கிலாந்திடம் மோதியது. இந்த ஆட்டத்தில் 1-0 என்ற கோல் கணக்கில் உக்ரேன் தோற்று தொடரில் இருந்து வெளியேறியது.

இந்த ஆட்டம் முடிந்ததும் உக்ரேன் அணித் தலைவர் அன்ட்ரே ஷெவ்சென்கோ சர்வதேச உதைபந்தில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். 1976 ஆம் ஆண்டு பிறந்த செவ்சென்கோ தனது உதைபந்து வாழ்க்கையில் பெரும் பகுதியை ஏ.சி.மிலானில் கழித்தார். 1999 முதல் 2006 வரை மிலானுக்காக 226 ஆட்டங்களில் விளையாடி 127 கோல்களை அடித்திருந்தார். மேலும் சம்பியன்ஸ் லீக் ஆட்டங்களில் 51 கோல்கள் அடித்துள்ளார். சம்பியன்ஸ் லீக் வரலாற்றில் அதிக கோல்கள் அடித்த வீரர்களில் செவ்சென்கோவுக்கு 3 ஆவது இடம்.

தற்போது டைனமோ கீவ் அணிக்காக விளையாடி வரும் செவ்சென்கோவுக்கு 35 வயதாகிறது. உக்ரேன் அணிக்காக 111 சர்வதேச ஆட்டங்களில் விளையாடி 48 கோல்களையும் அடித்துள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் 24/06/2012





# தடுமாறும் தென்னாபிரிக்கா

பங்களாதேஷ் அணிக்கு எதிரான 'ரி-20' ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 3 இலக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

சிம்பாப்வே, தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் அணிகள் முத்தரப்பு 'ரி-20' தொடரில் விளையாடுகின்றன. ஹராரேயில் நேற்றுமுன்தினம் நடந்த ஐந்தாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா - பங்களாதேஷ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணித்தலைவர் அம்லா துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு டு பிளசிஸ் (13) ஏமாற்றினார். அடுத்து வந்த இங்ராம் (1) நிலைக்கவில்லை. சிறிது நேரம் தாக்குப் பிடித்த அம்லா (20), அன்டாங் (41) ஆறுதலளித்தார். பெஹார்டியன் (16), அல்பி மோர்கல் (12) ஓரளவு ஓட்டங்கள் சேர்க்க, தென்னாபிரிக்க அணி 20 பந்து பரிமாற்றங்களில் 7 இலக்குகளுக்கு 129 ஓட்டங்கள் எடுத்தது. பங்களாதேஷ் சார்பில் இலியாஸ் சன்னி 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

### அஷ்ரபுல் நம்பிக்கை

சுலப இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணிக்கு சித்திக் (5) ஏமாற்றினார். அடுத்து வந்த அனாமுல் (4), முஸ்பிகுர் ரஹிம் (7), நஷார் ஹொசைன் (0) சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர். இலக்குகள் ஒருபுறம் சரிந்தாலும் மறுமுனையில் பொறுப்பாக ஆடிய அஷ்ரபுல் (40) நம்பிக்கையளித்தார். மகமதுல்லா (28), ரஹ்மான் (27*) கைகொடுக்க, வங்கதேச அணி 19.5 பந்து பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 132 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

### இறுதி வாய்ப்பு

ஏற்கனவே சிம்பாப்வேயிடம் தோல்வி கண்ட தென்னாபிரிக்கா, 4 புள்ளிகளுடன் (3 ஆட்டங்கள்) கடைசி இடத்தில் உள்ளது. தலா இரண்டு வெற்றியை பெற்ற சிம்பாப்வே (3 ஆட்டம்), பங்களாதேஷ் (4 ஆட்டம்) அணிகள் தலா 8 புள்ளிகளுடன் முதலிரண்டு இடத்தில் உள்ளன. தென்னாபிரிக்க அணி இறுதிக்கு முன்னேற, சிம்பாப்வே அணிக்கு எதிரான கடைசி ஆட்டத்தில் அதிக ஓட்ட நிகர சராசரி வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டும். (5)

# மழையால் கைவிடப்பட்டது ஆட்டம்

இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரின் மூன்றாவதும், இறுதியுமான ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டுள்ளது.

லீட்ஸில் இடம்பெறவிருந்த இந்த ஆட்டம் தொடர்ச்சியான மழை காரணமாக ஆரம்பிக்க முடியாமல் கைவிடப்பட வேண்டி ஏற்பட்டது. இதன் காரணமாக 3 ஆட்டங்கள் கொண்ட இந்தத் தொடரை இங்கிலாந்து 2-0 என்ற கணக்கில் இலகுவாக வெற்றிகொண்டது.

தொடரின் நாயகனாக இங்கிலாந்து அணி சார்பாக மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்ட இயன் பெல் தெரிவானார். கெவின் பீற்றர்சனின் ஓய்வை அடுத்து ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய இயன் பெல், முதலாவது ஆட்டத்தில் சதத்தைப் பெற்றதோடு, அடுத்த ஆட்டத்தில் அரைச்சதமும் பெற்றிருந்தார். இரு அணிகளுக்குமிடையிலான கிரிக்கெட் தொடரில் இறுதியாக 'ரி-20' ஆட்டமொன்று இடம்பெறவுள்ளது. [5]



# விழித்துப் பார்த்தவர் மரணம்

யூரோ கிண்ண உதைபந்து தொடரை தொடர்ந்து 11 நாள்களாக இரவில் விழித்து ரசித்த சீன உதைபந்து ரசிகர் ஒருவர் மரணமாகியுள்ளார்.

சீனாவின் ஹனான் மகாணத்தில் உள்ள சாங்ஷா நகரத்தை சேர்ந்த 26 வயது ரசிகர் ஜியாங் ஷாசென். இவர் ஒரு உதைபந்து வீரரும் கூட. யூரோ கிண்ண உதைபந்து தொடர் தொடங்கியதிலிருந்து தினமும் இரவு விழித்து ஆட்டத்தை ரசித்து வந்துள்ளார்.

அந்த நகரில் உள்ள ஒரு மதுபான விடுதிக்குச் சென்று மது அருந்தியவாரே அதிகாலை 5 மணி வரை ஆட்டத்தை ரசிப்பதை வாடிக்கையாக வைத்திருந்தார். ஆட்டம் தொடங்கிய ஜூன் 8 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை தொடர்ச்சியாக 11 நாள்கள் இரவில் விழித்து ஆட்டத்தைப் பார்த்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த 19 ஆம் திகதி ஆட்டம் முடிந்ததும் அதிகாலை 5 மணியளவில் வீட்டுக்கு வந்து படுத்துள்ளார். ஆனால் அதன் பின்பு அவர் எழுந்திருக்கவில்லை. அந்த ரசிகரின் தாயார் அவரை எழுப்ப முயன்ற போதே அவர் இறந்து போனது தெரிய வந்தது.

மருத்துவ பரிசோதனையில் உறக்கம் இல்லாமல் அதிகப்படியாக விழித்திருந்ததும், அதிகமாக மது அருந்தியதும் மரணத்திற்கு காரணம் என்று தெரிய வந்துள்ளது. இறந்து போன ரசிகர் இங்கிலாந்து அணியின் தீவிர ரசிகர் என்றும் 19 ஆம் திகதி இரவில் உக்ரேன், இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான ஆட்டத்தை மிகுந்த மன அழுத்தத்தோடு பார்த்துக் கொண்டிருந்ததாக அவரது நண்பர்கள் தெரிவித்தனர்.

அதிகப்படியாக மது, நல்ல உறக்கம் இல்லாதது, சிகரெட் குடித்துக் கொண்டே உதைபந்து தொடரை ரசிக்க கூடாது என்று மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். உதைபந்து ரசிகர்களுக்கு இது போன்று நடப்பது முதன் முறையல்ல, பல நாடுகளிலும் இது போன்ற சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. (5)



# குற்றவாளியானார் கனேரியா

இங்கிலாந்துக் கிரிக்கெட் சபையின் குற்றங்களை ஒழிக்கும் பிரிவு நடத்திய விசாரணைகளில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் டனிஷ் கனேரியா குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளார். அவருக்கான தடை மற்றும் தண்டங்கள் தொடர்பான முடிவுகள் பின்னர் எடுக்கப்படவுள்ளது.

இங்கிலாந்துப் பிராந்திய தொடர்க ளில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பாக இந்த விசாரணை நடத்தப்பட்டது. நடத்தப்பட்ட விசாரணைகளில் டனிஷ் கனேரியா தான் விளையாடிய எசெக்ஸ் கழகத்தின் சக வீரரான மேர்வின் வெஸ்ட் பீல்டை வேண்டுமென்றே சிறப்பாக விளை யாட விடாமல் இருக்கத் தூண்டியதாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

எசெக்ஸின் வேகப்பந்து வீச்சாளரான மேர்வின் வெஸ்ட்பீல்ட் கடந்த பெப்ரவரி மாதம் 'ஸ்பொட் பிக்சிங்' குற்றச்சாட்டுத் தொடர்பாக சிறையிலடைக்கப்பட்டார். அதை அடுத்து கடந்த ஏப்ரல் மாதத்தில் டனிஷ் கனேரியா, மேர்வின் வெஸ்ட் பீல்ட் இருவருக்குமெதிராக ஒழுக்க விசாரணைகள் இடம்பெறும் என்று இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை அறிவித்திருந்தது.

நடத்தப்பட்ட விசாரணைகளில் இந்தியாவைச் சேர்ந்த தொழிலதிபரும், சூதாட்டங்களில் தொடர்புள்ளவராகக் கருதப்படுபவருமான அருண் அல்லது அனு பட் என்பவரை மேர்வின் வெஸ்ட்பீல்டிற்கு டனிஷ் கனேரியா அறிமுகப்படுத்தியதை மேர்வின் வெஸ்ட்பீல்ட் வெளிப்படுத்தினார். அவர்கள் இருவரையும் அறிமுகப்படுத்தியதை டனிஷ் கனேரியா விசாரணைகளில் ஒத்துக் கொண்டார். எனினும் அனு பட்டோடு தனக்குத் தொடர்புகள் இருந்ததில்லை என்று அவர் தெரிவித்தார்.

தொலைபேசி உரையாடல்களை செவிமடுத்தபோது டனிஷ் கனேரியாவுக்கும், அனு பட்டிற்குமிடையில் நெருக்கமான தொடர்புகள் காணப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதோடு, 2009 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் வெஸ்ட்பீல்ட் 'ஸ்பொட் பிக்சிங்கில்' ஈடுபட்ட போட்டிக்கு முன்னதாக டனிஷ் கனேரியா அனு பட்டோடு தொடர்புகளைக் கொண்டிருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனை அடுத்து டனிஷ் கனேரியா குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானைச் சேர்ந்த புறச் சுழற்பந்து வீச்சாளரான டனிஷ் கனேரியா பாகிஸ்தான் அணி சார்பாக 61 டெஸ்ட் ஆட்டங்களில் பங்குபற்றி 261 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார்.

31 வயதான டனிஷ் கனேரியா - பாகிஸ்தான் அணிக்காக 2010 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் இறுதியாப் ஆட்டமொன்றில் பங்குபற்றியிருந்தார். அதன் பின்னர் அவர் அணித் தெரிவில் கருத்திற் கொள்ளப்படவில்லை. (5)



# சல்மான் பட் திடீர் விடுதலை

சூதாட்டத்தில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு சிறை சென்ற பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் சல்மான் பட் தண்டனைக் காலம் முடியும் முன்னரே விடுதலை செய்யப்பட்டார்.

சல்மான் பட், சூதாட்டத்தில் ஈடுபட்டதால் கைது செய்யப்பட்டு, 30 மாத சிறைத் தண்டனை பெற்றார்.

வெளிநாட்டினரை முன்கூட்டியே விடுதலை செய்யும் இங்கிலாந்து சட்டத்தின்படி, சல்மான் பட் 7 மாத சிறைத் தண்டனைக்குப் பின்பு விடுதலை செய்யப்பட்டுள்ளார். அவர் அடுத்த 10 ஆண்டுகளுக்கு இங்கிலாந்து வரக் கூடாது என்றும் கடும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் தனது தாய்நாடான பாகிஸ்தானுக்கு செல்கிறார்.

மேலும், சல்மானுடன் கைது செய்யப்பட்ட மொகமது ஆமீர் மற்றும் மொகமது ஆசிப் இருவருக்கும் 6 மாத மற்றும் 1 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவர்களும் தண்டனை காலம் முடிவதற்கு முன்னரே விடுதலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரசேகர ஆஷாத்



ஐ.நா. உட்பட எந்தவொரு நாட்டினரையும் இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்த அனுமதிக்க முடியாது. நவநீதம்பிள்ளைக்கு மட்டுமே இங்கு வர அனுமதியளிக்கப்படும்.

*–மொஹான்பீரிஸ்*

# அகற்றப்படாத திரையின் பின் அட்டூழிய சாம்ராஜ்யம்

ஞாயிறு காரம்

தற்போது இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் இருபதாவது கூட்டத் தொடரில் இலங்கை அரசின் சார்பில் வழமையாகக் கலந்துகொண்டு சில வாய்ப்பாடுகளைத் திரும்பத் திரும்ப ஒப்படைக்கும் அமைச்சர்களான மஹிந்த சமரசிங்க, ஜி.எல்.பீரிஸ் போன்ற எவரும் கலந்துகொள்ளவில்லை. ஆனால் அந்தப் சபையின் ஆரம்ப கட்டத்திலேயே இலங்கையில் பிரதிநிதி கலந்துகொண்டு உரையாற்றினர். அவரும் வழமையான பல்லவியைப் பாடிய போதும் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு பயணத்தை மேற்கொண்டு போரின் போது இடம்பெயர்ந்தோரின் மீளக்குடியமர்வு, சரணடைந்த போராளிகளின் புனர்வாழ்வு, வடக்குக் கிழக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் போன்ற விடயங்களைப் பார்வையிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

ஏற்கனவே நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆலோசனையை வழங்கவும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும் ஒரு ஐ.நா. பிரதிநிதிகள் குழுவை அனுப்ப நவநீதம்பிள்ளை அனுமதி கோரியிருந்தார். இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட ஜனாதிபதியின் சட்ட ஆலோசகரும் முன்னாள் சட்டமா அதிபருமான மொகான் பீரிஸ், ஐ.நா. உட்பட எந்தவொரு நாட்டினரையும் இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்த அனுமதிக்க முடியாது எனவும் நவநீதம்பிள்ளைக்கு மட்டுமே இங்கு வர அனுமதியளிக்கப்படும் எனவும் தெரிவித்திருந்தார்.

அதேவேளை, ஜனாதிபதியின் செயலரும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றும் செயலணியின் தலைவருமான லலித் வீரதுங்க நல்லிணக்க ஆணைக் குழுவால் பரிந்துரை செய்யப்பட்ட 135 பரிந்துரைகளில் 33 மட்டுமே இந்த வருடம் நிறைவேற்றப்படும், ஏனையவை தொடர்பாகப் பரிசீலனை செய்யப்படும் எனத் தெரிவித்தார். இந்த வருடம் நிறைவேற்றப்படாது எனத் தெரிவிக்கப்பட்ட 102 பரிந்துரைகளில் போர்க் குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பானவை, இனப்பிரச்சினைக்கு ஒரு சுமூகமான தீர்வு காணல் என்பனவும் அடங்கும் என்பதைத் திட்டவட்டமாக நம்பமுடியும்.

இப்படியாக இலங்கை அரசு ஏமாற்றும் நோக்கில் காய்களை நகர்த்த நவநீதம்பிள்ளை தனது இலங்கை வருகையை மீள்பரிசீலனை செய்யவுள்ளார் என்ற செய்திகள் வெளிவந்தன. அதேவேளையில் ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் இலங்கை அரசிடம் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையுடன் இணைந்து செயற்படுமாறு கேட்டுக் கொண்டார். இந்தக் கோரிக்கை சாதாரண முறையில் அமைந்திருந்த போதிலும் அதற்குள் மனித உரிமைகள் ஆணையத்துக்கு உரிய கௌரவம் வழங்க மறுத்த இலங்கை அரசின் மீதான கோபமும் ஒரு விதமான எச்சரிக்கையும் புதைத்திருப்பதை எவராலும் ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியாது.

இதை இலங்கை அரசு புரிந்து கொண்ட காரணத்தாலேயே இருபதாவது கூட்டத் தொடரில் இலங்கைப் பிரதிநிதி மனித உரிமைகள் ஆணையாளரை இலங்கைக்கு அனுப்புமாறு மீண்டும் ஒருமுறை அழைப்பு விடுத்துள்ளார். ஆனால் நவநீதம்பிள்ளை இது தொடர்பாக எவ்வித பதிலையும் வழங்கவில்லை.

எப்படியிருந்த போதிலும் இலங்கை அரசின் அழைப்பை ஏற்று நவநீதம்பிள்ளை இலங்கை வரும்போது அவர் தன்னிச்சையாகச் செயற்பட முடியாது. இலங்கை அரசு ஏற்கனவே வகுத்து வைத்திருக்கும் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே அவரின் சந்திப்புக்கள் இடம்பெறும். எந்த நேரமும் அவரைச் சுற்றி அமைச்சர்கள் இருப்பார்கள். பாதுகாப்பு என்ற பேரில் இராணுவம் இருக்கும்.

இந்த நிலையில் அவர் செயலணிக் குழுவினரைச் சந்திக்கும் போது புள்ளி விவரங்களை அள்ளி வீசுவார்கள். 90 வீதத்துக்கு மேற்பட்ட ,மக்கள் மீளக்குடியமர்ந்துவிட்டனர் எனவும் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த கோடிக் கணக்கில் பணம் செலவு செய்யப்பட்டு விட்டதாகவும், 99 வீதமான போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டு விட்டனர் எனவும், ஏனைய மாவட்டங்களில் 8 வீத பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டிருக்கும்போது வடக்கு, கிழக்கில் அது 23 வீதமாக இருப்பதாகவும் என்று பலவிதமான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். அவற்றையெல்லாம் அவர் நம்பும் விதமாக அகலிக்கப்பட்ட நெடுஞ்சாலைகளும் கிளிநொச்சியில் அந்த வீதி அருகே அமைக்கப்பட்ட சிவில் நிர்வாகக் கட்டடங்களும் தென் இலங்கை வர்த்தக நிறுவனங்களினது கட்டடங்களும் அவருக்குக் காண்பிக்கப்படும். மக்கள் சந்திப்புக்கள் இடம்பெறும்போது அமைச்சர்களும் படையினரும் அருகில் இருந்து கொள்வார்கள். மக்கள் தங்கள் குறைகளைச் சொல்லி விடாதபடி ஒரு இறுக்கம் அங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும்.

இடைத்தங்கல் முகாம்கள், சொந்தக் காணிகளில் மக்கள் குடியமர அனுமதிக்கப்படாமை போன்ற விடயங்களுக்கு காரணமாக கண்ணிவெடிகள் முன்வைக்கப்படும்.

நவநீதம் பிள்ளைக்கும் உண்மைகளுக்குமிடையே கண்ணுக்குத் தெரியாத ஒரு வலை விரிக்கப் பட்டிருக்கும். தமிழ் மக்களின் நலன்கள் தொடர்பாக அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஒரு தோற்றப்பாடு ஏற்படுத்தப்படும்.

இப்படியான ஒரு ஏமாற்று நாடகத்தை அரங்கேற்றவே தற்சமயம் இங்கு மனித உரிமைகள் ஆணையாளர் அழைக்கப்படுகின்றார். இதை அவர் ஓரளவுக்குப் புரிந்துகொண்ட காரணத்தால்தான் உடனடியாக அவர் பதில் எதுவும் வழங்கவில்லை போல் தெரிகிறது. ஏனெனில் இலங்கை அரசின் ஏமாற்று வித்தைகள் இப்போது மீண்டும் மீண்டும் சர்வதேச அரங்கில் அம்பலப்பட்டு வருகின்றன.

சர்வதேச அரங்கில் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், இன ஒடுக்குமுறை நடவடிக்கைகள் என்பன அம்பலப்படாமல் தடைபோட்ட பல கீழ்த்தரமான தந்திரோபாயங்களைக் கையாளும் இலங்கை அரசு, உள்ளூரிலும் அதேவழிமுறையை ஆயுத ஒடுக்குமுறை மூலம் மேற்கொண்டு வருகிறது. ஒருபுறம் சட்டங்களைப் பாவித்தும் மறுபுறம் காடைத்தனங்கள் மூலமும் இது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இலங்கையில் தொழிலாளர்கள், மாணவர்கள் வேலை நிறுத்தங்களையோ அல்லது ஆர்ப்பாட்டங்களையோ முன்னெடுக்கும்போது அவை நீதிமன்ற ஆணைகள் மூலம் தடை செய்யப்படுகின்றன. அல்லது பொலிஸாரும் காடையரும் இணைந்து அவர்கள் மேல் தாக்குதலை மேற்கொள்கின்றனர்.

பின்பு அவர்கள் அமைதிக்குப் பங்கம் விளைவித்தவர்கள் என்று கூறிக் கைதுசெய்யப்படுகின்றனர்.

இவை பற்றித் துணிச்சலுடன் உண்மைகளை வெளியிடம் ஊடகவியலாளர்கள் இனந்தெரியாதோரால் கொல்லப்படுகின்றனர். அல்லது படுமோசமாகத் தாக்கப்படுகின்றனர். பல ஊடகவியலாளர்கள் காணாமல் போயுள்ளனர்.

இவை பற்றி விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்பட்ட போதிலும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படுவதுமில்லை, தண்டிக்கப்படுவதுமில்லை.

அதாவது இங்கு இடம்பெறும் அட்டூழியங்கள் எவையும் வெளிவராத வகையில் அரசும் பொலிஸ் மற்றும் ஆயுதப் படைகளும் ஒரு பெரும் அடக்குமுறையை விரித்துள்ளன. எனினும் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இருபதாவது கூட்டத் தொடர் இடம்பெற்ற அதேவேளை, தமிழ் மக்கள் தமது நிலங்கள் அபகரிக்கப்படுவதற்கு எதிராக நடத்திய போராட்டங்கள் மீதும் இதேவிதமான அடக்குமுறைகள் ஏவிவிடப்பட்டன. ஆனால் அது அரசும் அரச படைகளும் எதிர்பார்த்ததற்கு மாறான விளைவுகளையே ஏற்படுத்திவிட்டது.

தொடர்ந்தும் அரச அட்டூழியங்கள் மறைக்கப்பட முடியாது என்பதற்கு இது ஒரு நல்ல முன்னுதாரணமாகவே அமைந்துவிட்டதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

தமிழ் மக்களின் காணிகள் படையினரால் அபகரிக்கப்படுவதற்கு எதிராகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஓர் ஆர்ப்பாட்டத்தை யாழ். பஸ் நிலையத்தில் ஏற்பாடு செய்திருந்தது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி, நவசமசமாஜக் கட்சி ஆகியனவும் கலந்துகொண்டன. இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டால் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் எனக் கூறி நீதிமன்றத்தில் பொலிஸார் மனுக் கொடுத்ததன் மூலம் நீதிமன்றம் அதற்குத் தடை உத்தரவு பிறப்பித்தது.

இதை அத்துடன் முடிந்து விட்டதாகவே அரச தரப்பினர் கனவு கண்டனர். ஆனால் அடுத்த நாள் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய முன்றிலில் நில அபகரிப்புக்கு எதிரான போராட்டம் தொடங்கியது.

தெல்லிப்பழை பிரதேச செயலரிடம் மக்கள் ஊர்வலமாகச் சென்று மனுக் கொடுக்க முயன்றபோது பொலிஸார் வாகனங்களைக் குறுக்கே விட்டுத் தடுத்தனர். எனினும் மக்கள் அந்த இடத்தில் நின்றே கோஷங்களை எழுப்பித் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

பின்னர், இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு விட்டுத் திரும்பிய மக்களின் பஸ் மீது கல் வீச்சு நடத்தப்பட்டது. மக்கள் மீது கழிவு எண்ணெய் ஊற்றப்பட்டது.

இப்படியான மிரட்டல்கள் மூலம் மக்களைப் பேராட்டங்களில் கலந்துகொள்ளாமல் தடுத்துவிட முடியுமென்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்த நில அபகரிப்புக்கான போராட்டத்தை முறிகண்டியில் நடத்துவதாகவும் முடிவெடுக்கப்பட்டது.

அதுமட்டுமன்றி அன்று அதே நேரத்தில் புலம்பெயர் நாடுகளிலும் நில அபகரிப்புக்கு எதிரான போராட்டங்கள் இடம்பெறவுள்ளன.

யாழ். பஸ் நிலையத்தில் தொடங்கிய போராட்டம் தடுக்கப்பட்டதன் விளைவு அது தெல்லிப்பழை, முறிகண்டி என விரிந்து சர்வதேச அரங்குவரை சென்றுவிட்டது.

அதாவது சர்வதேச அளவிலும் உள்நாட்டிலும் தான் செய்யும் அட்டூழியங்களை ஆயுத அடக்குமுறை மூலம் திரை போட்டு மறைத்து விடலாம் என்ற இலங்கையின் கனவு வெகு வேகமாகவே கலைந்து வருகிறது.

மக்கள் துணிச்சலுடன் எழுச்சி பெறும்போது சகல அநியாயச் செயல்களும் தகர்க்கப்படும் என்பதே வரலாற்று அனுபவமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையுடன் மோத தயாராகிறது ஐ.நா.

அதிரன்

இலங்கை தொடர்பான விடயத்தில் இனிமேல் இறுக்கிப் பிடிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை தயாராகி வருகின்றது என்பது ஐ.நாவின் முகவர் அமைப்புக்கள் மேற்கொண்டு வரும் அண்மைக்கால செயற்பாடுகளிலிருந்து தெட்டத் தெளிவாகிறது.

இலங்கையுடன் முட்டி மோதி அதனை ஒரு கை பார்ப்பதற்கு ஐ.நா. முகவர் அமைப்புக்கள் ஐ.நா. சபையுடன் இணைந்து இப்போது பல்வேறு திட்டங்களையும் முன்னெடுத்து வருவது இலங்கை அரசுக்கும் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது.

இதுவரைகாலமும் இலங்கையை விட்டுப் பிடித்து வந்தது ஐ.நா. இலங்கையின் இன நல்லிணக்கத்தையும் அமைதியையும் ஏற்படுத்துவதற்கு பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுக்குமாறும் இறுதிப் போரில் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுமாறும் ஐ.நா. இலங்கைக்கு ஆலோசனை தெரிவித்ததுடன் அதற்கான ஒத்துழைப்பை வழங்குவதற்குத் தான் தயாராக இருப்பதாகவும் அடிக்கடி சுட்டிக்காட்டி வந்தது.

ஐ.நாவின் இந்தத் தன்மை வழமையான ஆலோசனைகள் இலங்கை அரசுக்கு 'செவிடன் காதில் ஊதிய சங்கு' போலவே இருந்து வந்தன. ஐ.நா.வின் இந்த ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் இலங்கை தொடர்ந்து தட்டிக் கழித்து வந்ததுடன் புறம் தள்ளியும் வைத்தது. பயங்கரவாதத்தை உள்நாட்டில் தோற்கடித்தது போல இனப்பிரச்சினைக்கான தீர்வையும் நாங்கள் உள்நாட்டிலேயே காண்போம். அதற்கு வெளிநாடுகளினதும் வெளிநாட்டு நிறுவனங்களினதும் ஆலோசனைகள், ஒத்துழைப்புக்கள் எமக்குத் தேவையே இல்லை எனப் பகிரங்கமாகத் தெரிவித்து வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐ.நா.வின் கோரிக்கைகளையும் கவனத்தில் கொள்ளாமல் தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டு வந்தார்.

இலங்கை அரசின் இந்தச் செயற்பாடு ஐ.நா.வையும் அதன் முகவர் அமைப்புக்களையும் பெரும் சினத்துக்குள் தள்ளியது. இதனால் இலங்கைக்கு ஒரு நாணயக் கயிற்றை கட்டுவதற்குத் தயாராகியது ஐ.நா. அந்த நாணயக் கயிற்றை கட்டும் பொறுப்பு அமெரிக்காவிடம் வழங்கப்பட்டது. தனக்கு வழங்கப்பட்ட பணியைத் தோல்வியின்றிச் செய்து முடிப்பதுதானே அமெரிக்காவின் ராஜதந்திரம். அதனை அது செவ்வனவே செய்தது. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 19 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை மீதான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி இலங்கை அரசுக்கு ஒரு நாணயக் கயிற்றை இட்டது அமெரிக்கா.

**ஐ.நா. உண்மையைக் கண்டறியும் குழுவையும் தன்னையும் இலங்கைக்கு பயணம் செய்ய அனுமதி மறுக்கப்பட்டால் அதற்கு எதிராக இலங்கைக்குப் பதிலடி கொடுப்பதற்கு இரண்டு விடயங்களை அவர் திட்டமிட்டிருந்தார்.**





இந்த நாணயக் கயிற்றுக்கும் இலங்கை அடங்காவிட்டால் வேறு வழிகளில் அதனை அடக்குவதற்கும் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் தீர்மானித்திருந்தன.

இந்த நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் தொடர்பிலும் இலங்கை தொடர்ந்து அசமந்தப் போக்கைக் காட்டி வந்தமை ஐ.நா. வட்டாரங்களை மேலும் வெறுப்பேற்றி விட்டிருக்கிறது. தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல், அதற்குத் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளுதல் ஆகிய முக்கிய விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசு தொடர்ந்தும் இழுத்தடித்து காலம் தாழ்த்தி பூச்சாண்டி காட்டி வந்தமை ஐ.நா. வட்டாரங்கள் சினம் அடைய மிக முக்கிய காரணிகளாக அமைந்தன. இலங்கையின் இந்த சித்து விளையாட்டை இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது என்ற நிலையில் இலங்கையுடன் நேருக்கு நேரே மோதி அதனை ஒரு வழிக்குக் கொண்டு வர இப்போது ஐ.நா. தயாராகி விட்டது. அண்மைய நாள்களாக வெளிவரும் செய்திகள் இதனை நன்கு வெளிப்படுத்துகின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இதற்காக நேரடியாகக் களத்தில் இறங்கியிருந்தார். இரண்டாவது தடவையாகவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராக எதிர்ப்புக்கள் எதுவுமின்றி அண்மையில் பதவியேற்றுக் கொண்ட அவர் இலங்கை விடயத்தில் இந்தப் பதவிக்காலத்தில் மேலும் கடும் போக்குடன் நடந்துகொள்ள தீர்மானித்திருக்கின்றமை அவரது கருத்துக்களிலிருந்து தெளிவாகிறது. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 20 ஆவது மீளாய்வுக் கூட்டத் தொடர் இப்போது ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தொடர்ந்து ஒரு மாதம் இந்தக் கூட்டத் தொடர் நடக்கும். கூட்டத்தொடரின் தொடக்க உரையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை குறித்து எந்தவொரு விடயத்தையும் தெரிவித்திருக்கவில்லை. இலங்கை பற்றி அவர் எதுவும் கூறாமையால் நிம்மதி அடைந்திருந்தது இலங்கை அரசு. தப்பிப் பிழைத்து விட்டோம் என்று பெருமூச்சு விட்டிருந்தது. ஆயினும் அந்தப் பெரும் மூச்சு அடுத்த நாளே கலைந்துவிட்டது.

போருக்குப் பின்னரான இலங்கையின் நிலை பற்றி நேரில் அறிந்து கொள்வதற்காக இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளதாக நவநீதம்பிள்ளை அறிவித்திருந்தார். தனது பயணத்துக்கு முன்னர் அதற்கான ஆயத்தங்களையும் நிலைமைகளையும் அவதானிப்பதற்காக ஐ.நா. உண்மைகளைக் கண்டறியும் குழு ஒன்றையும் இலங்கைக்கு அனுப்ப அவர் திட்டமிட்டிருந்தார். இதற்கு இலங்கை அரசிடம் அனுமதியும் கோரியிருந்தார்.

ஆணையாளரின் வருகையையும் உண்மையைக் கண்டறியும் குழுவின் பயணத்தையும் அடியோடு நிராகரித்தது இலங்கை. இலங்கையிலுள்ள பேரினவாதக் கட்சிகள் இந்த இரண்டு குழுக்களின் பயணத்துக்கும் எதிராகக் கூச்சல் போடத் தொடங்கின. இவர்களை நாட்டுக்கு வரவிட்டால் பேராபத்து ஏற்படும் என்று முழங்கத் தொடங்கின. இலங்கை அரசும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தத் தொடங்கிவிட்டோம். ஆகவே இந்தப் பயணங்கள் இப்போது தேவையில்லை எனப் பல்லவி பாடியது. இதனால் ஆணையாளரினதும் உண்மையைக் கண்டறியும் குழுவினரதும் இலங்கைப் பயணங்கள் சிக்கலுக்குள்ளாகின. இது ஐ.நா.வுக்கு இலங்கை மீதான அதிருப்தியை மேலும் அதிகரித்தது. இதனால் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு இறங்கினார் நவநீதம்பிள்ளை.

ஐ.நா. உண்மையைக் கண்டறியும் குழுவையும் தன்னையும் இலங்கைக்கு பயணம் செய்ய அனுமதி மறுக்கப்பட்டால் அதற்கு எதிராக இலங்கைக்குப் பதிலடி கொடுப்பதற்கு இரண்டு விடயங்களை அவர் திட்டமிட்டிருந்தார். அதில் முதலாவதாக இலங்கை அரசுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விவகாரத்தை ஹேக்கில் அமைந்துள்ள சர்வதேச யுத்தக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு முன்னால் கொண்டு செல்வதற்கு அவர் எண்ணியிருந்தார். அப்படியில்லாவிட்டால் அடுத்த ஐ.நா மனித உரிமைகள் சபையின் அமர்வில் இலங்கை மீது மேலுமொரு தீர்மானத்தைக் கொண்டு வந்து அதன் மூலம் இலங்கைக்கு கட்டுப் போடவும் அவர் காத்திருந்தார். இந்த இரு விடயங்களும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஊடகங்கள் மூலம் வெளிச்சத்துக்கு வந்தன. நவநீதம்பிள்ளை இந்த இரு விடயங்களையும் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறார் என்ற செய்தி வெளியானதுதான் தாமதம் ஐ.நா.வின் கோரிக்கைகளுக்கு அடி பணிந்து விட்டது இலங்கை. நவநீதம்பிள்ளை திட்டமிட்டிருக்கும் இந்த இரண்டு விடயங்களும் நடைபெற்றால் அது சர்வதேச ரீதியில் அரசுக்குப் பல ஆபத்தான நிலைமைகளை ஏற்படுத்தும் என்பதுடன் அரசு குற்றவாளிக் கூண்டில் ஏற வேண்டிய நிலையும் ஏற்படும் என்பதை நன்கு புரிந்து கொண்ட இலங்கை ஐ.நா. ஆணையாளர் நவநீதம்பிள்ளையை இலங்கைக்குப் பயணம் செய்யுமாறு உத்தியோகபூர்வ அழைப்பை விடுத்தது. ஜெனிவாவில் உள்ள இலங்கை அரசின் பிரதிநிதிகள் இந்த அழைப்பை விடுத்துள்ளனர். அத்துடன் ஐ.நா.வின் உண்மையைக் கண்டறியும் குழுவையும் நாட்டுக்குள் அனுமதிப்பதற்கு இலங்கை அரசு எண்ணியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குத் தகவல்களைக் கசிய விட்டன.

தொடர்ந்தும் ஐ.நா.வுடன் முரண்டுபிடித்தால் ஆபத்து தனக்கே என்பதை அறிந்து கொண்ட அரசு இந்தப் பயணங்களுக்கு அனுமதி அளித்திருக்கிறது என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

இந்த விடயங்கள் மூலம் இலங்கை அரசுடன் நேரடியாக மோதி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஐ.நாவும் அதன் முகவர் அமைப்புக்களும் இப்போது திட்டமிட்டிருக்கின்றன என்பது தெரிகிறது. நவநீதம்பிள்ளையின் அறிவிப்பை அடுத்தே இலங்கை அரசு இப்படி இறங்கி வந்திருக்கிறது. இதுவரை காலமும் ஒவ்வொரு சாட்டுப் போக்குகளை கூறி தட்டிக்கழித்து வந்த அரசு இப்போது இந்த இரு விடயங்களிலும் இப்படி அடி பணிந்தமை குறித்து பரபரப்பாகப் பேசப்படுகிறது. அதே போன்றே பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் விடயத்திலும் ஐ.நா. இனி இறுக்கிப் பிடிக்கும் என்று ஐ.நா. முகவர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர். இதுவரை காலமும் இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்கி வந்த ஐ.நா. இனிமேல் அதனைச் செய்வதற்குத் தயாரில்லை எனவும் தன்னால் முன்மொழியப்படும் செயற்றிட்டங்களை இலங்கை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றே அது எதிர்பார்க்கப்படும் எனவும் முகவர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கூறுகின்றனர்.

ஐ.நா.வின் இந்தப் பயமுறுத்தல் இலங்கை அரசை எவ்வளவு காலத்துக்கு கட்டுப்படுத்தப் போகிறது என்பதை அடுத்துள்ள செயற்பாடுகளை வைத்தே அறிந்து கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம.வேலாயுதம்,

# எம் தலைவர்களால் செய்யக்கூடியது ஏதொன்றுமில்லை

நம்ப நட, நம்பி நடவாதே; குட்ட குட்ட குனிபவன் முட்டாள்.

எங்கள் தமிழ் அரசியல் தலைவர்கள் இனிவரும் காலங்களிலாவது சிங்கள அரசுடனான அரசியல் தீர்வு நடவடிக்கைகளில் இந்த முதுமொழிகளை மனதில் இருத்திச் செயற்பட வேண்டும்.

பெரும்பான்மையினம் நம்பிக்கை வைக்க வேண்டும் என்பதற்காக தெளிவாக, தான் ஒரு இலங்கையர் என்றும் பிளவுபடாத நாட்டையே விரும்புகிறார் என்றும் அதில் ஏற்கக்கூடிய உள்ளக சுதந்திரத்தையே வேண்டி நிற்பதாகவும் ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திரும்பத் திரும்பக் கூறியுள்ளார்.

நம்பி நடந்து குட்டக் குட்டக் குனிந்த அரசியல், சுதந்திரமடைந்த பின்னரும் இலங்கை நாட்டில் இவ்வாறே நடைபெற்று வந்துள்ளது. அதன் வெளிப்பாடே ஆயுதப் போராட்டம். அதையும் இந்தியா, அமெரிக்கா உதவியுடன் பேரினவாதிகளால் முறியடிக்க முடிந்தது.

போர் ஒன்று ஆரம்பிக்க முன்பு, மாவட்ட சபையே எங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கவல்லது என எமது அரசியல் தலைவர்கள் கூறி அதை ஏற்று பின் ஏமாந்தார்கள். பின்னர் அது மண்குதிரை எனக் கூறினார்கள். அதிலிருந்து எங்கள் தலைவர்கள் பலர் கற்றுக் கொண்ட பாடங்கள் பல.

எமது தலைவர்களில் பலர்- அன்றும் இன்றும்-சட்ட வல்லுநர்கள். 50 இற்கு 50 எனக் கேட்டவர்கள் இவர்கள். ஆனால் பெரும்பான்மையினரின் அரசு தான் இந்த நாட்டை ஆளமுடி யும். என்ற அர்த்தத்துடன் அரசமைப்பில் (பகுதி 29) சிறுபான்மை இனத்தவருக்கு பாதுகாப்பு உண்டு, அவர்களின் உரிமைகள் பற்றிய விவரங்கள் உள்ளன எனக் கூறி 1948 இல் வழங்கப்பட்ட சுதந்திரத்தையும் இதே தலைவர்கள்தான் ஏற்றுக் கொண்டார்கள்.

சோல் பெரியாரின் அந்த யாப்பை ஏற்றபோது, எங்கள் தலைவர்கள், பெரும்பான்மையினர் தங்கள் வாக்கு விகிதத்தால் ஆங்கிலேயரின் அரசமைப்பை ஒதுக்கி, பகுதி 29 ஐ கைவிட்டு- புதிய அரசமைப்பை உருவாக்கினால் எங்கள் கதி என்ன எனக் கேட்டார்களோ தெரியவில்லை.

1948இல் நாடு சுதந்திரம் அடைந்ததாகக் கூறப்பட்டாலும் பிரிட்டிஷாரால்திருகோணமலை கடற்படை முகாம் 1956ஆம் ஆண்டுதான் விடுவிக்கப்பட்டது. எனவே 1948இல் வழங்கப்பட்டது உண்மையான சுதந்திரமா என்ற கேள்வி எழுகிறது. 1973இல் வெள்ளையரின் யாப்பு கைவிடப்பட்டு புதுயாப்பு தயாரிக்கப்பட்டு 'குடியரசு' பிரகடனம் செய்ய முன்பதாக மறைந்த தமிழ்த் தலைவர் செல்வா அன்று புதுயாப்புக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தார்.

தந்தை செல்வா புது யாப்பில் எங்களின் உரிமை, பாதுகாப்புக்காக 6 அம்சத் திட்டத்தை உள்ளடக்கக் கோரினார். இவை எல்லாம் ஏமாற்றத்தில் முடிந்தன.

உண்மையில் இந்த வழக்கை இங்கிலாந்து நீதிமன்றில் பதிவு செய்திருக்க வேண்டும். அதாவது ஐக்கிய இராச்சியத்தை ஏமாற்றி விட்டார்கள் என்று பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லை. இறுதியில் ஏமாற்றமே மிஞ்சியது.

சிங்கள மக்களுக்கு முன்னதாக இங்கு வாழ்ந்த தமிழர்களின் இராச்சியத்தைக் கைப்பற்றிய பிரிட்டிஷார், பின்னர் அதைப் பெரும்பான்மை சிங்கள இனத்திடம் கையளித்ததால் இன்று அவர்கள் எங்கள் மக்களையும் நிலங்களையும் அழிக்கிறார்கள்; அபகரிக்கிறார்கள். கடந்த 60 வருடங்களாக இதுவே தொடர்கதையாகியிருக்கிறது. இப்போது போர் முடிந்த பின்னர் மீண்டும் பழைய கதைகளும் காட்சிகளுமே திரும்புகின்றன.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் தான் தீர்வு என்கிறார்கள். இதுவும் ஒரு ஏமாற்றுத்தான்.

நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் பங்கு பற்றுவதானால் நிபந்தனைகளுடன் தான் பங்குபற்ற வேண்டும். போருக்குப் பின்னரான அரசின் நியாயமற்ற, தமிழ்பேசும் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாத, வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் அரசின் தமிழர் விரோத நடவடிக்கைகள் அனைத்தையும் உடன் நிறுத்த வேண்டும்.

இதில் முதலாவது நில அபகரிப்பு. சட்டத்துக்கு முரணான சிங்களக் குடியேற்றம், மீன்பிடிப்பிற்காக கடற்பிரதேச அபகரிப்பு, தேவையற்ற இராணுவ, கடற்படை முகாம்கள் அமைப்பு, மக்களின் பயிர் நிலங்கள் அபகரிக்கப்பட்டு இராணுவத்தினர் பயிர் செய்யும் நிலை இவை எல்லாம் உடன் நிறுத்தப்படவேண்டியவை.

1983 ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்த இராணுவ முகாம்களே வடக்கு-கிழக்கில் போதுமானவை என்று வலியுறுத்தப்பட வேண்டும்.

இரண்டாவது போருக்கு பின்னரான கைதிகள், அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்.மூன்றாவது போரால் அழிக்கப்பட்ட பிரதேசங்கள் மக்களின் பல்வேறுபட்ட இன்றைய தேவைகள் யாவும் துரிதகதியில் மீள் நிர்மாணம் செய்யப்பட வேண்டும். ஆனால் இன்றுள்ள சிங்களத் தலைமைகள் இவற்றை ஏற்குமா என்ற கேள்வியையும் புறந்தள்ளிவிட முடியாது. ஏனெனில்

''அனைத்து இனமக்களும், அனைத்து இனக்குழுமங்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்றே- அனைத்து சமூகங்களும் ஏற்கும் தீர்வொன்றே- வழங்கப்படும்'' என்று மீண்டும் மீண்டும் மஹிந்தராஜபக்ஷ உறுதிப்படுத்துவதில் மறைந்திருப்பது என்ன? தெரிவுக்குழுவில் எட்டப்படும் அரசியல் தீர்வுகூட மக்கள் வாக்கெடுப்புக்கு விடப்படும் என்பதைத்தான் அது கூறுகிறது.

அப்படியானால் எங்களுக்கு ஒரு குழுவும் தேவையில்லை என்றே தோன்றுகிறது. மீண்டும் பெரும்பான்மை இனம் வெற்றிதான். எங்கள் தலைகள் வெளிநாடுகளின் உதவிகளைத்தான் நாடவேண்டும். இங்கிருந்து (இன்று தெரிகிறது) எங்கள் தலைவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. அது அரசுடன் ஒட்டி நின்றாலும் எட்டி நின்றாலும் தமிழ்த் தலைவர்களால் இங்கிருந்து ஒன்றும் செய்ய முடியாது என்பது தான் நிதர்சனம்.

# மழை விட்டும்...

(சூரியகாந்தி முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்ட மக்கள் குரலெலுழுப்பத் தொடங்கி விடுவார்களோ என்று அரசுத் தரப்பு அஞ்சுகிறது. ஏனெனில் அண்மைக் காலமாக தமிழர் தரப்பு தொடர்ச்சியாக பல்வேறு ஜனநாயக ரீதியான போராட்டங்களை நடத்த தொடங்கியிருக்கிறது. இந்தப் போராட்டங்கள் தீவிரம் பெற்று, சர்வதேசத்தின் காதுகளில் போராட்டத்தில் ஈடுபடுபவர்களின் உரிமைக் குரல்கள் கேட்கத் தொடங்கி விட்டால் அவ்வளவுதான். அரசுக்கு தலையிடி தொடங்கிவிடும். முன்னரெல்லாம் கை காட்டிய இடங்களில் மீளக் குடியமர்ந்து வந்த மக்கள் இப்போது தமது சொந்த இடங்களில் மட்டுமே மீளக்குடியமர்வோம் என்று போர்க்கொடி தூக்கத் தொடங்கியுள்ளனர்.

இவ்வாறான கலகக் குரல்களை முன்னரைப்போல் துப்பாக்கி முனைகளைக் கொண்டு அடக்கினால், சர்வதேச ரீதியாக அரசுக்கு இன்னும் சிக்கலை ஏற்படுத்தும் விடயமாக அது அமைந்துவிடும். எனவே உளவியல் போர் மூலமே இந்தக் கலகக் குரல்களின் உருவாக்கத்தைச் சிதைக்க அரசுத்தரப்பு முனைகிறது.

எப்போதும் நீங்கள் படையினரின் கண்காணிப்பு வட்டத்துக்குள்ளேயே இருக்கிறீர்கள். அரசுக்கெதிராக நீங்கள் சிறு துரும்பை அசைத்தாலும்கூட அப்படியே அலாக்காகத் தூக்கிவிடுவோம் என்பதைச் சொல்லாமல் சொல்லும் வகையில் படைப்புலனாய்வாளர்கள் செயற்படத் தொடங்கியிருக்கிறார்கள். அதன் ஓர் அங்கமாக எல்லைப் படையில் இருந்தவர்கள் பற்றிய விவரங்களைப் படைப் புலனாய்வாளர்கள் திரட்டி வருகிறார்கள். போராளிகளாக இருந்தவர்களே விடுவிக்கப்பட்டுவிட்ட நிலையில், சாதாரண பயிற்சியுடன் எல்லைப் படையில் இருந்தவர்களை கண்காணிக்க வேண்டிய அவசியம் ஏன்? என்ற வினா எல்லோரிடமும் எழுந்துள்ளது. ஒரு வகையில் இதன் மூலம் அவர்களை மறைமுகமாக அச்சுறுத்தி, அவர்களுக்கான உயிராபத்து இன்னும் நீங்கி விடவில்லை என்பதை மறைமுகமாக உணர்த்தி, ஜனநாயகப் போராட்டங்களில் இருந்து அவர்களை (எல்லைப்படையில் இருந்தோரை) ஒதுங்கச்செய்து, கலகக் குரல்களை பலவீனப்படுத்த அதிகாரத் தரப்பு திட்டமிடுகிறது என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. மழை விட்டும் இன்னும் தூவானம் விடவில்லை. தூவனத்திலும் தமிழர்களின் கண்ணீர்த் துளிகளே தெறிக்கின்றன.

# ஒன்றிணைந்த செயற்பாடே அபிவிருத்திக்குச் சிறந்தது

வாணி

மனிதர்களுடைய தேவைகள் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. மனிதன் தனது சுய தேவையைத் தானே நிறைவு செய்கிறான். ஆனால் சமூகத்தின் பிரச்சினைகளை நிறைவு செய்வது குறித்த நாட்டு அரசின் முக்கிய கடமையாகும்.

ஒரு சமூகத்தில் முக்கிய பிரச்சினையாக அனைவராலும் சுட்டிக்காட்டப்படுவது போக்குவரத்து விதிகள்தான். அடுத்து அந்தப் பிரதேசத்தில் உள்ள வளங்கள் குன்றிய பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், பொது அமைப்புக்கள், அனுமதியற்ற கட்டடத் தொகுதிகள், எல்லைப் பிரச்சினைகள் என்று சமூகத்தால் பிரச்சினைகளாகச் சொல்லப்படுபவை பல.

இவ்வாறு சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக அரசு பல அமைப்புக்களை உருவாக்கி அவற்றின் ஊடாகப் பிரச்சினைகளை நிறைவேற்றி வருகிறது.

யாழ். மாவட்டத்தில் ஒரு மாநகர சபை, 3 நகரசபைகள், 13 பிரதேச சபைகள் உட்பட 17 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. இவை மக்களின் குறைகளை அறிந்து நிவர்த்தி செய்வதற்காகவே உருவாக்கப்பட்டவை. இவற்றில் மக்களோடு நேரடியாக சேவையாற்றுபவை உள்ளூராட்சி மன்றங்கள்தான்.

தேர்தல் மூலம் பொதுமக்கள் தெரிவுசெய்யும் பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்படும் ஆகக் கடைசி அதிகார அமைப்பு உள்ளூராட்சி மன்றமாகும்.

இந்த உள்ளூராட்சி மன்றங்கள் தமது எல்லைக்குள் பல அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்து நடத்தும் அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றன.

அத்தோடு சமூக மட்டங்களிலான பிரச்சினைகளை விரைவாக அறிந்து நிவர்த்தி செய்வதற்காக மக்கள் குறைகேள் முறைமையும் உள்ளூராட்சி மன்றங்களினூடாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன. மக்கள் குறைகேள் மன்றம் பொது மக்களுக்காக உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பு. தமது பிரச்சினைகளை இலகுவாக வெளிக்காட்டுவதற்காகவே அமைக்கப்பட்டது.

ஆனால், தமது சமூக மட்ட பிரச்சினைகளை எவ்வாறு தெரியப்படுத்துவது என்று பொதுமக்கள் பலரும் சரியாக அறிந்திருக்கவில்லை.கிராம மட்டங்களில் உள்ள மக்களின் தேவைகள், பிரச்சினைகள் [illegible] அறிந்திருப்பர். அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பொதுமக்கள் தமது பிரச்சினைகளை இனங்கண்டு தெரியப்படுத்துவது அவசியம். அதன் மூலமே அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியும். இந்த நிலையில் போர் முடிவுக்கு வந்து 3 ஆண்டுகள் கடந்த நிலையிலும், சமூகமட்ட அமைப்புக்கள் எதுவும் வினைத்திறனுடன் இயங்கவில்லை என்றுதான் கூறவேண்டும்.

இவை சிறப்புற இயங்குவதற்கு இரு வழிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும். ஒன்று மக்கள் தனித்துச் செயற்படுவதை விட கூட்டாகச் செயற்பட்டால் அதிக பயனை அடைய முடியும். அவ்வாறு இணைவதற்கு சமூக அமைப்புக்களும், பொதுமக்களும் பின்நிற்கின்றன. மற்றொன்று அரச அதிகாரிகளின் பங்கு அவசியம். அதற்கு சிலர் ஆர்வமற்று இருக்கின்றனர்.

இந்த அடிப்படையில்தான் சமூக அமைப்புக்களும் உரிய முறையில் இயங்கவில்லை என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

மக்கள் குறைகேள் மன்றம் என்பது அண்மையில் உள்ளூராட்சி மன்றங்களால் உருவாக்கப்பட்டது. இதற்காகவே பொதுசன தொடர்பு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மக்கள் குறைகேள் முறைமை உள்ளூராட்சியில் இயங்கும் ஒரு பிரிவு. இதற்காக ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு தமக்கென ஒதுக்கப்பட்ட கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று மக்களுடன் கலந்துரையாடுவர். அந்த மக்களுடைய பிரச்சினைகளை அறிந்து பட்டியலிட்டு நிவர்த்தி செய்வர்.

பட்டியலிட்ட பகுதியில் பொதுமக்களின் பிரச்சினைகளில் எது அதிகமாக இருக்கின்றதோ அவை முதலில் தீர்த்துவைக்கப்படும்.

இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு என்பது இன்றியமையாதது. மக்களுக்காக பணியாற்றும் அலுவலர்களிடத்து பொதுமக்களும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும். காலதாமதத்தைத் தவிர்க்கும் வகையிலும், பங்கேற்பு அபிவிருத்தித் திட்டத்தின் தரத்தை உறுதிப்படுத்தும் மக்களுடன் நல்லுறவைப் பேணும் வகையிலும் ஒத்துழைப்பு இருக்க வேண்டும்.

கிராமங்களின் அபிவிருத்திக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் சமூகமட்ட அமைப்புக்களை இயங்கச் செய்வது அவசியம். அரச திணைக்கள அதிகாரிகளுடன் பொதுமக்களும் சேர்ந்து ஒத்துழைத்தால் சமூகம் தாமதமின்றி அபிவிருத்தி அடையும்.

பொதுமக்கள் தமது சமூகப் பிரச்சினைகள், தேவைகளை, முறைப்பாடுகளை உள்ளூராட்சி மன்றங்களுக்கு எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாவோ தெரியப்படுத்த முடியும். அவ்வாறு தெரியப்படுத்துவதன் மூலம்தான் பிரச்சினைகள் வெளிக்கொண்டு வரப்பட்டு அதற்குத் தீர்வுகளும் எட்டப்படும்.

உள்ளூராட்சி அமைப்புக்களுடன் பொதுமக்களும், பொது அமைப்புக்களும் இணைந்து செயற்படவேண்டும். இதன் மூலம்தான் சிறந்த அபிவிருத்தியை எட்ட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் கலையுங்கள்

மருத்துவர்
சி.எஸ். யமுனானந்தா

முரண்பாடுகளைத் தீர்த்தல் என்பது முரண்பாடுகளில் இருந்து விலகல் என்று அர்த்தப்பட மாட்டாது. ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியா சுதந்திரம் பெற்ற போது இந்தியாவில் இருந்து மதரீதியாக பாகிஸ்தானைப் பிரித்துக்கொடுத்தமை, இந்து, முஸ்லிம் மதரீதியிலான நல்லிணக்கத்திற்குப் பாதகமாக அமைந்தது.

உண்மையில் இணைந்த நாடாக இருந்திருந்தால் மதரீதியிலான நல்லிணக்கம் ஏற்பட்டு இருக்கும்.

பல மொழி ரீதியிலான மாநிலங்களைப் பிரித்தது போன்று மதரீதியிலும் பாகிஸ்தான், பலுஜிஸ்தான், வங்காளம் என மாநிலங்களை உருவாக்கி இருந்திருந்தால் இன்று இந்தியா உலகின் முதல்தர வல்லரசாகி இருக்கும்.

இதுவே நேருவும் ஜின்னாவும் விட்ட தவறு. ஆபத்தான அணு ஆயுதங்களையும், ஏவுகணைகளையும், படைப்பல அதிகரிப்பினையும் மேற்கொள்ளாது மக்களின் அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தி இருக்கலாம். அடுத்து இன்று அமெரிக்க அரசால் உலகின் பயங்கரவாதச் செயலுக்கு ஊக்குவிக்கும் நாடாக நேரடியாகப் பாகிஸ்தானும் மறைமுகமாக இந்தியாவும், (குறிப்பாக இலங்கையில் ஆயுதக் கலாசாரத்தினை உருவாக்கியமையில்) கருதப்படும் நிலைமை ஏற்பட்டு இருக்காது.

இந்த நிலையில் 2009 ஆம் ஆண்டு வன்னியில் நிகழ்ந்த இனப்படுகொலைக்கு இரட்டைப் பொறுப்பை (Dual Res-ponsibility for Genocide) இந்தியாவும் இலங்கையும் ஏற்கவேண்டும். இதனை வரலாறு ஒருபோதும் மறுக்காது. இனப் படுகொலை நடைபெறல் 10 படி நிலைகளை உள்ளடக்கியது. அவையாவன.

**படி ஒன்று: இனப்படுகொலைக்கு ஆளாகும் இனத்தினை வகையிடல் (Classification)**

இனப்படுகொலைக்கு ஆளாகும் இனத்தை வகையிடல் எனும் போது மக்கள் நாங்கள், அவர்கள் என வேறுபட்டு நிற்பர். இங்கு சிங்களவர், தமிழர் என்று வேறுபட்டு நின்றனர். இன்றும் அவ்வாறான அரசியல் சூழ்நிலையே உள்ளது. இது இனப்படுகொலை தொடர ஏதுவாகும். இனப்பாகுபாடு இல்லாத நிர்வாகம் இதற்குத் தேவை.

**படி இரண்டு: இனப்படு கொலை மேற்கொள்வதனைக் காரணப்படுத்தல் (Symbolization).**

இனப்படுகொலைக்கு உள்ளாக்குபவர்களை வெறுக்கத்தக்கவர்களாக அடையாளப்படுத்தல்.

இங்கு தமிழ் மக்களை, கொடிய பயங்கரவாதிகளாக உருவகப்படுத்தி, உள்நாட்டிலும், இந்தியாவிலும், மேற்கு நாடுகளிலும் பிரசாரம் செய்யப்பட்டது. போர் முடிந்த பின்பும் தமிழ் அதிகாரிகளே தம்முடன் போட்டியிடும் சக அதிகாரிகளை அவர் புலி இவர் புலி என அடையாளப்படுத்திப் பார்க்கும் நிலையும் மனிதநேயத்தைப் பற்றி கதைப்பது பயங்கரவாதம் என்ற அடையாளமும் உள்ளது. இது தவறானது. இத்தகைய செயல்களை பொறுப்புள்ள பதவியில் உள்ளவர்கள் தவிர்க்க வேண்டும். அரசியல்வாதிகளும் இதனைத் தவிர்க்க வேண்டும்.

**படி மூன்று: அழிக்கப்படும் மக்களை மனிதர்களாகக் கருதாமை (Dehumanization).**

அழிக்கப்பட்ட இனத்தை மனிதர்களாகக் கருதாது, அவர்களை வேண்டத்தகாத ஜந்துகளாகவே கருதி அழித்தல். குறிப்பாக அழிக்கப்பட்ட தமிழ் மக்கள் அனைவரும் புலிகள் என்ற வாதமும், புலிகள் அனைவருமே பூண்டோடு அழிக்கப்பட்டனர் என்ற வாதமும் இத்தகையது.

இத்தகைய இனப்படுகொலைக்குப் பின்பும் புலிகளைப் பயங்கரவாதிகளாக இலங்கை, இந்தியா மேற்கு உலகம் தடைசெய்வது தமிழ் மக்களை, புலிகளாகக் காட்டுவதும் மேலும் இனப் படுகொலைகளை ஊக்குவிப்பதாகவே அமையும்.

**படி நான்கு: அமைப்பாகச் செயற்பட்டு அழித்தல் (Organization).**

அமைப்பாக செயற்பட்டு இனப் படுகொலையை மேற்கொள்ளல். உண்மையில் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்ந்த இனப் படுகொலை சர்வதேச நாடுகளின் அனுசரணையுடனேயே நடைபெற்றது. (Co chaired Genocide) இதில் இலங்கை அரசும் இலங்கை ஆயுதப்படையும் நேரடியாகத் தொடர்புபட்டன.

இனப்படுகொலைக்குப் பின்பான கொடுக்கல் வாங்கலில் உலக நாடுகளுக்கும் இலங்கைக்கும் ஏற்பட்ட பிணக்குகளே ஐ.நா. மனித உரிமை அமர்வின் வெளிப்பாடு.

உலக நாடுகள் நினைத்திருந்தால் தமிழின அழிப்பைத் தடுத்திருக்கலாம். அழிப்பிற்குப் பின்பான புனர்வாழ்வினை சர்வதேச நியமங்களுக்கு அமைவாக ஏற்படுத்தி இருக்கலாம். இளம் குடும்பத்தினர் விசாரணைகள் இன்றிச் சிறையில் அடைக்கப் படுவதைத் தடுத்திருக்கலாம். அவர்களை விடுவித்து இருக்கலாம். இவை படுகொலையின் தொடர்ச்சியே ஆகும்.

**படி ஐந்து: படுகொலைக்கு ஆளாகும் இனத்தை முனைவாக்கல் (Polarization).**

படுகொலைக்கு ஆளாகும் இனத்தினை வெறுக்கும் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. இங்கு தமிழர்கள் பயங்கரவாதிகள், அப்பாவி மக்களைக் கொல்பவர்கள், போதைப் பொருள் வியாபாரம் செய்பவர்கள், மனிதக் கடத்தலில் ஈடுபடுபவர்கள் (Human trafficking) என்ற வகையில் பிரசாரம் இலங்கை, இந்தியா, மேற்குலகம், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு பயங்கரவாதத்தினை அடக்குவதற்கான சர்வதேச ஆதரவும் பெறப்பட்டு அதன் வழியிலேயே இனப் படுகொலை நடைபெற்றது.

மேலும் அதேவகையில் மீண்டும் பிரசாரம் மேற்கொள்ளப்படுவது தமிழினப் படுகொலை தொடர்வதற்கு ஏதுவாகும். இதில் தமிழ் மக்களுக்கு உலக நீதி மறுக்கப்பட்டது. இந்த நிலைமை இனிமேலும் தொடரக் கூடாது.

**படி ஆறு: படுகொலையைத் திட்டமிடல் (Preparation).**

படுகொலையைத் திட்டமிட்டுத் தயாரித்தல். வன்னியில் இருந்து ஐ.நா. தொண்டு நிறுவனங்களை வெளியேற்றியது, மக்களைப் பாதுகாப்பு வலயம் எனக்கூறி குறித்த இடத்தில் செறிவடையச் செய்து அவர்கள் மீது தாக்குதல் நடத்தியமை இனப்படுகொலை திட்டமிட்டு நடைபெற்றதற்கு ஆதாரம். இதனை ஐ.நா. நிறுவனங்கள் சிந்தித்து இருந்தால் தவிர்த்து இருக்கலாம்.

**படி ஏழு: பூண்டோடு அழித்தல் (Extermination).**

பூண்டோடு அழித்தல். மக்கள் நெருக்கமாக வாழ்ந்த இடத்தில் பெருமளவு சுடுகலன் பிரயோகித்தும் பெரிய விமானத் தாக்குதல்களை நடத்தியும், கடல்வழித் தாக்குதல்களை நடத்தியும், தடைசெய்யப்பட்ட குண்டுத் தாக்குதல்களை நிகழ்த்தியும் பூண்டோடு அழித்தல் நிகழ்ந்தது.

இதற்கு செய்மதிப் படங்களும், இந்த ஆயுதங்களை இலங்கை அரசுக்கு கொடுத்த உலக நாடுகளும் ஆதாரம். இவ்வாறான நிகழ்வுகள் உலகில் இனிமேல் எந்த இடத்திலும் நடைபெறக்கூடாது. இதில் ஐ.நா. செயலாளர் நாயகம் பொறுப்பற்றவராகச் செயற்பட்டு உள்ளார். ஏனெனில் இனப்படுகொலைக்குப் பின் 3 ஆண்டுகள் கழிந்தும் இதனை விஞ்ஞானத்தடவியல் ரீதியில் இனப்படுகொலை என அவர் வரையறுக்கவில்லை.

**படி எட்டு: படுகொலை நடந்தமையை மறுதலித்தல் (Denial).**

மறுத்தல் நவீன விஞ்ஞான தொழில்நுட்ப ஆதாரங்கள் இருந்தும் இலங்கை அரசு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொடர்ச்சியாகத் தனது இனப்படுகொலையை மறுத்து வருகின்றது. இதற்கு துணை போவதாக இந்திய மத்திய அரசும் மிகவும் அநாகரிகமான இராஜதந்திர நகர்வுகளைச் செய்கின்றது. இவ்வாறு செய்யின் மீளவும் தமிழினம் இலங்கையில் அழிக்கப்படும் சாத்தியம் உள்ளது. இதனை நாம் தவிர்க்க சிறந்த அரசியல் சாணக்கியம் தேவை.

**படி ஒன்பது: படுகொலைக்குள்ளான இனத்தைப் பாகுபடுத்தல் (Discrimination).**

தமிழ் இனம் மீதான பாகுபாடு இலங்கை ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் பெற்ற காலம் முதலே உள்ளது. மலையகத் தமிழர் குடியுரிமை பாதிக்கப்பட்டது முதலாவது நிகழ்வு. இதிலும் இந்திய அரசு தமிழ் மக்களுக்குச் சாதகமாகச் செயற்படவில்லை.

தொடர்ந்து தொழில்வாய்ப்பு-சிங்களச் சட்டம், கல்வி (பல்கலைக்கழக அனுமதி) என இன ரீதியான வேறுபாடு தொடங்கி ஈற்றில் தமிழன் பயங்கரவாதி என பாகுபாடுபடுத்தப்பட்டான்.

போருக்குப் பின்பும் புனர்வாழ்வு, மீளக்குடியேற்றம், கைது செய்யப்பட்டவர்களின் விடுதலை, அபிவிருத்தியில் தமிழ் மக்களது வளம் சுரண்டல், மனித உரிமைகளைச் செயற்படுத்தல் என்பனவற்றில் இனரீதியான பாகுபாடு காணப்படுகின்றது. இனப்படுகொலைகள் மீளவும் ஏற்படாது இருக்க இவை களையப்படல் வேண்டும்.

**படி பத்து: படுகொலைக்கு ஆளாகும் இனத்தைத் தொடர்ச்சியாக துன்புறுத்தல் (Persecution).**

தொடர்ச்சியான துன்புறுத்தல்கள், தமிழர்களின் பாரம்பரியத் தாய் நிலம் இராணுவ வலயங்களாகப் பிரிக்கப்பட்டு இராணுவ நிர்வாகத்தினூடாக மக்களின் பொது வாழ்க்கை சிதைக்கப்படுகிறது.

பிரதேசத்துக்குப் பிரதேசம் இராணுவத்தின் பிரசன்னம் வேறுபட்டுக் காணப்பட்டபோதும், விசாரணைகள், கட்டுப்பாடுகள் என்பன ஜனநாயகத்திற்கு அப்பால் நிகழ்கின்றன. இவைகளை இனப் படுகொலையின் தொடர்ச்சியாகவே நாம் கருதல் வேண்டும். (Trauma grid)

இனப்படுகொலையைப் பெரியகொலைகள், மனித குலத்துக்கு எதிரான குற்றம், மனிதனின் மிகவும் கீழ்த்தரமான நடவடிக்கை எனப் பலவாறாக விவரிக்கலாம்.

இலங்கையில் இவை நடைபெற்றதை ஏற்றுக்கொள்ளும் இடம் இன்றும் ஏற்படவில்லை. மாறாக புலிகளால் இறந்த சிங்கள மக்களின் படங்களைப் பத்திரிகையில் மீள மீளப் பிரசுரித்துத் தமிழ் மக்களின் கொலையைப் புலிகளின் அழிவாக நியாயப்படுத்தும் தன்மையே காணப்படுகின்றது. இதனை சிங்கள் மக்களுக்கும், சிங்கள அரசுக்கும் தவறெனக் கூறவேண்டியது தமிழ் புத்திஜீவிகளின் கடமையாகும்.

குறிப்பாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், சட்டவாளர் சங்கம், யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர்கள், யாழ் மறை மாவட்ட கத்தோலிக்க திருச்சபை போன்றவை இன்றுவரை இது தொடர்பில் மௌனம் காப்பது மனிதகுல நியதிக்குத் தப்பானது. குறிப்பாக மனித உரிமைகள் தொடர்பான யாழ். பல்கலைக் கழகத்தின் மௌனம், சர்வதேச ரீதியில் தமிழர்களின் வலுவை இழக்கச் செய்கிறது.

நாம் வன்முறை காயத்தில் இருந்து துன்பப்படும்போது இதனால் சமூகத்தில் ஏற்பட்ட பாதிப்புக்களை மூன்று வகையில் வகைப்படுத்தலாம்.

1. முதலாவது எதிர்விளைவு மன உளைச்சல்களும், மன அழுத்தமும், உளநோய் நிலைகள் என இவை அமைகின்றன.

2. இரண்டாவது முன்னோக்கிய விளைவு

இதில் துன்பத்திற்கு பின்பான அபிவிருத்தி, கல்விநாட்டம், தொழில்வாய்ப்பு, புனர்வாழ்வு என்பன அமைகின்றன. வன்முறைக்குப் பின்பான அபிவிருத்தி இதில் அடங்கும். கிழக்கின் உதயமும் வடக்கின் வசந்தமும் இதில் அடங்கும்.

3. மூன்றாவது வன்முறைக்குப் பின்பான நடுநிலைமைப் போக்கு அல்லது மௌனம். அதாவது வன்முறையின் தாக்கத்தினால் எமது புத்திஜீவிகளின் செயலில் மாற்றம் ஏற்படவில்லை.

இவ்வாறான மூன்று நிலைகளும் எமது பிரதேசத்தில் தனிநபர் மட்டத்திலும், குடும்ப மட்டத்திலும், சமூக மட்டத்திலும் காணப்படுகின்றது.

உலகமயமாதல், இனப்படுகொலையைத் தடுக்கத் தவறிவிட்டாலும், படுகொலைக்குப் பின்பான விழிப்பில் செல்வாக்குச் செலுத்துகின்றது. நாடு கடந்த அரசு என்ற கோட்பாடு இதன் அடிப்படையிலேயே உருவாகி உள்ளது.

புதிய விடுதலைக் கோட்பாடு (Neoliberal theory), எதிர்வரும் தசாப்தத்தில் நாடு கடந்து வாழும் மக்களிடையே குறிப்பாக சீனா, இந்தியா போன்ற நாட்டுப் பிரஜைகளும் நாடு கடந்த அரசுகளை உருவாக்கும் நிலைமையினை ஏற்படுத்தும். இது உலகமயமாதலின் புதிய அரசியல் பரிணாமமாக அமையும்.

தமிழ் இனம் மீதான பாகுபாடு இலங்கை, ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் பெற்ற காலம் முதலே உள்ளது. மலையகத் தமிழர் குடியுரிமை பாதிக்கப்பட்டது முதலாவது நிகழ்வு. இதிலும் இந்திய அரசு தமிழ் மக்களுக்குச் சாதகமாகச் செயற்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org